யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 105 | சர்வதேச மின் செய்தித்தாள் | செப்டெம்பர் 15 2025

## 38ஆம் ஆண்டு வீரவணக்கம்

38th Year Veeravanakkam





SEPT 26 2025

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்”



### கேணல் சங்கர்

வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

26.09.2001

அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

இம் மாவீரருக்கு எமது 24 ஆம் ஆண்டு வீரவணக்கம்

### ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்

இராசையா பார்த்தீபன் [ ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987]

Lt. Col. Thileepan

இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு [15.09.1987–26.09.1987] இருந்து ஈகைச் சாவடைந்தார்.

Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.


புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



































## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எதிரி
ஈவிரக்கமற்றவன்,
போர் வெறிகொண்டவன்;
எமது தாயகத்தைச் சிதைத்து,
எமது இனத்தை
அழித்துவிடுவதையே
இலட்சியமாகக் கொண்டவன்.
அவனது இதயக்கதவுகள்
திறந்து எமக்கு நீதி
கிடைக்குமென, நாம்
எதிர்பார்க்க முடியாது.






சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு
தொலைபேசி
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
இணையத்தளம் (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# திலீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்...

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் முதலாம் நாள்

### ஈகைப் பயணம் தொடர்வதற்கான ஆரம்பம்...

காலை ஒன்பது மணியிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து திலீபனை சந்தித்து விடைபெறுகிறார்கள். எல்லோருடனும் அவர் அன்பாக பேசுகிறார். வோக்கி டோக்கியில் தலைவருடன் சில நிமிடங்கள் பேசுகிறார். பேசிவிட்டு அந்த மண்ணிற வாகனத்தை நோக்கி நடக்கிறார். எல்லோரும் பின் தொடர்ந்தோம். ஆம் அவரது ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. மிக மிடுக்காக நடந்து முன் ஆசனத்தில் போய் ஏறினார்.

வரது பக்கத்தில் சொர்ணம், அன்ரன் மாஸ்ரர், முரளி. பின் ஆசனத்தில் காசி ஆனந்தன், ராஜன், நான் வேறும் சிலர். வாகனம் நல்லூர் கந்தசாமி கோவிலை நோக்கி ஒடுகிறது. பாதையின் இரு பக்கத் திலும் மாணவர்களும், பொதுமக்களும் கையசைத்து வழியனுப்புகிறார்கள். நல்லூர் கந்தசாமி கோவிலை சென்றடைந்தோம். வாகனம் நின்றது. திலீபன் உண்ணாவிரத மேடை நோக்கிச் செல்கிறார். நாங்களும் பின்னால் போய்க் கொண்டிருக்கிறோம்.

### தமிழீழ தாயின் எதிர்பாராத ஆசியினை பெறுகின்றார்

மேடையிலே நாற்காலியிலே திலீபனை அமர வைத்தோம். திலீபனின் அருகே நான், ராஜன், பிரசாத், சிறி ஆகியோர் அமர்ந்திருந்தோம். திலீபனின் ஈகைப் பயணம் ஆரம்பமாகிவிட்டது. அன்று பக்கத்திலிருந்த மேடையில் பிரசாத்தின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. நடேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் திலீபனின் உண்ணா விரதம் எதற்காக ஆரம்பிக்கப்படுகிறது என்பதனைபற்றி விளக்கம் அளித்தார்கள். தமிழ் மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் உரிமைகளை பேணும் நோக்கமாக இந்தியமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளும் விளக்கப்பட்டன.

### ஐந்து அம்ச கோரிக்கை

1) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நாடாத்தப்படும் சிங்கள குடி யேற்றங்கள் உடணடியாக நிறுத்தப்படல் வேண்டும்.



எதிர்பாராத விதமாக அந்த நிகழ்ச்சி நடந்தது. வயதான ஓர் அம்மா. தள்ளாத சிவந்த நிற மேனி. பழுத்த தலை. ஆனால் ஒளிதவளும் கண்களில் கண்ணீர் மல்க திலீபனை மறித்து தன் கையில் சுமந்து வந்த அர்ச்சணை சரையில் இருந்து நடுங்கும் விரல்களால் திருநீற்றை எடுத்து திலீபனின் நெற்றியில் பூசுகிறார். சுற்றியிருந்த கமராக்கள் எல்லாம் அந்த காட்சியை கிளிக் செய்தது. வீரத்திலக மிடுகிறார் அந்தத் தாய். தாயற்ற திலீபன் அந்த தாயின் பாச உணர்வில் மூழ்கிப்போனார்.

### போராளி பிரசாத் இன் ஆரம்ப உரை (மேஜர் பிரசாத்)



காலை மணி 9.45 உண்ணாநோன்பு

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

4) வடகிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப்படையின் மேற் பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக் கூடங்களில் குடி கொண்டுள்ள இராணுவ , பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

பிரசாத் அவர்களால் மேற்படி ஐந்து கோரிக்கைகளும் வாசிக்கப்பட்டன. இதே கோரிக்கையை இரண்டு நாட்ளுக்கு முன்பு இந்திய உயர்ஸ்தானிகரின் கையில் நேரடியாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி 24 மணித்தியால அவகாசமும் விடுதலைப்புலிகளால் வழங் கப்பட்டிருந்தது. ஆனால் 15 திகதி வரையும் தூதுவரிடமிருந்து எந்த பதில்களும் கிடைக் காத காரணத்தினால் சாகும் வரை உண்ணா நோன்பும் மறியல் போராட்டமும் நடத்துவது என தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசப்



பொறுப்பாளர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

### வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபன்

அதன்படிதான் இந்த ஈகைச்செம்மலின் ஈகைப்பயணம் ஆரம்பித்தது. பிற்பகல் 2.00 மணி இருக்கும் திலீபன் கம்பீரமாக வீற்றிருந்தார். உண்ணாநோன்பு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இரண்டாவதுமேடையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த உண்ணாநோன்பு விளக்கக் கூட்டம் முடிவடைந்து விட்டது. படிப்பதற்கு புத்தகம் வேண்டும் என என்காதில் குசுகுசுத்தார் திலீபன். நான் ராஜனிடம் சொன்னேன்.

15 நிமிடங்களில் பல அரிய நூல்கள் மேடைக்கு வந்தன. விடுதலைப் போராட்டங்கள் பற்றி அறிவதற்கு திலீபனுக்கு ஆர்வங்கள் எப்போதும் உண்டு. பிடல் காஸ்ரோ, சேகுவரோ, கொஜீமின். யசிர் அரபாத் போன்றவர்களின் வாழ்க்கையை பற்றிய நூல்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பார். பலஸ்தீன மக்களின் வாழ்க்கையை பற்றி படிப்பதென்றால் அவருக்கு பலாச்சுளை மாதிரி பிடிக்கும். பலஸ்தீன கவிதை என்ற நூலை அவரிடம் கொடுத்தேன்.

### மாணவர்கள் இளையோர்களின் உணர்ச்சி கவிதைகள்

அதை மிகவும் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினார். மாலை ஐந்து மணிக்கு பக்கத்து மேடையில் மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று. பாடசாலை மாணவிகள் போட்டி போட்டுக்கொண்டு கவிதைகளை வாசிக்கத் தொடங்கினர். சுசிலா என்ற மாணவி மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தனது கவிதையை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கட்டத்தில் அவர் அழுதேவிட்டார். “அண்ணா திலீபா இளம் வயதில் உண்ணாமல் தமிழினத்திற் காக நீ தவமிருக்கும் கோலத்தைக் காணும் தாய்க்குலத்தின் கண்களில் வடிவது செந்நீர்.” சுசிலாவின் விம்மல் திலீபனின் கவனத்தை திருப்பியது.

கவிதைத்தொகுப்பை மூடிவைத்து விட்டு கவிதை மழையில் நனைய தொடங்கினார். அவர் விழிகளில் முட்டிய நீர் தேக்கத்தை ஒரு கணம் என் கண்கள் காணத்தவற வில்லை. எத்தகைய இளகிய மனம் அவருக்கு இந்த இளம் குருத்து இன்னும் எத்தனை நாட்களுக்கு ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் வாடி வதங்க போகிறது. அகிம்சை போராட்டத்திற்கே ஆணி வேராக திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள் கூட தன்னுடைய உண்ணா விரத போராட்டங்களை நீராகாரம் அருந்தித் தானே நடத்தினார்.

### திலீபனின் ஈகைப்பயணம் ஓர்...

ஐரிஸ் போராட்ட வீரர் பொபிஸ் ஆன்ஸ் என்ன செய்தார்? சிறைக்குள் நீராகாரம் அருந்தித் தான் உண்ணாநோன்பு போராட்டத்தை ஆரம்பித்து உயிர் நீத்தார். இந்த உண்ணா நோன்பு அரசின் தலையீட்டினால் வெற்றி பெறுமானால் அந்த வெற்றி திலீபனையே சாரும். அதுபோல் இந்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் இறுதி உண்ணாநோன்பு இருந்தே திலீபன் இறக்க நேரிட்டால் அதில் கிடைக்கும் தோல்வியும் திலீபனுக்கு கிடைக் கும் மாபெரும் வெற்றிதான்.

### நல்லூர் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்

உலகின் புதிய அத்தியாயம் ஒன்றின் சிருஸ்டி கர்த்தா என்ற பெருமை அவனையே சாரும். ஆனால் அதற்காக எங்கள் குல விளக்கை நாமே அணைக்க வேண்டுமா? இறைவா திலீபனை காப்பாற்றிவிடு. கூடியிருந்த மக்கள் நல்லூர் கந்தனிடம் அடிக்கடி இப்படி வேண்டிக் கொள்கிறார்கள். இதை நான் அவதானித்தேன். பழம் தமிழ் மன்னனாகிய சங்கிலியன் அரசாண்ட நல்லூர் அரச தானியிலே, தமிழ்க் கடவுள் ஆகிய குமரனின் சந்நிதியில் ஓர் இளம் புலி உண்ணாமல் துவண்டு கிடந்தது. ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இல்லையேல் உலகில் நீதி செத்து விடும். எனக்குள் இப்படி எண்ணிக்கொண்டேன்.

அப்போது ஓர் மேடையில் முழுங்கிக் கொண்டிருக்கிறான். திலீபன் அண்ணாவின் கோரிக்கைகள் மட்டுமல்ல, தமிழ் மக்களின் கோரிக்கைகளும் இதுதான் இதை நிறை வேற்ற வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். அவர் தமிழீழம் தாருங்கள் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்க வில்லையே. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஐந்தே ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்தித்தான் சாகும் உண்ணா நோன்பை ஆரம்பித்திருக்கிறார்.

### தமிழீழ தேசிய தலைவர் திலீபனை பார்க்க வருகின்றார்



இந்தக்காரணத்தாலாவது இந்திய அரசு இதை நிறைவேற்ற தவறுமானால் திலீபன் அண்ணா இறப்பது நிச்சயம். திலீபன் அண்ணா இறந்தால் ஒரு பூகம்பம் இங்கே வெடிக்கும். ஒரு புரட்சி இங்கே வெடிக்கும். இதுதான் என்னால் கூற முடியும். அவரின் பேச்சு முடிந்ததும் அங்கு கூடியிருந்த மக்கள் அப்பேச்சை வரவேற்பதுபோல் கைகளை தட்டி ஆரவாரித்தனர். அந்த ஒலி அடங்க வெகு நேரம் பிடித்தது. அன்று இரவு 11.00 மணியளவில் தலைவர் பிரபாகரன் திலீபனை பார்ப்பதற்காக மேடைக்கு வருகிறார்.

அவருடன் சொர்ணம், இம்ரான், அஜித், சங்கர், ஜொனி இப்படி பலரும் வருகின்றனர். வெகுநேரம் வரை தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தார் திலீபன். யாரையும் அதிக நேரம் பேச அனுமதிக்க வேண்டாம் என்று போகும் போது என்னிடம் கூறிவிட்டுச் சென்றார் தலைவர். நீர், உணவு உட் கொள்ளாத ஒருவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால் விரைவில் களைப்படைந்து விடுவார். இதனால்தான் தலைவர் அப்படி கூறிவிட்டுச் சென்றார்.

**பத்திரிகையாளர் வருகை**

அன்றிரவு பத்திரிகை நிருபர்களும் பத்திரிகை துறையை சார்ந்தவர்களும் திலீபனை பார்க்க மேடைக்கு வந்திருந்தனர். முரசொலி ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசை சேர்ந்த பசீர் போன்றோருடன் திலீபன் மனம் திறந்து பேசினார். அவரை கட்டுப்படுத்த எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அதிகம் பேசி உடம்பை கெடுத்துக்கொள்ள போகிறாரே என்பதால் அவரை அன்பாக கடிந்து கொண்டேன். இரவு 11.30 மணியளவில் கஸ்டப்பட்டு சிறுநீர் கழித்து விட்டு 12.00 மணியளவில் படுக்கைக்குச் சென்றார்.

முதல் நாள் முடிவு. அதிகாலை 1.30 இற்கு உறங்கினார்.

அவர் ஆழ்ந்து உறங்கத்தொடங்கியபோது நேரம் 1.30 மணி. அவரின் நாடித்துடிப்பை பிடித்து அவதானித்தேன். நாடித்துடிப்பு 88. சுவாசத்துடிப்பு 20. அவர் சுய நினைவோடு இருக்கும் போது வைத்திய பரிசோதனைக்கு அனுமதிக்க மாட்டார். தனக்கு உயிர் மீது ஆசை இல்லை என்பதால் பரிசோதனை தேவை இல்லை என்று கூறுவார். அவர் விருப்பத்திற்கு மாறாக உணவோ, நீரோ, மருந்துவமோ இறுதிவரை அளிக்கக்கூடாது என்று முதல் நாளே என்னிடம் சத்தியம் வாங்கிவிட்டார். மேடைக்கு முன்பாக மகளிர் அமைப்பு உறுப்பினர்களும், பொதுமக்களும் கொட்டக் கொட்ட கண்விழித்துக் கொண்டிருந்தனர்.

இந்த ஈகைச்சுடரின் உண்ணாநோன்பு போராட்டத்தின் முதல்நாள் முடிவு பெற்றது.

## ஈகைச்சுடர் லெப்.கேனல் திலீபனின் இரண்டாம் நாள்

இந்த நாளில் ஈகைச்சுடர் அவர்கள் எந்த நோக்கங்களிற்காக தனது உயிரை உருக்கி யாழ் நல்லூர் கோவில் முன்பாக தனது உயிரை ஆகுதியாக்கினாரோ அந்த நோக்கங்கள் தற்போதய நிலையிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

அன்று சிங்கள அரசாங்கம் பாரத தேசத்தினை வைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை ஓர் சூழ்ச்சிபொறிக்குள் தள்ளியதோ அவ்வாறுதான் இந்த ஆண்டிலும் சிங்கள அரசு, இந்திய அரசினை மட்டுமன்றி சர்வதேச நாடுகளையும் தனது பயங்கரவாதம் என்ற சூழ்ச்சி திட்டத்தில் சிக்குற செய்து எமது விடுதலை போராட்டத்தினை இக்கட்டான சிக்கலிற்குள் தள்ளி விட்டிருக்கின்றது சிங்கள பௌத்த பேரினவாதம்.

இந்த நிலையில் ஈகைச்சுடரின் முதல் நாள் பயணத்தில் (1987 செப்டெம்பர் 15) முக்கியமான விடயங்கள் இங்கு தரப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 16ம் திகதி. இது திலீபனுடன் இரண்டாம் நாள். அன்று அதிகாலை 5.00 மணிக்கே திலீபன் உறக்கத்தைவிட்டு எழுந்து விட்டார். முகம் கழுவி தலைவாரிக்கொண்டார். சிறுநீர் கழித்தார் ஆனால் மலம் இன்னும் போக வில்லை. அவர் முகம் சோகமாக காணப்பட்டாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் எல்லோருடனும் சிரித்து பேசிக்கொண்டிருந்தார்.

சகல தினசரி பத்திரிகைகளையும் ஒன்று விடாமல் படித்து முடித்தார். பத்து மணியளவிலே பக்கத்து மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நிகழ்ச்சிகளுக்கு தேவர் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். கவிதைகளை படிப்பதற்காக இளம் சந்ததியினர் முண்டியடித்து தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டிருந்தனர். நிதர்சனம் ஒளி பரப்பாளர்களின் ஒளிப்பதிவுக் கருவிகள் நாலா பக்கமும் சுழன்று படம்பிடித்துக் கொண்டிருந்தன.

மேடைகளில் கவிதைகள் முழங்கிக் கொண்டிருந்தபோது திலீபன் என் காதுக்குள் குசுகுசுத்தார். "நான் பேசப்போகிறேன் மைக்கை வேண்டி தாங்கோ வாஞ்சி அண்ண." சாப்பிடாமல் குடிக்காமல் இருக்கிறீங்கள் களைத்து விடுவீர்கள்... என்று அவரை தடுக்க முயன்றேன். "இரண்டு நிமிடம் மட்டும்... நிப்பாட்டி விடுவன். ப்ளீஸ் மைக்கை வாங்கித்தாங்கோ" என்று குரல் தளதளக்க கூறினார். அவரை பார்க்க பரிதாபமாக இருந்தது. கண்கள் குழி விழுந்து, முகம் சோர்ந்து காணப்பட்டாலும் அந்த பசுமையான சிரிப்பு மட்டும் இன்னும் மாறா மல் அப்படியே இருந்தது.

இரண்டு நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மேடையில் நின்ற தேவரிடம் மைக்கை பெற்றுக் கொடுத்தேன். திலீபன் பேசப்போவதை தேவர் ஒலி பெருக்கியில் அறிவித்ததும் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது. திலீபன் பேசுகிறார். "எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலையில் இருப்பதால் இருந்து பேசுகிறேன். நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ என்று தெரியாது அதனால் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நான் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். 650 பேர் வரையில் இன்று வரை சாவடைந்துள்ளோம்.

மில்லர் இறுதியாகப்போகும் போது என்னிடம் ஒரு வரி கூறினான். நான் அவனுடன் இறுதி வரை இருந்தேன். "நான் எனது தாய் நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும் போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்களால் காண முடியாது என்பதே ஒரே ஏக்கம்" என்று கூறிவிட்டு வெடி மருந்து நிரப்பிய பார ஊர்தியை எடுத்துச்சென்றான். இறந்த 650 பேரும் அனேகமாக எனக்கு தெரிந்துதான் சாவடைந்தார்கள். அதனை நான் மறக்க மாட்டேன். உண்ணாநோம்பு போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தலைவரின் அனுமதியை கேட்டபோது அவர் கூறிய வரிகள் என் நினைவில் உள்ளன.

திலீபா நீ முன்னால் போ...நான் பின்னால் வருகிறேன் என்ற அவர் கூறினார். இத்தகைய ஒரு தெளிவான தலைவனை தனது உயிரை சிறிதும் மதிக்காத தலைவனை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தினை தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தரும். இதனை வானத்தில் இருந்து இறந்த மற்ற போராளிகளுடன் சேர்ந்திருந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். விடுதலைப்புலிகள் உயிரினும் மேலான சிறுவர்களை, சகோதரிகளை, தாய்மார்களை, தந்தையர்களை நினைக்கிறார்கள். உண்மையான உறுதியான இலட்சியம். அந்த இலட்சியத்தினை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது இறுதி விருப்பமும் இதுதான்."

மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திடமுடன் பேசிய அவரின் பேச்சைக்கேட்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். அன்றிரவு தலைவர் வந்து திலீபனை பார்த்தார். சோர்வுடன் படுத்திருந்த திலீபனின் தலையை தனது கரங்களால் வருடினார். ஒரு தகப்பனின் அன்பையும் தாயின் பாசத்தையும் ஒன்றாக குழைத்து போலிருந்தது அந்த வருடல். இரண்டு இமய மலைகளையும் என் கண்கள் விழுங்கிக்கொண்டிருந்தன. இரவு பனிரெண்டு மணிக்கு திலீபன் உறங்கத் தொடங்கினார். நானும் அவர் அருகிலேயே படுத்து விட்டேன்.

திலீபனின் வீட்டில் குணபாலன் என்ற சிறுவன் வேலை செய்வதற்காக இருந்தான். அவனது வறுமை நிலையைக் கண்ட திலீபன் தன் கையில் கிடைக்கும் பணத்தை அவனிடம் அடிக்கடி கொடுப்பார். யாழ். இந்துவில் அவர் படிக்கும்போது, வீட்டுக்கு வரும்போதெல்லாம் குணபாலனுக்காக கைநிறைய "டொபி" களுடன் வருவார். குணபாலனுக்கு ரீ.வி. பார்க்கும் பழக்கம் இருந்தது. தன் வேலைகளை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக்குப்பின், பக்கத்துவீட்டிற்குச் சென்று அவன் ரீ.வி. பார்ப்பது வழக்கம். குணபாலனுக்காகத் திலீபன் தன் தந்தையிடம் ஒரு ரீ.வி. வாங்கி வைக்குமாறு பலமுறை கெஞ்சிக் கேட்டார்.

இவரது தொல்லை தாங்கமுடியாமல் இராசையா ஆசிரியர் ஒருநாள் ரீ.வி. யை வாங்கி வந்துவிட்டார். குணபாலனும் அன்றிலிருந்து எதுவித சிரமமுமின்றி ரீ.வி. பார்த்து வரத் தொடங்கினான். யார் மீதும் எளிதில் அன்பு வைப்பதிலும், இரக்கம் காட்டுவதிலும் திலீபனுக்கு நிகர் அவரேதான். அதற்கு இது ஒரு நல்ல உதாரணம். திலீபன் யாழ். இந்துவில் படிக்கும் போது அவரது நெருங்கிய நண்பனாக இருந்தவர்களில் கணேசன் என்பவரும் ஒருவர்: இவர் இப்போது ஒரு வைத்தியராக இருக்கின்றார். ஒருநாள் திலீபன், கணேசன் மற்றும் சிலர் ஊரெழு விலுள்ள திலீபனின் வீட்டுக்கு வந்தனர்.

அப்போது யாழ். இந்துவில் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. திலீபனின் வீட்டிலே சில மாதங்களுக்கு முன் ஒரு நாய் செத்து விட்டதால், அதை ஒரு மரத்தின் கீழ் கிடங்கு வெட்டித் தாட்டிருந்தார்கள். திலீபனும் நண்பர்களும் அந்தக்கிடங்கைக் கிண்டி நாயின் எலும்புக் கூட்டை வெளியில் எடுத்துத் துப்புரவு செய்தார்கள். அப்போது ஏற்பட்ட துர் நாற்றம் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் வெளியே போனாலும், திலீபனும் நண்பர்களும் அதைப் பொருட்படுத்தாமல் தமது வேலையை முடித்துவிட்டு, அந்த எழும்புக் கூட்டை அன்றே எடுத்துச்சென்று பொருட் காட்சியில் வைத்தனர். எதையும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதில் திலீபனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் தான் இந்த உண்ணா நோன்புப் பாராட்டத்தில் இறக்க நேரிட்டால் தனது உடலை யாழ். வைத்திய பீடத்துக்கு ஆராய்ச்சிப் படிப்புக்காக அனுப்பிவைக்கும்படி அவர் கூறினார் போலும்?

## ஈகைச்சுடர் லெப்.கேனல் திலீபனின் மூன்றாம் நாள்

காலை ஆறு மணிக்குத் துயில் எழும்பிய திலீபனின் முகத்தைப் பார்த்த எனக்கு, ஒரு கணம் அதிர்ச்சியாயிருந்தது. காரணம் அவரின் உதடுகள் இரண்டும் பாளம்பாளமாக வெடித்து வெளிறிப்போயிருந்தன. கண்கள் நேற்றைக்கு இருந்ததைவிட இன்னும் சற்று உள்ளேபோயிருப்பது போல் தோன்றியது... முகம் வரண்டு, காய்ந்து கிடந்தது, தலை குழம்பியிருந்தது

"பல் விளக்கி முகம் கழுவவில்லையோ?"

"இல்லை வாஞ்சியண்ணை... வேண்டாம்."

கலைந்திருந்த தலைமயிரை நானே அவரருகில் சென்று வாரி விடுகிறேன். அவர் இன்னும் சிறுநீர் கழிக்கவில்லை. "வெளிக்குப் போகேல்லையோ?" என்று மெதுவாகக் கேட்கிறேன்.

"போகவேணும் போலதான் இருக்கு."

"சரி கீழே இறங்கி வாருங்கோ" என்று கூறிவிட்டு, மேடையை விட்டு நானே முதலில் இறங்கி, கீழே இறங்குவதற்கு உதவி செய்ய முயன்றேன்.

"வேண்டாம் விடுங்கோ... நானே வருகின்றேன்" என்று என் கையை விலக்கிவிட்டு தானே கீழே குதிக்கின்றார்...

மனதை எவ்வளவு திடமாக வைத்திருக்கின்றார் என்று எனக்குள்ளேயே ஆச்சரியப் பட்டேன்.

மறைவிடத்துக்குச் சென்ற அவர், சிறுநீர் கழிக்க முடியாமல் சிரமப்பட்டார்.



5 நிமிடம்...

10 நிமிடம்...

15 நிமிடம்...

20 நிமிடம்...

நிமிடங்கள் ஒடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எதுவித பயனும் ஏற்படவில்லை. அவரைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருந்தது. என் கண்கள் என்னையறியாமலே கலங்குகின்றன. மேடையின் வலப் புறத்தில் ஏறி அமர்ந்த திலீபன், தூரத்தில் தெரியும் வழக்கமான ஆட்களை அழைத்து உரையாடத் தொடங்கினார். “கண்டபடி பேசினால் களைப்பு வரும்... கொஞ்சம் பேச்சைக் குறையுங்கோ...” என்று அவரைத் தடுக்க முயல்கிறேன். ஆனால், என்னால் முடிய வில்லை. தனக்கே உரிய சிரிப்பை என் வார்த்தைகளுக்குப் பதிலாக்கிவிட்டுத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக அவர் நீர் அருந்தி 45 மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அவர் இப்படி தன்னைத்தானே வருத்தப்போகிறார்?

இப்போதே சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்படத் தொடங்கிவிட்டார். இன்னும் இரண்டு நாட்கள் போனால் என்னென்ன நடக்குமோ? என்று எண்ணிய நான், அவரின் காதுக்குள் குசு குசுக்கிறேன்.

“என்ன பகிடியா பண்ணுறீங்க?... ஒரு சொட்டுத் தண்ணீரும் குடிக்கமாட்டேன் என்ற நிபந்தனையுடன்தானே இந்த உண்ணா நோம்பைத் தொடங்கினனான்... பிறகு எப்படி நான் தண்ணீர் குடிக்க வேண்டுமென்ற கேட்டீங்க?”...

என்று ஆவசத்துடன் என்மீது பாய்கிறார்.

“இல்லை...... இப்பவே உங்களுக்குச் சலம் போறது நின்று போச்சு...... இனியும் நீங்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் மேலும் மேலும் கஷ்டமாக இருக்குமே... அதுக்காகத்தான் கேட்டனான்...” என்று அசடு வழியக் கூறிவிட்டு, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

“இனிமேல் என்னைத் தண்ணி குடிக்கச் சொல்லிக் கேட்கவேண்டாம்... சரியோ?... உண்ணாநோன்பு என்றால் என்ன?... தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் எல்லாமே உணவுதான்... இந்த உணவுகளை எடுத்துக் கொண்டு எவ்வளவு நாளும் உயிர் வாழலாம். ஆனால், அது உண்ணாநோன்பு இல்லை. உண்ணாநோன்பு எண்டால் அதுக்கு அர்த்தம் வேணும்... ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேணுமெண்டதுக்காகத்தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உண்ணா நோன்பு இருக்கிறது... இது வெறும் அரசியல் லாபத்துக்காக தொடங்கப்பட்டதல்ல... வயிறு முட்டக் குடித்துவிட்டு மக்களையும் ஏமாற்ற என்னால் முடியாது.”

அவரின் பேச்சில் இருந்த உண்மைகள் எனக்கும் தெரியும். ஆனால், திலீபனின் உயிர் மிகவும் பெறுமதி மிக்கது... அதை இப்படி வருந்த விடுவதா? என்ற ஏக்கத்தில்தான் அப்படிக் கேட்டேன். ஆனால் அவர் தன் உயர்ந்த சிந்தனையால் என் பேச்சுக்கு ஆப்பு வைத்துவிட்டார்.

நேரம் செல்ல செல்ல நல்லூர் ஆலய மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாட்களாக ஆயிரக்கணக்காக வந்திருந்த சனக்கூட்டம், இன்று இலட்சத்தைத் தாண்டியிருந்தது. யாழ்ப்பாண நகரத்தில் உள்ள கல்லூரிகளிலிருந்து மாணவ - மாணவிகள் காலை 9 மணி முதல் வரிசை வரிசையாக, வெள்ளைச் சீருடையில் அணி வகுத்து வந்து மைதானத்தை நிறைக்கத் தொடங்கினர்.

திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒர் அங்கத்தவர் என்ற நினைப்பு விடுபட்டு, “தமிழ் இனத்தின் பிரதிநிதி” என்ற எண்ணம்தான் அந்தச் சனக்கூட்டத்தினர் மத்தியில் நிறைந்திருந்தது. தாய்க்குலம் - திலீபன் வாடி வதங்கியிருந்த கோலத்தைக் கண்டு கண்ணீர் சிந்தியது. அந்தக் கண்ணீர் மழையில் இதயம் கனிந்து விட்ட வருண பகவான் கூடத் தீடீரென்று பலமாகக் கண்ணீர் சொரியத் தொடங்கிவிட்டான்.

ஆம்!

அனலாகக் கொதித்துக்கொண்டிருந்த சூரியன், ஒரு பிள்ளையின் உடலை வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகத், தன்னைத் தானே கருமேகத்தின் போர்வைக்குள் மூடிக் கொண்டான் மழைநீர் கோவில் மைதானத்தில் ஆறாக ஒடிக்கொண்டிருந்தது. ஆனால், பொதுமக்களில் ஒருவர்கூட எழும் பால் அப்படியே இருந்தனர். அப்பப்பா! மக்களின் உணர்வு மழைக்கு முன்னிலையில் அந்த வருணனின் மழைநீர் வெகு சாதாரணமானது என்ற எண்ணம் நிதர்சனமாகத் தெரிந்தது.

வாடிய நிலையிலும், சோர்ந்த நிலையிலும் தன் உயிரினும் மேலான மக்கள் மழையில் நனைவதைக் கண்ட திலீபன், அவர்களை நனைய வேண்டாம் என்று கைகளை அசைத்துச் சைகை காட்டினார். ஆனால், அவர்களோ அசைவதாக இல்லை. “உன்னால் மட்டும் தானா தமிழினத்துக்காக மெழுகாக உருக முடியும்?... உன் உயர்ந்த இலட்சியத்துக்கு முன் இந்த மழை வெகு சாதாரணமானது!” என்று கூறுவதுபோல், அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

முரளியும் - நிரஞ்சனும், வேறு சிலரும் படங்குகளை விரித்துக் கட்டிக் கொண்டிருந்தனர்.

ஒலிபெருக்கியில் காசி ஆனந்தனின் கவிதையொன்று முழக்கமிட்டுக்கொண் டிருந்தது.

“திலீபன் அழைப்பது சாவையா? - இந்த

சின்ன வயதில் இது தேவையா?” ...

மூன்றாம் நாளான இன்று இராண்டாவது மேடையில் சூடான பேச்சுக்களும், கண்ணீர்க் கவிதைகளும் முழங்கிக்கொண்டிருந்தன. பேச்சாளர்களில் ஒருவரும், எமது தீவிர ஆதரவாளருமான காங்கேசன்துறை கருணானந்தசிவம் ஆசிரியர் அவர்கள் இப்படிப் பேசினார்:

“தியாகி திலீபனின் உயிர் விலைமதிப்பற்றது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் உரியவர் அல்ல... அவர... தமிழ் இனத்துக்கே சொந்தமானவர்... அப்படிப்பட்ட திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். ஆவர் தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி நீர் உணவு அருந்தி எம் கவலையைப் போக்க வேண்டும்... இது எனது வேண்டுகோள் மட்டுமல்ல: இங்கே வந்திருக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வேண்டுகோளும் இதுதான்.”

அந்தப் பேச்சைக் கேட்ட திலீபனின் முகம் வாடியதை நான் அவதானித்தேன்... தான் பேசப்போவதாகக் கூறினார். அவரிடம் ஒலி வாங்கியைக் கொடுத்தேன்.

“இந்த மேடையில் பேசிய ஓர் அன்பர் என்னை நீர் உணவு அருந்தும்படி கூறியது என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது... நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக்காமல் தான் உண்ணாநோன்பை ஆரம்பித்தேன்... இறுதிவரை இந்த இலட்சியத்தில் இருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால், தயவு செய்து இனிமேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்த வேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனக்கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் உண்டு... என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்திலிருந்து ஒரு போதும் பின் வாங்க மாட்டேன்.” அவர் பேசி முடித்ததும், மழை ஓய்ந்துவிட்டது.

திலீபனுடன் சேர்ந்து அவன் கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தினமும் நல்லூர்க் கோவில் மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் இருப்போர் தொகை அதிகாரித்துக் கொண்டே வந்தது.

பலர் தாமும் சாகும் வரை திலீபனைப்போல் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணா நோன்பு இருக்க விரும்புவதாக, எம்மிடம் வந்து கூறினர். அவர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் திணறினோம்.

செல்வி. சிவா துரையப்பா என்ற பெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர்... 17.09.1987 இல் திலீபனுக்கு ஆதரவாக மூன்றாவது (சிறிய) மேடை ஒன்றில் தனது உண்ணா நோன்பு போராட்டத்தை ஆரம்பித்தார்...




அன்றிரவு திலீபன் சிறுநீர் கழிக்க முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டார். வைத்தியர் ஒருவரை அழைத்துவந்து அவரைப் பிரிசோதிக்க ஏற்பாடு செய்தோம் ஆனால், திலீபன் அதை மறுத்துவிட்டார். எந்தவித பரிசோதனையும், சிகிச்சையும் தான் இறக்கும் வரை தனக்கு அளிக்கக்கூடாதென்று உறுதியாகக் கூறி விட்டார்.

அன்று அவர் கஷ்டப்பட்டு உறங்கும்போது நேரம் நள்ளிரவு 1.00 மணி.

அவரின் நாடித்துடிப்பு :- 11, சுவாசம் — 24.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நான்காம் நாள்

கடந்த மூன்று நாட்களாக மேடையில் திலீபனுடன் சேர்ந்து ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது இருந்தேன். மானசீகமாகத் திலீபனின் நட்புக்கு உயரிய மதிப்பளிப்பவன் நான். அதனால் தான் என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. திலீபன் ஒன்றும் அருந்தவில்லையே, உண்ணவில்லையே, என்ற வேதனைதான் என்வாய்க்கு பூட்டுப் போட்டதே தவிர வேறு ஒன்றுமே இல்லை.

கடந்த மூன்று நாள்களாக ஒன்றுமே நான் உண்ணாமல் அருந்தாமால் இருந்தது சிறிது களைப்பை ஏற்படுத்தி இருந்தாலும் திட மனத்துடன் அதைச்சமாளித்துக் கொண்டேன். நான்காம நாளான இன்றுதான் எனக்குச் சற்று நாவறற்ச்சியாக இருந்தது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் யாரிடமும் என் நோன்பைப்பற்றிக் கூறாமல் இருந்தேன். இரண்டு மூன்று முறை ராஜனும், நவீனும் என்னைச் சாப்பிட அழைத்த போது நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன்.

திலீபன் இருக்கும் நிலையைப் பார்க்கும் போது என்னால் எதுவும் அருந்த முடியவில்லை. இது என்னால் தாங்க முடியவில்லை. விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டேன். என் வாழ்க்கையில் எத்தனையோ சோகச் சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. ஒன்றுக்குமே நான் அழுததில்லை. இன்று?...

ஆனால் இன்று காலை 10 மணியளவில் தலைவர் பிரபாகரன் என்னை அழைத்துவரச் சொன்னதை அறிந்து, என் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. தலைவர் மிகவும் கண்டிப்பானவர். ஏன்ன சொல்லப் போகிறாரோ என்ற கேள்வியை எனக்குள் பலமுறை கேட்டுக் கொண்டேன்.

தலைவரின் அறைக்குள் பயத்துடன் சென்றேன்.

“இருங்க வாஞ்சி அண்ணா” என்ற அன்பான குரல் என்னை வரவேற்றது. ஆச்சரியத்தால் என் கண்கள் அகன்றுவிட்டன. சாப்பிடாத மயக்கத்தில் என் கண்களும் மயங்கி விட்டனவா என்று, ஒரு கணம் சிந்தித்தேன்.

இல்லை! என் முன் இருப்பவர், தலைவர் பிரபாகரன் தான்! துறு, துறுவென்று பார்க்கும் அதே கண்கள். வட்ட முகம், கூரிய அழகான பெரிய மூக்கு, அளவாக அழகாக நறுக்கி விடப்பட்ட நீண்ட மீசை.

“நீங்க படிச்சவர். வயதில் மூத்தவர். நான் சொல்ல வேண்டியதில்லை. திலீபனில் அன்பு இருக்கவேண்டியது தான். அதற்காக இப்படியா சொல்லாமல் கொள்ளாமல் எதுவும் குடிக்காமல், சாப்பிடாமல் இருப்பது? நீங்கள் அவரைப் பார்க்க வேண்டியவர். உங்கள் உடம்பில் சக்தி இருந்தால்தான் அதற்கு உங்களால் முடியும். நான் திலீபனில் அன்பில்லாதவன் என்றா நினைத்திருக்கிறீர்கள்? திலீபன் என் பிள்ளையைப் போன்றவன். நானே அவனை இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு அனுமதித்திருக்கிறேனென்றால் என் மனத்தைக் கல்லாக்கித்தான் அதைச் செய்திருக்கிறேன்.

இந்த உண்ணாநோன்புப் போராட்டத்திற்கு தேவையான மனோதிடம் திலீபனிடம் இருப்பதனால்தான், உண்ணாநோன்பை அவன் நடத்த விரும்பியபோது நான் அதற்குச் சம்மதித்தேன். ஒவ்வொருவராக இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதுதான் நல்லது. திலீபனுக்கு அடுத்த சந்தர்ப்பம் உங்களுக் குத்தர முயற்சிக்கிறேன். அதுமட்டும் நீங்கள் வழக்கம்போல் சாப்பிட்டு, குடித்து இருக்க வேண்டும். திலீபனை வடிவாகக் கவனித்துக் கொள்ளுங்கள். இப்போது எதையாவது குடித்து உங்கள் பிடிவாதத்தை விட்டு விடுங்கள்.”

என்று கூறிய தலைவர், சொர்ணனை அழைத்து குளுக்கோசும் எலுமிச்சம் பழமும் வரவழைத்து, தானே தன் கைப்படக் கரைத்து, அந்தக் கிளாசை என்னிடம் நீட்டினார். ஆவ்வளவு கூறியபின் என்னால் எதுவும் திருப்பிக் கூற முடிய வில்லை. மடமடவென்று வாங்கிக் குடித்தேன்.

தலைவர் பிரபாகரன் கண்டிப்பானவர் என்பது தெரியும். ஆனால் அவரின் அன்பான வார்த்தைகள் எமது வாயைத் தானாகவே அடைக்கச் செய்துவிடும் என்பது எனக்கு இன்றுதான் புரிந்தது.

திலீபனின் உண்ணாநோன்புச் செய்தி இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. பிரித்தானியா, பிரான்ஸ்,

ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தும், அரபு நாடுகளிலிருந்தும் தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டேயிருந்தன.

ஏன்? இந்தியாவின் தமிழகத்திலும் இந்தச் செய்தி, உணர்வு அலைகளைக் கொந்தளிக்கச் செய்து கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகம் உட்பட பல நாட்டுப் பத்திரிகைகள் திலீபனின் உண்ணா நோனபிற்கு ஆதரவாகத் தலைப்புச் செய்திகளைப் போட்டிருப்பதாக, எமது தகவல் தொடர்பு அறிக்கைகள் கூறுகின்றன.

இன்று திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்து நான்காவது நாள், அவரது உடல் மிகவும் அசதியாகக் காணப்பட்டது... பயற்றங் காயைப் போல் வாடி வதங்கி, கட்டிலின்மேல் அவர் சுருண்டு கிடந்த தோற்றம், பார்ப்பவர் நெஞ்சங்களைப் பதை பதைக்க வைத்தது. அப்படியிருந்தும் அவர் இன்று மக்கள் முன் உரையாற்றினார். அவரின் உரை பின் வருமாறு:

"அன்பார்ந்த தமிழீழ மக்களே !

விளக்கு அணையுமுன்பு பிரகாசமாக எரியுமாம். அதுபோல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாகப் பேசமுடிகிறது. போராடத் தயாராகுங்கள்! எனக்கு விடை தாருங்கள்! ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமா கேட்க வேண்டாம். நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது. மறைந்த போராளிகள் 650 பேருடன் சேர்ந்து 651 ஆவது ஆளாகி மேலிருந்து பார்ப்பேன். எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும். என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எனது அவயவங்கள் செயலிழப்பதனால், இனிமேல் மனிதனாக வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும்.

எமது வீரர்கள் கொள்கைக்காக உயிரைக் கொடுப்பவர்கள். கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் ஐந்து ஆறு பேர் சாவதால் எவ்வித தீங்கும் வந்துவிடாது. முக்கள் புரட்சி வெடிக்கட்டும். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவைகளும் ஒரே கருத்தைத்தான் பேசியுள்ளேன்".

நேற்று இரவு முழுவதும் அவர் ஆழ்ந்து தூங்கினார். இன்று காலை ஒன்பது மணி ஆகியும் தூக்கத்தைவிட்டு அவர் எழுந்திருக்கவில்லை.

இளைஞர்களான "நவீனன்கள்" இருவரும், அவரின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலுமாக அமர்ந்திருந்து விசிறியால் ஆள்மாறி ஆள் வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று இரவு வழக்கத்தைவிட நாடித்துடிப்பு 110 ஆக அதிகரித்திருந்ததில் இருந்து அவர் உடல் நிலை பாதிப்படையத் தொடங்கிவிட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன். சூரியனின் கதிர்கள் பூமியெங்கும் வியாபித் திருந்தன.

அவரருகே சென்று அவரின் நாடித்துடிப்பை மெதுவாகப் பரிசோதித்துக் கொண்டு சுவாசத்தையும் எண்ணுகின்றேன்.
நாடித்துடிப்பு -120
சுவாசத்துடிப்பு - 24

ஆம். சாதாரண நிலையிலிருந்து மிகவும் அசாதாரணமாகக் கூடிக்கொண்டிருக்கிறது நாடித்துடிப்பு. (நாடித்துடிப்பு - சாதாரணம் 72-80). (சுவாசம் - 16-22)

நான்கு நாட்களாக நீராகாரம் உட்கொள்ளாத காரணத்தினால் உடலில் திரவநிலை குறையத் தொடங்கிவிட்டதால், இருதயத்திற்கும் நுரையீரல்களுக்கும் செல்லும் இரத்தத்தின் அளவும், கனமும் குறையத் தொடங்கி விட்டது. அதனால்தான் இருதயமும், சுவாசமும் பலமாக வேலை செய்யத்தொடங்கியிருந் தன. இதைவிட இரண்டு நாட்களாகச் சிறுநீர் கழியவில்லை. தொடர்ந்து இன்னும் இரண்டு நாட்களுக்குச் சிறுநீர் கழியாமல் இருக்குமானால் சிறுநீரகத் தளர்ச்சி (Kidney Failiure) ஏற்படலாம். "கிட்னி பெயிலியர்" ஏற்படுமானால் அது இருதயத்தில் தாக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இறப்பை உண்டுபண்ணலாம்.

எனக்கு தெரிந்தவரை வழக்கமான நடைபெறக்கூடி இந்த நிகழ்சிகளினால் திலீபனின் உயிர் பறிக்கப்பட்டக்கூடிய வாய்ப்பு எந்த நேரத்திலும் ஏற்படலாம்.

நல்லூர்க் கந்தனிடம் முறையிட்ட மக்கள் நாச்சிமார் கோயில் அம்மனிடமும் மனமார வேண்டுவதைக் காதல் கேட்கிறேன்.

"தாயே உன் பிள்ளையொன்று உண வில்லாமல் செத்துக் கொண்டிருக்கிறது. அதை நீதானம்மா கடைசிவரையும் காப்பாற்ற வேண்டும்..." நீண்ட, நாட்களுக்குப் பின், திலீபனுக்காக மக்களுடன் சேர்ந்து நானும் இப்படி வேண்டிக் கொள்கின்றேன். வெகு நேரத்தின்பின் கண் விழித்த திலீபன், எழும்புவதற்குச் சக்தியின்றி படுக்கையிலேயே கிடக்கிறார்.

மைதானம் சனக்கூட்டத்தினால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. திலீனைப் பார்ப்பதற்குகாக அணியணியாக மேடைக்கு முன் புறம் மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்... ஒருவர் முகத்திலாவது மகிழ்ச்சி இல்லை. சில தாய்மார்கள் திலீபன் படுத்திருக்கும் பரிதாப நிலை கண்டு பொறுக்க முடியாடல் விம்மி விம்மி அழுகின்றனர்.

கிறிஸ்தவ பாதிரியாரும், பல வருடங்காய் சிறையில் அடைபட்டுத் தாங்க முடியாத சித்திர வதைகளை அனுபவித்தவரும், 1983 யூலையில் வெளிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதினள் சிங்கள இனவாதப் பூதங்கால் கொல்லப்பட்ட சமயம் எதிர்பாராத விதமாகத் தம்பியவரும் ஆகிய, வண, பிதா சிங்கராயர் அவர்கள், திலீபனை பார்ப்பதற் காக மேடைக்கு வந்தார்.

ஒரு துறவியாக இருந்தாலும் திலீபனின் கோலத்தைக் கண்டதும் அவர் அழுதே விட்டார். திலீபனின் கரங்களைப் பற்றி அவர் அன்போடு வருடினார். உடல் சோர்வுற்று இருந்த போதிலும் திலீபன் அவருடன் மனம் திறந்து வெகுநேரம்வரை பேசிக்கொண் டிருந்தார்.

திலீபனின் பிடிவாதத்தையும், திடமனத்தையும் நன்கு அறிந்தவர் துறவி அப்படிருந் தும் திலீபன் படுத்திருக்கம் கோலத்தைக் கண்டு பொறுக்க முடியாடல் விசும்பினார். கொஞ்சமாவது தண்ணீர் அருந்திவிட்டு உண்ணா நோன்பைத் தொடருமாறு அவர் வற்புறுத்தினார்.

பாதர் சிங்கராயர் மீது திலீபனுக்கு எப்போதும் மிகுந்த மதிப்பும் பாசமும் உண்டு. அப் படியிருந்தும் தனக்கே உரிய புன்முறுவலைக் காட்டி, அதையே அவரின் வேண்டு கோளுக்குப் பதிலாக்கிவிட்டு மௌன மாகினார் திலீபன்.

பாதர் சிங்கராயர் சென்ற பின் ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமாரும், இயக்க யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப் பாளரும் "பரா" வும் வந்தனர்.

எந்த இயக்கத்தவர்களானாலும் அவர்ளுடன் சகஜமாகப் பேசுவதில் திலீபனுக்கு நிகர் திலீபன்தான்.

அவர்களும் திலீபனைத் தண்ணீராவது அருந்தும் படிவற்புறுத்தினார். அனால், அவர்களுக்குக் கிடைத்த பதிலும் மௌனம் தான்.

செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகிய இரு பெண்கள் திலீபனுக்கு ஆதரவாக, சாகும் வரையிலான உண்ணா நோன்பினை ஆரம்பித்தனர். ஆத்துடன், வல்வெட்டித் துறையில் 05 தமிழர்கள் ஏற்கெனவே உண்ணா நோன்பை ஆரம்பித்துவிட்டதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

இன்று மாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், திலீபனை வந்து சந்தித்தார். இந்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தூதுவரிடமிருந்தோ இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று. அவர் திலீபனிடம் கூறினார். அவருடன் திரு யோகியும் வந்திருந்தார்.

திலீபனின் பொறுப்புக்களையெல்லாம் தன் தலைமீது சுமந்து கொண்டிருப்பவர் யோகி. சில நாட்களுக்குமுன் இந்திய அமைதிகாக்கும் படையின் பாரபட்சமான நடவடிக் கைகளையும் சிங்கள இராணுவத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளையும் கண்டித்து, ஒரு நாள் அடையாள மறியற் போராட்டம், சகல இராணுவ முகாம்களிலும் பொது மக்களால் நடத்தப்பட்டபோது, யாழ் கோட்டையின் முன்பாக அன்றைய மறியல் போராட்டத்தை முடித்துவைத்து திலீபன் பேசிய பேச்சு என் நினைவுக்கு வருகின்றது.

"இந்த யாழ்ப்பாணக் கோட்டையியே சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்த அந்த கொடியை போர்த்துக்கேயர் பறித்தெடுத்தனர்... போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரும் ஒல்லாந்தரிடமிருந்தும் ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர். அதாவது புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அந்த தமிழ்க் கொடியைப் பறக்க விடுவதற்காக, ஒவ் வொருவரும் எமது உயிரை அர்பணித்துக் கொண்டு வருகிறோம். அதில் என் பங்கு எப்போது...? என்பது தான் எமது கேள்வியாக இருக்க வேண்டும் தவிர, பதவிகள் எமக்கு பெரியதல்ல... பதவிகளைத்தேடிச் செய்பவர்கள் புலிகள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இங்கே இருக்கிறார்கள்!"

அந்த தீர்க்கரிசனப் உயிர்வடிவம் கொடுப்பதற்குற்காகத்தான், திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தான்.

திலீபன் ஒரு சிறப்பான சதுரங்க வீரன். தனது பள்ளிப் பருவத்தில் பல பரிசுகளை இதற்காக அவர் பெற்றுள்ளார். ஆரசியலில் எந்த காயை எப்படி, எந்த நேரத்தில், நகர்த்த வேண்டும் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துருக்க வேண்டும்.

அகிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளிக்கும் இந்திய நாட்டின் சமாதான படையினரின் கண்களைத் திறப்பதற்கு, இந்த சாகும் வரையிலான உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தது முற்றிலும் பொருத்த மானதே. இந்தியா உள்ப்பூர்வமாக அண் ணல் காந்தியைப் பின்பற்றும் நாடாக இருந்தால், நிச்சயம் பதில் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் உலகத்தின் பார்வையில் இருந்து அது தப்பவே முடியாது.

அன்றிரவு திலீபனுக்குத் தெரியாமல் அவரது இரத்த அழுத்தத்தைப் பதிவு செய்து விட்டடேன்.
அது 100/65
நாடித்துடிப்பு - 114சுவாசம் - 25

இந்தியா என்ன செய்யப்போகிறது? ஏனக்கு ஒன்றும் புரியவில்லை. "வெள்ளையனே வெளியேறு" என்று ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்கதாகப் போராட்டம் நடாத்திய காந்தி இன்று இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? ஆனால் திலீபனோ இந்தியப் படையை வெளியேறு என்று கூடக் கேட்க வில்லையே! இவர்கள் திலீபனின் சாதாரண கோரிக்கைகளுக்கு ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? எனக்கு எதுவும் புரியவில்லை.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் நாள்

"ஈகையர் லெப்.கேணல் திலீபன் பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாட்கள் உண்ணாநோன் பிருந்து வீரச்சாவடைந்தவர். அவருக்கு உதவியாளராக இருந்த முன்னாள் போராளி கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன் அவர்கள் அந்தப் பன்னிரண்டு நாட்களையும் தொகுத்து "திலீபனுடன் பன்னிரண்டு நாட்கள்" என்ற புத்தகமாக வெளியிட்டிருந்தார். அத்தொடரை, திலீபனின் உண்ணாநோன்புக் காலமாகிய இக் காலத்தில் தருகிறோம்."

வழக்கம்போல் காலையில் சகல பத்திரிகைகளையும் வாசிக்கும் திலீபனால் இன்று எதுவுமே செய்யமுடியவில்லை. யாழ்ப்பாண குடா நாடு முழுவதும் இருந்து தனியார் பஸ் வண்டிகளில் மக்கள் வெள்ளம் போல் வந்து நிறைய தொடங்கிவிட்டனர்.

இன்னும் திலீபன் போர்வைக்குள்ளேயே புதைந்து கிடக்கிறான். அவனால் எழும்ப முடியவில்லை. உடல் பயங்கரமாக வியர்த்து கொட்டியது. மின்விசிறி அவர் பக்கத்தில் வேகமாக சுழன்று கொண்டிருந்தது. ஒரு மனித இயந்திரம் தன் முழுச்சக்தியையும் பிரயோகித்து இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைய பத்திரிகைகளில் முக்கிய செய்திகளாக வழக்கம்போல் திலீபனைபற்றிய செய்திகளே இடம் பெற்றிருந்தன. திலீபன் சோர்ந்து வருகிறார். மெழுவர்த்தியைப் போல அவர் சிறிது சிறிதாக உருகிக்கொண்டிருக்கிறார். அவரது சிறு நீரகம் பாதிப்படையத் தொடங்கிவிட்டது. இருதயம் பலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது.



தொடர்ந்து அவர் நீராகாரம் எடுக்காவிட்டால் நிலைமை மேலும் மோசமாகி எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம்.

பத்திரிகைகளைப் படிக்கும்போது என் கைகளுடன் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது. திலீபன் என்ற ஒரு இனிய காவியத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்து விட்டதுபோல் பிரமை எனக்கு ஏற்பட்டது. அதற்கிடையில் ஓர் செய்தி காற்றோடு காற்றாக கலந்து வந்து என் செவியில் விழுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச்சேர்ந்த திலகர் அவர்கள் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார் என்பதுதான் அது. புலிகளின் சார்பாக திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்களில் திலகரும் ஒருவர். அப்படியானால் பிரதமர் ராஜீவ்காந்தியிடமிருந்து ஏதாவது அழைப்பு வந்திருக்குமா என்ற நப்பாசை என் மனதில். விசாரித்தபோது எந்த விதமான அழைப்பும் வரவில்லை வழமைபோல சாதாரண விசயங்களை கவனிப்பதற் காகத்தான் திலகர் போய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ஏன் கேட்டோம் என்றிருந்தது.

திலகரின் இந்தியப்பயணம் பற்றி கேட்டு அறியாமல் விட்டிருந்தால் ஓரளவு மன நிம்மதியாவது கிடைத்திருக்கும். ஆனால் விதியே உன் கரங்கள் இத்தனை கொடியதா ? பம்பரம் போல் கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்துடன் கலகலவென்று சிரித்துக் கொண்டு எம்மையே சுற்றி வரும் திலீபனை சித்திரவதை பள்ளத்தில் தள்ளுவதுதான் உன் கோர முடிவா? அப்படி அவர் என்ன குற்றம் செய்து விட்டார். தமிழினத்திற்காக தனது தந்தை சகோதரங்களை பிரிந்து வந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தன் வைத்திய படிப்பையே உதறி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இரவும் பகலும் மாடாக உழைத்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக தனது வயிற்றிலுள்ள குடலின் 14 அங்கலத்தை வெட்டி எறிந்தாரே அது குற்றமா? தமிழினத்திற்காக இன்று தன்னையே சிறிது சிறிதாக அழித்துக் கொண்டு உண்ணாநோன்பு இருக்கிறாரே அது குற்றமா? எது குற்றம்?

வானத்தைப்பார்த்து வாய்விட்டு கத்த வேண்டும் போல் இருக்கிறது. கதறித்தான் என்ன பயன் ஏற்படப்போகிறது. இலட்சக் கணக்கான மக்கள் கடந்த ஐந்து நாட்களாக கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்கிறார்களே. யாருக்காக? திலீபனுக்காக, தமிழினத்திற்காக அப்படி இருக்க அந்த கண்ணீரை ஏக்கத்தை இன்னும் யாருமே புரிந்து கொள்ள வில்லையே. ஏன்? உலகில் மனித தர்மமே செத்துவிட்டதா? காந்தி இறந்ததற்காக கண்ணீர் வடிக்கும் உலகம் காந்தியத்தின் காலடியில் சிறிது சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் திலீபன் என்னும் மெழுகுவர்த்தியைக் காணவில்லையா? அல்லது கண்டும் காணாது போய்விட்டதா? எத்தனையோ முறை திலீபன் சாவின் விளிம்பில் இருந்து தப்பியிருக்கிறார்.

1983ம் ஆண்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நவாலிப்பிரதேச பொறுப்பாளராக இருந்தபோது ஓர் நாள் நவாலி கத்தோலிக்க தேவாலயத்தின் அருகே நின்று பொது மக்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று இரண்டு ஜீப் வண்டிகள் அவரருகே முன்னும் பின்னுமாக வந்து நின்றன. சிறீலங்கா இராணுவத்தினர் கண்சிமிட்டும் நேரத்தில் சுற்றி வளைத்து விட்டதை உணர்ந்த திலீபன் எதுவித பதற்றமும் அடையாமல் நிதானமாக நின்றார். அவரின் மதி நுட்பம் மிகவும் தீவிரமாக வேலைசெய்யத்தொடங்கியது. யாரோ ஒரு தமிழ்த்துரோகியால் வழங்கப்பட்ட தகவலை வைத்துக்கொண்டு திலீபனை அடையாளம் கண்டு கொண்ட சிங்கள இராணுவத்தினர் ஜீப் வண்டியில் ஏறுமாறு உத்தரவிட்டனர். அவரது கையிலே ஆயுதம் அடங்கிய சிறிய சூட்கேஸ் ஒன்று இருந்தது. அவரருகே இரு இராணுவத்தினர் சேர்ந்து வந்தனர்.

ஜீப் வண்டியில் ஏறும்போது எதிர்பாராத விதமாக பக்கத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து சூட்கேஸினால் மின்னல் வேகத்தில் தாக்கிவிட்டு பக்கத்திலிருந்த பனந்தோப்பை நோக்கி ஓடத் தொடங்கினார் திலீபன். எதிர்பாராத தாக்குதலினால் நிலை குலைந்து விட்ட இராணுவத்தினர் என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். மறுகணம் அவர்களின் கைகளிலிருந்த துப்பாக்கிகள் பயங்கரமாக திலீபனை நோக்கி உறுமத் தொடங்கின.

அவரது கை ஒன்றை துளைத்துக்கொண்டு சென்றது துப்பாக்கிகுண்டு. இரத்தம் சிந்த மனதை திடமாக்கிக்கொண்டு வெகுநேரமாக



ஓடிக்கொண்டிருந்தார் திலீபன். இராணுவத்தினரால் அவரை பிடிக்கமுடியவில்லை. இந்த ஏமாற்றத்தினால் பல பொதுமக்களை அவர்கள் அன்று கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளிவிட்டுச்சென்றனர். யாழ் பெரியாஸ்பத்திரியில் 1986ம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இராணுவத்தினருடனான மோதலின்போது திலீபன் தன் துப்பாக்கியால் பலரை சுட்டுத் தள்ளினார்.

ஆனால் எதிரிகளின் ஓர் குண்டு அவர் குடலை சிதைத்துவிட்டிருந்தது. யாழ் பெரியாஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டபோது அவர் குடலின் 14 அங்குலத்துண்டை சத்திரசிகிச்சை நிபுணர்கள் அகற்றிவிட்டனர். சுமார் மூன்று மாதங்களாக வைத்தியசாலையிலேயே வாழ்ந்தபின்தான் அவர் பூரண குணமடைந்தார். இப்படி எத்தனையோ துன்பங்களை தமிழினத்திற்காக அனுபவித்தவர்தான் திலீபன். ஆயுதப்போராட்டத்தினால் மாத்திரமன்றி அகிம்சையாலும் தன்னால் சாதனை புரிய முடியும் என திலீபனுக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

அதனால் இந்தப்போராட்டத்தில் அவர் தானாகவே முன்வந்த எத்தனையோ பேர் தடுத்தும் கேளாமல் குதித்தார். இன்று மாலை இந்திய சமாதானப்படையினரின் யாழ் கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் கேணல் தரார் அவர்கள் திலீபனை பார்க்க வந்தார். அவர் சனங்களிடையே நடந்து வரும்போது பலதாய்மார்கள் அவர் மீது கல்களை வீச தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களை தடுத்து அவருக்கு தகுந்த பாதுகாப்புக்கொடுத்து மேடைக்கு அருகே அழைத்துச்சென்றனர் விடுதலைப் புலிகள். திலீபனின் உடல் மோசமாகி வருவதால் பொதுமக்களும், இயக்க உறுப்பினர்களும் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை யோகியும் வேறு சிலரும் எடுத்துக் கூறினர்.

தான் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறிவிட்டுச் சென்றார். அவர் மூலமாவது திலீபனின் உயிர் காப்பாற்றப்படாதா என்று எங்களில் சிலர் நிம்மதியாக இருந்தோம். களைப்புடன் திலீபன் உறங்கிவிட்டார்.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஆறாம் நாள்

அதிகாலையில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருந்தது. ஆம் ! இன்று திலீபன் காலை 5 மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விட்டார். அதுமட்டுமன்றி தான் சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறினார். அவர் இருக்கும் நிலையிலே படுக்கையை விட்டு எழுந்து செல்வது என்பது முடியாமல் இருந்ததால் படுக்கையிலேயே சலப்போத்தலைக் கொடுத்தேன்.

ஆனால் சலம் போகவில்லை. வயிற்றை வலிப்பதாகவும் சலம் போவதற்குக் கஷ்டமாக இருப்பதாகவும் கூறினார். சுகிச்சையின் மூலம் கொஞ்சமாவது சிறுநீர் கழிக்க முடியும். ஆனால் அதைப்பற்றி பேசினாலே எரிந்து விழுவார் என்பதற்காக ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

நாளைந்து நாட்களாகப் படுக்கையிலே கிடப்பதாலும் நீர் அருந்தாமல் இருப்பதாலும் அவரது சலப்பை பாதிக்கப்பட்டிருக்கலாம்... இதை அவரிடம் எப்படிக் கூறுவது? தூன் மறைவிடம் சென்று சிறுநீர் கழிக்கப் போவதாகக் கூறினார். ஆவரின் விருப்பத்துடன், அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து இறக்கி மேடையின் பின்பக்கம் கொண்டு சென்றோம் பதினைந்து நிமிடங்களாக வயிற்றைப் பொத்திக் கொண்டு மிகுந்த கஷ்டப்பட்டார்.

அதன்பின் ஆச்சரியப்படுமளவிற்கு சுமார் அரை லீற்றர் அளவு சலம் போனது. ஏனக்கு அது மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. ஐந்து நாட்களாக எதுவும் குடிக்காமல் இருக்கும் ஒருவரால் இது எப்படிச் சாத்தியமாக முடியும்? அன்று வைத்திய நிபுணர் சிவகுமார் அவர்களிடம் இதுபற்றி மறக்காமல் கேட்டேன். அவர் எந்தப் பதிலுமே கூறாமல் மௌனமாக சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சென்றார்.

அன்று மத்தியானம் எமது இதயத்துக்கு மகிழ்ச்சியைத்தரும் ஓர் இனிய செய்தி எனது செவிகளில் விழுந்தபோது இனந்தெரியாத நிம்மதி என்னிடம் குடிவந்தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரகத்திலிருந்து ஓர் முக்கிய நபர் இன்று வரப்போகிறாராம். ஆவர் நமது அரசியல் பிரிவினருடன் திலீபனைப் பற்றிப் பேசப் போகிறாராம்...

என் பிரார்த்தனை வீண்போகாது திலீபனின் உயிர் காப்பாற்றப்படப் போகின்றது...

இந்தியத் தூதுவரகத்திலிருந்து யாராவது வருவதானால் நிச்சயமாக பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆலோசனைப்படிதான் வருவார்கள்... அப்படி வருபவர்கள் உணர்ச்சி பொங்கும் தாய்க்குலத்தின் கண்ணீரைக் கண்டாவது இரங்கமாட்டார்களா?

திலீபனை எண்ணித் துடிதுடித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மனங்களிற்கு அந்த ஆறுதல் செய்தி நிச்சயம் சாந்தியளிக்கத்தான் செய்யும்.

திலீபா ! நீ ஆரம்பித்து வைத்த அகிம்சைப் போர் எங்களது ஆயுதங்களுக்கு மதிப்பில்லாமல் செய்யப்போகிறது. போலும்? உன் அகிம்சைப் போரினால் அப்படி ஒரு நிலை எமக்கு வருமானால் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

ஏமக்கு மட்டும் ஆயுதங்களை தூக்கி கண்டபடி சுட்டுத்தள்ள வேண்டும் என்று ஆசையா என்ன? முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை "செல்வா" தலைமையில் முயன்று முடியாத நிலை யில்... எமது தமிழ்ச் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றத்தானே வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம்.

நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன்... அவனுக்கு அது புரியாதது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான்...

ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தன் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும். நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த தாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமை எப்பொழுது முடியும்? தங்கத் தமிழர்கள் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்?

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றி கண்டார் என்றால் அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத் தளம் இந்திய மண்ணிலே இருந்தது... காந்தியின் போராட்டத் தளத்திலே மனித நேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார்கள்... ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது.

ஆனால் நமது மண்ணில் அப்படியா?

எத்தனை சந்தர்ப்பங்களில் நமது தலைவர்கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப்பார்கள்? எத்தனை இனக்கலவரங்களில் நமது இனத்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டு தாாப் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும்? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்?

அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்?

அகிம்சை ! அகிம்சை ! அகிம்சை !

இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தது. இந்தக் தாரக மந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்டகளாகத் தான் தந்தார்கள்... மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன... தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணிதிரண்டு நிற்பதற்குக் காரணம் யதார்? சிங்களப் பேரினவாதம்தான் !

இன்று காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலில் திலீபன் பெயரில் நூற்றுக் கணக்கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்தவண்ணமிருந்தன. பிற்பகல் மூன்று மணியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியிலிருந்து சனங்கள் பஸ்களில் வந்து குவியத் தொடங்கினர். எங்கே பார்த்தாலும் மக்கள் அலைகள் தான் !

தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து அழுத காட்சி என் நெஞ்சை தொட்டது. துரோகிகளினால் வீசப்பட்ட வெடிகுண்டினால் தன் மகன் ஒரு காலை இழந்த போது அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"ஒரு கால் போனால் என்ன? இன்னும் ஒரு கால் இருக்கு... இரண்டு கையிருக்கு... அவன் கடைசி சரையும் போராடுவான்..."

போர் முனையில் தன் மகனின் மார்பில் வேல் பாய்ந்திருப்பதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்ட வீரத் தமிழ்த்தாயின் கதையை இது எனக்கு நினைவூட்டியது.

உதவி இந்தியத் தூதுவர் திரு.கென் அவர்கள் விமான மூலம் பலாலிக்கு வந்து விட்டா ராம்... அவருடன் பேச்சு வார்த்தை நடத்து வதற்காக திரு அன்ரன் பாலசிங்கம், போயிருக்கின்றனர்... ஏன்ற செய்தியை "சிறி" வந்து சொன்னபோது மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன். திலீபனுக்கும் அதைத் தெரிவித் தேன்.

காலையில் சிறுநீர் கழித்ததால் திலீபன் சற்றுத் தெம்பாக இருந்தார். பேச்சுவார்த்தை முழுந்து அதில் சாதகமாக முடிவு கிடைக் குமானால்... உண்ணாநோன்பை நிறுத்திவிட்டு திலீபனை யாழ். பேரியாஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும்... அங்கே அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்குவேண்டிய சிகிச்சைகளை உடனடியாக அளிக்கத் தொடங்கினால்... இரண்டு மூன்று நாள்களில் திலீபன் வழக்கம் போல் எழும்பி நடக்கத் தொடங்கி விடுவார்.

இப்படி எனக்குள்ளேயே கணக்குப் போட்டுக் கொண்டேன்.

இயக்க உறுப்பினர்கள் திலீபனுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவரை சந்திக்க வந்த மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் விம்மி விம்மி அழுத என் நெஞ்சைத் தொட்டது.

தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா, தளபதி புலேந்திரன், தளபதி ஜொனி போன்றோர் கண் கலங்கி திலீபனின் தலையை வருடி... பேசி விட்டுச் சென்றனர்.

அவர்கள் போனதும் திலீபன் என்னை அழைத்தார்.

"கிட்டண்ணையைப் பார்க்க வேணும்போல இருக்கு..." என்று மெதுவாகக் கூறும்போது அவர் முகத்திலே "ஏக்கம் படர்திருந்தது. ஒரு கணம் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கிட்டண்ணா, குட்டிசிறி, ஜயர்... இவர்கள் எல்லாரும் இந்தியாவில் இருக்கின்றனர்.

திலீபனுக்கு என்ன பதில் சொல்லதென்று தெரியாமால் தவித்தேன்... கிட்டு அண்ணர் இந்தியாவில் தெரியும்... ஆனால் இந்த நிலையில், அவர் கிட்டு அண்ணாவைக் காண விரும்பியது நியாயம்தான்.

இரவு வெகுநேரம்வரை போச்சுவார்த்தையின் முடிவு வரும் வருமென்று பார்த்துக் கொண்டிருந்தோம்... ஆனால், அது வரவேயில்லை.

இன்று மாலை சிறிலங்கா நவ சமமாசக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார, மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து திலீபனைப் பார்த்துவிட்டுச் சென்றனர். இரவு வெகுநேரம் வரை எனக்குத் தூக்கமே வரவில்லை.. ஆனால், திலீபன் தன்னை மறந்து நன்றாக உறங்கினார்.

அவரின் இரத்த அழுத்தம் 85 . 60
நாடித்துடிப்பு- 120
சுவாசம் -22

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஏழாம் நாள்

இன்று காலையில் எழுந்ததும் முதல் வேலையாக யோகியை என் கண்கள் தேடின...

நேற்றைய பேச்சுவார்த்தையின் முடிவு என்னவாக இருக்கும்...? இந்தக் கேள்விதான் இதயத்தின் பெரும் பாகத்தை அரித்துக் கொண்டிருந்தது. காலை 10 மணிவரை



எவ்வளவோ முயன்றும் அவர்கள் இருவரும் என் கண்களில் படவேயில்லை. ஆனால், திடீரென்று "இந்தியா ருடே" (India Today) பத்திரிகை நிருபரும் இந்திய துரதஷனின் (இந்தியத் தொலைக்காட்சி ஸ்தாகனம்) வீடியோப் படப்பிடிப்பாளரும், யோகியுடன் வந்து திலீபனைப் படம்பிடிக்கத் தொடங்கினர். "இந்தியா ருடே" நிருவர் என்னிடம் திலீபனின் உடல் நிலையைப்பற்றித் துருவித் துருவித் கேட்டுத் தெரிந்துகொண்டார். என்னால் முடிந்தவரை முதல் நாள் உண்ணா நோன்பிருந்து இன்றுவரை அவரின் உடலின் நிகழ்ந்த மாற்றங்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துக் கூறினேன்.

அவர்கள் சென்ற பின் யோகியை அழைத்து, என் மனதுக்குள் குடைந்துகொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேவிட்டேன். அதற்கு யோகி கூறிய பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

"இந்திய அமைதி காக்கும் படையின் மூத்த தளபதி ஒருவரும் பிரிகேடியர் ராகவன், எயர் கொமாண்டர் ஜெயக்ககுமார், கடற்படைத் தளபதி அயயசுந்தர் ஆகியோரும் வந்து பேசிய தாகவும், உதவித்தூதுவர் வரவில்லை என்றும், திலீபனின் பிரச்சினையில் அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்கவில்லை" என்றும் யோகி கூறினார்.

அந்தப் பதிலைக் கேட்டால் அதை ஜீரணிக்க என் மனத்துக்கு வெகுநேரம் பிடித்தது. அந்தப் பேச்சுவார்த்தை பற்றிய முழு விபரத்தையும் யோகியும் யோகி திலீபனிடம் விளக்கிக் கூறி, என்ன செய்யலாம்...? என்று கேட்டார்.

பேசச் சத்தியற்று, நடக்கச் சத்தியற்று துவண்டு கிடந்த அந்தக் கொடி, தன் விழிகளைத் திறந்து பார்த்துவிட்டு வழக்கம் போன்றுதன் புன்னகையை உதிர்த்தது.

"எந்த முடிவும்... நல்ல முடிவாக இருக்க வேணும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தர வேணும்... இல்லையெண்டால்... நான் உண்ணாநோன்பைக் கடைசி வரைக்கும் ... கைவிடமாட்டன்."

ஒவ்வொரு வார்த்தையாக கரகரத்த குரலில் வெளிவந்தது திலீபனின் பதில்.

படபடவென்று நடுங்கிய நடுங்கிய குரலில் மெதுவாகத் திடமாகத் திலீபன் கூறிமுடித்த போது யோகி மேடையில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் 1985 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வந்த பின்னர் அரசியல்ப் பிரிவுப் பொறுப்பாளராக திலீபன் இருந்து மிகச் சிக்கலான பிரச்சனைகளை யெல்லாம் பொது மக்கள் மத்தியில் தீர்த்து வைத்திருக்கின்றார்.

1986 ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஏற்பட்ட ஒருசிறு பூசல் காரணமாக மினிபஸ்களின் சொந்தக்காரர்கள் ஒருவாரகாலமாக பஸ்களை ஓடவிடாமல் வழிமறிப்புப் போராட்டம் நடத்தியதால் மக்கள் மிகுந்த துன்பப்பட்டனர்.

திலீபன் தனக்கேயுரிய புன்முறுவலுடன் அவர்களை அணுகி மிகவும் எளிமையாக அவர்களுடன் பேசி இரண்டு மணித் தியாலத்தில் பஸ்களை ஓடச்செய்தனர். யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இடையே நடைபெறும் பூசல்கள் கடல் எல்லையிலே ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே ஏற்படும் சில சிக்கலான பிரச்சினைகள்

பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சிக்களான பிரச்சினைகள், கடை முதலாளிகள் - தொழிலாளர்களின் பிரச்சினைகள், மூட்டை தூக்குவோர், வண்டி ஓட்டுவோர் - ரச்சிக்கரர்கள், மாநகரசபை ஊழியர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், டாக்ரர்கள், தாதிமார், வைத்தியசாலை சிற்றூழியர்கள், வழக்கறிஞர்கள், லொறிச் சொந்தக்காரர்கள் இப்படிப் பலரகமானவர்களின் பிரச்சினைகளை யெல்லாம் உடனுக்குடன் பேசிச் சமரசமாகத் தீர்த்து வைத்தவர் திலீபன்.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமமான நாவாந்துறையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பலமான இனக்கலவரம் ஏற்பட்டது. கத்தகள், பொல்லுகள் கைக் குண்டுகள், துப்பாக்கிகள் எல்லாம் தாராளமாகப் பாவிக்கப்பட்டன. ஒரே நாளில் பலர் இருபக்கத்திலும் மாண்டனர். பலர் படுகாய முற்றனர்.

திலீபன் தன்னந்தனியாக இரு சமூகத்தவர்களையும் இரவிரவாகச் சென்று சந்தித்தார். முடிவு? அடுத்த நாள் பெருமழை பெய்து ஓய்ந்தது போல் கலவரம் நின்றுவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு இருப்பதற்குக் காரணம் இவர்கள் சிங்கள இராணுவத்தின் அட்டூலியங்களிலிருந்து தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளின் அரசியல்ப் பிரிவுத் தலைவர் திலீபனால் அவை நிச்சியமாகத் தீர்க்கப்படும். என்ற உயர்ந்த நம்பிக்கையாலும் ஏற்பட்ட செல்வாக்குத்தான். அது.

மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரவு பகலாக உறங்காது வேளாவேளைக்கு உணவின்றி அயராது உழைப்பதில் திலீபனுக்கு நிகர் திலீபன் தான். ஆவர் சுயமாக எப்போதாவது மினுக்கிய மடிப்புக் கலையாத ஆடைகள் அணிந்ததையும் நான் பார்த்ததில்லை.

அவரிடம் இருப்பதெல்லாம் ஒரேயொரு நீளக் காற்சட்டை (ட்ரவுசர்) ஒரேயொரு சேர்ட் தான். அரசியல் விசயமாக ஊரெல்லாம் சுற்றி பல பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு காய்ந்த வயிற்றுடன் இரவு 12.00, 1.00 மணிக்கு தலைமை அலுவலகத்திற்கு வருவார். ஆந்த நள்ளிரவில் அழுக்கேறிய தன் உடைகளைக்களைந்து தோய்த்து காயப்போட்டுவிட்டே படுக்கச் செல்வார். பின்னர் அந்த இயந்திரம் அதிகாலையிலேயே தன் இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட திலீபன் இன்று வாடி, வதங்கி தமிழினத்துக்காக தன்னையே அழித்துக் கொண்டிருக்கின்றாரே? ஏத்தனையே பேரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த இவரின் பிரச்சினையை, தமிழினத்தின் பிரச்சினையை யார் தீர்க்கப் போகின்றார்கள்.

சீலமுறு தமிழன் சிறப்பினை இழப்பதோ?
சிங்கள இனத்தவர் நம்மை மிதிப்பதோ?
கோலமுறு திரு நாடினைக் கொள்ளையர்...
விரித்த வலையினில் வீழ்ந்து அழிவதோ?
காலனெனும் கொடும் கயவனின் கையினால்...
கண்ணை இழந்து நாம் கவலையில் நலிவதோ?
நீலமணிக்கடல் நித்தமும் அழுவதோ..?
நாடு பெறும்வரை நம்மினம் தூங்குமோ...?

"ஈழமுரசு" பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கவிதையை ஒருநாள் திலீபன் வாசித்துவிட்டு என் தோள்களைத் தட்டிப் பாராட்டியதை இன்று எண்ணிப்பார்க்கின்றேன்.

வாரா வாரம் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் எனது கவிதைகளை ஒரு தொகுப்பாக்கி வெளிவிட வேண்டும். என்ற திலீபனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக சென்ற வாரம் தான் அவைகளை ஒன்று சேர்த்து பிரதிகள் எடுத்து ஒருபிரதியை ராஜனிடமும் மறு பிரதியை யோகியிடமும் கொடுத்திருந்தேன்.

தலைவர் பிரபாகரன் "முன்னுரை" எழுத வேண்டும் என்ற என் விருப்பத்தை திலீபனிடம் வெளியிட்ட போது அவரும் அதற்குச் சம்மதித்தார். உண்ணாவிரதம் முடிந்த பின் முதல் வேலையாகத் தலைவரிடம் சகல கவிதைகளையும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தலைவர் பிரபா ஓர் "இலக்கிய ரசிகன்" என்பது பலருக்குத் தெரியாது.

அந்த நெஞ்சுக் கூட்டிற்குள் நிறைந்து கிடக்கும் இராணுவத் திட்டங்களும், அரசியல்ப் புரட்சிக் கருத்துக்களும், இலக்கியக் குவியல்களும் மலை போன்ற தமிழுணர்வும்... அப்பப்பா! ஏராளம் ஏராளம்.! அப்படிப்பட்ட ஒரு தலைவனின் வழிவந்த திலீபனின் ஏழாம் நாள் தியாகப் பயணம் தொடர்கின்றது.
இன்று அதிகாலையிலே நிரஞ்சன் குழுவின்

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் எட்டாம் நாள்

கொட்டகை போடும் வேலையை ஆரம்பித்து விட்டனர். முதல் நாள் இலட்சக்கணக்கான மக்கள் வந்திருந்ததால் போடப்பட்டிருந்த கொட்டகைகள் எல்லாம் சனக்கூட்டத்தினால் நிரம்பி வழிந்தன. ஏராளமானோர் சுடு வெயிலில் காலகடுக்க நிற்கவேண்டி ஏற்பட்டதால் நல்லூர் கோவில் மைதானம் முழுவதிலும் படங்குகளினால் கொட்டகை போடத் தொடங்கியிருந்தார்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கும்போது இத்தனை சனக்கூட்டம் வருமென யாருமே எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் மட்டு மன்றி, இந்தியா மற்றும் பல வெளிநாடுகளில் கூட திலீபனின் தியாகப் பயணம் பற்றியே மக்கயில் பெரும்பாலானோர் பேசிக் கொண்டிருப்பதாகப், பத்திரிகைகளில் போட்டிருந்தார்கள்.

அத்துடன் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பரவலாக மக்கள் அடையாள உண்ணா நோன்புகளை மேற்கொண்டு தம் எழுச்சியைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரில் "மதன்" என்ற இளம் தளபதி ஒருவர், மக்களின் ஆதரவுடன் தன் போராட்டத்தைத் திலீபனின் வழியில் இன்னும் இரண்டு நாட்களில் ஆரம்பிக்க விரும்பதாக என்னிடம் மாத்தா கூறினார். இந்த மதனைத் தெரியாதவர்களே மட்டக்களப்பில் இல்லை. 1985ம் ஆண்டு நான் இந்தியாவில் இருந்தபோது மதன் தமிழீழத்துக்குச் சென்றார். பல போர்க்களங்களைத் தன் இளம் வயதில் சந்தித்தார்.

திருகோணமலையிலுள்ள குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தைத் தகர்த்தவர்களுள், இந்த மதனும் ஒருவர். இதே குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் முக்கிய பங்கெடுத்தவர்கள் என் மனதில் மட்டுமன்றி தமிழ் மக்களின் மனங்களிலும் நீங்காத இடம் பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு யாரமல்ல...

லெப்டினன்ட் கேர்ணல் சந்தோஷம், லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன் ஆகியோர்தான்.

தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலே திருச்செல்வம், என்ற போராளியும், அவருடன் சேர்ந்து பல பொது மக்களும், உண்ணா நோன்புப் போராட்டத்தினை நாளை தொடங்க விருப்பதாகச் செய்திகள் வெளி வந்தன.

தமிழீழம் எங்குமே அஹிம்சைப் போர் தீப் பிளம்பாக எரிந்து கொண்டிருக்கிறது.

திலீபன் ஓர் மகத்தான மனிதன் தான். இல்லையென்றால் அவன் வழியிலே இத்தனை மக்கள் சக்தியா...?

வல்வெட்டித்துறையிலே திலீபனுக்கு ஆதர வாக உண்ணாவிரதம் இருக்கும் ஐந்து தமிழர்களைத், தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தை யும், திலீபனின் படத்தையும், பத்திரிகைகளில் அருகருகே பிரசுரித்திருந்தார்கள்.

"ஈழமுரசு" பத்திரிகையில் திலீபனுக்கு அடுத்த மேடையிலே சாகும் வரை (நீராகாரம் அருந் தாமல்) உண்ணாநோன்பு இருந்து கொண் டிருக்கும் திருமதி நல்லையா, செல்வி. குக சாந்தினி, செல்வி. சிவா துரையப்பா ஆகி யோரின் படங்களைப் போட்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லாமே திலீபனின் அகிம் சைப் போருக்கு வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்தன. பத்திரிகைகளில் வெளி வரும் செய்திகள் மட்டுமன்றி ஒவ்வொரு ஊரிலிருந்தும் பல பொதுசன அமைப்புக்கள் அணியாக வந்து உண்ணாநோன்புப் போராட் டத்தில் பங்குபற்றுவதோடு திலீபனுக் காக கவிதை வடிவில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்து விநியோகித்து வந்தன.

இந்த எழுச்சியை, மக்களின் வெள்ளத்தைப் பார்ப்பதற்கு என்றே தினமும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றி சுற்றி வட்டமிட்டுக் கொண் டிருந்தன. இந்திய சமாதானப் படையின் ஹெலிகொப்டர்கள்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல. அஹிம்சைப் போராட்டத்திலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற பேருண்மை, உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது.

திலீபனின் சாதனை உலக அரங்கிலே ஓர் சரித்திரமாகிக் கொண்டிருக்கிறது. உலகிலே முதன் முதலாக ஒரு சொட்டு நீர் கூட அருந் தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட் டத்தை ஆரம்பித்து ஏழு நாட்களை வெற்றிகர மாக முடித்தவர். என்ற பெருமையுடன் அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக் கொண் டிருக்கிறார் திலீபன்.

அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்து விட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன... வயிறு ஒட்டிவிட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஓர் கொடியினைப் போல் வதங்கிக் கிடக்கின்றார். அவரால் விழிகளைத் திறக்க முடியவில்லை. பார்க்க முடிய வில்லை...
பேச முடியவில்லை...
சிரிக்க முடியவில்லை...

ஆம் ! தூங்க மட்டும்தான் முடிகிறது. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கோல நிலவு தன் எழிலை இழந்து வாடி வதங்கப் போகிறது?

முரளியின் பொறுப்பிலுள்ள மாணவர் அமைப் பைச் (S.O.L.T) சேர்ந்த மாணவ-மாணவிகள் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக் கின்றனர்.

மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், சனங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றனர். பக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட் டன. பெரும்பாலானோர் அழுதழுது கவிதை படிக்கின்றார்கள்.

"சிந்திய குருதியால்
சிவந்த தமிழ் மண்ணில்
சந்ததி ஒன்று
சரித்திரம் படைக்க...
முந்திடும் என்பதால்...
முளையிலே கிள்ளிட...
சிந்தனை செய்தவர்
சிறுநரிக் கூட்டமாய்...
"இந்தியப்படையெனும்"
பெயருடன் வந்தெம்
சந்திரன் போன்ற...
திலீபனின் உயிரைப்
பறித்திட எண்ணினால்...
பாரிலே புரட்சி...
வெடித்திடும் என்று...
வெறியுடன் அவர்களை...
எச்சரிக்கின்றேன் !"

மேடையிலே முழங்கிக் கொண்டிருந்த இந்தக் கவிதை என் மனத்திலே ஆழமாகப் பதிகிறது. இன்று திலீபனின் உடல் நிலை மிகவும் மோச மாகி விட்டது என்பதை அவரின் வைத்தியக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

இரத்த அழுத்தம் - 80/50
நாடித் துடிப்பு - 140
சுவாசம் - 24

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஒன்பதாம் நாள்

அதிகாலை 5 மணியிருக்கும். கிழக்குப் பக் கத்தே தேர்முட்டி வாசலில் நின்றிருந்த வேப்ப மரத்தினின்று குயில் ஒன்று கூவிக் கொண் டிருக்கிறது. "கூ... கூ...குக்...கூ..." அதன் குரலில் தொனித்த விரக்தியின் சாயலைக் கேட்ட நான், திலீபனை ஏக்கத்துடன் பார்க் கின்றேன். அந்தக் குயில் எதை இழந்து இப்படிக் கூவுகிறதோ தெரியவில்லை.



ஆனால் இந்தக் குயில்...?

எம்மை - எம் இனத்தைக் காக்க தன்னையே இழந்து கொண்டிருக்கிறதே... இந்த சிறு குயிலின் சோக கீதம் உலகத்தின் காதுகளில் இன்னுமா விழவில்லை...?

திலீபனை நன்றாக உற்றுப் பார்க்கிறேன். அவரின் உடலிலுள்ள சகல உறுப்புகளும் இன்று செயலற்றுக் கொண்டிருக்கின்றன. உதடுகள் அசைகின்றன. ஆனால் சத்தம் வெளிவரவில்லை. உதடுகள் பாளம், பாள மாக வெடித்து வெளிறிவிட்டிருந்தன. கண்கள் இருந்த இடங்களில் இரு பெரிய குழிகள் தெரிகின்றன.

இன்று காலை எட்டரை மணியில் இருந்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினேழு பாட சாலைகளிலிருந்து சுமார் 5000 மாணவ மாணவிகள் அணிவகுத்து வந்து திலீபனைப் பார்த்துக் கண்கலங்கியவாறு மைதானத்தை நிறைத்துக் கொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் ஏராளமாக வந்து பார்த்தனர். காலை ஒன்பது மணியளவில் யாழ். கோட்டை இந்திய இராணுவ முகாம் முன்பாக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் பிரதான வாசலில் அமர்ந்து, இந்தியப் படையினர் வெளியே வராதவாறு மறியல் செய்யத் தொடங்கினர்.

பொதுவாக திலீபனின் உடல் நிலை மோச மடைந்து வந்த அதே வேளை பொது மக் களின் குமுறலும் அதிகரிப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. திலீபன் தங்கள் குடும்பத் தில் ஒருவன் என்ற எண்ணமே ஒவ் வொருவர் மனதிலும் நிறைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இன்று காலையில் இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகனைச் சந்தித்தார். பின்னர் இருவரும் தனித் தனி யான வாகனங்களில் புறப்பட்டு யாழ் கோட்டை இராணுவ முகாமுக்குள் சென் றனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக இரு வரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்... ஆனால் கிடைத்தது ஏமாற்றம்தான் !

கோட்டை வாசலில் மறியல் செய்த ஆயிரக் கணக்கான பொது மக்களின் எழுச்சியைக் கண்ட பின்னர் தான் தளபதியவர்கள் தலைவர் பிரபாகனைக் காணப்பறந்து வந் திருக்க வேண்டும்.

இன்று காலை 10 மணியளவில் திலீபனின் மேடைக்கு அருகேயுள்ள மேடையில் நிகழ்ச் சிகள் ஆரம்பமாயின.

இந்திய வம்சாவழியினர் சார்பில் பேசிய திரு. கணேசராசா என்பவர் "பாரத அரசு விடு தலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக் கையை ஏற்று திலீபனின் உண்ணா நோன்பை முடித்து வைக்க வேண்டுமென் றும் இல்லையேல் இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு இந்திய அரசே பொறுப் பேற்க வேண்டும்" என்றும் பேசினார்.
திலீபனை பார்வையிட வருவோர் தங்கள் கருத்துக்களை சில நாட்களாக எழுத்து மூலம் வழங்கி வருகின்றனர். இதற்காக நான்கு போராளிகள் கை ஓயாமல் ஓர் மூலையில் அமர்ந்திருந்து எழுதிக் கொண்டிருக்கின் றனர். இதுவரை 1500 இற்கும் மேற்பட்டோர் தமது கருத்துக்களை மிக உருக்கமாக எழுதி யிருந்தனர்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச அலு வலகங்களிலும் வேலைகள் நடைபெறாத வண்ணம் பொதுமக்கள் மறியல் செய்து வருகின்றனர்.

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவிலும் புங்குடுதீவு அரசாங்க அதிபர் பிரிவிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திலீபனுக்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பையும் மறியலும் இருந்தனர். இதைப் போல் பல கிராமங்களில் சிறு சிறு குழுக் களாகச் சேர்ந்து மக்கள் உண்ணா நோன்பு கடைப்பிடித்தனர்.

எங்கும் - எதிலும் திலீபன் என்ற கோபுரம் மக்கள் சக்தியினால் உயர்ந்து விட்டதைக் காண முடிந்தது. ஆம் ! மக்கள் புரட்சி வெடிக் கத் தொடங்கிவிட்டது.

திலீபனின் ஐந்து கோரிக்கைகளை நிறை வேற்றுமாறு பல தொண்டர் நிலையங்கள், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மகஜர்களை இன்று அனுப்பி வைத்திருப் பதாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக் கின்றன.

1. யாழ் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு. (இந்தியத் தூதுவர் ஊடாக அனுப்பப் பட்டது)
2. வட பிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம். (பிரதி தமிழக முதல்வருக்கும் அனுப்பப் பட்டது)
3. வட மாகாணம் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்
4. தொண்டைமானாறு கிராம மட்ட கடற் தொழில் சமூக அபிவிருத்திச் சங்கம்
5. வட பிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பன அவற்றில் சிலவாகும்.

இன்று மன்னாரிலுள்ள இந்திய அமைதிப் படை முகாமுக்கு முன், திலீபனுக்கு ஆதரவாக மகஜர் ஒன்றைக் கொடுப்பதற்காக ஆயிரக் கணக்கான பொதுமக்கள் திரண்டு சென்ற போது ஆத்திரமடைந்த இந்திய அமைதிகாக் கும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஒருவர் அதில் இறந்து விட்டதாகவும், 18 பேர் படுகாயமடைந்ததாகவும் எமது தகவல் தொடர்புச் சாதனச் செய்திகள் கூறுகின்றன.

இன்று மாலை என் காதில் ஓர் இனிய செய்தி வந்து விழுந்தது. இந்தியத் தூதுவர் டிக்ஷித்- தலைவர் பிரபாவைச் சந்திப்பதற்கு வந்திருக் கிறார் என்பது தான் அது! ஆம் பிற்பகல் 1-30 மணியிலிருந்து பிற்பகல் 6-30 மணிவரை, இரு குழுக்களும் அமைதியாகப் பேச்சுவார்த் தைகளை நடத்தின. இந்தியத் தரப்பில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்கள்:- தூதுவர் திரு. ஜெ. என். டிக்ஷித், இந்தியப் படையின் தென் பிராந்தியத் தளபதி, லெப் டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், அமைதி காக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத் சிங், பிரிகேடியர் பெர்னான்டஸ், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி, கப்டன் குப்தா ஆகியோர்

விடுதலைப் புலிகளின் தரப்பில்:- தலைவர். திரு. வே. பிரபாகரன், திரு. அன்ரன் பால சிங்கம் (அரசியல் ஆலோசகர்), திரு. செ. கோடீஸ்வரன் (வழக்கறிஞர்), திரு. சிவானந்த சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்ததும், என்னை அறியாமலே என் மனம் துள்ளிக் குதித்தது. ஒன்பதாம் நாளான இன்று ஒரு நல்ல முடிவு ஏற்படும்... அந்த நல்ல முடிவு ஏற்பட்டதும் உடனடியாக திலீபனை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனு மதித்து அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட சிகிச்சைகள் அளித்தால் 24 மணித்தியாலங் களில் அவர் ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பிவிடுவார்...

எமக்காக இத்தனை நாட்களாகத் துன்பப்பட்டு அணு, அணுவாகத் தன்னை வருத்திக்

கொண்டிருக்கும் அந்த நல்ல இதயம், நிச்சயம் பூத்துக் குலுங்கத்தான் போகிறது... என்ற கற்பனைக் கடலில் இரவு 7-30 மணிவரை நானும், என் நண்பர்களும், மிதந்து கொண்டிருந்தோம்.

இரவு 7-30 மணிக்கு அந்தச் செய்தி என் காதில் விழுந்தபோது இந்த உலகமே தலை கீழாக சுற்றத் தொடங்கியது... அந்தக் கற்பனைக் கோட்டை ஒரே நொடியில் தகர்த்து தவிடு பொடியாகியது.

ஆம் ! பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தூதுவரால் வெறும் உறுதி மொழிகளைத்தான் தர முடிந்தது... திலீபனின் உண்ணா நோன்புப் போராட்டம் ஒரு தொடர் கதையாகவே ஆகிவிட்டது. எழுத்தில் எந்தவித ஊறுதி மொழிகளையும் தர இந்தியத் தரப்பு விரும்பவில்லை என்பதை அவர்களின் நடத்தை உறுதி செய்தது. திலீபனின் சாவுப் பயணம் இறுதியானது என்பதையும் அது உணர்த்தியது.

## ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் பத்தாம் நாள்

பெற்றோர், பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர் இவர்களின் யாராவது நம் கண் முன்னாலே இறக்க நேரிடும்போது மனம் துன்பத்தில் மூழ்கிவிடுறது. கண்கள் கண்ணீரைச் சொரிகின்றது. ஆனால், இவர்களின் ஒருவர் அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருபதைப் பார்க்கும் போது... துயரத்தின் எல்லைக்கே நாம் போய்விடுகின் றோம். உலகமே சில வினாடிக்குள் வெறுத்துப் போய் விடும். கண்களில் அழுவதற்குக் கண்ணீர் கூட எஞ்சியிருக்காது.

ஆனால், இவர்களில் ஒருவர் ஒருசொட்டு நீர் கூட அருந்தாமல் 10 நாட்களாக எம் கண் முன்னால் அணு அணுவாகச் சாவின் விளிம்பில் நின்று தத்தளிப்பதைப் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது ஏற்படும் மன வேதனை இருக்கிறதே - அப்பப்பா! அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. ஆத்துனை கொடுமை அது. அனுபவித்தவர்களுக்கு மட்டும் புரியும்.

அதை நான் என் வாழ்நாளில் முதல்முறையாக அனுபவிக்கிறேன். இதையெல்லாம் என் கண்களால் பார்க்கவேண்டும். என்று முன்பே தெரிந்திருமால், நான் திலீபன் இருந்த பக்கமே தலைவைத்துப் படுத்திருக்கமாட்டேன்.

நான் முற்றுமுழுதாக நினைத்திருந்த தெல்லாம் இதுதான். இந்தியா ஒரு பழம்பெருமை மிக்க ஜனநாயக நாடு. காந்தி பிறந்த பொன்னான பூமி. அகிம்சையைப் பற்றியும் - உண்ணாநோன்பைப் பற்றியும் உலகில் பெருமைப்படக்கூடிய அளவுக்கு காந்தியடிகள் மூலம் புகழ்பெற்ற நாடு. அப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் நீதிகேட்டு அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த திலீபன், உண்மையிலேயே பாக்கியசாலி தான்.

ஏனெனில், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த நாடு நிச்சயமாக திலீபனுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டத்தான் செய்யும்... ஆதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஓரளவாது இந்திய அரசு நிறைவேற்றத் தான் போகிறது... என்ற எண்ணத்தில்தான் மூழ்கிகொண்டு... இந்தத் தியாக வேள்வியில் என்னால் முடிந்த பங்கைச் செலுத்துவதற்குத் தயாரானேன். நான் நினைத்ததெல்லாம்... இவ்வளவு விரைவில் மாயமான் ஆகிவிடும் என்று நான் கனவு கூடக்கண்டிருக்க வில்லை... எத்தனை பெரிய ஏமாற்றம் எத்தனை பெரிய தவிப்பு?

இன்றைய நிலையில் திலீபன் இருந்த நிலையைப் பார்த்தபோது. நம்பிக்கையே அற்று விட்டது. இனி ஒரு நல்ல திர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் பிறகு திலீபனை ஆஸ்பத்திரிக்கு அனுமதித்தாலும் காப்பாற்ற முடியுமா என்பது என்னைப் பொறுத்த அளவில் கேள்விக்குறிதான்.

அப்படியிருக்க... கடவுளே! மனித தர்மத்துக்கு கிடைக்கப் போகும் பரிசு இதுதானா?

திலீபனைக் கொல்வதற்கு அவர்கள் திடமனம் பூண்டுவிட்டனர். என்பது புரிந்துவிட்டது.

அதோ வானத்தில் ஓர் வயோதிப உருவம் முகில்களைக் கிழித்துக்கொண்டு என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. அவ்வுருவத்தின் தலையிலே மயிரைலே... கண்களிலே வெள்ளை கண்ணாடி... அந்தக் கண்களில் அருவியாக வழிந்து கொண்டிருக்கிறது... அது என்ன? இரத்தமா? அந்த "மனிதன்" இரத்தக் கண்ணீர் சொரிகிறாரே... ஏன்? ஏன்? ஏன்? அடுத்து வேறு ஒரு உருவம்!

அதன் தலையிலும் மயிரைக் காணவில்லை ... வர்னத்தின் நடுவலே வெள்ளரசு மரத்தின் அடியிலே அமர்ந்திருக்கும் அந்த உருவம் எம்மை, இல்லை திலீபனையே பார்த்துக் கொண்டிருக்கிறது. பௌர்ணமி நிலவில் அந்தக் கருணை முகத்திலே... கருணை யைத் தேடுகின்றேன்... ஆனால் காணமுடிய வில்லை... ஏன்... ? ஏன்...?

இந்திய மண்ணில் என்றோ தோன்றி மறைந்துவிட்ட அந்த இரு சோதிகளும் அல்ல, உருவங்களும் வெகுநேரம் திலீபனைப் பார்க்க முடியாமல் வெட்கித் தலை குனிந்த வாறு சிறிது சிறிதாக என் கண்களை விட்டு மறைந்து கொண்டிருக்கின்றன...

நேற்று சிறிதளவாவது அசைந்து கொண்டிருந்த திலீபனின் கை, கால்கள் இன்று அசைவற்று சோர்ந்து விட்டன. உள்மூச்சு மட்டும் பலமாக இழுத்துக்கொண்டிருக்கின்றது. கண்கள் உச்சியிலே குத்திவிட்டு நிற்கின்றன. உடலின் நிறம் சிறிது நீலமாக மாறத்தொடங்கி விட்டது.

நாடித்துடிப்பைப் பரிசோதிக்கின்றேன் 52. இரத்த அழுத்தம் -80/50.

சராசரி மனிதனின் அளவுகளைவிட எல்லாமே மிகவும் குறைந்துள்ளன. இனித் திலீபனுக்கு எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம். ஐயோ அதைநினைத்துப் பார்க்கவே நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கின்றது. நெஞ்சே இந்தக் கணமே நீ வெடித்து விடக்கூடாதா?





அன்று திலீபன் கிட்டுஅண்ணாவைப் பார்க்க வேண்டும் என்றாரே? இதற்காகத்தானா? இந்திய அரசு தன் கோரிக்கைகளை நிறைவேற்றாது என்பதை அவர் உள்ளூர அறிந்தவர் போல் அன்று உண்ணாவிரத மேடையிலிருந்து எவ்வளவு தீர்க்கதரிசியாக இதைக் கூறினார்.

"நான் இறப்பது நிச்சயம்... ஆப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து... தமிழீழம் மலர்வதைப்பார்ப்பேன்..."

இந்த வார்த்தைகளை இன்று ஆயிரக்கணக்கான மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

திலீபன், கிட்டு அண்ணா மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அதைப் போல் அவரும் திலீபன் மீது உயிரையே வைத்திருப்பது எனக்குத் தெரியும்.

கிட்டு அண்ணா யாழ் மாவட்ட தளபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரும் பாடுபட்டு உழைத்தவர். திட்மிடும் சாதுர்யம் அதை நிறைவேற்றுவதில் மிகச் சாதுர்யம்... எதிரியைப் பந்தாடுவதில் ராஜதந்திரம். இவற்றுடன் குறிதவறாமல் சுடுவதிலும் தன்னிகரற்றவரான தளபதி கிட்டுவும், யாழ் மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவன் திலீபனும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிசம் என்று தான் கூறவேண்டும். இவர்களை உறுப்பினர்களாகப் பெற்ற உறுதி மிக்க தலைவனை நாம் பெற்றுள்ளோம்.

கிட்டு அண்ணாவைப் பார்க்கவேண்டும் என்று திலீபன் அன்று மேடையிலிருந்து கூறிய போது அதை நான் பெரிதாக எடுக்க வில்லை. ஆனால் இன்று...? இந்த நிலையில் அவரது அந்த ஆசை நிறை வேறாமலேயே என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடிய வில்லை.

இதை என்றோ ஒரு நாள் கிட்டு அண்ணா விடம் கூறும் போது அவர் மனம் எவ்வளவு வேதனையடையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க எனக்கு இந்த உலகத்தின் மீது வெறுப்பு வருகின்றது. இந்த மண்ணிற்காக நாம் எத்தனை அரும்பெரும் உயிர்களையெல்லாம் இழந்திருக்கின்றோம்.

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. தமது துப்பாக்கிகளைச் சிங்கள இராணுவத் திடமிருந்து காப்பாற்று வதற்காக காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் தம்மைச் சுட்டு விட்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தப்பி ஓடும் படி கட்டளையிட்ட சீலன், ஆனந்தன்...

இயக்க இரகசியங்கள் அடங்கிய முக்கிய விடையங்களையும் கோப்புக்களையும் காப்பாற்றுவதற்காக கடைசிவரையும் தாக்குப் பிடித்து அவகளை மற்றவர்களிடம் எடுத்து அனுப்பிவிட்டு தன் உயிரைத் தியாகம் செய்த "பண்டிதர்".

இயக்கப் போராளிகள் குடியிருந்த இடமொன்றில் வெடிகுண்டின் கிளிப் எதிர்பாராமல் விலகி விட மற்றவர்களை அந்த அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக வெடிகுண்டை தன் வயிற்றுக்குள் அழுக்கிக் கொண்டு குப்புறப்படுத்து தன் உடலையே சிதறப்பண்ணி மற்றவர் களை அழிவினின்றும் காப்பாற்றிய தியாக வீரன் "அன்பு".

இவர்களைவிட அவ்வப்போது சிங்கள இராணுவத்திடம் பிடிபடும் நிலையில் இயக்க ரகசியங்களை காப்பாற்றுவதற்காக சயனைட் டைத் தின்று ஈகைச் சாவடைந்தவர்கள் உலக வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத்தான் ஏராளம் ஏராளம்.

இந்த வழிகளையெல்லாம் விட தன் வழி மிகவும் வேறுபட்டதாக இருக்கட்டும் என்பதற்காக திலீபன் இந்த முடிவிற்கு வந்தார்?

இன்று மாலை வசாவிளான் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு ஆதரவாளர் அங்கிருந்து உண்ணாநோன்பு மேடை வரை தூக்குக் காவடியுடன் அழுதழுது வந்தது எல்லோரையும் கவர்ந்த ஒன்றாகும்.

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி, அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக, மற்றும் சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களிலெல்லாம் அடையாள உண்ணாநோன்பும் மறியல் போராட்டமும் பரந்தளவில் நடைபெற்றது.

பளையிலிருந்து நாவற்குழி வரையுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 6000 மாணவ மாணவிகள் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக ஊர்வலமாக வந்து நல்லூர் மைதானத்தை நிறைத்தனர். அவர்களின் ஊர்வலத்தில் பார்க்குமிடமெல்லாம் புலிக் கொடிதான் பறந்துகொண்டிருந்தன.

நாவந்துறையைச் சேர்ந்த மக்களின் உணர்ச்சி வெள்ளத்தை இன்று வந்த அவர்களின் ஊர்வலத்தின் மூலம் தான் அறிய முடிந்தது.

முல்லைத்தீவு மாவட்டமெங்கும் எங்கும் உண்ணாநோன்பும் மறியலும் நடக்காத இடமே இல்லை என்று கூறிவிடலாம்.

"திலீபன்" என்ற இந்தச் சிறிய கூட்டிற்குள்

இருக்கும் இதயத்தை எத்தனை இலட்சம் மக்கள் தான் நேசிக்கிறார்கள்." மன்னிக்கவும் இலட்சமல்ல கோடி! தமிழ் நாட்டிலும் ஏன்? ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள தமிழர்கள் எல்லோருமே திலீபனுக்காக கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பதினோராம் நாள்

இன்று திலீபனின் உடல் நிலையைப் பற்றி எழுத முடியாதவாறு என் கை நடுங்குகிறது. அவரது உடலின் சகல உறுப்புகளும் உணர்ச்சியின்றிக் காணப்பட்டன. கை, கால்கள் சில சமயம் தானாகவே அசைக்கின்ற. அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்பதை இதன் மூலம்தான் அறிய முடிகிறது.

"கோமா" வுக்கு முந்திய நிலையில் (Semi Coma) ஒரு நோயாளி எவ்வளவு கஷ்டப்படுவாரோ அதைப்போல், அவர் உடல் தன்னை அறியாமலே அங்குமிங்கும் புரளத் தொடங்கியது. அவர் படுத்திருந்தது சிறிய கட்டில்... ஆகையால், தேவரிடம் சொல்லி, பெரிய கட்டிலொன்று கொண்டுவரச் செய்து, அதில் திலீபனைப் படுக்க வைத்தோம்.

அப்போதுதான் அவர் கட்டிலில் ஏற்கனவே சிறுநீர் கழித்திருந்ததைக் காண முடிந்தது. மாறன், நவீனன், தேவர் ஆகியோர் மிகக் கஷ்டப்பட்டு அவரது ஆடைகளை மாற்றி, புத்தாடை அணிவித்தனர். அவர் சுயநினைவோடு இருக்கும்போது புது ஆடைகளை அணியும்படி பலமுறை நான் கேட்டபோது, பிடிவாதமாக மறுத்து விட்டார்.

"சாகப் போகிறவனுக்கு எதுக்கு வாஞ்சி அண்ணை புது உடுப்பு?" என்று, தனக் கேயுரிய சிரிப்புடன் கேட்டார்... அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்...

பிற்பகல் 4 மணியளவில் திலீபனின் உடல் நிலை மிகவும் மோசமான நிலைக்கு வந்தது. ஆம் அவர் முழுமையான கோமாநிலைக்கு வந்துவிட்டார்...

மைதானத்தில் கூடியிருந்த சனக் கூட்டத்தினர் திலீபனின் நிலைகண்டு மிகவும் வருந்தினர்... ஒவ்வொருவர் முகத்திலும் சோகத் திரை படர்ந்திருந்தது.

இன்று காலையிலிருந்து, இலட்சக்கணக்கான மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து குவிந்து கொண்டிருந்தனர். லொறிகள், பஸ்கள், வான்கள், கார்கள், ஏன்? மாட்டு வண்டிகளிற் கூட அவர்கள் சாரி, சாரியாக



வந்து நிறையத் தொடங்கினர். யாழ்ப்பாணத்திலோ, அல்லது இலங்கையின் எந்தப் பகுதியிலோ இதுவரை எந்த நிகழ்ச்சிக்கும் இப்படி மக்கள் வெள்ளம்போல் நிறைந்ததாகச் சரித்திரமே இல்லை.

வட்டுக்கோட்டையில் இருந்து மட்டும் 50 மாட்டு வண்டிகள் புலிக்கொடிகளை ஏந்திய வாறு, மக்களை நிறைத்துக் கொண்டு வரிசையாக வந்து சேர்ந்தன.

இன்று பிற்பகல் 1.30 மணியுடன் முல்லைத் தீவில் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்த திருச்செல்வம் என்ற விடுதலைப் புலி உறுப்பினர், 60 மணித்தியாலங்களை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டார்.

மட்டுநகரில் மதன் என்ற விடுதலைப் புலி இன்று காலை 10.40 மணிக்கு, சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் திலீபனுக்கு ஆதரவாக ஆரம்பித்தார்.

அதேபோல் திருக்கோணமலையிலும் "கிருபா" என்ற போராளி இன்று மாலை ஆரம்பித்துவிட்டார். திருக்கோணமலை, முல்லைத் தீவு, மட்டுநகர் ஆகிய மாவட்டங்களில்தான் கடந்த 10 ஆண்டுகளாக, சிறீலங்கா அரசு திட்டமிட்டவாறு சிங்கள மக்களைக் குடியேற்றி வருகின்றது.

1983 ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலே படுகொலை செய்யப்பட்ட தமிழர்களில் தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் மிக முக்கியமானவர்கள். ஜெயிலிலிருந்த சிங்களக் கைதிகளைத் தூண்டிவிட்டு 52 பேர்களைக் கொல்வதற்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தது வேறு யாருமல்ல, கனம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான்.

52 பேர்களைத் திட்டமிட்டபடி கொலைசெய்த நூற்றுக்கணக்கான சிங்கள ஆயுள் தண்டனைக் கைதிகளும் என்ன பரிசு அளிப்பதென்று ஜே. ஆர். ஒரு வருடமாக மண்டையைப் போட்டு உடைத்தார். கடைசியில் அனைவரையும் அவர்களின் குடும்பங்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள "டொலர் பாம்", "கென்ற் பாம்" ஆகிய இடங்களில் நவீன வீடுகளைக் கட்டிக்கொடுத்து, குடி அமர்த்தினார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5000 ரூபா பணமும், 2 ஏக்கர் நிலமும், குடியிருக்க வீடும் வழங்கப்பட்டன. இது மட்டுமா? கொலைகாரர்களின் பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. இது வெறும் பொய்யல்ல நடந்த உண்மை. என்ன ஆச்சரியம்? உலக வரலாற்றில் எந்த நாட்டிலாவது இப்படி நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அப்படிப்பட்ட ஜே. ஆர். என்ன சொல்கிறார் தெரியுமா? தான் உண்மையான "காந்தியவாதி" என்று கூறுகிறார். என்ன கேலிக்கூத்து இது! காந்தீயம் அத்தனை மலிவானதா?

இத்தனை இனத்துவேசியான ஜே. ஆருடன் "தமிழர் நலம் காப்பது" என்ற பெயரில் ஓர் ஒப்பந்தம் செய்வதென்றால், அது நடைபெறக் கூடிய காரியமா? அல்லது நடக்கத்தான் விடுவாரா அந்தக் குள்ளநரி?

ஒப்பந்தம் சரிவர அமுலாக வேண்டும் என்பற்காகத்தான். அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டு - திலீபன் சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவர் "தமிழீழத்தைப் பிரித்துத் தா" என்று கேட்டு உண்ணாவிரதமிருந்தால் அதை எதிர்ப்பதில் நியாயம் உண்டு: இதை ஏன் எதிர்க்கிறார்கள்? புரியவேயில்லை!

நீங்கள் இருவரும் கையெழுத்துப் போட்ட



ஒப்பந்தத்தை ஒரு திலீபன் சரிவர நிறை வேற்றும் படி கேட்கிறான். இது நியாயமான கோரிக்கையா இல்லையா...? இதைத் தமிழ் மக்களே முடிவு செய்யட்டும்.

இன்று (25.09.87) இலங்கைக் கொம்னிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக் குழு "இந்திய இரா ணுவத்தின் அத்துமீறலைக் கண்டிக்கி றோம்." என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருந்தது. வடக்கும் - கிழக்கும் இணைந்த பிரதேச சுயாட்சியையும், நியாயமான சகல உரிமை களையும் வழங்க முன்வர வேண்டுமென்று அது தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இன்று திருகோணமலையில் விறகு ஏற்றிச் சென்ற எட்டு அப்பாவித் தமிழர்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் வெட்டிக் கொல்லப்பட் டதாக, பத்திரிகைகளில் செய்தி வெளியாகி யிருந்தது.

நாளைமுதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும், போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் திலீபனுக்கு ஆதரவாக உண் ணாநோன்பும் மறியலும் செய்து, தமது வேலைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் "நிதர்சனம்" தொலைக்காட்சிச் சேவை கடந்த 10 நாட்களாக தினமும் இரவு 7 மணிமுதல் விசேட நிகழ்ச் சிகளை ஒளிபரப்பி வருகின்றது.

இன்றிரவு திலீபனின் உடல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கியது. அவர் சுவாசிப் பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்.

திலீபன் சுயநினைவுடன் இருந்தபோது அவ ரால் விரும்பிக் கேட்கப்படும் பாடல் ஒன்றை, இன்றிரவு மேடையில் ஒலிபரப்பினார்கள்.

அந்தப் பாடல் எனக்கு மட்டுமன்றி, திலீபன் இருந்த அந்த நிலையில் அனைவரினது கண் களில் இருந்தும் கண்ணீரை வர வழைத்து விட்டது.

ஓ! மரணித்த வீரனே!
உன்ஆயுதங்களை எனக்குத் தா
உன்சீருடைகளை எனக்குத் தா
உன்பாதணிகளை எனக்குத் தா
(ஓ! மரணித்த)

கூட்டத்திலே சில பெண்கள் இந்தப் பாடலைக் கேட்டதும் விம்மி விம்மி அழத் தொடங்கினர்.

அந்த வேதனைமிக்க இரவு சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கிறது. இரவே! நீ ஏன் இரக்கமில்லாமல் எமைவிட்டு மறைந்து கொண்டிருக்கிறாய்?

## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பன்னிரண்டாம் நாள்

1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் மகத்தான சரித்திரம் படைத்த நாள்.

இன்று அதிகாலை 5 மணிக்கு ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்து விட்டது! திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு விட்டது. எங்கும் ஒரே இருள் மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது.

பல நாட்களாக திலீபனுடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும், முழுமையான தூக்க மில்லாமல் இருந்ததால் இன்று மிகுந்த சோர் வுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தோம். மாறன், ராஜன், தேவர், இரு நவீனங்கள், திலீ பனின் அண்ணன் இளங்கோ, எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு தூங்கினோம். பன்னிரண்டு நாட்கள் உடல்களைச் சாறாகப் பிழிந்தெடுத்த அசதித் தூக்கமின்றி, அது வேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னே அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டி எழும்பியதும் நான்தான் முதலில் திடுக்கிட்டு எழும்பினேன். கும்மிருட்டில் என்ன செய்வ தென்று தெரியாமல். "நவீனன்..." என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன். அவர் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதி யடைந்தது. அவரின் உடல் "ஜில்" லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது.

மனம் "பட பட" வென்று அடிக்கத் தொடங் கியது... மீண்டும் "நவீனன்" என்று அழைத் தேன். நவீனன் எழும்பி விட்டான். ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுகு வர்த்தி எரியத் தொடங்கியது... மெழுகுவர்த் தியின் ஒளியிலே திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது... ஒரே வினாடி தான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தினால் அணைந்துவிட்டது. பலத்து வீசிய காற்று அதை மீண்டும் எரிய விடுமா? என்பது சந்தேக மாகத்தான் இருந்தது... ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது... திலீபனின் நிலை எல்லையைக் கடந்து விட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. அதனால், என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது... நாடித்துடிப்பைப் பரிசோதிக் கிறேன். கணிக்க முடிய வில்லை... மிகவும் மெல்லியதாக அடிக்கிறது... உடனே இரத்த அழுத்தத்தைக் கணிக்கின்றேன்... அது மிகவும் குறைவாக இருக்கிறது... 50/? என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும். உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது.

திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. "வாஞ்சி அண் ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாக வோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற் சிக்கக்கூடாது... அப்பிடி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்குமட்டும் எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது... சுயநினைவோடு என்றாலும் சரி... சுய நினைவில்லை என்றாலும் சரி... இதுக்குச் சம்பதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ..." என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம் பித்தார் அவர். அப்படியிருக்க, அவர் விருப்பத் துக்கு மாறாக எப்படி அவருக்குச் சிகிச்சை யளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட் டுவேன்? மனிதநேயத்தையும் - அதன் தார்ப் பரியங்களையும் மதிக்கும் ஓர் வைத்திய சேவையாளன் என்ற நிலையைத் திலீபன் விஷயத்தில் நிறை வேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?... எது? ஆம்ஓ "சத்தியம்!" என்ற இந்த ஐந்து எழுத் துக்களுக்காகத் தானே திலீபன், "அகிம்சை" என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், "கட்டுப்பாடு" என்ற நல்வழியிலே கொடுத்த சத்தியத்தைக் காப்பாற் றுவதற்காகத் திலீபனை என் கண்ணெதிரி லேயே "பலி" கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை. என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின் பக்கம் இறங்கிச் செல்கிறேன். அங்கே பிரதித் தலைவர் நிற்கிறார். அவரிடம் திலீ பனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன். திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பொதுமக்களும் மேடையைச் சுற்றி வளைத் துக் கொண்டனர். திலீபனுக்கு கடைசி நிமிடம் வரையும் ஒருவித சிகிச்சையும் அளிக்க முடி யாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்ததற்கு வேறு முக்கிய காரணமும் ஒன்று இருந்தது. எமது காதில் விழக்கூடியதாகவே பல எதிரணி உறுப்பினர்களும், எமது இயக்கத்துக்கு எதி ரானவர்களும் பேசியதைக் காதால் கேட்ட வர்களில் நானும் ஒருவன்.

"புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்று வதற்காக உண்ணாநோன்பு என்ற பெயரிலே தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப் பார்கள்... ஆர் இதைக் காணப்போகினம்? கடைசியில் 5 தீர்மானங்களும் நிறைவேறு மட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாக விடமாட்டினம்... இதுதான் இந்த சாகும் வரை நீர் அருந்தாமல் உண்ணாநோன்பு இருப் பதன் உண்மை..." இப்படியான பேச்சுக் களுக்கு உண்மை வடிவம் கொடுத்து, "புலிகள் பொய்யர்கள்" என்ற கெட்ட பெயரை வர விடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம் கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர, வேறு ஒன்றுக் காகவும் அல்ல.

எம் கைகள் மட்டும் கட்டுப்படாமல் இருந்திருந் தால், எமது உயிரினும் மேலான, ஈகைச்சுடர் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்போம்... ஆனால்... முடிய வில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக





நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கி விட்டான். உயிருடன் அந்த மனித தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக, நான் வெட்கப்பட்டேன். வேதனைப்பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்? 265 மணித்தியாலங்கள் தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றி கரமாக நடாத்தி முடித்த அந்த ஈகையர் திலீபன், இன்று காலை (26.09. 1987) 10.48 மணியளவில், எம்மை யெல்லாம் இந்தப் பாழும் உலகில் பரி தவிக்க விட்டு விட்டுத் தான் மட்டும் போய் விட்டான்.

ஆம்! தமிழர்தம் விளக்கு அணைந்து விட்டது! அணைந் தேவிட்டது! வைத்தியர் சிவகுமார் அவர்கள், திலீபன் இறந்த பின் அவரைப் பரிசோதனை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீபனின் பாதங் களில் விழுந்து வணங்கி எழுந்த போது, மக்கள் கதறி அழத் தொடங்கினர்... எங்கும் அழுகைச் சத்தம்... விம்மல் ஒலி... சோக இசை... வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக்கிரமித் திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு! காலை 11 மணிக்கு "என்பார்ம்" செய்வதற்காக, அவரது உடலை யாழ். வைத்தியக் கல்லூரிக்கு எடுத்துச் சென் றோம். பிற்பகல் 4.15 மணியளவில் திரும் பவும் அதே மேடைக்கு முன்பாக அவரின் புகழுடம்பு பொதுமக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சை யும் - கறுப்பும் கலந்த இராணுவ உடையும், தொப்பியும் திலீபனுக்கு அணியப்பட்டு, "லெப் டினனட் கேணல்" என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப்பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரியும்...

ஆனால், என்ன செய்ய முடியும்? அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப் புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங் கரித்திருந்தது. தந்தை, சகோதரங்கள், உற வினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித்துச் சென்றனர். பெட்டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற ஆசிரியரு மான, திரு. இராசையா அவர்கள் "ஓ..." என்று அலறியவாறு அவர் உடல்மீது விழுந்து புரண்டு அழத் தொடங்கிவிட்டார். அவரின் அழுகையைத் தொடர்ந்து பொது மக்களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நெஞ்சை உருக்கியது. பொது மக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையிலே வந்து தமது இறுதி வணக்கத்தை மண்ணின் மைந்தனுக்குச் செலுத்தினர். ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்து தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதவாறு தமது அஞ் சலியைச் செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம் ரான், அன்ரன் மாஸ்ரர், சங்கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப்பினர் களும் தத்தம் இறுதி வணக்கத்தை தமது தோழனுக்குச் செலுத்தினர்.

சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர்.

திலீபனின் ஈகைப் பயணத்தில் 12 நாட்கள் அவரின் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்று வந்த எனக்கு, இந்த அதிர்ச்சியி லிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாட்கள் தேவையோ நானறியேன்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்! திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார்... அகிம்சைப் போராட்டம் என்பது மனித நேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம்தான் நல்ல விளைவு களை ஏற்படுத்தும்... ஆயுதங்கள் தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை சரி யான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக் கிறார் என்பதே எமது கணிப்பு... அந்தத் ஈகைச்சுடரின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப் போமாக!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# தமிழீழ செய்திகள்



## யாழ். செம்மணி – சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் மேலும் 9 மனித எலும்புக்கூடுகள்: 218 ஆக உயர்வு

01.09.2025

யாழ். செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் திங்கட் கிழமை (1) புதிதாக 07 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 09 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன் றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப் பட்ட நிலையில் இன்றைய நாள் திங்கட்கிழமை 08ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கி யுள்ள நிலையில், இன்றைய நாள் திங்கட்கிழமை 40 ஆவது நாளாக அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை கட்டம் கட்டமாக இதுவரையில் 49 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, இன்றைய நாள் அகழ்ந்து எடுக்கப்பட்ட 07 எலும்புக்கூட்டு தொகுதியுடன் இதுவரையில் 198 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 218 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ.செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 40வது நாளாக இன்றும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜாவின் முன்னிலையில் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.












## யாழ். மயிலிட்டியில் பதற்றம்: சிறீலங்கா பொலிசார் அடாவடி: தூஷணத்தால் திட்டி முதுகில் பிடித்து தள்ளினர்!

01.09.2025

யாழ்ப்பாணம் மயிலிட்டி பகுதியில் இன்று (01) காலை ஒன்று கூடிய காணி உரிமையாளர்களையும் அதனை செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களையும் பொலிசார் விரட்டியடித் தனர்.




மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் பகுதியில் அபிவிருத்தி பணிக் கான அடிக்கலை நாட்டுவதற்காக ஜனாதிபதி அனுர குமார திசா நாயக்க வருகைதந்தார்.

இதன்போது அப்பகுதியில் கூடியிருந்த, காணி உரிமை யாளர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என அனை வரும் அப்பகுதியில் நிற்க விடாமல் விரட்டியடிக்கப்பட்டனர்.

வயோதிபர்கள் எனவும் பாராது தூஷண வார்த்தைகளால் ஏசி பொலிசார், முதுகில் பிடித்து தள்ளினர்.

பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு கடும் பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க மயிலிட்டிக்கு வருகை தந்திருந்தார்.

கடந்த காலங்களில் ஜனநாயகம் பற்றி அதிகம் பேசிய அனுர குமார திசாநாயக்கவின் ஆட்சியிலும் பொலிஸார் கடந்த காலங்களை போன்று மூர்க்கத்தனமாக செயற்பட்டமை அங் கிருந்தவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியது.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் ஒரு பிள்ளையின் தந்தை பலி

01.09.2025

விசேடஅதிரடிப்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்திருந்த ஒருவர் யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இன்றையதினம் மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்...

கடந்த 27ஆம் திகதி இரவு அநுராதபுரம் மாவட்டத்தின் கெப்பிற்றிக்கொல்லாவ பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த கப்ரகவாகனத்தை அந்த பகுதியில் கடமையில் இருந்த விசேட அதிரடிப்படையினர் வழிமறித்துள்ளனர்.

இதன்போது குறித்த வாகனம் நிறுத்தாமல் சென்றதாக கூறப்படுகின்றது. இதனையடுத்து சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் அந்த வாகனத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்டுள்ளது. இதன்போது அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்திருந்தனர்.

காயமடைந்த இருவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரது நிலமை கவலைக் கிடமாக இருந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளிற்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் காலை மரணமடைந்தார்.





வவுனியா கற்பகபுரம் பகுதியை சேர்ந்த சந்திரசேகர் வயது 41 என்ற ஒரு பிள் ளையின் தந்தையே மரணமடைந்துள்ள துடன், பண்டிவிரிச்சான் பகுதியைசேர்ந்த நிக்சன் என்ற இளைஞர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கேப்பாப்புலவு மற்றும் வட்டுவாகல் இராணுவமுகாம் விகாரைகளை ஆய்விற்குட்படுத்துக; பன்னாட்டு நீதிவிசாரணைக்கு அனுர அரசு ஒத்துழைக்கவேண்டும்

**வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்**

01.09.2025

இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த பொதுமக்கள் மற்றும் போராளிகள் படுகொலைசெய்யப்பட்டு கேப்பாப்புலவு மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவமுகாம்களின் விகாரைகளின் கீழ் புதைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு தமிழ் இனவழிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், தமிழர்தாயகப்பகுதிகளில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு பன்னாட்டு நீதி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமெனவும் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் யாழ்ப்பாணம் கிட்டுபூங்காவிலிருந்து செம்மணிவரை மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்நினர் ரவிகரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் இனவழிப்பு விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், வடகிழக்கில் இனங்காணப்பட்டுள்ள மனிதப்புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நாம் பன்னாட்டு நீதிவிசாரணையினையே தொடர்ச்சியாக கோரி வருகின்றோம்.

கடந்தகாலத்தில் தமிழர்கள் மீது இனவழிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றன என்பதற்கு வடக்கு, கிழக்கு தமிழர்தாயகத்தில் இனங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளும், மனிதப் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகின்ற எலும்புக்கூடுகளும், சாட்சியாக இருக்கின்றன. இதனை யாருமே மறுக்கமுடியாது.

தற்போது செம்மணி மனிதப்புதைகுழி பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. செம்மணியில் அகழ, அகழ எம்மவர்கள் எலும்புக்கூடுகளாக மீட்கப்படுகின்ற அவலங்களைக் காண்கின்றோம். கொலைசெய்தவனிடமே நீதியைக் கோருகின்ற உள்ளக நீதிவிசாரணைப்பொறிமுறையில் எமக்கு கடுகளவும் நம்பிக்கை கிடையாது.

ஆகவேதான் தமிழ் இனவழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மனிதப்புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு தொடர்சியாக பன்னாட்டு நீதிவிசாரணையினைக் கோருகின்றோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்தாயகப்பகுதிகளில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழிகள் திட்டமிட்டவகையில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு இனங்காணப்பட்டிருக்கவில்லை. மாறாக இவ்வாறு இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் எதேற்சியான சந்தர்ப்பங்களிலேயே இனங்காணப்பட்டன.

ஆனால் முல்லைத்தீவில் வட்டுவாகல் மற்றும் கேப்பாப்புலவு பகுதிகளில் இராணுவமுகாம்களில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் அகற்றப்பட்டு விகாரைகளின் கீழ்ப்பகுதிகள் அகழ்ந்து ஆய்வுகள் செய்யப்படவேண்டும். அல்லது நவீன கருவிகளின் துணையுடன் ஸ்கேன் செய்யப்பட்டு விகாரையின் கீழ்ப் பகுதியில் உள்ள விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோருகின்றேன்.

கடந்த 2009ஆண்டு இறுதிக்கட்ட போரின்போது சரணடைந்த போராளிகள் மற்றும் மக்களை இராணுவம் கைதுசெய்துள்ளது. அதன்பின்னர் அவ்வாறு இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டவர்கள் வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலயத்திற்கு அருகே கடற்கரைநோக்கி போகும்பாதையினூடாக பேருந்துகளில் அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். அதேபோல் சரணடைந்த பலர் கேப்பாப்புலவு நோக்கியும் இராணுவத்தினரால் பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவ்வாறு இராணுவத்தால் பேருந்துகள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திருப்பி அழைத்துவரப்படவில்லை. என்ன ஆனார்கள் என்பதும் தெரியாமலுள்ளது. அப்படியெனில் அவ்வாறு அழைத்துச்செல்லப்பட்டவர்கள் எங்கேபோனார்கள்.

தனிச் சைவத் தமிழ் கிராமமான வட்டுவாகலில் எதற்கு பாரிய விகாரை அமைக்கப்பட்டது. அந்த விகாரையை அகற்றி அகழ்வாய்வுகளை மேற்கொள்ளவேண்டும். அல்லது விசேட ஸ்கேன் கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதனை மேற்கொண்டு உண்மைத்தன்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதேபோல் கேப்பாப்புலவு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள பாரிய விகாரையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.




இதுதொடர்பில் ஏற்கனவே பலதடவைகள் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றிலும் இந்த கேப்பாப்புலவு மற்றும் வட்டுவாகல் இராணுவமுகாம்களில் அமைந்துள்ள விகாரைகள் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டுமென கோரியுள்ளேன். இதுவரை அந்த விகாரைகளை ஆய்வுக்குட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறாக எமது தமிழ் இனத்தை அழித்து, கடந்தகால இனவாத பெரும்பான்மையின இலங்கை அரசுமேற்கொண்ட அடாவடிகளை பன்னாடுகள் தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

பன்னாடுகளுக்கு தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. பன்னாடுகள் எமது தமிழ் இனத்தின்மீது கரிசனைகொள்ளவேண்டும். எமக்கான நீதியைப் பெற்றுதர முன்வரவேண்டும்.

தமிழ் இனவழிப்புச்செயற்பாடுகளுக்கு பன்னாட்டு நீதிவிசாரணையே வேண்டுமென்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளவிரும்புகின்றேன். பன்னாட்டு நீதிவிசாரணைப் பொறிமுறையிலேயே எமக்கு நம்பிக்கையுள்ளது. தமிழ் இனவழிப்பு, காணாமல்போனோர் விடயம், வடக்கு, கிழக்கு மனிதப்புதைகுழி விவகாரங்களில் நாங்கள் ஒருபோதும் உள்ளக நீதிவிசாரணையினையும், இலங்கை அரசினையும் நம்பத் தயாராக இல்லை.

எனவே தற்போது இந்த நாட்டை ஆட்சிசெய்கின்ற இந்த அரசு பன்னாட்டு நீதிவிசாரணைக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

**கலாசாரம் உயர்நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகின்றது, மனிதவாழ்வு உன்னதம் பெறுகின்றது. மனிதம் வளர்ச்சி பெறுகின்றது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# காற்றாலை, கனிம மணல் விவகாரம்: மன்னார் வந்த நிபுணர் குழு மக்களின் குற்றச் சாட்டுக்களில் கரிசனை கொள்ளவில்லை

**பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன்**

02.09.2025

காற்றாலை மற்றும் கனிம மணல் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு நேற்றைய நாள் திங்கட்கிழமை (1) மன்னாருக்கு வருகை தந்து பொது அமைப்புக்களை சந்தித்து கலந்துரையாடியபோதும் எங்களுடைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவர்கள் கரிசனை கொண்டதாக இல்லை. அவர்கள் ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை தீர்த்து இங்கே காற்றாலைகளை எவ்வாறு அமைக்கலாம் என்பது குறித்து அவர்களுடைய கருத்துக்களும் வாதங்களும் அமைந்திருந்தது என பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் இன்று செவ்வாய்க்கிழமை (2) பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

காற்றாலை, கனிம மணல் விடயம் தொடர்பாக கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதியை சந்தித்து உரையாடியதன் நிமித்தம் ஒரு மாதகாலம் இடை நிறுத்தப்பட்ட செயற்றிட்டம் தொடர்பாக நிபுணர்கள் குழு மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு, சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களை சந்தித்து, அது சம்பந்தமான உரையாடல் ஊடாக தீர்மானத்திற்கு வரலாம் என ஜனாதிபதியினால் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மின்சக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் துறை சார் திணைக்களங்கள் குழுவாக நியமிக்கப்பட்டு, நேற்று திங்கட்கிழமை (1) மாலை மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பொது அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த கலந்துரையாடலில் ஏற்கனவே அமைக்கப்பட்ட 30 காற்றாலைகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும், இனி அமைக்கப்படவுள்ள காற்றாலைகளால் ஏற்படவுள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பிலும் அவர்களுடைய வாதங்கள் அமைந்திருந்தது.

எங்களுடைய கோரிக்கையாக இருந்த மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை, கனிம மணல் திட்டத்தை முற்றாக நிறுத்த வேண்டும் என்கிற விடயம் தொடர்பாக அவர்கள் அவதானம் செலுத்தியதாக இல்லை.

எங்களுடைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவர்கள் கரிசனை கொண்டதாக இல்லை. அவர்கள் ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை தீர்த்து இங்கே காற்றாலைகளை எவ்வாறு அமைக்கலாம் என்பது குறித்து அவர்களுடைய கருத்துக்களும் வாதங்களும் அமைந்திருந்தது.

எனினும், மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு இடமாற்றத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்வாதார வாழ்வியல் இருப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய குறித்த இரு திட்டங்களையும் மன்னார் தீவில் இருந்து வெளியே எடுப்பது சம்பந்தமாக அவர்களுடைய பார்வை இருக்கவில்லை.

எனவே, இவர்களினால் பரிந்துரைக்கப்படுகிற அறிக்கை எவ்வாறு அமையப்போகிறது என்பது குறித்து எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது. இவர்களின் அறிக்கையில் பிரகாரமே ஜனாதிபதி இறுதி முடிவுக்கு வருவார் என அவர்கள் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி காற்றாலை வேலைத்திட்டத்தை ஒரு மாதம் நிறுத்தியது கூட கண்துடைப்பு நாடகம் என நான் ஏற்கனவே ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் வைத்து ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தேன்.

அதே போல் நிபுணர் குழுவும் எங்களுடைய பிரச்சினைகளை



மாத்திரமே பேசுகின்றதே தவிர எங்களுடைய கோரிக்கைகள், அடிப்படை உணர்வுகள் என்ன என்று அவர்கள் புரிந்து கொள்வதாக இல்லை.

அதில் உள்ள அதிகாரிகள் அத்தனை பேரும் ஏற்கனவே பல தடவைகள் மன்னாருக்கு வந்தவர்கள். பல கூட்டங்களில் அவர்களுடன் பங்குபற்றியுள்ளோம்.

அவர்களுக்கு எங்களுடைய பிரச்சினை என்ன என்று தெளிவாக தெரியும். இந்த நிலையில் இந்த நிபுணர் குழுவில் புதியவர்களை இணைக்காது அவர்களை மீண்டும் இக்குழுவில் இணைத்திருப்பது எமக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை.

மன்னார் மக்களின் கூட்டு கோரிக்கையாகிய காற்றாலை மற்றும் கனிம மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களும் மன்னார் தீவுப் பகுதியில் இருந்து வெளியே கொண்டுபோக வேண்டும் என்ற கோரிக்கை எவ்வாறான நிலைப்பாட்டில் போகப்போகிறது என்பது குறித்து எமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

அரசு தனது நிறைவேற்று அதிகாரத்தையும் பெரும்பான்மை ஆதரவையும் பயன்படுத்தி இத்திட்டங்களை அமுல்படுத்துமோ என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# செம்மணி – சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் மேலும் நான்கு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

02.09.2025

செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இன்று (2) மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இதுவரை 222 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 206 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 41வது நாளாக இன்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக









நீதவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

**சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும், தன்மானம் இழந்து தலை குனிந்து வாழவேண்டும், பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும், படிப்படியாக அழிந்து போக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுமில்லை.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

# செம்மணிப் படுகொலை தொடர்பான "வன்மம்" நூல் வெளியீடு

17.08.2025

செம்மணிப் படுகொலை தொடர்பான "வன்மம்"நூல் வெளியீடு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று (02.09.2025) செம்மணியில் நடைபெற்றது. செம்மணிப் படுகொலை தொடர்பான சிறீலங்கா அரசின் வன்மமும் தமிழின அழிப்பும் பற்றிய நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது.








# சம்பூர் மனித எச்சங்கள் தொடர்பான வழக்கு; உத்தேச பட்ஜெட் அனுமதி இல்லாததால் வழக்கு மீள அழைப்பு!

02.09.2025

சம்பூர் மனித எச்சங்கள் தொடர்பான வழக்கில் அகழ்வு மேற் கொள்வதற்காக மாகாண மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட உத்தேச பட்ஜட்டின் அனுமதியானது செவ்வாய்க்கிழமை (2) கிடைக்கப் பெறாமையால் இவ்வழக்கானது இம்மாதம் 16ஆம் திகதி மீள அழைக்கப்படவுள்ளது.

குறித்த வழக்கானது மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌஸான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பூர் பகுதியில் மேலதிக மனித எச்சங்கள் தொடர்பில் ஸ்கான் இயந்திரம் கொண்டு ஆய்வு செய்வதற்காக சட்ட வைத்திய அதிகாரி, தொல் பொருள் திணைக்களம்,காணாமல் ஆக்கப் பட்டோர் அலுவலகம் ஆகியோரின் கையொப்பத்துடன் சம்பூர் பொலிசாரினால் கடந்த மாதம் 26ஆம் திகதி உத்தேச பட்ஜட் மூதூர் நீதிமன்ற நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மூதூர் நீதிமன்றத்தால் மாகாண மேல் நீதிமன்ற அனுப்பி வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வழக்கின் உத்தேச பட்ஜட்டுக்கான அனுமதி மாகாண மேல் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப் பெறவில்லை எனவும் இவ்வழக்கு மீண்டும் இம்மாதம் 16ஆம் திகதி மீள அழைக்கப் படவுள்ளதாக காணாமல் போனோர் அலுவலகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி எம்.எம்.நஸ்லீம் தெரிவித்தார்.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகு தியில் மெக் என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த யூலை மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியில் இருந்து சிதைந்த மனித எச்சங்கள் கண்டெ டுக்கப்பட்டிருந்தன. இதன் பின்னர் மிதிவெடி அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சர்வதேச நீதி கோரிய கையொப்பப் போராட்டம் ஆரம்பம்

05.09.2025

கிழக்கில் செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு கிழக்கு மண்ணில் உள்ள மனித புதைகுழிகளுக்கானதும் நடைபெற்ற இன படு கொலைக்கு கான சர்வதேச நீதி கோரிய கையொப்பப் போராட்டம் வியாழக்கிழமை (04) மட்டக்களப்பு காந்தி பூங்கா வில் தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைத்தனர்.





இந்த கையெழுத்து போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் களான ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், பாக்கியசோதி அரியநேத்திரன், முருகேசு சந்திரகுமார், சுரேஸ் பிறேமச் சந்திரன், மட்டு மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணப வான் உட்பட தமிழ் தேசிய கட்சி உறுப்பினர்கள் ஆதர வாளர்கள் பிரதேச சபை தவிசாளர்கள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ஆர்வமாக கையொப்பம் இட்டனர்.



www.sangathamil.ca

# சிறீலங்கா ஜனாதிபதி வடக்கிற்குச் சென்ற நாளில், மன்னார் மக்களின் போராட்டம் ஒரு மாதத்தை எட்டியது

02.09.2025

இலங்கையின் வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு தீவின் சுற்றுச சூழலுக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் அழிவை ஏற்படுத்தும் காற்றாலைத் திட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிரான போராட்டம் ஒரு மாதத்தை நிறைவு செய்துள்ளது.




ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் அதே நாளில் பல பாரிய அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்து வைக்க வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மன்னார் தீவில் இரண்டு புதிய காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து, ஓகஸ்ட் 2, 2025 அன்று மன்னார் நகரில் ஆரம்பமான போராட்டத்தில் இணைந்த சிவில் ஆர்வலர் எஸ்.ஆர். குமரேஸ், போராட்டக் காரர்களின் கோரிக்கைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் வரை போராட்டத்தை கைவிடப்போவது இல்லை என நேற் றைய நாள் திங்கட்கிழமை (01) தெரிவித்தார்.

“இந்த காற்றாலையால் மன்னார் தீவு இன்று அழிவை நோக்கி சென்றுக்கொண்டிருக்கின்றது. இந்த தீவில் வாழும் 75,000 மக்களும் இடம்பெயர வேண்டிய ஒரு சூழல் ஏற்படப்போகிறது.

அந்த மக்கள் இடம்பெயர்ந்து பெரு நிலப்பரப்பில் குடியேற வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இவ்வாறான அழி வுகளை நிறுத்த வேண்டும். காற்றாலைக்கு எதிரான இந்த போராட்டம் தொடரும்.

மன்னார் தீவில் மேலும் காற்றாலைகள் அமைக்கப்பட்டால், ஏற் கனவே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தீவின் மக்கள் வேறு இடங் களுக்கு இடம்பெயர வேண்டியிருக்கும் என சுட்டிக்காட்டும் சிவில் சமூக ஆர்வலர், இது போர் முடிந்து பல ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்கனவே காணிப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள வடக்கு மக்களுக்கு இடையில் ஒரு மோதலை ஏற்படுத்தும் என வலியுறுத்துகின்றார்.

நேற்றைய நாள் யாழ்ப்பாணம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் ஆரம்ப விழா வில் பங்கேற்ற ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது எனவும், அதில் எந்த விதமான அழுத்தத்திற்கும் இடமளிக்கப்படாது எனவும் வலியுறுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மன்னார் ஒரு சொர்க்கம் அல்ல என எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி கூறியதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலை யில், விலைமனுக் கோரலின் பின்னர் மன்னார் தீவில் ஆரம் பிக்கப்பட்ட 20 மெகாவாட் மற்றும் முன்மொழியப்பட்ட 50 மெகாவாட் காற்றாலைத் திட்டம் இரண்டு ஆகியவற்றிள் நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஜனாதி பதி அண்மையில் தீர்மானித்திருந்தார்.

மன்னார் தீவில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையத்திற்காக விசையாழிகளை ஏற்றிச் செல்லும் வாகனங் களுக்கு எதிராக ஓகஸ்ட் 11ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்த பிரதேச மக்கள், மன்னார் தீவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என கடுமையாக வலியுறுத்தினர்.

பொதுமக்களின் கடுமையான எதிர்ப்புகளை அடுத்து, காற் றாலை மின் உற்பத்தி நிலைய விசையாழிகளை ஏற்றிச் செல் லும் வாகனங்களின் சாரதிகள் மன்னார் பிரதான பாலத்தின் அருகே நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதோடு, மேலும் அங்குள்ள பொருட்களைப் பாதுகாக்க பொலிசார் நிறுத்தப்பட்ட தாக பிரதேச ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

மன்னார் பகுதியில் முன்மொழியப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மற்றும் அது தொடர்பாக எழுந்துள்ள பிரச் சினைகள் குறித்த கலந்துரையாடல் ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றதோடு, கலந்துரையாடலின் போது, நாட்டின் எரிசக்தித் தேவைகள் மற்றும் பொருளாதாரத்திற்கு




இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களை மேலும் தாமதப்படுத்துவதால் நாட் டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை இழக்க நேரிடும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்ப்பு காரணமாக முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க முடியாது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

எனவே, அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்தும்போது அனைத்து தரப்பினரும் ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும் எனவும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பகுதியில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து எந்த நேரத்திலும் தீர்வுகளை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது எனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கூறியிருந்தார்.

ஒரு மாதத்தைக் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள், பொது அமைப்புகள் காற்றாலை திட்டங்களை மீளப்பெறும் வரை போராட்டை நிறுத்தப்போவது இல்லை என தெரிவித் துள்ளனர்.

# செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் மேலும் 09 எலும்புக்கூடுகள்


03.09.2025

செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் புதன்கிழமை (3) மேலும் 9 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இதுவரை 231 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதில் 213 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் - செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 42 வது நாளாக இன்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் முன் னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




**வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். மண்டைதீவு மனிதப் புதைகுழிக் கிணற்றை அகழ வலியுறுத்தி ஊர்காவற்றுறை காவல் நியைத்தில் முறைப்பாடு

04.09.2025

மண்டைதீவு படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய சடலங்கள் புதைக்கப்பட்ட கிணறுகளை அகழ்ந்து, அது தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.




தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா என்பவர் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால், முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது

அதன் போது, வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான அனுசியா ஜெயகாந்த், கருணாகரன் நாவலன், திருநாவுக்கரசு சிவகுமாரன், செந்தமிழ்ச்செல்வன் திருக்கேதீஸ்வரன், மங்களேஸ்வரன் கார்த்தீபன் ஆகியோரும் முறைப்பாட்டாளர்களுக்கு ஆதரவாக பொலிஸ் நிலையத்தில் பிரசன்னமாகி இருந்தனர்


அதன் போது, முறைப்பாட்டாளர்கள் தெரிவிக்கையில்,

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாள்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலை நிகழ்த்தப் பட்டது. இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 45 இகும் அதிகமான உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருப்பதுடன் அதற்கான வாழும் சாட்சியங்கள் உறுதியாகவும் இருக்கின்றன. அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலை கிணறு ஒன்றுக்குள்ளும் உடலங்கள் இருக்கின்றன.

எனவே குறித்த கிணற்றை அகழ்ந்து உடலங்களை வெளிக் கொணர்ந்து உண்மைகள் வெளி உலகுக்கு வெளிக்கொணரப் பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே குறித்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது என தெரிவித்தனர்.




1/B

முறைப்பாடு ஏற்றுக்கொள்ளல்
Acknowledgement of Complaint

பொலிஸ் நிலையம்
Police Station

திகதி
Date: 04/09/2025

முறைப்பாடு செய்பவரின் பெயர்
Name of Complainant

முறைப்பாட்டின் வகை
Nature of Complaint

தகவல் புத்தக விபரம்
I. B. Reference: 149/26

முறைப்பாடு பதிபவரின் கையொப்பம்
Signature of Recording Officer

முறைப்பாடு பதிபவரின் பெயரும் பதவியும் பதிவிலக்கமும்
Name Rank & Reg. No of Recording Officer

H 058874 – 5,000 (2023/08)P

அதேவேளை கடந்த மாதம் 20 ஆம் திகதி வேலணை பிரதேச சபையில் குறித்த புதைகுழியை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி முன் வைக்கப்பட்ட பிரேரணை சபையில் அனைத்து உறுப்பினர்களின் ஏக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# செம்மணியில அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 235 ஆக உயர்வு

04.09.2025

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இன்றைய நாள் வியாழக்கிழமை புதிதாக 06 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 04 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட் டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த 25ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்ட நிலையில் இன்றைய நாள் வியாழக் கிழமை 11 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணி களுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இன்றைய நாள் வியாழக்கிழமை 43 ஆவது நாளாக அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை கட்டம் கட்டமாக இதுவரையில் 52 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, இன்றைய






நாள் அகழ்ந்து எடுக்கப்பட்ட 06 எலும்புக்கூட்டு தொகுதி யுடன் இது வரையில் 218 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட் டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 235 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# இலங்கை தொல்லியல் திணைக்களம் கந்தரோடையை மையப்படுத்திய புதிய சிங்கள பௌத்த தொல்லியல் ஆய்வை ஆரம்பித்திருக்கின்றது

04.09.2025

கலாநிதி நிமல் பெரேரா தலைமையிலான புதிய ஆய்வின் மூலம் கந்தரோடை சிங்கள பௌத்த மக்களின் புனித தள மாகவும் வர்த்தக நகரமாகவும் இருந்ததை உறுதிப்படுத்தி இருப்பதாக அறிவித்திருக்கின்றார்கள்.

இது தொடர்பாக களனி பல்கலை கழகத்தின் Postgraduate Institute of Archaeology யில் கடந்த மாதம் 14 ஆம் திகதி நடாத் தப்பட்ட Public Lecture யில் பேசிய கலாநிதி நிமல் பெரேரா பல்வேறு விடயங்களை சொல்லியிருக்கின்றார்.

குறிப்பாக கந்தரோடை பௌத்த ஸ்தூபி (Stupa) வளாகத்தை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்ய முயற்சிக்க தொடங்கியிருப் பதாக அறிவித்திருக்கின்றார்.

தற்போது 49 பௌத்த ஸ்தூபிகள் இருப்பதாகவும். தாங்கள் புதி தாக மேலும் பல பௌத்த ஸ்தூபிகளின் அடித்தளங்களை (Foundations) கண்டறிந்து இருப்பதாகவும் அறிவித்திருக் கின்றார்.

இலங்கையின் முதலாவது துணை தொல்லியல் பணிப்பாளர் திரு ரோலண்ட் சில்வா அவர்களின் கந்தரோடை ஒரு பௌத்த புனித நகரம் என்கின்ற கருதுகோள்களை தாங்கள் உறுதி செய்திருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்.

சுமார் மூன்று மீட்டர் ஆழத்திற்கு நடத்திய அகழ்வாராய்ச்சி மூலம், கிமு 2-3 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பௌத்த மத முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களைக் தாங்கள் கண்டுபிடித் திருப்பதாகவும் அவர் விளக்கியிருக்கின்றார்.

இதன் மூலம் வண. எல்லாவல மேதானந்த தேரரின் வாத மான கந்தரோடை சிங்கள பௌத்த தொல்பொருள் நிலங்கள் தற்போதைய எல்லைகளுக்கு அப்பால் யாழ்ப்பாணம் முழு வதும் விரிந்துள்ளன என்பதற்கான உறுதியான சான்றுகள் இருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்.


விசேடமாக தங்கள் அகழ்வாராய்ச்சிகள் மூலம் மீண்டும் ஒரு தடவை வடக்கில் சிங்கள பௌத்த மத பாரம்பரியம் மட்டுமே நிலவியிருந்தது என்பதை உறுதி செய்திருப்பதாகவும் பேசியி ருக்கின்றார்.


அதே போல வடக்கு "தமிழர்களின் தாயகம்" என்ற கருத்தும் முழுமையாக பொய்யானது என்பதை தாங்கள் உறுதி செய் திருப்தாகவும் பகிரங்கமாக அறிவித்து தனது Public Lecture ஐ முடித்திருக்கின்றார்.

இதற்கிடையில் கிழக்கில் திருகோணமலை 64 ஆம் கட்டை இராஜவந்தான்மலையில் பௌத்த விகாரையொன்று நிர் மாணிக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயாராகியிருக்கின்றது.

200 வருடங்கள் பழமையான பிள்ளையார் ஆலய சூழலை தொல்லியல் நிலமாக அடையாளப்படுத்தி 300 ஏக்கர் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து Kottiyarama Sri Pathra Dhathu Raja Maha Viharaya பெயரிட்டு இந்த பௌத்த விகாரை நிர்மாணிக் கப்பட்டு உள்ளது.

இந்திய மீனவர்களின் நெருக்கடிகளுக்கு ஒரே தீர்வான





இழுவை மடி படகு தடை சட்டத்தை அமுலுப்படுத்த தயங்கும் திரு அநுர குமார திஸநாயக்க அவர்களின் கச்சத்தீவு பயண நாடகங்களுக்கிடையில் வடக்கு கிழக்கு தமிழர் நிலம் விரை வாகவே பறிக்கப்பட்டு வருகின்றது - இனமொன்றின் குரல்

# செம்மணியில் சப்பாணி நிலையில் மனித எழும்புக்கூடு

05.09.2025

செம்மணி மனித புதைகுழி அகழ்வு பணிகளின் போது வியாழக்கிழமை (4) குவியலாக எட்டு மனித என்பு தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.




அதன் போது, வெள்ளிக்கிழமை அவற்றுள் ஒரு மனித எழும்புக் கூட்டு தொகுதி கால்கள் மடிக்கப்பட்டு இருந்த (சப்பாணி) நிலை யில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 227 இலக்கமிடப்பட்டிருந்த எழும்புக் கூட்டு தொகுதியே இருந்த நிலையில் காணப்படுகிறது.




செம்மணியில் இதுவரையில், கட்டம் கட்டமாக 53 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 240 எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் , அவற்றுள் 235 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

# இன்று மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது

05.09.2025

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இன்று (05) புதிதாக 11 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 05 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று 12 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கி யுள்ள நிலையில், இன்றைய தினம் 44 ஆவது நாளாக அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை கட்டம் கட்டமாக இதுவரையில், 53 நாட்கள் முன் னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, இன்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்ட 17 எலும்புக்கூட்டு தொகுதியுடன் இது வரையில் 235 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 240 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளுக்காக நீதி மன்றம் அனுமதித்த 45 நாட்கள் நாளை (05) நிறைவுற



வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# சிறீலங்கா இராணுவத்தினால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 158 பேருக்கும் நினைவாக நினைவேந்தல்

05.09.2025

கிழக்கு பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த வேளையில் சிறீலங்கா இராணுவத்தினால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 35வது ஆண்டு நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை (5) நினைவு கூரப்பட்டதுடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரி போராட்டமும் நடத்தப்பட்டது.






1990ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக் கழக முகாமில் தஞ்சமடைந்தவர்களில் 158 பேர் விசாரணைக் கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள் ளார்கள். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையை இழந்த நிலையில் மட்டக் களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டிய லில் இடம்பெறுகிறார்கள்.

இன்று வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றலில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன் றியம் மற்றும் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந் தலில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அ.அமலநாயகி, கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றிய தலைவர், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பெருமளவா னோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கிழக்கு பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

“எங்கே எங்கே உறவுகள் எங்கே”, “எமக்கு எமது உறவுகள் வேண்டும்”, “எமக்கு நீதி விசாரணை வேண்டும்”, “எமக்கு சர்வதேச விசாரணை வேண்டும்”, “1990-09-05அன்று வந் தாறுமூலை பல்கலைக்கழகத்திற்குள் வைத்து கைது செய் யப்பட்டவர்கள் எங்கே” போன்ற பல்வேறு வாசகங்கள் அடங் கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழகத்தில் இரா ணுவம் மற்றும் பொலிசார் இணைந்து கொண்டுசெல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நினைவாக நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதுடன் நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

1990.09.05 அன்று அகதி முகாமுக்குள் நுழைந்த இரா ணுவம் தங்களை அறிமுகப்படுத்தி, பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத் தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத் தப்பட்டு, முகமூடி மனிதர்களால் தலையாட்டப்பட்டவர்கள் தனி மைப்படுத்தப்பட்டு, பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட் டதாக இந்த சம்பவத்தை 35 வருடங்கள் கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவுகூருகிறார்கள்.



இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதான குழுவானது பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தது.

1990 செப்டம்பர் 5ஆம் திகதி 32 பேரை மட்டுமே விசாரணைக் காக கைது செய்து அழைத்துச் சென்றதாகவும் 24 மணிநேரத் துக்குள் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட் டார்கள் எனவும் அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செய லாளராக பதவி வகித்த எயர்மார்சல் பெர்னாண்டோ பதில் அனுப்பியிருந்தார்.

இந்த பதிலை மட்டக்களப்பு சமாதானக் குழு நிராகரித்தது. விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாம் நாள் செப்டம்பர் 8ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகா முக்கு சென்று சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக கிழக்கு மாகாண இராணுவ தளபதியாக இருந்த ஜெரி சில்வா உட்பட பாதுகாப்பு உயர்மட்டக் குழுவினரும் சென்றிருந்தனர்.

இராணுவத்தினரே எமது உறவுகளை அழைத்துச் சென்றதாக மக்களும் முகாம் பொறுப்பாளர்களும் இராணுவ உயர் அதி காரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த வேளை கடும் தொனி யில் இராணுவ அதிகாரிகள் பதிலளித்ததாக கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட் டவர்கள் தொடர்பான விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேல் நீதி மன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் பலர் சாட்சியமளித்தனர்.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமை யில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப் டெம்பர் 5ஆம் திகதி 158 பேரையும், 23ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டுசென்றனர் என தெரிவிக்கப் பட்டது.

எனினும் இதுவரை இவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் 35வது வருடமாக உறவுகள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் விடுதலை நீர் சேகரிப்பு

05.09.2025

சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விடுதலை நீர் சேகரிக்கும் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடந்த நாட்களில் விடுதலை நீர் சேகரிக்கப்பட்டது.

இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்ட நிலையில், அரசியல் கைதி களின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் முகமாக புலம்பெயர் தேசங்களில் இருந்தும் இந்த விடுதலை நீர் சேகரிப்பு இடம் பெற்று வருகிறது.

அதனடிப்படையில் நேற்றைய தினம் (4) காசி உட்பட இந்தியா வின் பல தீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு, விடுதலை நீர் சேகரிப்பு பானையில் சேமிக்கப்பட்டது. இந்த நீர் சேகரிப்பு நிகழ்வானது சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்றது.

இந்த விடுதலை நீர் சேகரிப்பு நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரது சங்கத்தினர், அர சியல் கைதிகளின் உறவுகள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த உறவுகள், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக



மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மன்னார் தீவுக்குள் காற்றாலை வேண்டாம்

06.09.2025

மன்னார் தீவு பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற் றாலை மின் கோபுரங்கள் தொடர்பாக குறித்த பகுதி மக்களுடன் கலந்துரையாட எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (5) காலை மன்னாரிற்கு வருகை தந்தனர்.



மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் சௌத்பார் பகுதியில் 2 காற்றாலை கோபுரங்களும், தாழ்வு பாட்டில் 2 காற்றாலை கோபுரங்களும், தோட்டவெளியில் 2 காற்றாலை கோபுரங் களும் அமைக்கப்படவுள்ளது.

குறித்த 5 காற்றாலை கோபுரங்களும் 20 மெகா வாட் கொண் டதாக அமைக்கப்படவுள்ளது. மேலும் ஒலைத்தொடுவாய் பகுதியில் 06 காற்றாலை மின் கோபுரங்களும்,பேசாலை மேற் கில் 2 காற்றாலை மின் கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளது. குறித்த 8 காற்றாலை மின் கோபுரங்களும் 50 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் குறித்த 5 கிராமங்களிலும் முன்னெடுக்கப் படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து கிராம மக்களின் கருத்துக்களை கேட்டறிய எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழு வினர் மன்னாரிற்கு விஜயம் செய்த நிலையில் இன்று காலை 10 மணி அளவில் முதலாவது கலந்துரையாடல் மன்னார் சாந்தி புரம், சௌத்பார் கிராமங்களை உள்ளடக்கி சாந்திபுரம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது அமைச்சருடன் அதிகாரிகள் வருகை தந்தனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், து. ரவிகரன், ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் எம்.பிரதீப், மன்னார் நகர பிரதேச செயலாளர் கா.காந்தீபன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், அழைக்கப்பட்ட திணைக்கள பிரதி நிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து



கொண்டனர்.

இதன்போது அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மக்களுடன் கலந் துரையாடிய போதும் மக்கள் தமது கிராமங்களுக்குள் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தேவை இல்லை எனவும் குறித்த காற்றாலை மின் கோபுரங்களை அமைக்க தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக தெரிவித்தனர்.

மேலும் மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலை மின் கோபுரங்களால் மக்கள் பல்வேறு அசௌ கரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும்,மீனவர்கள் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட் டிக்காட்டினர்.

மேலும் தமது கிராம மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் காற்றாலை கோபுரங்களை மன்னார் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத் ததோடு, எமது பகுதிக்குள் காற்றாலை அமைக்க ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டோம் என தெரிவித்தனர்.

எனினும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் மக்களுடன் கலந்துரையாடி தமக்கு சாதகமான பதிலை எதிர்பார்க்க முயற்சி செய்த போதும் கலந்து கொண்ட அனைத்து மக்களும் தமது பகுதிக்குள் காற்றாலை வேண்டாம். அமைக்க அனுமதி வழங்க மாட்டோம் என ஒருமித்து தெரிவித்தனர்.



இந்த நிலையில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து வெளியேறினர். குறித்த கலந்துரையாடல் குறித்து ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கருத்து கேட்ட போதும் எவ்வித பதிலும் வழங்காது அங்கிருந்து வெளியேறினர்.

**தேசிய ஒற்றுமையையும் - இன ஒருமைப்பாட்டினையும் ஒரு வலுவான அத்திவாரத்தில் கட்டியெழுப்புவதென்றால், எம் மத்தியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும்; சமூக முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.**


-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# யாழ். செம்மணி – அரியாலை – சித்துபாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்தன

06.09.2025

செம்மணி – சித்துபாத்தி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் இன்றுடன் நிறைவு பெற்றுள்ளது.




செம்மணி புதைகுழி அகழ்வு பணிகளின் போது, சுமார் 1500 சதுர அடி நிலப்பரப்பில் இருந்து 231 மனித என்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு பணிகளின் போது , அகழ்வாய்த்தளம் - 1 மற்றும் அகழ்வாய்வு தளம் - 02 என அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது அகழ்வாய்த்தளம் - 01 புதைகுழியில் கட்டம் கட்டமாக 54 நாட்களாக , அண்ணளவாக 30 அடி அகலமும் 50 அடி நீளமும், 05 அடி ஆழத்திலும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டது. அதன் போது குறித்த புதைகுழியில் இருந்து 231 என்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த புதைகுழியில் ஒன்றன் மேல் ஒன்றாகவும் குவியல் ஆகவும், அமர்ந்த நிலையிலும் என சிறுவர் , சிசுக்கள் உள்ளிட்டவர்களின் என்புக்கூடுகளும் அடையாளம் கண்டு மீட்கப்பட்டிருந்தன.



யாழ்ப்பாணம் - செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 45வது நாளாக இன்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நிலத்தைப் பெற்றுத்தர துரித நடவடிக்கை வேண்டும்

### மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேயச்சல் நில பண்ணையாளர்

06.09.2025

தங்களின் போராட்டம் இரண்டு வருடங்கள் கடக்கவுள்ள போதிலும் தமக்கான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை என மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நில பண்ணையாளர் தெரிவித்துள்ளனர்.

எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர் நேற்று (6) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளரின் அறவழிப் போராட்டத்தின் இரண்டு வருடம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் பூர்த்தியடைகின்றது.

எனினும் இந்த அறவழிப் போராட்டத்தில் அடைந்த நன்மைகள் குறைவு. மேய்ச்சல் தரைக்காக. ஒதுக்கப்பட்ட 3025 ஹெக்டயர் நிலப்பரப்பு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. பின்னர் 3000 ஏக்கர் தருவோம் என கூறப்பட்ட போதிலும் இன்னமும் அதற்கான எந்த பதிவும் இடம்பெறவில்லை.

இந்த இரண்டு வருடத்திற்கான பூர்த்தியை முன்னிட்டு எங்களுடைய போராட்டம் அரசாங்கத்திற்கு ஒரு அழுத்தத்தை கொடுக்கும் என நினைக்கின்றோம்

கால்நடைகளினால் நாங்கள் மட்டும் பயனடையவில்லை. அரசாங்கத்திற்கும் இதனால் வருமானம் வருகிறது.

எனவே கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையினை பெற்றுக்



கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர் குறிப்

# மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கில் சர்வதேச அறிக்கை வெளியீடு

07.09.2025

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச



உண்மை மற்றும் நீதி திட்ட அமைப்பினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்ற நிகழ்வில் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இதன்போது நிமலராஜனின் உருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் குமாரசாமி செல்வக்குமாரால் குறித்த அறிக்கையின் முதல் பிரதி நிமலராஜனின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன் குறித்த அறிக்கையின் பிரதிகள் கலந்துகொண்ட ஏனையோருக்கும் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடக துறை சார்ந்தவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் என்போர் கலந்துகொண்டனர்









www.sangathamil.ca

# செம்மணியில் சிறீலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

07.09.2025

யாழ்ப்பாணம், செம்மணியில் சிறீலங்கா இராணுவத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பின் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமியின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

செம்மணி சந்திப் பகுதியில் வடக்கு - கிழக்கு நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் மைத்துனன் சந்திர காந்தன் மயூரன் மற்றும் உறவினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நினைவ வணக்கம் செலுத்தினர்.

அத்தோடு “வாசலிலே கிருஷாந்தி” எனும் செம்மொழி தொடர பான கவிதை நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மிகவும் உணர்வுபூர்வமான நடைபெற்ற இந்த நினைவ வணக்க நிகழ்வில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து தங்கள் இதயபூர்வமான கண்ணீர் வணக்கம் செலுத்தினர்.



















**சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல; அது இரத்தம் சிந்தி வெற்றிகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# செம்மணி மனிதப்படுகொலை: புதிய தகவல்கள் வெளிப்படுத்துவேன்

## லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி எஸ். சி. விஜேவிக்ரம

08.09.2025

செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய ஆலொசனைக்கு அமைவாக அவ்வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகக் குறிப்பிட்டு கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவுக்கு மீண்டும் ஒரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி. விஜேவிக்ரம 10.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்திருந்தர்ர. அவற்றின் பிரதிகள் பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.


அக்கடிதத்தில் 7 ஆம் இராணுவக் காலாட்படைத் தலைமையகத்தில் படுகொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமியினதும், அவரது குடும்பத்தினரினதும் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத் தவிர தனது கணவர் வேறெந்தக் குற்றத்தையும் புரியவில்லை எனவும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியமளிப்பதற்கு சோமரத்ன ராஜபக்ஷ தயாராக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து சோமரத்ன ராஜபக்ஷ மேலும் பல வெளிப்படுத்தல்களைச் செய்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த யூலை மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு பதிலும் கிட்டாததன் காரணமாக, சோமரத்ன ராஜபக்ஷ மீண்டும் தனது மனைவியின் ஊடாக கடந்த வாரம் ஜனாதிபதிக்கு மற்றுமொரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரத்தில் தனது வகிபாகம், தான் உள்ளடங்கலாக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய 5 இராணுவத்தினரும் திட்டமிட்டு சிக்கவைக்கப்பட்டமை, இவ்விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வகிபாகம் என்பன உள்ளடங்கலாக சோமரத்ன ராஜபக்ஷவினால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திலும், முன்னைய வெளிப்படுத்தல்களிலும் குறிப்பிட்டிருந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக அவ்வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதுமாத்திரமன்றி 1996 ஆம் ஆண்டில் வடக்கில் இடம்பெற்ற செம்மணி மனிதப்படுகொலை, வடக்கில் சித்திரவதைக் கூடங்கள் நடாத்தப்பட்ட விதம், அவற்றுடன் தொடர்புடைய இராணுவ உயரதிகாரிகள் தொடக்கம் ஜனாதிபதி வரை அவற்றை செயற்படுத்திய சகல அதிகாரிகளினதும் பெயர் விபரங்கள் போன்றவற்றை இந்நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்விவகாரம் தொடர்பில் விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நியமித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறும், சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளையும் சட்டத்தின்முன் நிறுத்துமாறும், பாதிக்கப்பட்ட யாழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை மட்டக்களப்பிலும் வெளியீடு

09.09.2025

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்ட அமைப்பினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மட்டு ஊடக அமையத்தில் 08.09.2025 இடம்பெற்ற நிகழ்வில் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இதன்போது நிமலராஜனின் உருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஊடகவியலாளருமான பா.அரியநேந்திரனினால் குறித்த அறிக்கையின் முதல் பிரதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டதுடன் குறித்த அறிக்கையின் பிரதிகள் கலந்து கொண்ட ஏனையோருக்கும் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்போர் கலந்து கொண்டனர்.









**சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்துக்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான – கௌரவமான வாழ்வில் காதல்கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# மட்டு. சத்துருக்கொண்டான் 186 பொதுமக்கள் படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல்

09.09.2025

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் 186 பொதுமக்கள் படுகொலை 35ஆவது ஆண்டு நினைவேந்தல் சத்துருக் கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவு தூபியில் இன்று (09) பி.ப 5.30, மணிக்கு ஈகைசுடர் ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவு வணக்கம் செலுத்தினர்.








குறித்த 35ஆவது நினைவு வணக்க நிகழ்வுபிரதேச பொதுமக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிலையில்,

உறவுகளை பறிகொடுத்தவர்களின் உறுவினர்கள் அரசியல் வாதிகள் கிறிஸ்தவ பாதிரியார்கள் பொது அமைப்புக்கள் உள் ளிட்டவர்கள் கலந்து கொண்டு நினைவு தூபியில் விளக்கேற்றி மலர் தூவி இரண்டு அமைதி வணக்கம் செலுத்தினர்.

கிழக்கில் சிறீலங்கா ஊர்காவல் படையினராலும் இராணுவத் தினராலும் நடத்தப்பட்ட மிகப்பெரும் படுகொலையான சத்துருக் கொண்டான் படுகொலை தொடர்பில் சர்வதேச ரீதியான விசா ரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்பதுடன் அப் படுகொலை நடைபெற்றதாகக் கூறப்படும் இராணுவமுகாமில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என சத்துருக் கொண்டான் படுகொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் வைரமுத்து குழந்தைவடிவேல் கோரிக்கை விடுத் துள்ளார்.









# தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதன், மகேஸ்வரி மற்றும் ரூபவாஹினி ராஜா ஆகியோரைக் கொலை செய்தது ஈ.பி.டி.பியினரே!

## ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் உறுப்பினர் சாத என அழைக்கப்படும் சுப்பையா பொன்னையா

09.09.2025

தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதன், சட்டத்தரணி மகேஸ்வரி, ரூபவாஹினி கூட்டுத்தாபன பணியாளர் கே.எஸ் ராஜா உள்ளிட்ட பலரை படுகொலை செய்தவர்கள் ஈ.பி.டி.பி யினர், படுகொலை தொடர்பில் நீதியான விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டால், அது தொடர்பில் சாட்சியங்கள் அளிக்க தயாரா கவுள்ளேன் என ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் உறுப்பினர் சதா என அழைக்கப்படும் சுப்பையா பொன்னையா தெரிவித் துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறுதியில் மண்டைதீவு பகுதி இராணுவ முற்றுகைக்குள் இருந்தே வேளை, அங்குள்ள மக்களுக்கு நாங்கள் நிவாரண பொருட்கள் கொண்டு சென்ற வேளை 15 - 20 பேர் அளவில் இராணுவத்தினரால் பிடித்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களை டக்ளஸ் தேவானந்தா பார்க்க வேண்டும் என சொல்லி இராணுவத்தினரிடம் கேட்டு , நாங்கள் நேரில் சென்று அவர்களை பார்த்தோம். அவர்களில் ஒரு 13 வயதுடைய சிறு வனும் இருந்தான். நாங்கள் பார்த்து வந்த சில நிமிடங்களில் வெடி சத்தம் கேட்டது. அத்தனை பேரையும் சுட்டு கொன்று விட்டார்கள்.

அதன் பிறகு நாங்கள் நெடுந்தீவு பிரதேசத்தை கைப்பற்றி னோம். அவ்வேளை அங்கிருந்த அரச உத்தியோகஸ்தரான நிக்லஸ் என்பவரை சந்திக்க வருமாறு கேட்டிருந்தனர். அவர் தான் நேரில் வர மாட்டேன் என கூறியதும் அவரை அடித்து சித்திரவதை செய்த வேளை, அவர் உயிரிழந்து விட்டார். பின்னர் அவரின் உடலை தூக்கில் தொங்க விட்டனர்.

டக்ளஸ் தேவானந்தாவின் மெய் பாதுகாவலராக இருந்தவரை புலிகளுடன் தொடர்பு என கொலை செய்தனர். நெல்லியடியை சேர்ந்த சட்டத்தரணி மகேஸ்வரியை கொலை செய்தனர். தம் முடன் முரண்பட்ட ரமேஷ் என்கிற தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதனை கொலை செய்தனர். அந்த கொலைகளை புலிகள் செய்ததாக கூறினார்கள். ஆனால் புலிகள் அவர்களை கொலை செய்யவில்லை. இவர்களே கொலை செய்தனர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டு தாபனத்தின் பணியாளர் கே. எஸ் ராஜா என்பவர் இந்தியாவில் இருந்து இலங்கை அழைத்து வந்து தமது ஊடக பணிகளுக்காக வைத்திருந்தனர். அவரும் இவர்களுடன் முரண்பட்ட போது, காலி முகத்திடல் கடற்கரை பகுதியில் மதுபானத்தினத்திற்குள் சைனட் கலந்து கொடுத்து அவரை படுகொலை செய்தனர்.

மலையகத்தை சேர்ந்த மோகன் மற்றும் விஜி எனும் இருவரை யும் கொலை செய்தனர். அவர்களை மலசல கூட குழிக்குள் போட்டு அசிட் ஊற்றி அவர்களின் உடல்களை பொசுக்




கினார்கள்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சூரி என்பவரை கொழும்பில் கொலை செய்து, கடற்கரையில் அவரின் உடலை போடும் போது அப் பகுதி மக்கள் கண்ணுற்று அது தொடர்பில் பொலிசாருக்கு அறி வித்தமையால் உடலை போட வந்தவர்களை அந்நேரம் பொலிசார் கைது செய்திருந்தனர்

ஈ.பி.டி.பி க்கு சொந்தமான கொழும்பு பார்க் வீதியில் இருந்த வீட் டில் பல கொலைகள் நடைபெற்றன. இந்த படுகொலைகளுக்கு சாட்சியங்களாக நான் இருக்கிறேன்.

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால், உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும், துணிந்து சாட்சி சொல்ல நான் தயார் என தெரிவித்தார்.

# போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்த பின்னரும் யாழ். வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் தவிர்க்கப்படுவது ஏன்?

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

10.09.2025

நாட்டில் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள பின்னரும், வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்? என பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பினார்.

மேலும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தை அண்மித்துள்ள நிலையில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள், பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினரின் வருகை மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக 1990.06.15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்தார்கள்.

இந்த இடப்பெயர்வு நிகழ்ந்து 35 வருடங்கள் கடந்தும். நாட்டில் போர் முடிவடைந்து 16 வருடங்கள் நிரம்பிய பின்னரும் இன்று வரை மீள்குடியேற்றப்படாத நிலையில் உள்ள அந்த மக்கள், இந்த நாட்டுக்குள்ளேயே இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் ஏதிலிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

கிட்டத்தட்ட 2,700 ஏக்கருக்கும் அதிக விஸ்தீரணமுடைய காணிகளைக் கொண்ட மயிலிட்டி, பலாலி, வசாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான், தையிட்டி, ஊறணி, தோலகட்டி உள்ளிட்ட பல பேரூர்களைச் சேர்ந்த மக்கள், தமது சொந்தக் காணிகளில் குடியேறும் உரிமை பறிக்கப்பட்டவர்களாகவே இன்றும் வாழ்கிறார்கள், ஆட்சி மாற்றங்கள், அரசு மாற்றங்களின் பின்னும் அவர்களது மீள்குடியேற்றம் சாத்தியப்படுத்தப்படாமை பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினரதும், அவர்களது பிள்ளைகளினதும், அடுத்த தலைமுறையினதும் எதிர்காலத்தையே கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.



எனவே யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 13 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் கடந்த 36 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து, இன்றுவரை சொந்த மண்ணில் மீள்குடியேற முடியாது இந்த நாட்டுக்குள்ளேயே ஏதிலிகளாக வாழ்ந்து வரும் குடும்பங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அறிவாரா?

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், இந்த மக்களுக்குச் சொந்தமான எத்தனை ஏக்கர் காணிகள் இன்றளவும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், குறித்த காணிகள் ஏன் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பதையும் அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா? இந்த நாட்டில் போர் முடிவுற்று 10 ஆண்டுகளின் பின்னரும் வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன் என்பதையும்? இதனால் சொந்த மண்ணில் குடியேறி வாழ முடியாதவர்களாக அந்த மக்கள் படும் அவலங்கள் எத்தகையவை என்பதையும் அமைச்சரால் இச்சபைக்கு அறிவிக்க முடியுமா?

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தை அண்மித்துள்ள நிலையில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா? இது விடயமாக, தங்கள் அமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப்போது சாத்தியமாகும் என்பதை இச்சபையில் பகிரங்கமாக தெரிவிக்க முடியுமா? அத்தகைய நடவடிக்கைகள் எவையேனும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனின் மேற்குறித்த மீள்குடியேற்ற விடயம் காலதாமதமாவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா? எனக் கேள்விகளை எழுப்பினார்.

# இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவதாக கூறிக்கொண்டு சித்திரவதைக் கூடங்களாகவே மாற்றியுள்ளனர்!

## மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன்

10.09.2025

இலங்கையை சிங்கபூராக மாற்றுவதாக கூறிக்கொண்டு சித்திரவதை கூடங்களாகவே மாற்றியுள்ளனர். மிருசுவில் கொலைகள் தொடர்பான குற்றத்துடன் தொடர்புடையவரை முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார். அப்படியென்றால் இனவாத ரீதியிலான செயற்பாடுகளே அளவுக்கு அதிகமாக நடந்துள்ளன. இவ்வாறு செய்தவர்களுக்கு உச்சமான சிறப்புரிமைகளுடனான வாழ்க்கையை அமைப்பதில் சமத்துவம், சம உரிமை இருக்காது. மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புங்கள். அப்போதே நாடு அபிவிருத்தியடையும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

இந்த நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஜே.ஆர் ஜயவர்தன கொண்டு வந்ததுடன் அவருடன் இதுவரையில் 8 ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர்.

ஜனநாயக ஆட்சி முறைக்குள் சர்வாதிகாரத்தை புகுதித்திய ஆட்சி முறையாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம். இந்த ஆட்சி முறையானது எங்களுக்கு என்ன நன்மை செய்தது. இந்நிலையில் எங்களை பொறுத்தவரையில் உரித்துரிமைகளை இல்லாமல் செய்வதையும் விட ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கக்கூடாது என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

இப்போது மண்ணை தோண்டும் போது எலும்புகூடுகளை காண்கின்றோம். 230க்கும் மேற்பட்ட எலும்புகூடுகள் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டள்ளன. முனனாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் காலத்தில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. வடக்கில் மாத்திரமன்றி கிழக்கிலும் இந்த நிலைமை இருந்தது.

இந்நிலையில் இப்போது மனிதப் புதைகுழிகள் மட்டுமன்றி போதைப் பொருட்களும் குழிகளில் இருந்து மீட்கப்படுகின்றன. இதற்கெல்லாம் ஜனாதிபதி ஆட்சி முறையே காரணமாக இருந்துள்ளது. இதனால் இந்த ஆட்சி முறையை முழுமையாக அரசியலமைப்பில் இருந்து நீக்க வேண்டும் என்பது எங்களின் நிலைப்பாடாகும் அதேபோன்று அளவுக்கடந்த சுகபோகங்கள் இவர்களுக்கு இருக்கக்கூடாது என்பதும் எங்களின் நிலைப்படாகும்.

ஜனாதிபதியொருவர் அரசு, அரசாங்கம், ஆட்சித்துறை மற்றும் ஆயுதப்பட்டையின் தலைவராக இருக்கின்றார். இவ்வளவு தலைமத்துவத்தை வைத்துக்கொண்டு இந்த நாடு முன்னேற்றமடைந்துள்ளதா? சிறீலங்காவை சிங்கப்பூராக மாற்றப் போவதாக ஜே.ஆர்.ஜயவர்தன கூறியிருந்தார்.

ஆனால் சித்திரவதை கூடங்கள்தான் இங்கே உருவாக்கப்பட்டுள்ளனவே ஒழிய, சிங்கபூராக மாற்றப்படவில்லை என்பதன அனுபவத்தில் கூறுகின்றோம். நாட்டில் பல புதைகுழிகள்



உருவாக்கப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்கள் இதனை செய்துள்ளனர். இப்போது போதைப் பொருட்களும் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படுகின்றன. ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் தங்களின் அதிகாரங்களை பயன்படுத்தி இவர்கள் செய்த சேவைகளை விட மக்கள் பட்ட அவஸ்தைகள்தான் அதிகமாக உள்ளன.

உதாரணத்திற்கு மிருசுவில் கொலைகள் தொடர்பான குற்றத்துடன் தொடர்புடையவரை ஜனாதிபதியாக இருந்த கோதாபய ராஜபக்ச பொதுமன்னிப்பில் விடுதலை செய்துள்ளார். அப்படியென்றால் இனவாத ரீதியிலான செயற்பாடுகளே அளவுக்கு அதிகமாக நடந்துள்ளன.

இவ்வாறு செய்தவர்களுக்கு உச்சமான சிறப்புரிமைகளுடனான வாழ்க்கையை அமைப்பதில் சமத்துவம், சம உரிமை இருக்காது. மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புங்கள். அப்போதே நாடு அபிவிருத்தியடையும் என்றார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# வெல்லாவெளியில் இடைநிறுத்தப்பட்ட பேரூந்து சேவையை மீள சேவையிலீடுபடுத்துமாறு பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் ஆர்ப்பாட்டம்

10.09.2025

மட்டக்களப்பிலிருந்து தினமும் நவகிரி நகர் வரை போக்குவரத்தில் ஈடுபட்ட வந்த மட்டக்களப்பு சாலைக்கு சொந்தமான பேருந்து, அப்பகுதிக்குரிய சேவையை ஒருவார காலத்திற்கு அதிகமாக நிறுத்தியதாக தெரிவித்து, அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் எனப்பலரும் இணைந்து இன்றைய தினம் (10.09.2025) பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




RDS மாமா பேரூந்து வண்டிய மீண்டும் பெற்றுதாங்க நாங்களும் ஏனையோரைப்போன்று படிக்க வேண்டும், எமது கிராம மக்களின் குரல் தான் RDS ... எமது குரலை அடக்கும் பாசிச அரசியல் வாதிகளே ஒழிக, அரசாங்கமே எங்களுடைய அடிப்படை உரிமைகயான போக்குவரத்தின் பறிக்காதே, காலையில் யானைத் தொல்லை மாலையில் மாட்டுத்தொல்லை பாடசாலை செல்வதும் போக்குவரத்து தொல்லையாகிவிட்டது என்ற பல வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு பற்று பிரதேச சபைக்கு முன்னால் ஒன்றுகூடிய பொதுமக்கள், கோசங்களை எழுப்பிய




வாறும், பதாதைகளை ஏந்திய வண்ணம் வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச செயலகம் வரை சென்றனர். பிரதேச செயலகத்திற்கு முன்னால் வைத்து இலங்கை போக்குவரத்து சாலையின் போக்குவரத்து சேவையை துரிதப்படுத்திதருமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த வெல்லாவெளி பொலிசார் ஆர்பாட்டகாரர்களுடன் கலந்துரையாடி பிரச்சினையை சுமூகமாக தீர்ப்பதற்கு முயற்சித்த வேளையிலும், தமக்கு உடன் தீர்வு வேண்டும் என தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு இணங்கவில்லை, இந்நிலையில் தமது பாடசாலையை சேர்ந்த மாணவர்கள் சீருடையுடன் ஆர்பாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையை ஏற்க முடியாது என கூறி சம்பவ இடத்திற்கு வந்த பாடசாலை அதிபர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை உடன் வெளியேறுமாறும் தெரிவித்தார்.

எனினும் தமது பிள்ளைகள் கடந்த ஒரு வார காலமாக பாடசாலைக்கு செல்லவில்லை இன்றைய தினமும் பாடசாலைக்கு செல்ல காத்திருந்த வேளையிலும், பாடசாலைக்கு செல்லமுடியாமல் நாம் பிள்ளைகளை இங்கு அழைத்து வந்துள்ளோம், எமது பிள்ளைகள் ஏன் பாடசாலைக்கு வர முடியாது என கேட்க முடியாத அதிபர், போக்குவரத்துக்காக போராடும் எமது மாணவர்களை தடுக்க முடியாது என தெரிவித்து, குறித்த பாடசாலை அதிபருக்கும், ஆர்ப்பாட்டகாரர்களுக்கும் ஏற்பட்ட வாய்தர்க்கம் காரணமாக அதிபர் அங்கிருந்து வெளியேறினார்.

இது இவ்வாறு இருக்க போரதீவுபற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஆர்ப்பாட்ட காரணங்களுடன் கலந்துரையாடியதற்கிணங்க, உதவிப் பிரதேச செயலாளர், இலங்கை



போக்குவரத்து சபையின் கிழக்கு மாகாண பொது முகாமையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பினை மேற்கொண்டு நிலைமையை எடுத்துக்கூறினார், இன்றிலிருந்து மண்டூர் நவகிரிநகருக்கான போக்குவரத்து சேவை இடம்பெறும் என, இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்கு மாகாண பொது முகாமையாளர் தெரிவித்ததாக ஆர்ப்பாட்டகாரர்களுக்கு உதவிப்பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இன்றிலிருந்து தொடர்ச்சியாக தமது பிரதேசத்திற்குரிய போக்குவரத்து சேவை ஈடுபடுத்தப்படவில்லையாயின் தமது போராட்டம் தொடரும் என தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் காற்றாலைக்கு எதிரான போராட்டம்: முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து இளைஞர்கள் நடைபவனி!

11.09.2025

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக இடம்பெற்று வரும் போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் முகமாக இரண்டு இளைஞர்கள் நேற்று (10) முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து நடைபவனியாக சென்றுள்ளனர்.



நடைபவனியாக சென்ற இளைஞர்கள் துண்டு பிரசுரங்களையும் வீதி ஓரங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கியுள்ளனர்.



காற்றாலை அபிவிருத்தி திட்டம் மக்களுக்கானதா? முதலாளிகளுக்கானதா? எமது வளத்தை அழித்துவிட்டு யாருக்கானது உங்கள் அபிவிருத்தி. எமது நிலங்களும் ஃ எமது வளங்களும் எமக்கானதே! முதலாளிகளின் அடிவருடிகளாக இல்லாது எம் எதிர்காலத்தையும் சிந்திப்போம் கனியமணல் சுரங்கம் மன்னார் தீவிற்கு மட்டுமல்ல முழுநாட்டிற்கும் ஆபத்தானது.

உள்ளிட்டவாறான கோஷங்களை முன்வைத்து போராட்டத்திற்கு ஆதரவாக இளைஞர்கள் நடைபவனியாக சென்றுள்ளனர்.

காணி அரச காணியாக உள்ள போதும் இங்கு ஒரு மயானம் இருந்ததற்குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று தொல்பொருள் திணைக்கழகம், பிரதேச செயலக செயலாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் அறிக்கை முன்வைக்கப்பட்டது.



அறிக்கைகளை ஆராய்த பின்னரே நீதிமன்று அகழ்வு செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளது.

**செல்லுங்கள் – வீழ்த்துங்கள் –வெல்லுங்கள்**
**இதுதான் போரின் உண்மைத் தார்ப்பரியம்.**
–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# முள்ளிக்குளம் மக்களை மீளக்குடியமர்த்த விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தல்!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

06.08.2025

மன்னார் - முசலி பிரதேசெயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமமக்களின் அகதி எனும் அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளி தேவை எனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிக்குளம் கிராம மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.



பாராளுமன்றில் 11.09.2025இன்று இடம்பெற்ற தேசிய கணக்காய்வுச் சட்டத்திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்விடயத்தினை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட பூர்வீககத்தமிழ்கிராமமான முள்ளிக்குளம் கிராமம் தாமதமின்றி மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டுமென இவ் உயரிய சபையைக் கோருகின்றேன்.

குறிப்பாக முள்ளிக்குளம் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு நிலவிய அசாதரண நிலைமை காரணமாக தங்களுடைய பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்தனர். அந்தவகையில் மீன்பிடி, விவசாயம் வாழ்வாதாரத்தொழில்களில் என ஈடுபட்டு மிகவும் நிறைவாகவும், செழிப்பாகவும் வாழ்ந்துகொண்டிருந்த சுமார் 400 தமிழ்க் குடும்பங்களே இவ்வாறான இடப்பெயர்வை சந்தித்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் ஒரு தசாப்த காலத்துக்கு பிற்பாடு கடந்த 2002ஆம் ஆண்டு அவர்களுடைய சொந்த இடமான முள்ளிக்குளத்தில் மீள்குடியேற்றப்பட்டனர். இவ்வாறு தமது சொந்த இடத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு அக்காலப்பகுதியில் 150 நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மொத்தமாக 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி மகிழ்வாக வாழ ஆரம்பித்தனர். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. மீள்குடியேறி வெறுமனே ஐந்து வருடங்களிலேயே கடந்த 2007ஆம் ஆண்டு மீளவும் இடம்பெயர வேண்டிய அவல நிலைக்கு முள்ளிக்குளம் கிராம மக்கள் தள்ளப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் முள்ளிக்குளம் மக்கள் தமது பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்து இரண்டு தசாப்த காலங்களை அண்மித்துள்ள நிலையில் இதுவரை முள்ளிக்குளம் கிராம மக்களை அவர்களுடைய சொந்த இடத்தில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இத்தகைய சூழலில் முள்ளிக்குளம் கிராம மக்கள் அயல் கிராமங்களான மலைக்காடு மற்றும் காயாக்குழி உள்ளிட்ட கிராமங்களில் பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக மலைக்காடு, காயாக்குழி ஆகிய கிராமங்களில் 250 இற்கும் மேற்பட்ட முள்ளிக்குளம் மக்கள் அகதி என்னும் அவல வாழ்வை வாழ்கின்றனர். இது தவிர 175 வரையான குடும்பங்கள் இந்தியாவின் அகதி முகாம்களில் வாழ்வதாகவும் மேலும் பல குடும்பங்கள் ஆங்காங்கே சிதறி வாழ்வதாகவும் முள்ளிக்குளம் கிராமமக்கள் முறையிடுகின்றனர்.

இவ்வாறாக முள்ளிக்குளம் கிராமமக்கள் அகதி வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்க கடற்படையினரும் வனவளத்திணைக்களத்தினரும் இணைந்து முள்ளிக்குளம் கிராமத்தை முற்றாக அபகரித்துவைத்துள்ள நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக முள்ளிக்குளம் கிராமத்தைச்சேர்ந்த தமிழ் மக்களுக்குரிய நெற் செய்கைக்குரியகாணிகள், தோட்டக்காணிகள், குடியிருப்புக்காணிகள், நீர்ப்பாசனக்குளங்கள் உள்ளடங்கலாக 1500க்கும் அதிகமான ஏக்கர்கள் வனவளத்திணைக்களத்தாலும் கடற்படையாலும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனக் குளங்களைப் பொறுத்தவரையில் சின்னத்தனக்கன் குளம், பெரியதனக்கன்குளம், பரவெளிக்குளம், பாலடிக்குளம், செட்டியார்குளம், அரக்குளம், புதுக்குளம் உள்ளிட்டவை முற்றாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

அதேவேளை தமிழ் மக்களுடைய காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தோட்டப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களுக்கு 2002ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட வீடுகளில் கடற்படையினரது குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். முள்ளிக்குளம் மக்கள் கடற்தொழிலில் ஈடுபட்டு வந்த இடங்களும் முற்றாக அபகரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களுடைய பூர்வீகக் கிராமத்தை விடுவிப்புச் செய்வதுடன் தம்மை மீள்குடியமர்த்து மாறும் முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர்ச்சியாக கோரிவருகின்றனர்.

குறிப்பாக தம்மை மீள் குடியமர்த்துமாறும் முள்ளிக்குளம் கிராம மக்கள் பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் கடந்த 2017 ஆண்டு காலப்பகுதியில் இரண்டுமாத காலம் தொடர்ச்சியாக மேற்கொண்ட தொடர் போராட்டத்தின் பலனாக அப்போதைய ஆளுநர் அவர்கள் வருகை தந்து காணிகள் விடுவிப்புச் செய்வதாக உத்தரவாதமளிக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அதன் பின்னர் 77 ஏக்கர் காணிகளை விடுவிப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு காணிகளும் மக்களால் துப்பரவாக்கப்பட்டுள்ளன.

மக்களால் துப்பரவு செய்யப்பட்ட பகுதிகளை தீயிட்டு கொழுத்துவதற்கு கடற்படையினர் இடையூறு ஏற்படுத்தியதையடுத்து அந்தக் காணிகள் துப்பரவு செய்வதும் கைவிடப்பட்டது. இதனால்



தமிழ் மக்கள் அந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தது.

இவ்வாறாக முள்ளிக்குளம் கிராமத்தில் மக்கள் எவரும் மீள்குடியமர்த்தப்படாத நிலையிலும் அங்கு பாடசாலை இயங்கி வருகின்றது. அங்குள்ள தேவாலயத்திற்கும் மக்கள் சென்று வருகின்றனர்.

முள்ளிக்குளம் பகுதியில் இயங்கிவருகின்ற முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 42 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மலைக்காட்டுப் பகுதியில் வசிக்கின்ற முள்ளிக்குளத்தை சேர்ந்தவர்களுடைய பிள்ளைகளே முள்ளிக்குளம் பாடசாலைக்கு காலையில் சென்று மாலையில் திரும்புகின்றனர். அதே போல் முள்ளிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பரலோகமாதா தேவாலயத்துக்கும் மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறாக தமது சொந்த இடத்துக்கு சுற்றுலாப் பயணிகளைப் போல சென்று வருகின்ற அவலத்தை சுமந்து அகதி வாழ்க்கையை முள்ளிக்குளம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தாம் வாழ்ந்த, தவழ்ந்த, விளையாடிய, பயிர்செய்த நிலங்கள் அனைத்தும் கண்முன்னே ஆக்கிரமிக்கப்பட்டு இருக்க தமது நிலத்தில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள முள்ளிக்குளம் கிராம மக்களின் அகதி என்னும் அவல வாழ்வுக்கு முடிவு கட்டப்படவேண்டும். அந்த மக்கள் உடன் மீள்குடியமர்த்தப்படவேண்டும். முள்ளிக்குளம் மக்களை மீள் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென இவ்வுயரிய சபையில் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் விசாரணை அறிக்கை யாழ். நகரில் விநியோகம்

13.09.2025

படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனுக்கு நீதி கோரிய விசாரணை அறிக்கை யாழ் ஊடக அமைய ஊடகவியலாளர்களால் யாழ் நகரில் சனிக்கிழமை (13) விநியோகிக்கப்பட்டது.



யாழ். ஊடக அமைய தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் சக ஊடகவியலாளர்களால், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், அதனை சூழவுள்ள பகுதிகளில் விசாரணை அறிக்கை விநியோகிக்கப்பட்டது.



கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை, நிமலராஜன் வீட்டினுள் புகுந்த துப்பாக்கிதாரிகள் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதுடன், வீட்டினுள் கைக்குண்டு வீசியும் தாக்குதல் மேற்கொண்டனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரது தந்தை தாய், மற்றும் மருமகன் ஆகியோர் காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.



நிமலராஜன் படுகொலைக்கு கடந்த இருபத்தைந்து, ஆண்டுகளாக நீதி இன்றி நிலைத்து வரும் நிலையில், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக தொடர்ந்தும் யாழ் . ஊடக அமையம் குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# மன்னார் காற்றாலை விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி வழங்கிய ஒரு மாத கால அவசகாம் இன்றுடன் நிறைவு.

## சாதாகமான பதில் கிடைத்தால் போராட்டம் கைவிடப்படும்; இல்லை என்றால் பாரிய போராட்டமாக மாறும்

### மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார்

12.09.2025

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் கோபுரங்கள் குறித்து துரித நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஒரு மாத காலக்கெடு இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறை வடைகின்ற நிலையில்,ஜனாதிபதியின் சாதக பதிலை தாம் எதிர்பார்த்துள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் காற்றாலை, கனிய மண் அகழ்விற்கு எதிரான போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை (12) 41 ஆவது நாளாக இடம் பெற்று வருகின்ற நிலையில் இங்கு இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மக்களின் இருப்பிடங்களையும், வாழ்விடங்களையும், பாதுகாக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மக்கள் மற்றும் இளையோர் இணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை (12) 41 ஆவது நாளை கடந்து செல்கின்றது.

மேலும் மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு தொடர்பாக ஜனாதிபதியால் ஒரு மாத காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. குறித்த காலக்கோடு இன்று வெள்ளிக்கிழமை(12)யுடம் முடிவடைகின்றது.

ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து எமது போராட்டத்தின் பலனாக நல்ல முடிவு வரும் என எதிர்பார்த்து காத்திருந்தோம். இதுவரை எந்த முடிவுகளும் ஜனாதிபதியிடம் இருந்து எமக்கு கிடைக்கவில்லை. பல தடவைகள் நாங்கள் மன்னார் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு கடந்த 30 நாட்களுக்குள் நடந்த செயல் திட்டங்கள் குறித்து கேட்டறிந்த தோடு,எமக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படாமை குறித்து தெரிவித்தோம்.

எனினும் தமக்கும் எவ்வித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என்ற பதில் எமக்கு கிடைத்தது. நாங்கள் முக்கிய மூன்று கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு முன் வைத்தோம். புதிதாக அமைக்கப்பட்டு வரும் 04 காற்றாலைகள், மேலும் அமைக்கப்படவுள்ள 10 காற்றாலை வேலைத்திட்டங்களும் உடன் நிறுத்தப்பட்டு, குறித்த திட்டம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து கணிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட கூடாது. தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும், மன்னாரில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட காற்றாலை திட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் உடன் நிவர்த்தி செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயரங்களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் நாங்கள் போராட்டக் குழு சார்பாக ஜனாதிபதியிடம் குறித்த மூன்று கோரிக்கைகளையும் முன் வைத்தோம்.

தற்போது குறித்த போராட்டம் 41 நாளை கடக்கின்றது. இதுவரை அரச தரப்பில் இருந்து எங்களுக்கு சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. இது நாட்டுக்கான போராட்டம் நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்கான போராட்டம். எங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.எங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிய முறையில் உறுதிமொழி தந்தால் இப்




போராட்டம் கைவிடப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். காற்றாலை திட்டத்திற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழிடத்தையும் பாதிக்கின்ற எந்த திட்டமும் எமக்கு வேண்டாம். எனவே அரசாங்கம் எமது கோரிக்கைகளை ஏற்று செவிசாய்க்க வேண்டும். இல்லை என்றால் எமது போராட்டம் வேறு திசைகளில் விரிவடையும்.

மன்னார் மாவட்டம் ஒரு போர்க்களமாக மாற்றமடையும் என்பதை இந்த அரசிற்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த போராட்டம் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமும் இல்லை. அரசினுடைய கட்சிக்கு எதிரானதும் இல்லை. மாறாக எமது உரிமைக்கான போராட்டமாக அமைந்துள்ளது.

எமது வாழ் விடங்களையும் வளங்களையும் பாதுகாப்பதற்கான உயர்ந்த ஒரு போராட்டமாக அமைந்துள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈ.பி.டி.பியினர் படுகொலை செய்ததாக சதா வெளிப்படையாக கூறுகிறார்; இதற்கான விசாரணைகள் இடம்பெறுமா?

### யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

12.09.2025

டக்ளஸ் தேவானந்தாவுடன் 18 ஆண்டுகள் ஒன்றாக இருந்த சதா எனும் சுப்பையா பொன்னையா என்பவர் 'நிமலராஜன், அற்புதன் நிக்கிலாஸ் ஆகியோரை ஈ.பி.டி.பி தான் படுகொலை செய்தது என்று வெளிப்படையாக குறிப்பிட்டுள்ளார். இதற்கான விசாரணைகள் இடம்பெறுமா? அரசாங்கம் இராணுவத்தை பாதுகாக்கவே முயற்சிக்கிறது. இலங்கை நீதியின் வழியில் செயற்பட்டிருந்தால் ஏன் வெளியக விசாரணைக்கு தயாராகக் கூடாது. வெளியக பொறிமுறைக்குள் வராவின் இந்த நாட்டில் நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் எப்போதும் உறுதிப்படுத்தப்படாது என்பதை தெளிவாக குறிப்பிட்டுக்கொள்கிறேன் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

முழு மன்னார் மாவட்டத்துக்குமான திண்மக் கழிவகற்றல் நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் 69 மில்லியன் ரூபாவும், மன்னார் நகர சபை ஊடாக 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு 2012-2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2015ஆம் ஆண்டு திண்மக் கழிவகற்றல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது பொது நிறுவனத்தின் ஊடாக இந்த கழிவகற்றல் திட்டத்துக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் மன்னார் மாவட்ட திண்மக் கழிவகற்றல் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அடுத்த அமர்வில் சகல ஆவணங்களையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

இலங்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சவால்கள் தொடர்பில் அமைச்சர் சரோஜா பல விடயங்களை குறிப்பிட்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றன. பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பில் பல சவால்களை எதிர்கொள்கின்றன.

நாட்டில் பேசாக்கின்மை குறைப்பாட்டில் வடக்கு மாகாணம் முன்னிலையில் உள்ளது. இந்த பிரச்சினைக்கு முறையான திட்டங்கள் ஏதும் செயற்படுத்தப்படவில்லை. கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்கு உணவுகளும் திரிபோசாவும் முறையாக கிடைக்கப்பெறுவதில்லை.

யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்த பெண்களுக்கு என்ன நேர்ந்தது என்பது இதுவரையில் தெரியவில்லை. வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தன்னுடைய கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தார். இவர் இதுவரையில் மீள ஒப்படைக்கப்படவில்லை. காணாமல் போனோர் பட்டியலிலேயே அவர் இன்றும் உள்ளார். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இன்றும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

வெளியக விசாரணைகளுக்கு தயாரில்லை என்று அரசாங்கம் சர்வதேச அரங்கில் குறிப்பிட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முதல் முறையாக நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் பரிந்துரைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பிற்பட்ட காலங்களில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், விசாரணைக்குழுக்கள் முறையாக செயற்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் தான் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட எம் மக்கள் வெளியக விசாரணைகளை கோருகிறார்கள். வெளியக விசாரணை நீதிக்கானதாக அமைய வேண்டும்.

பல்லாயிரக்கான எமது சகோதர பெண்கள் இன்றும் குங்குமத்துடனும், தாலியுடனும் தனது கணவர் வருவார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது எமது வரலாற்றில் துயரமிக்க விடயம். சிந்தித்து பாருங்கள் இதற்கு என்ன நீதி கிடைக்கப் போகிறது. பட்டலந்த விவகாரம் தொடர்பில் அவதானம் செலுத்தும் நீங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உறவுகளுக்காகவும், நீதிக்காகவும் காத்துக்கொண்டிருக்கும்



உள்ளங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

டக்ளஸ் தேவானந்தாவுடன் 18 ஆண்டுகாலமாக ஒன்றாக இருந்த சதா எனும் சுப்பையா பொன்னையா என்பவர் 2025.09.09 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி 'நிமலராஜன், அற்புதன் மற்றும் நெடுந்தீவில் தற்காலிக உதவி அரசாங்க அதிபராக பதவி வகித்த நிக்கிலாஸ் என்பவரை ஈ.பி.டி.பி தான் படுகொலை செய்தது' என்று வெளிப்படையாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஈ.பி.டி.பி தான் பல கொலைகளை செய்ததாகவும் சதா என்பவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான விசாரணைகள் இடம்பெறுமா, நிமலராஜனின் கொலை முறையாக விசாரிக்கப்படவில்லை என்று சர்வதேச நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன. உண்மைகள் மூடி மறைக்கப்பட்டன.

இசைபிரியா இலங்கை இராணுவத்தால் மிக மோசமாக கொலை செய்யப்பட்டார். இதேபோல் பல பெண்கள் கொலை செய்யப்பட்டார்கள். நீங்கள் இராணுவத்தை பாதுகாக்கவே முயற்சிக்கின்றீர்கள். இலங்கை நீதியின் வழியில் செயற்பட்டிருந்தால் ஏன் வெளியக விசாரணைக்கு தயாராக கூடாது. வெளியக பொறிமுறைக்குள் வராவின் இந்த நாட்டில் நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் எப்போது உறுதிப்படுத்தப்படாது. என்பதை தெளிவாக குறிப்பிட்டுக்கொள்கிறேன் என்றார்.

# முஸ்லீம்கள் விரோதப் போக்கை கொண்டு செயல்படுகின்றனர்

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

13.09.2025

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் விடுதலைப் புலிகளி ளோடு இணைந்து முஸ்லீம்களும் போராடியிருக்கின்றார். வீரச் சாவடைந்திருக்கிறார்கள். இவ்வாறு உள்ள பின்னணியில் தற் போது சில முஸ்லீம் சகோதரர்கள் விரோத போக்கை கொண்டு செயல்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லீம் காங்கிரஸ் கட்சி இதுவரையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு தாயகம் என்ற ஒன்று இருப்பதை வெளிப்படையாக கூறியதில்லை.

குறிப்பாக சபையில் சில முஸ்லீம் தலைவர்கள் பேசும்போது கூட குரோதமான விடயங்கள் வெளிப்படுத்துவதை அண்மைக் காலமாக அவதானிக்க முடிகிறது.

நாட்டில் விடுதலைப்புலிகளின் போராட்டம் இடம்பெற்ற காலத் தில் 2001 ஆம் ஆண்டு தொடர்க்கம் 2006ஆம் ஆண்டுவரை சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த பொழுது, அதன் அங்கமாக அப்போதைய முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமும் அதில் இணைந்திருந்தார்.

அவர் கிளிநொச்சிக்கு வருகைத்தந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்திருந்தார்.

இதன்போது, தனியான சமையல் காரரை அழைத்துவந்து பிரபாகரன், உரிய சமையலை செய்து வழங்கியிருந்தார்.

இந்த பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனாக இருக்கட்டும், மூத்த தலைவர் தந்தை செல்வா முதல் - இரா சம்பந்தன் வரை முஸ்லீம் மக்கள் தொடர்பில் மிக தெளிவான எண்ணங்களை தமிழர்கள் கொண் டுள்ளனர்.

மேலும் பெரும் விட்டுக்கொடுப்புக்களை முஸ்லீம்களுக்காக தமிழ் மக்கள் செய்திருந்தனர்.

எனினும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ் புல்லா, ஒரு நிகழ்வில் சில விடயங்களை கூறியிருந்தார்.

அதில் குறிப்பாக அம்பாறையில் உள்ள இந்துக்கோவிலை உடைத்ததாகவும், ஆயுதங்களை வாங்கி ஊர்காவற்படைக்கு வழங்கினேன் எனவும், ஜிகாத் என்ற அமைப்பை உருவாக் கினேன் என்றெல்லாம் வெளிப்படையாக பேசியிருந்தார்.



அப்படி இருந்தும் முஸ்லீம் சகோதரர்கள் மீது எவ்வித கோபங் களும் நாங்கள் கொண்டிருக்கவில்லை.

காரணம் யுத்த காலத்தில் இரு பக்கங்களுக்கும் நிறைந்த காயங்கள் உள்ளன. யாழிலும் கூட விடுதலைப்புலிகள் போராட் டத்தில் முஸ்லீம் சகோதரர்கள் போராடி மரணித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் விடுதலைப் புலிகளிளோடு இணைந்து முஸ்லிம்களும் போராடியிருக் கின்றார். வீரச்சாவடைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு உள்ள பின்னணியில் தற்போது சில முஸ்லீம் சகோதரர்கள் விரோத போக்கை கொண்டு செயல்படுகின்றனர்" என்றார்.

# யாழ். மாவட்டத்தின் மிகப் பெரிய குளமான கந்தரோடைக் குளத்தின் தூர்வாரும் பணிகள் ஆரம்பம்

13.09.2025

நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ்.மாவட்டத்தின் மிகப் பெரிய குளமும், வழுக்கையாறுப் படுக்கையில் 50 ஏக்கரில் நீரைத் தேக்கும் வாய்ப்பைக் கொண்டதுமான கந்தரோடைக் குளத்தின் தூர்வாரும் பணிகள் புதன்கிழமை (10.09.2025) காலை - 09.15 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் வழி காட்டலில் கந்தரோடைக் கிராம அபிவிருத்திச் சங்கம், கந்த ரோடை விவசாய சம்மேளனம் என்பன இணைந்து கந்த ரோடைக் குளத்தின் தூர்வாரும் பணிகளை முன்னெடுக் கின்றன.











**தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான ஆர்ப்பணிப்பைத்தான், திலீபன் செய்திருக்கின்றான்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-




# கனடாவில் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோருக்கு புதிய தேர்வு

02.09.2025

கனடாவில் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோருக்கு 'TOEFL Essentials' என்ற புதிய ஆங்கிலத் தேர்வு நடத்தப்பட உள்ளது.

'IELTS' அல்லது 'CELPIP' தவிர விண்ணப்பதாரர்களுக்கு மற்றொரு' தேர்வை வழங்க வேண்டும் என்பதற்காக குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC) இந்தத் தேர்வை அறிமுகப்படுத்தியுள்ளது.

சுமார் 1.5 மணிநேரம் மட்டுமே நடைபெறும் இந்தத் தேர்வு மிகவும் குறுகியதாக கருதப்படுகின்றது.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் ஆங்கிலத்தை எவ்வளவு சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்பதைச் சரிபார்க்க இந்தத் தேர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய தேர்வில், கேட்பது, படிப்பது, எழுதுவது மற்றும் பேசுவது ஆகிய நான்கு பகுதிகள் உள்ளன.

பணியிடப் பேச்சுக்கள் அல்லது அன்றாட உரையாடல்கள் போன்ற நிஜ வாழ்க்கை தகவல் தொடர்புகளில் கவனம் செலுத்தும் தேர்வாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

இது கனடாவில் வாழவும் வேலை செய்யவும் தயாராகும் புலம்பெயர்ந்தோருக்கு ஒரு பயனுள்ள தேர்வாக அமைகின்றது.

இந்தத் தேர்வு குறைந்த விலையில் உலகளவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், தேர்வை எழுதி 6 நாட்களில் அதற்கான அதிகாரப்பூர்வ மதிப்பெண்கள் தயாராகி விடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதனையடுத்து, விண்ணப்பதாரர்கள் தங்கள் மதிப்பெண்களை பல்வேறு நிறுவனங்களுக்கு கூடுதல் கட்டணம் இல்லாமல் அனுப்பலாம்.

ஒட்டுமொத்தமாக, இந்தப் புதிய தேர்வு, கனடாவுக்குச் செல்ல விரும்பும் திறமையான தொழிலாளர்களுக்கு குடியேற்றத்தை எளிதாக்குகிறது.

# புதிய கல்வியாண்டு தொடங்கும் இவ்வேளையில் முன்னெப்போதுமில்லாத அளவில் கல்விக்கான நிதியை ஒன்ராரியோ அரசு வழங்குகிறது

04.09.2025

2025-26 புதிய கல்வியாண்டில் புதிய பள்ளிகள், விரிவுபடுத்தப்பட்ட வகுப்பறைகள், மாணவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கென ஒன்ராரியோ அரசு முன்னெப்போதுமில்லாத அளவில் 30.3 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

இந்நிதியுதவியின் ஒரு பகுதியாக மாநிலமெங்கும் 41 புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட பாடசாலைகளை ஒன்ராரியோ முன்னேற்றுவதுடன் அவற்றில் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் நவீன கற்றல் வசதிகளையும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இது பற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க நிதி ஒதுக்கீடு, எமது மாணவர்களுக்கு பாதுகாப்பான, நவீன மயப்படுத்தப்பட்ட வகுப்பறைகளையும், மாணவர்கள் முன்னேற்றத்துக்கு வேண்டிய உபகரணங்கள் அவர்களுக்குக் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும்" எனத் தெரிவித்ததுடன், மேலும் அரசாங்கத்தின் அடிப்படை தொடர்பான அணுகுமுறை இளையோர்களை அவர்களின் தொழில்சார் மற்றும் வாழ்கையில் வெற்றி பெறுவதற்குத் தயார்படுத்தும் என்பதையும் குறிப்பிட்டார்.

இந்நிதியுதவி மாணவர்களின் பாதுகாப்புக்கும், பள்ளிகளில் நவீன கற்றலுக்கான வளங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வழியமைத்துக் கொடுப்பதனூடாக ஸ்காபரோ வாழ் மக்களுக்கு புதிய நம்பிக்கையை வழங்கும்.

இந்நிதியின் மூலம், ஒன்ராரியோ முழுவதும் உள்ள மாணவர்கள் மேம்படுத்தப்பட்ட வசதிகளையும், அதிக வசதி வாய்ப்புகளையும் வரும் கல்வியாண்டுக்கான வலுவான அடித்தளத்தையும் பெற்றுப் பயனடைவர்.



# கனடாவில் வேலை வாய்ப்பு நிலையில் வீழ்ச்சி

05.09.2025

கனடாவில் வேலைவாய்ப்பு சந்தை தொடர்ந்து இரண்டாவது மாதமாக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதன் விளைவாக வேலை இழப்பு விகிதம் 2016 மே மாதத்திற்குப் பிந்தைய மிக உயர்ந்த நிலைக்கு (கொரோனா காலத்தைத் தவிர்த்து) உயர்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளுது. ஆகஸ்ட் மாதத்தில் 66,000 வேலை வாய்ப்புகள் இழக்கப்பட்டதனால், வேலை இழப்பு விகிதம் 7.1% ஆக உயர்ந்துள்ளது.

இது கடந்த 2021 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் பதிவான மிக மோசமான பதிவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

யூலை மாதத்திலும் 41,000 வேலைகள் இழக்கப்பட்டிருந்ததுடன், அப்போது வேலை இழப்பு விகிதம் 6.9 % ஆக பதிவாகியிருந்தது.

ஆகஸ்ட் மாதத்திற்கான முன்னறிவிப்பில், பொருளாதார நிபுணர்கள் 10,000 வேலைகள் அதிகரிக்கும் என்றும், வேலை இழப்பு விகிதம் 7% ஆக இருக்கும் என்றும் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும் வேலை இழப்பு எண்ணிக்கை அதிகரித்திருந்தது.




www.sangathamil.ca



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# கனடாவின் மத்தி பிரிட்டிஷ் கொலம்பியாவில் நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு காட்டுத்தீ காரணமாக வெளியேற்ற உத்தரவு!

07.09.2025

கனடாவின் மத்திய பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஏற்பட்டுள்ள இரண்டு காட்டுத்தீகளை அணைக்க, தீயணைப்பு வீரர்கள் நைட் விஷன் ஹெலிகாப்டர் உட்பட நவீன உபகரணங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

கரிபூ பிராந்திய நிர்வாகம், அனாஹிம் ஏர, நிம்போ ஏரி, சார் லோட் ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு வெளியேற்ற உத்தரவு மற்றும் எச்சரிக்கை அறிவித்தது.

டஸ்டி லேக் காட்டுத்தீயினால் சுமார் 53 சதுர கிலோமீட்டர் பரப் பளவில் பரவி, அணைக்க கடினமாக உள்ளது.

பல வாரங்களாக நீடித்த சூடான வானிலை காரணமாக காடு மிகவும் உலர்ந்த நிலையில் இருப்பதே முக்கிய சவாலாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீயை அணைக்கவும், பீஃப் ட்ரெயில் கிரீக் காட்டுத்தீயை (100 சதுர கிலோமீட்டருக்கும் அதிக பரப்பளவு) கட்டுப்படுத்தவும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் சுமார் 150க்கும் மேற்பட்ட காட்டுத்தீகள் எரிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றில் 53 காட்டுத் தீகள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# எயார் கனடா விமானப் பணியாளர்களின் சப்பள ஒப்பந்தத்தை நிராகரித்துள்ளனர்

07.09.2025

கனடாவின் முதனிலை விமான சேவை நிறுவனமான எயார் கனடா விமானப் பணியாளர்கள், நிறுவனத்தின் புதிய சம்பள ஒப்பந்தத் திட்டத்தை பெரும்பான்மை வாக்குகளால் நிராகரித் துள்ளனர்.

சனிக்கிழமை மாலை 3 மணிக்கு முடிவடைந்த வாக்கெடுப்பில், 99.1% பணியாளர்கள் சம்பள உயர்வு குறித்த விமான சேவை நிறுவனம் முன்வைத்த முன்மொழிவுக்கு எதிராக வாக்களித் தனர்.

சம்பளப் பிரச்சினை குறித்து இரு தரப்பும் முன்பே சமரசம் (Mediation) செய்ய ஒப்பந்தம் செய்திருந்ததாகவும், அதில் முடிவு வராவிட்டால் நியாயத் தீர்ப்பு (Arbitration) முறையில் தீர்வு காணப்படும் எனவும் எயார் கனடா கூறியுள்ளது.
மேலும், வேலைநிறுத்தம் அல்லது பூட்டுதல் எதுவும் நடை பெறாது, எனவே விமான சேவைகள் வழக்கம்போல் தொடரும் என நிறுவனம் உறுதியளித்துள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த அந்த இடைக்கால ஒப்பந்தத்தில், பணியாளர களுக்கு இந்த ஆண்டு 12% (புதிய பணியாளர்கள்) மற்றும் 8% (மூத்த பணியாளர்கள்) சம்பள உயர்வு வழங்கப்படும் என முன் மொழியப்பட்டது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் சிறிய அளவிலான உயர்வுகள் இடம்பெறும் எனவும் திட்டமிடப்பட்டிருந்தது. விமானம் தரை யிறங்கிய நேரங்களில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் விதிமுறையும் அதில் இடம் பெற்றிருந்தது.

மூன்று நாள் வேலைநிறுத்தம் ஆகஸ்ட் 19 அன்று மத்திய அரசின் நடுவர் உதவியுடன் முடிவுக்கு வந்தது.




இந்த பேச்சுவார்த்தைகளில் மத்திய அரசு நடுநிலையைக் காக்க வில்லை; மாறாக எயார் கனடாவுக்கு ஆதரவாக செயற்பட்டதாக தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

# ஒன்ராரியோவின் ஸ்கார்பரோ மைய நிலயத்தில் கட்டுமான வேலைகள் ஆரம்பம்

11.09.2025

5.5 பில்லியன் டொலர்களுக்கான முதல் புதிய மூன்று நிலக் கீழ்த் தொடரி வழித்தட நிறுத்தங்களுக்கான விரிவாக்கத் திட்டத் தின்படி ஒன்ராரியோ அரசு அதிகாரப்பூர்வமாக ஸ்காபரோ மத் திய நிலையக் கட்டுமானத்தினைத் தொடங்கியுள்ளது, இத் திட்டம் முடிவடைந்தவுடன், வழித்தடம் 2ஆனது 7.8 கிலோ மீட்டராக நீட்டிக்கப்பட்டு 105,000 இற்கும் மேற்பட்ட அன்றாட பாவனையாளர்கள் பயன்பெறுவதுடன், 38,000 பயணிகள் அவர்கள் இருப்பிடத்திலிருந்து நடந்து செல்லும் தூரத்திற்குள் போக்குவரத்தை போக்குவரத்து வசதியை அளிக்கும்.

"ஸ்காபரோ நிலக்கீழ் வழித்தட நீட்டிப்பின் மூலம் பொதுமக்க ளுக்கும், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் எமது அரசு கனடிய வரலாற்றில் மாபெரும் போக்குவரத்து விரி வாக்கத்தை அளிப்பது ஒரு திருப்புமுனையாகும்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்தார்.

ஸ்காபரோ மத்திய நிலையம், போக்குவரத்து நெரிசல் வேளை களில் 10,000க்கும் மேற்பட்ட பயணிகளையும் 7,000 பயண இடைமாற்ற வசதிகளையும் அளிப்பதுடன், கட்டுமானத்தின் போது ஒவ்வோர் ஆண்டும் 3,000 வேலை வாய்ப்புகளை உரு வாக்கும். இத்திட்டம் ஸ்காபரோ சமூகம் நீண்ட காலமாகத் தேவைக்கு ஈடுகொடுக்கும் நவீன நம்பகமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதோடு ரொரான்ரோ பெரும்பாகத் திலுள்ள அனைத்து வசதிகளுடன் மக்களை இணைக்கும்.






**"நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே!**
**உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன்.**
**நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும்.**
**இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும்.**

*- ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் -*

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## காட்டுப்பள்ளியில் பொலிசார் மீது கல் வீச்சு சம்பவம்: வடமாநில தொழிலாளர்கள் 29 பேர் சிறையில் அடைப்பு

04.09.2025

மீஞ்சூர் அருகே காட்டுப்பள்ளியில் பொலிசார் மீது கற்கள் வீசி வன்முறையில் ஈடுபட்டதாக வடமாநில தொழிலாளர்கள் 29 பேர் கைது செய்யப்பட்டு, புழல் மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே காட்டுப்பள்ளியில் தனியார் தொழிற்சாலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த அமரேஷ் பிரசாத் (35) என்ற ஒப்பந்த தொழிலாளி, நேற்று முன் தினம் இரவு மதுபோதையில், ஊழியர்களுக்கான தற்காலிக குடியிருப்பு வளாகத்தின் முதல் தளத்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்தார்.

இதையடுத்து, உயிரிழந்த அமரேஷ் பிரசாத் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆயிரத்துக்கும் மேற்பட்ட வடமாநில தொழி லாளர்கள் நேற்று தற்காலிக குடியிருப்பு வளாகம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் பொலிசார் மீது கற்களை வீசி வன்முறை யில் ஈடுபட்டனர். இச்சம்பவத்தில் செங்குன்றம் காவல் துணை ஆணையர் பாலாஜி உள்ளிட்ட 10 பொலிசார் காயமடைந்தனர். இதையடுத்து, பொலிசார தடியடி நடத்தி, கண்ணீர் புகை குண்டுகளை போராட்டக்காரர்களை கலைத்ததோடு, கல் வீச்சு சம்பவம் தொடர்பாக சுமார் 50 வடமாநில தொழிலாளர்களை கைது செய்தனர்.

தொடர்ந்து, தொழிற்சாலையின் ஒப்பந்த நிறுவனம் உயிரிழந்த தொழிலாளிக்கு ரூ. 5 இலட்சம் இழப்பீடு வழங்க உத்தரவாதம் அளித்ததையடுத்து, தொழிலாளியின் உடல் உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு இன்று காலை விமானம் மூலம் உத்திரபிரதேசம் மாநிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



இதற்கிடையே கல்வீச்சு உள்ளிட்ட வன்முறை சம்பவம் தொடர் பாக கைதான 50 பேர் உட்பட 110 வட மாநில தொழிலாளிகளை பொலிசார தனியார் திருமண மண்டபத்தில் வைத்து விசா ரணை நடத்தினர்.

அந்த விசாரணையின் அடிப்படையில், காட்டூர் பொலிசார், கொலை முயற்சி, அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தாக் குதல், பொது சொத்துக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட 8 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். அந்த வழக்குத் தொடர்பாக, பொலிசார், 29 வட மாநில தொழிலாளர்களை கைது செய்து, அவர்களை இன்று அதிகாலை பொன்னேரி ஜே.எம். 1 நீதிமன்ற நீதிபதி முன்பு ஆஜர்படுத்தி, சென்னை-புழல் மத்திய சிறையில் அடைத்தனர்.

மற்ற தொழிலாளர்களிடம் பொலிசார், ' இனி வன்முறையில் ஈடுபட மாட்டோம்' என ஒப்புதல் வாக்குமூலம் எழுதி வாங்கி கொண்டு அவர்களை தற்காலிக குடியிருப்புக்கு அனுப்பி வைத்தனர்.

## சென்னையில் இரண்டாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்கள் கைது

20.08.2025

சென்னையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 2-வது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்களை பொலிசார் கைது செய்தனர். சென்னையில் இராயபுரம், திரு.வி.க.நகர் மண்டலங்களில் தூய்மைப் பணியை, தனியார் நிறுவனத்திடம் மாநகராட்சி ஒப்படைத்துள் ளதை கண்டித்தும், தங்களை பணி நிரந்தரம் செய்யக் கோரியும், தூய்மைப் பணியாளர்கள் ரிப்பன் மாளிகை முன்பு கடந்த ஆக.1-ம் தேதிமுதல் தொடர்ந்து 13 நாட்கள் போராட்டம் நடத்தினர்.

நீதிமன்ற உத்தரவால், நள்ளிரவில் இவர்கள் கைது செய்து, குண்டுக்கட்டாக அப்புறப்படுத்தப்பட்டனர். அதைத்தொடர்ந்து செப். 4-ம் தேதி சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மே தின பூங்கா வில், திடீரென திரண்ட 300-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணி யாளர்களை மீண்டும் குண்டுக்கட்டாக பொலிஸ் கைது செய் தது. இந்த திடீர் போராட்டத்தை அடுத்து தூய்மைப் பணியாளர் களின் நடவடிக்கைகளை பொலிசார் கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் கொருக்குப்பேட்டை அம்பேத்கர் நகரில், தூய்மைப் பணியாளர்கள் 13 பேர் நேற்று முன்தினம் பணி நிரந் தரம் கோரி தங்கள் வீட்டருகில் உண்ணாவிரதப் போராட்டத் தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக 200-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களும் திரண்டனர். இத்தகவல் அறிந்து வந்த பொலிசார் அவர்களை உடனடியாக கைது செய்து அப்புறப் படுத்தியது.

அவர்கள் நள்ளிரவு 1 மணியளவில் விடுவிக்கப்பட்டதாக கூறப் படுகிறது. இதையடுத்து சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் பின்புறம் (மாநகராட்சிக்கு அருகே) 2-வது நாளாக அதே 13 தூய்மைப் பணியாளர்கள் மீண்டும் உண்ணாவிரத போராட் டத்தில் நேற்று ஈடுபட்டனர். அங்கு வந்த பொலிசார் தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து போராட விடாமல் குண்டுக்கட்டாக கைது செய்தனர். இது தொடர்பாக செய்தி யாளர்களிடம் தூய்மை பணியாளர்கள் கூறுகையில், "அமைச்சர் சேகர் பாபு மற்றும் மேயர் பிரியாவுடன் சேர்ந்து முதல்வருக்கு நன்றி தெரிவித்தவர்கள் தூய்மைப் பணியாளர்கள் அல்ல. அவர்கள் கட்சிக்காரர்கள்.



அதனால் தான் பதாகையை மறைத்து வைத்துக் கொண்டே பேசினர். நாங்கள் 2 மாதமாக வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறோம். வீட்டு வாடகை கூட கொடுக்க முடிய வில்லை. முதல்வர் எங்களை சந்தித்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தனர்.

**விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக் கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# சிதம்பரம் நடராசர் சந்நிதி முன்பாக உள்ள கனகசபையில் நின்று தரிசனம் மேற்கொள்ள பக்தர்களை அனுமதிக்க முடியாது

## தீட்சதர்கள்

12.09.2025

சிதம்பரம் நடராசர் சந்நிதி முன்பாக உள்ள கனகசபையில் நின்று பக்தர்கள் தரிசனம் மேற்கொள்ள அனுமதியளித்து தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை எதிர்த்து பொது தீட்சதர்கள் தரப்பிலும், சென்னையைச் சேர்ந்த டி.ஆர்.ரமேஷ் உள்ளிட்டோர் தரப்பிலும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்கு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, கனக சபையில் நின்று பக்தர்கள் தரிசனம் மேற்கொள்ள என்ன நடை முறை பின்பற்றப்படுகிறது என்பது குறித்தும், வார நாட்கள், வார விடுமுறை மற்றும் விழாக்காலங்களில் எவ்வளவு பேர் தரி சனம் மேற்கொள்ள முடியும் என்பது குறித்து கள ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிபதிகள் அறநிலையத் துறைக்கு உத்தரவிட்டிருந்தனர்.


அதன்படி அறநிலையத்துறை தரப்பில் கனகசபையில் சில மாறு தல்களை செய்தால் சுமார் 4 ஆயிரம் பக்தர்கள் வரை எளிதாக சுவாமி தரிசனம் செய்ய முடியும் என கடந்தமுறை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், எஸ்.சவுந்தர் ஆகியோர் அடங்கிய அமர் வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது பொது தீட்சிதர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ். வைத்தியநாதன், “கனகசபையில் நின்று தரிசனம் செய்ய பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை.

பக்தர்களை அனுமதிக்கவும் முடியாது. விஐபிக்கள் மற்றும் தீட் சிதர்களுக்கு மட்டுமே கனகசபையில் நின்று தரிசனம் மேற் கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நடை முறை தான் ஆண்டாண்டு கால மாகக் கடைபிடிக்கப்பட்டு வரு கிறது” என்றார், அதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்த அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர். ஆர். அருண்நடராஜன், “பொது தீட்சிதர்கள் தரப்பில் தற்போது திடீரென பல்டிஅடித்து பக்தர்களுக்கு கனகசபையில் நின்று தரிசனம் மேற்கொள்ள அனுமதி கிடையாது என தெரிவிக்கப் படுவதை ஏற்கமுடியாது.

கடந்த 2008 முதல் பக்தர்களும் கனகசபையில் நின்று தரி சனம் மேற்கொள்ளும் வகையில் வழிவகை செய்யப்பட் டுள்ளது. அதற்காகத்தான் அரசாணையும் பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தட்டு காணிக்கை மூல



மாக கோயிலை நிர்வகித்து வருகிறோம் எனக் கூறும் தீட் சிதர்கள் பக்தர்களை கனகசபை மீது ஏற அனுமதிக்க மாட் டோம், எனக்கூற முடியாது” என்றார், அதையடுத்து நீதிபதிகள், பக்தர்களுக்கு கனகசபையில் அனுமதி கிடையாது எனக் கூறுவது தொடர்பாக மனுவாக தாக்கல் செய்ய பொது தீட் சிதர்கள் தரப்புக்கு உத்தரவிட்டு விசாரணையை அக்.9-க்கு தள்ளி வைத்துள்ளனர்.




**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# உலக செய்திகள்

## இலங்கையில் சுயாதீன விசாரணைகளுக்கான அவசரத் தேவைக்கு ஐ.நா. வலியுறுத்தல்

01.09.2025

இலங்கையில், அண்மையில் மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர்கள் உள்ளிட்ட பலரின் மனித என்புக்கூடுகள் மற்றும் தனிப்பட்ட உடைமைகள் என்பன, கடந்த கால மனித உரிமை மீறல்களின் அளவையும், நம்பகமான, வெளிப்படையான மற்றும் சுயாதீன விசாரணைகளுக்கான அவசரத் தேவையையும் வலியுறுத்துவதாக இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க ் - ஆண்ட்ரே ஃபிராஞ்ச் (Marc-André Franche) தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல் போனோர் தினத்தையொட்டி அறிக்கையொன்றைய வெளியிட்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 'ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் கதி என்னவென்று தெரியவில்லை' என்றும் இது 'மௌனம், செயலற்ற தன்மை மற்றும் தண்டனையின்மையால் ஏற்பட்ட ஒரு தேசிய காயம்' என்றும் அவர் கூறியுள்ளார்.

அன்புக்குரியவரைப் பற்றிய பதில்கள் இல்லாமல் விடப்படும் வலி, காலத்தால் மட்டுமே குணப்படுத்த முடியாத ஒரு அதிர்ச்சி என்றும் 'உண்மை மற்றும் நீதி இல்லாததால் துன்பம், ஆழமடைகிறது' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

சர்வதேச காணாமல் போனோர் தினம் அனைத்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நினைவை மதிக்கும் ஒரு நாள் என்றும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இந்த மீறலை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளவோ, மன்னிக்கவோ அல்லது மறக்கவோ கூடாது என்பதை நினைவூட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித புதைகுழிகளில் மீட்கப்படும் என்புக் கூடுகளும், எச்சங்களும் நம்பகமானதும், வெளிப்படையானதுமான சுயாதீன விசாரணைகளுக்கான அவசர தேவையை நினைவூட்டுகிறது. உண்மைகளை வெளிக்கொணர்வது பாதிக்கப்பட்ட குடும் பங்களுக்கு ஒரு நெருக்கமான சூழலை ஏற்படுத்த உதவும்.

நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன அதற்கு முன்நிபந்தனையாக உள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க் - ஆண்ட்ரே ஃபிராஞ்ச் (Marc-André Franche) தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் கண்காணிப்பு அச் சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் பழிவாங்கல்கள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபை கவலை கொண்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



இந்தநிலையில், தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அனைவரும் தண்டிக்கப்படக்கூடாது. பாதுகாக்கப் பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். கடந்த யூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர், காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சந்தித்து உண்மையை வெளிக்கொணர்வது ஒரு அடிப்படை உரிமை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

மனித புதைகுழி தொடர்பில் விசாரிக்க அவர் விடுத்த அழைப்பு, கடந்த காலத்தை தைரியத்துடனும் வெளிப்படைத்தன்மையுடனும் எதிர்கொள்ள வேண்டியதன் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த செயற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து ஆதரவை வழங்குகிறது.

இந்த நாளிலும், ஒவ்வொரு நாளும், தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் ஒவ்வொரு குடும்பத்துடனும் ஐக்கிய நாடுகள் சபை உறுதுணையாக நிற்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்கள் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாததற்கான உத்தரவாதங்களுக்கான உரிமைகளை உணர முடியும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

இதற்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் குற்றச்சாட்டப்படுகின்றனவர்கள் குறித்த நம்பகமான, சுயாதீனமான விசாரணைகளை ஆதரிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து உறுதியாக இருப்பதாக, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

## சிறீலங்காவின் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடாவின் புத்தகத்தை பிரித்தானியாவில் விற்பனையிலிருந்து நீக்கியு Amazon நிறுவனம்

02.09.2025

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒஃப் த ஃப்ளீட் வசந்த கரன்னாகொட எழுதிய புத்தகத்தை பிரித்தானியாவில் விற்பனையிலிருந்து நீக்குவதற்கு Amazon நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

"The Turning Point: The Naval Role in Sri Lanka's War on LTTE Terrorism" என்ற தலைப்பில் எழுதப்பட்ட இந்தப் புத்தகம், வசந்த கரன்னாகொடவின் சுயசரிதையாகும்.


ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட புத்தகங்களையும் விற்பனை செய்யும் இலத்திரனியல் சந்தையான அமேசோனின் பிரித்தானியா கிளைக்கு, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தால் விடுக்கப்பட்டகோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரன்னாகொடவின் புத்தக விற்பனை பிரித்தானிய தடைச் சட்டங்களை மீறும் என்று இந்த திட்டம் குறித்த நிறுவனத்திற்குத் தெரிவித்திருந்தது.

பிரித்தானிய அரசாங்கத்தினால் தடைகளுக்கு உட்பட்ட ஒருவருக்கு காப்புரிமை உள்ளிட்ட வளங்களை வழங்குவது ஒரு குற்றவியல் குற்றமாகும் என்பதுடன் மேலும் ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

இந்த கோரிக்கைக்கு Amazon இன் பிரித்தானிய கிளை எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளதாகவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் கூறுகிறது.

கடந்த மார்ச் 24 ஆம் திகதி அன்று பிரித்தானிய அரசாங்கத்தால் வசந்த கரன்னாகொட உள்ளிட்ட பலர்மீது தடைகள் விதிக்கப்பட்டதன் பின்னணியில் தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.




2005 மற்றும் 2009 ஆம் ஆண்டுக்கு இடையில் நாட்டின் உள்நாட்டுப் போரின் போது கடற்படைத் தளபதியாக பணியாற்றிய போது, நீதிக்குப் புறம்பான கொலைகள் உட்பட மனித உரிமை மீறல்களைச் செய்ததாகக் கூறி, வசந்த கரன்னாகொடவுக்கும் மேலும் நால்வருக்கும் தடைகளை விதிக்க பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டவர்களின் குடியேற்றத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

01.09.2025

அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டினர் குடியேற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து "மார்ச் ஃபார் அவுஸ்திரேலியா" (March for Australia) என்ற அமைப்பு நாடு முழுவதும் ஆர்ப்பாட்ட பேரணிகளை முன்னெடுத்துள்ள நிலையில், இந்தியர்கள் குடியேறுவதை எதிர்த்து இந்த அமைப்பினர் குரல் கொடுத்து வருகின்றனர்.




அவுஸ்திரேலியாவில் பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தலைமையில் தொழிலாளர் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், வெளிநாட்டினர் குடியேற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து "மார்ச் ஃபார் ஆஸ்திரேலியா" (March for Australia) என்ற அமைப்பு நாடு முழுவதும் ஆர்ப்பாட்ட பேரணிகளை நடத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தலைநகர் கான்பெரா, சிட்னி, மெல்போர்ண் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

கான்பெராவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட முயன்றவர்களை பொலிசார் தடுத்து நிறுத்தினர். சிட்னி உள்ளிட்ட பிற நகரங்களிலும் வெளிநாட்டவர்களின் குடியேற்றத்துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க பல இடங்களில் பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். மெல்போர்ணில் போராட்டக்காரர்களுக்கும், பொலிசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகவும், சிலர் கைது செய்யப்பட்டதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பேரணிகளுக்கு அவுஸ்திரேலிய அரசு கடும் கண்டனம்



தெரிவித்துள்ளது. இதுபோன்ற போராட்டங்கள் வெறுப்புணர்வைப் பரப்புவதாகவும், அவுஸ்திரேலிய சமூகத்தின் ஒற்றுமையை சீர்குலைப்பதாகவும் அந்நாட்டு குற்றம்சாட்டியுள்ளது.

மேலும், இந்த நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் மக்களுக்கு இடமில்லை என்றும், பல்லின கலாச்சாரம் என்பது அவுஸ்திரேலியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அரசு வலியுறுத்தியுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்: 1400 மேல் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

02.09.2025

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் பதிவான நிலநடுக்கம் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,411 ஆக அதிகரித்துள்ளது.

குனார் மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவானது. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 06 புள்ளிகளாக பதிவாகி இருந்தது.

நங்கர்ஹார் மாகாணத்தில் நுலாலாபாத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கம் காரணமாக வீடுகள், கட்டிடங்கள் இடிந்து சேதமடைந்தன. இரவு நேரத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் 800 க்கும் மேற்பட்டவர்கள் மண்ணில் புதையுண்டு உயிரிழந்ததாக முதற் கட்ட தகவல் வெளியானது. மேலும் பலர் காயமடைந்தனர்.

பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை உயர்வடையலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட மோசமான நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,411 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 3,000 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.



# சிறீலங்காவில் கடந்தகால மீறல் வழக்குகளைக் கையாள பிரத்தியேக நீதிப்பொறிமுறையை நிறுவுங்கள்

**ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்**

08.09.2025

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் மற்றும் வன்முறைகளாலும், தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கினாலும் உருவான காயங்களை ஆற்றுவதற்கும், அவற்றிலிருந்து மீள்வதற்கும் தற்போது தகுந்த வாய்ப்பு கிட்டியிருப்பதாக பேரவையில் சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீன விசேட சட்டவாதியின் பங்கேற்புடன்கூடிய பிரத்யேக நீதிப்பொறிமுறையை சிறீலங்கா அரசாங்கம் ஸ்தாபிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் திங்கட்கிழமை (8) ஜெனீவாவில் ஆரம்பமானது. கூட்டத்தொடரின் தொடக்கநாள் அமர்வில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது எழுத்துமூல அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து உரையாற்றினார்.

அதன்படி கடந்தகால மீறல்கள் மற்றும் வன்முறைகளாலும், தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கினாலும் உருவான காயங்களை ஆற்றுவதற்கும், அவற்றிலிருந்து மீள்வதற்கும் இலங்கைக்கு தற்போது வரலாற்று முக்கியத்தும் மிக்க வகையில் வாய்ப்பு கிட்டியிருப்பதாக சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்வதற்கான சந்தர்ப்பம் அமைந்திருப்பதாகத் தெரிவித்தார். அத்தோடு அண்மையில் தான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது முன்னெப்போதுமில்லாத வகையில் சீரான புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக அரசாங்கம் வாக்குறுதியளித்ததாகவும், அவ்வாக்குறுதிகளுக்கு செயல்வடிவம் அளித்து அவை உரியவாறு நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோன்று எதிர்வருங்காலங்களில் நாட்டில் நிலையான நல்லிணக்கத்தையும் அமைதியையும் கட்டியெழுப்புவதற்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட வோல்கர் டேர்க், இலங்கைக்கான விஜயத்தின்போது கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் துயரத்தையும், அத்துமீறல்களையும் அனுபவித்து வருவதாகவும், செம்மணி மனிதப்புதைகுழியைப் பார்வையிடச்சென்றபோது அங்கிருந்தவர்கள் தாம் முகங்கொடுத்து வரும் துன்பத்தைத் தன்னிடம் முறையிட்டதாகவும் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி தெற்கைச்சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவருக்காக நீண்டகாலமாகக் காத்திருப்பதாகத் தன்னிடம் கூறியதாகவும் குறிப்பிட்ட அவர், எனவே தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, நீதி வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.




அடுத்ததாக கடந்த காலங்களில் அரசு, பாதுகாப்புப்படையினர் மற்றும் ஆயுதக்குழுவான தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட தரப்பினரால் மீறல்கள், வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனக் கூறிய உயர்ஸ்தானிகர், நினைவுகூரல்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பது சாதகமான விடயம் எனக் குறிப்பிட்டதுடன் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அவசியமான சட்ட மறுசீரமைப்புக்கள மேற்கொள்ளப்படவேண்டும் என்றார்.

குறிப்பாக சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபிக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்திருப்பதை வரவேற்பதாகவும், அச்செயன்முறையில் சிவில் சமூகம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்திய அவர், கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீனமான விசேட சட்டவாதியின் பங்கேற்புடன்கூடிய பிரத்யேக நீதிப்பொறிமுறையை இலங்கை அரசாங்கம் ஸ்தாபிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் 'பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் பிரயோகம் உடன் இடைநிறுத்தப்படவேண்டும். நிகழ்நிலைக்காப்புச்சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம், அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான உத்தேச சட்ட வரைவு மற்றும் தனிநபர் தரவுப்பாதுகாப்பு தொடர்பான உத்தேச சட்ட வரைவு என்பன உள்ளடங்கலாக மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடிய சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும். வலிந்து காணாமலாக்கப்படல்கள் மற்றும் காணி சுவீகரிப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் இயங்கிவரும் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீதான ஒடுக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன. அவை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டும். அதுமாத்திரமன்றி பாதுகாப்புத்துறை மறுசீரமைக்கப்படவேண்டும். வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கம் முடிவுக்குக்கொண்டுவரப்படுவதுடன் தனியாருக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்படவேண்டும். மலையகத் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்' என்றும் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை தொடர்பில் தமது அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பில் 105,000 ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் திரட்டப்பட்டிருப்பதாகவும், சர்வதேச நியாயாதிக்கத்தின் ஊடாக இவற்றைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு உறுப்புநாடுகள் முன்வரவேண்டும் எனவும் அழைப்புவிடுத்த உயர்ஸ்தானிகர், மனிதப் புதைகுழிகளின் அகழ்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான உதவிகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகின்றது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 80ஆவது ஆண்டு வெற்றி விழா கொண்டாட்டம்; பல தலைவர்கள் பங்கேற்பு

04.09.2025

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 80 ஆவது ஆண்டு வெற்றி விழா, 80 ஆயிரம் புறாக்களை பறக்கவிட்டு சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் பிரமாண்டமாக நடைபெற்றது.



சீனாவில் இடம்பெற்ற வெற்றிக் கொண்டாட்டம் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன் மற்றும் ஈரான், கியூபா உள்ளிட்ட 26 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீனா பெற்ற வெற்றியின் 80 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சீனாவின் முக்கிய இராணுவ அணிவகுப்பில் பங்கேற்பதற்காக வடகொரிய தலைவர் கிம் ஜாங்-உன் செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 2) குண்டு துளைக்காத ரயில் மூலம் பெய்ஜிங் சென்றடைந்தார்.

“வரலாற்றை நினைவில் கொள்வோம், தியாகிகளை நினைவு கூர்வோம், பிரகாசமான எதிர்காலத்திற்காக அமைதியைப் போற்றுவோம்” என்ற முக்கிய கருப்பொருளில் சுமார் 70 நிமிடங்கள் இடம்பெற்ற இந்த வெற்றிக்கொண்டாட்டத்தின் போது, சீன இராணுவம் தனது அணு ஆயுத பலத்தை தரை, கடல் மற்றும் வான்வழி என மூன்று தளங்களிலும் ஒரே நேரத்தில் காட்சிப்படுத்தியது.




தியான்மென் சதுக்கத்தில் நடைபெற்ற இந்த அணிவகுப்பு மரியாதையை சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் பார்வையிட்டார்.

“நீதி வெல்லும்” , “அமைதி வெல்லும்” மற்றும் “மக்கள் வெல்லும்” என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைச் சுமந்துகொண்டு ஹெலிக்கொப்டர்கள் தியான்மென் சதுக்கத்திற்கு மேல் பறந்தன.

5 ஆவது தலைமுறையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், சீனாவின் அதிநவீன இராணுவ தளவாடங்கள், புதிய ரக டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் விமானங்கள் அணு ஆயுதங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

வான்வழி நீண்ட தூர அணு ஏவுகணை, நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஏவுகணை, தரைவழி சார்ந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஏவுகணை மற்றும் புதிய DF-31BJ தரைவழி சார்ந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன் DF-5C திரவ கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஏவுகணை காட்சிப்படுத்தப்பட்டது. இந்த ஏவுகணை, உலகின் எந்த இலக்கையும் தாக்கும் திறன் கொண்டது என சீனா இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்போது ஒய்ஜே-21 (YJ-21), டிஎஃப்-17 (DF-17) மற்றும் டிஎஃப்-26டி (DF-26D) போன்ற புதிய தலைமுறை ஹைப்பர் சோனிக் ஏவுகணைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்த ஏவுகணைகள் மிக அதிக வேகத்தில் பயணிக்கும் திறன்




கொண்டவை. மேலும், இவை எதிரிகளின் பாதுகாப்பு அரண்களை ஊடுருவி, இலக்குகளை மிகத் துல்லியமாகத் தாக்கும் சக்தி வாய்ந்தவை ஆகும்.

ஆளில்லா தரைப்படை, ஆளில்லா கடல்சார் போர்ப் படை மற்றும் ஆளில்லா விமானப் படை ஆகியவற்றின் அணிவகுப்புக்கள் இடம்பெற்றன. சமாதானத்தை வெளிப்படுத்தும் முகமாக 80 ஆயிரம் புறாக்கள் பறக்கவிடப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்,

80 ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற வெற்றி, நவீன காலத்தில் சீனா வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பெற்ற முதல் முழுமையான வெற்றி. போர் மீண்டும் நிகழாமல் இருக்க, போருக்கான அடிப்படைக் காரணத்தை ஒழிக்க வேண்டும் என்று அவர் உலக நாடுகளை வலியுறுத்தினார்.

மிகப் பிரம்மாண்டமான முறையில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பு, அமைதியான வளர்ச்சியின் பாதையைத் தொடர அதன் உறுதியையும், தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான அதன் வலுவான ஆர்வத்தையும், உலக அமைதியைப் பாதுகாப்பதற்கான அதன் சிறந்த திறனையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.



இந்த இராணுவ அணிவகுப்பில் 10,000க்கும் மேற்பட்ட சீன இராணுவ வீரர்கள், 100 க்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான போர் வாகனங்கள் பங்கேற்றன. ஆளில்லா உளவு மற்றும் எதிர்ப்பு- ஆளில்லா கருவிகள், அதிவேக ஏவுகணைகள், இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஆற்றல் கொண்ட ஆயுதங்கள், மின்னணு அமைப்புகள் மற்றும் உலகளாவிய தாக்குதல் திறன் கொண்ட மூலோபாய ஆயுதங்கள் போன்ற அதிநவீன ஆயுதங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிகளில் பங்கேற்ற சீன வீரர்கள் முதன்முறையாக இந்த வெற்றி தின அணிவகுப்பில் அணிவகுத்துச் சென்றனர்.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் பங்களித்த சர்வ




தேச நண்பர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் சிறப்பு அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன. சீனாவில் வெற்றி தினத்தைக் கொண்டாடும் வகையில் பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மண்டபத்தில் இன்று இரவு (செப்டம்பர் 3) சிறப்பு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்சின் புதிய பிரதமராக செபாஸ்டியன் லெகோர்னு நியமனம்

10.09.2025

பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன், பிரதமர் பிரான்சுவா பய்ரூ அரசாங்கம் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த 24 மணி நேரத்துக்குள், தனது நெருங்கிய கூட்டாளி செபாஸ்டியன் லெகோர்னுவை (39) புதிய பிரதமராக நியமித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளாக பாதுகாப்புத் துறையை கவனித்த லெகோர்னு, மக்ரோனின் ஏழாவது பிரதமர் ஆவார். அவருக்கு அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்து அடுத்த வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

பய்ரூ முன்வைத்த 44 பில்லியன் யூரோ செலவு குறைப்புத் திட்டம் நம்பிக்கை வாக்கெடுப்பில் 364-194 வாக்குகள் வித்தியாசத்தில் நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் இராஜினாமா செய்தார்.

லெகோர்னுவின் நியமனத்தை மத்தியவரிசைக் கட்சிகள் வரவேற்றுள்ளன. ஆனால் இடதுசாரி மற்றும் வலதுசாரிகள் கடுமையாக எதிர்த்துள்ளனர். ஜான்-லூக் மெலன்சன் (இடதுசாரி) மாற்றமே இல்லை என விமர்சித்தார். மரீன் லெ பென் (வலதுசாரி) “மக்ரோனின் இறுதி முயற்சி” எனக் கூறினார்.

பிரான்ஸ் தற்போது மூன்று முக்கிய அரசியல் பிளாக்குகளால் (இடது, வலது, மையம்) பிளவுபட்டுள்ளது. புதிய பிரதமரின் முதன்மைப் பணி, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 114% ஆக உயர்ந்துள்ள 3.3 டிரில்லியன் யூரோ கடனை கட்டுப்படுத்துவதாகும்.

இதற்கிடையில், “பிளோக்கோன் டூட்” (எல்லாவற்றையும் முடக்கு) என்ற பொதுமக்கள் இயக்கம் புதன்கிழமை பெரிய அளவில் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக 80,000 பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.



மேலும், வெள்ளிக்கிழமை ஃபிட்ச் நிறுவனம் பிரான்ஸ் கடன் மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்ய உள்ளது. அது குறைக்கப்பட்டால் நாட்டின் கடன் செலவுகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

**சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தோல்வி!

## புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள்

03.09.2025

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் இணையனுசரணை நாடுகளால் சமர்ப்பிக்கப்பட விருக்கும் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை வரைவில் சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையின் ஊடாக பொறுப் புக்கூறலை வலுப்படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப் பீடுகளை வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அரசியலமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மறு சீரமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய 3 பிரதான கூறுகளை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என சர்வதேச நாடுகளில் இயங்கிவரும் 18 புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் இணையனுசரணை நாடுகளுக்கு கூட்டாகப் பரிந்துரைத்துள்ளன.

இதுகுறித்து பிரித்தானியத் தமிழர் பேரவை, புதுடில்லி தமிழ்ச் சங்கம், ஜேர்மனி தமிழர் கொள்கைப் பேரவை, சுவிட்ஸர் லாந்து தமிழ் நடவடிக்கைக் குழு என்பன உள்ளடங்கலாக பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா, ஜேர்மனி, நெதர்லாந்து, கனடா, அயர்லாந்து, தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, மொரீஸியஸ் ஆகிய நாடுகளைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டிணைந்து இணையனு சரணை நாடுகளின் பிரதிநிதிகள், பேரவையில் அங்கம்வகிக் கும் நாடுகளின் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள் உள் ளிட்ட தரப்பினருக்கு அனுப்பிவைத்திருக்கும் பரிந்துரை ஆவ ணத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை கடந்த ஏழு தசாப்த காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பிலும், போர்க்குற்றங்களிலும், மனிதகுலத் துக்கு எதிரான மீறல்களிலும் ஈடுபட்டிருப்பதுடன் அதன் விளை வாக சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டை விட்டு அகதிகளாகத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத் தினால் வெளியிடப்பட்ட அறிக்கை உள்ளிட்டவற்றைத் தொடர்ந் தும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்கிறது. சாட்சியங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப்பீடுகளை வழங்கல், மீள் நிகழாமையை உறுதிப்படுத்தக்கூடியவகையில் அரசிய லமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய 3 பிரதான விடயங்களை முன்னிறுத்தி உடனடி நடவடிக்கையைக் கோரும் வகையில் எதிர்வரும் இம் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணை வரைவு அமையவேண்டும்.

குறிப்பாக அண்மையில் யாழ். செம்மணியிலும், திருகோண மலையின் சம்பூரிலும், மன்னாரிலும் கண்டறியப்பட்டுள்ள மனிதப்புதைகுழிகளும், குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்குச் சொந்தமானவை உள்ளடங்கலாக அங்கு அடையாளங்காணப் பட்ட மனித எச்சங்களும் இலங்கை அரசின் இனப்படுகொலை நோக்கத்துக்கான வலுவான ஆதாரங்களாகக் காணப்படுகின் றன. எனவே ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலு வலகத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை 1948 தொடக்கம் இப்போது வரை நிகழ்த்தப்பட்ட சகல அட்டூழியங்கள் தொடர் பிலும் ஆதாரங்களை திரட்டும் வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல்



நீதிமன்றத்தில் உடனடியாகப் பாரப்படுத்துவதற்கு அவசியமான வலுவான ஆதாரங்களுடன்கூடிய 15 - 20 முக்கிய வழக் குகளை அடையாளம் காணவேண்டும்.

அடுத்ததாக இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றங் களுக்குப் பரிந்துரைத்தல், உலகளாவிய நீதிப்பொறிமுறையை நடைமுறைப்படுத்தல், இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வ தேச குற்றவியல் நீதிப்பொறிமுறையை ஒன்றை ஸ்தாபிக் குமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் ஐ.நா பொதுச் சபைக்குப் பரிந்துரைக்கப்படல் என்பவற்றுக்கான கூறுகள் புதிய பிரேரணையில் உள்ளடக்கப்படவேண்டும்.

அத்தோடு படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவித்தல், தமிழர் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர் மாணித்தல், மீள்குடியேற்றம், நிலையான வாழ்வாதாரம் உள் ளிட்ட நடவடிக்கைகளைத் திட்டமிட்டு முன்னெடுப்பதற்கு சர்வ தேச அனுசரணையுடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஐ.நா நிபுணர்கள் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இடைக்கால உள்ளகக் கட்டமைப்பொன்று நிறுவப் படவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# குடியரசுக் கட்சியின் தலைவர் சுட்டுக் கொலை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடும் கண்டனம்

12.09.2025

அமெரிக்காவில் குடியரசுக் கட்சி ஆட்சி நடத்தி வருகிறது. ஆளும் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சார்லிகிக், அமெரிக்க அதிபர் தேர்தலின்போது குடியரசு கட்சிக்கு ஆதரவாக மிகத் தீவிரமாக பிரச்சாரம் செய்தார்.

கடந்த 10-ம் தேதி அமெரிக்காவின் யூட்டா மாகாணம், ஓரமில் உள்ள யூட்டா பள்ளத்தாக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில் சார்லி கிக் பங்கேற்றார். அப்போது மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் அவர் உயிரிழந்தார். இது குறித்து அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறி யிருப்பதாவது: சார்லி கிக்கின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறேன். கடந்த ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது என் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினேன். இடதுசாரி அரசியல் வன்முறை அதிகரித்து வருகின்றன.

இந்த வன்முறையால் அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்து வரு கின்றனர். இதை தடுத்து நிறுத்த வேண்டும். அமெரிக்க நீதி பதிகள், பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் வலதுசாரி சிந் தனை கொண்டவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது மிகக் கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் எச்சரித் துள்ளார்.



# பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வை ஏற்படுத்தும் "நியூயோர்க் பிரகடனம்"

13.09.2025

பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பது மற்றும் இரு-மாநில தீர்வை செயல்படுத்துவது குறித்த நியூ யோர்க் பிரகடனத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பொதுச் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை யில், காசா போருக்கு அமைதியான தீர்வை ஏற்படுத்தும் "நியூ யோர்க் பிரகடனம்" மீது வெள்ளிக்கிழமை (13) வாக்கெடுப்பு நடைபெற்றது.

வாக்கெடுப்பின் முடிவுகளின் படி, தீர்மானத்திற்கு ஆதரவாக 142 நாடுகள் வாக்களித்திருந்தன. எதிராக 10 நாடுகள் வாக்களித் திருந்தன. 12 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தன.

பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியாவால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவு, பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண "இரு- மாநில தீர்வை" (Two-State Solution) செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

இது காசா போரை முடிவுக்குக் கொண்டுவர கூட்டு முயற்சிகள் அவசியம் என்றும், அதன் மூலமே நியாயமான, நீடித்த தீர்வு சாத்தியம் என்றும் கூறுகிறது.

அதேநேரம், இந்தத் தீர்மானம், ஒக்டோபர் 7, 2023 அன்று இசுரவேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல்களைக் கண்டிக் கிறது.




ஹமாஸ் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்கவும், காசாவில் அதிகாரத்தைக் கைவிட்டு, ஆயுதங்களை பாலஸ்தீன அதிகாரசபையிடம் ஒப்படைக்கவும் கோருகிறது.

ஐ.நா.வின் தகவலின்படி, 2023 முதல் காசா மீதான இசுரவேலி யத் தாக்குதல்களில் 64,750-க்கும் அதிகமான பாலஸ்தீனி யர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள்.

அத்துடன் பட்டினியால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள் ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபாரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்

**-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -**



மிகவும் நவீனமான தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அறிவியலும் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சி கண்டு உலகத்தின் வளர்ச்சிப் போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்தி வருகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கின் தாக்கத்தால் முன்னேறிய நாடுகளின் சமூக, பொருண்மிய வாழ்வும் பிரமிக்கத்தக்க வகையில் மாற்றங்கண்டு வருகின்றது. இந்தப் புதிய யுகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது அறிவியல் தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால் மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்பு நோக்குகையில் எமது தேசத்தின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இதற்குப் பிரதான காரணி சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும் சக்தியையும் முடக்கி வைத்திருக்கின்றது.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித்துறையைச் சிதைத்துவிடச் சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முனைந்து வருகின்றது. சிங்கள மொழித்திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்கு காலம் தமிழரின் கல்வியைச் சீர் குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது, இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்தக் கல்வியழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்கள் காரணமாக எமது கல்வித்துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்குட்பட்டதாக, சில ஆக்க வேலைகளைச் செய்து வருகிறது. பெரிய தொரு போருக்கு முகங் கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடு தலை வேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சனையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலை பெற்று, நிலையான அமைதியும், உறுதியான அரசும் தோன்றும் பொழுதுதான் நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்கு கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித்துறையையும் சீரானமுறையில் சீரமைத்து, எமது நாட்டின் நலன் பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும். தேசியக் கல்வித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியும். அறிவியல், தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எமது நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும் விமோசனத்திற்கும் தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செய்வதாயின் நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். இதனால்தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சிமாக வரித்துக் கொண்டு நாம் போராடுகிறோம்.

இன்று நாம் ஒரு போர்ச்சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச்சூழலில், எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமாக சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன் மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை முன்னெடுத்து வருகின் றோம்.

(08.04.94 அன்று தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி விடுத்த அறிக்கையில் இருந்து)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# 'செம்மணி' நினைவாக ஒருபாடல்

குரல்

ஊருமற்றுப் பேருமற்று உப்புத்தரைக்குள்ளுறங்கும்
உறுவுகளுக் காகப் பாடுறோம் – கேட்க
யாருமற்றுப் புதைகுழிக்குள் போனவருக்காக இசைப்
பாடலொன்றை நாங்கள் பாடுறோம்.

பல்லவி

செம்மணி மீதெழுந் தோலமிடும் சின்னச்
சிட்டுக் குருவியே கூவி அழு – அந்த
“வெண்புறாப் பாடலை” தந்தவர் வீட்டிலெம்
வேதனைப் பாடலைத் தூவி விடு.

சரணம்

சின்னச்சின்ன ஆசைகளைக் கண்ணிற் சுமந்தோடிவந்து
செம்மணியிற் புதைந்ததேனம்மா? – இந்த
வண்ணவண்ணக் கனவுகளை வாசலிலே புதைத்துவிட்டு
வாக்களிக்கச் சொன்னதாரம்மா?

நாய்கதறத் தாய்கதற நம்பிவந்த பேய்குதற
நள்ளிரவில் நடந்ததென்னம்மா? – அந்த
வாய்கள்திறந் தலறும்போது யாரருகில் இருந்ததென்று
சொல்லும்வாய்கள் இல்லைத்தானம்மா

காலப்பெருவெளியி லெங்கள் ஓலக்குரல் தமிழனென்ற
காரணத்தால் தொடர்வதேனம்மா – இது
ஆளவந்தோர் அமைதிப்புறா ஆனதென உலகம்நம்பும்
காலம்வரை நீளும் தானம்மா.

புதுவை இரத்தினதுரை




# வவுனியாவை அதிரவைத்த புலிகளின் மும்முனைத் தாக்குதல் [09.09.2008]



**வவுனியாவை அதிர வைத்த புலிகளின் மும்முனைத் தாக்குதல் – [சிறீலங்கா இராணுவத்தின் வன்னி கூட்டுப்படைத் தலைமையகம் மீதான கரும்புலிகள் தாக்குதல்]**

வான் புலிகள் மற்றும் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி ஆகியவற்றின் துணையுடன் 09.09.2008 அன்று இப்பத்து கரும்புலி வீரர்களும் வன்னி கூட்டுப்படைத் தலைமையகத்திற்குள் ஊடுருவி சிறீலங்கா படையினருக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்திருந்தனர்.

வவுனியாவில் நகரின் தென்பகுதியில் வன்னிப் பிராந்திய இராணுவத் தலைமையகம், விமானப்படைத் தளம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்த ஜோசெவ் படைத்தளத்தின் மீது புலிகள் நடத்திய மூன்று முனைத் தாக்குதல் படைத் தரப்புக்களை அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

கடந்த செவ்வாயன்று (09) அதிகாலை வேளையில் புலிகளின் கரும்புலிக் கொமாண்டோக்கள் வன்னிப் படைத்தலைமையகத்தினுள் புகுந்து நடத்திய தாக்குதல், அதற்குத் துணையாக புலிகளின் வான்படை நடத்திய குண்டுவீச்சு, கிட்டு பீரங்கிப் படையணி நடத்திய அகோர ஆட்டிலறித் தாக்குதல் என்பன வவுனியாவையே கிலிகொள்ள வைத்தது.

திங்கட்கிழமை நள்ளிரவுடன் நிலவு மறைந்துவிட இருள் கவ்விக் கொண்டது. அந்த இருளோடு இருளாக கரும்புலிக் கொமாண்டோ அணியொன்று வவுனியா நகருக்குத் தென்புறமாக இருந்த மறைவிடங்களில் இருந்து புறப்படத் தயாரானது.

விமானப்படையின் சீருடை, தலையில் விசேட படைப்பிரிவு கொமாண்டோக்கள் கட்டுவது போன்று கறுப்புத்துணி கட்டிக் கொண்டு இலங்கை விமானப்படையின் ரோந்துக்காவல் அணி போன்று பதுங்கிப் பதுங்கி கரும்புலிக் கொமாண்டோக்கள் நகரத் தொடங்கினர்.

வன்னிப் படைத்தலைமையகமும், விமானப் படைத் தளமும் அருகருகாக ஒரே வேலியால் பிரிக்கப்பட்டு நடுவே ஒரு வீதி மட்டும் இருந்தது. அந்த வீதியும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டிருந்தது. இந்தத் தளத்தின் தென்பகுதி ஈரற்பெரியகுளத்தை அண்டிய காடுகள் சார்ந்த பிரதேசமாகும்.

இந்த தென்புற வேலியைக் கடந்து வன்னிப்படைத் தலைமையகத்தினுன் கரும்புலிக் கொமாண்டோக்கள் இரகசியமாகப் பிரவேசித்தனர். அதிகாலை 3.05 மணியளவில் செய்மதித் தொலைபேசி ஊடாக வன்னியில் இருந்த புலிகளின் விசேட நடவடிக்கைப் பணியகம் ஒன்றிலிருந்து கிடைத்த கட்டளையை அடுத்து கரும்புலிக் கொமாண்டோக்கள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

வன்னிப் படைத் தலைமையக வளாகத்திலேயே விசேட படைப்பிரிவின் பிரிகேட் தலைமையகமும் அமைந்துள்ளது. அதைக் கடந்து சென்றே விமானப் படைத்தளத்தினுள் நுழைய வேண்டியிருந்தது. விசேட படைப்பிரிவுத் தலைமையகத்துக்கும் விமானப்படைத் தளத்துக்கும் இடைப்பட்ட தூரம் வெறும் 200 மீற்றர்களேயாகும்.

உள்ளே நுழைந்த புலிகளின் பிரதான இலக்காக இருந்தது வன்னிப் படைத்தலைமையகத்தின் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுரம், விமானப் படைத்தளத்தில் இருந்த "இந்திரா" ரகத்தைச் சேர்ந்த இரு பரிமாண ராடர் கண்காணிப்பு நிலையம், தொலைத்தொடர்பு தொழில்நுட்ப ஆய்வு நிலையம், விமான எதிர்ப்பு பீரங்கி நிலைகள் என்பனவேயாகும்.

வவுனியா விமானப்படைத்தளத்தில் இரவில் விமானங்கள் எதுவும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதில்லை.

அது புலிகளுக்கும் நன்குதெரிந்திருக்கும். கரும்புலி அணி விசேட படைப்பிவுத் தலைமையகத்தைக் கடந்தே விமானப் படைத் தளத்தினுள் பிரவேசிக்க வேண்டியிருந்தது. ஆனால் விசேட படைப் பிரிவு கொமாண்டோக்கள் உயர்ந்த பட்ச விழிப்பு நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

சண்டையைத் தவிர்த்துக் கொண்டு விமானப் படைத்தளத்தினுள் செல்வது சாத்தியமான விடயமாக இருக்காததால் விசேட படைப்பிரிவு கொமாண்டோக்களுடன் கரும்புலிக் கொமாண்டோக்கள் சண்டையை தொடக்கினர்.

விமானப்படைத்தளத்தின் எல்லை வேலியை சண்டையிட்டபடியே கரும்புலிகள் நெருங்கினர். அப்போது படையினரின் கவனத்தைத் திசை திருப்பி கரும்புலிகளுக்குப் பாதை அமைத்துக் கொடுக்கும் நோக்கில் கேணல் கிட்டு பீரங்கிப் படையணியும் தாக்குதலை ஆரம்பித்தது.

ஓமந்தைக்கு அப்பால் உள்ள புளியங்குளம், சேமமடுப் பகுதிகளில் மூன்று வெவ்வேறு இடங்களில் நிறுத்தப்பட்ட புலிகளின் 130மி.மீ ஆட்டிலறிகள் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தன. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கரும்புலிகளில் சிலர் விமானப்படைத்தளத்தை நெருங்கிச் சென்றனர்.

கரும்புலிக் கொமாண்டோக்களில் ஒருவர் எம்.பி. எம்.ஜி. ரக இயந்திரத் துப்பாக்கியையும், இருவர் ஆர்.பி.ஜி.களையும், ஒருவர் 40மி.மீ கிரனேட் லோஞ்சரையும், ஆறு பேர் T56 துப்பாக்கிகளையும் வைத்திருந்தனர். அதைவிட கண்ணிவெடிப் பிரதேசத்தைக் கடந்து செல்லவும் தடைகளை உடைக்கவும் பெங்களூர் டொபிடோக்களும் அவர்களிடம் இருந்தன.

விமானப்படைத் தளத்தின் எல்லையை அடைந்த கரும்புலிகளுக்கு அங்கிருந்து மேலும் எதிர்ப்புக் கிளம்பியது.

இதற்கிடையில் எல்லை வேலியில் இருந்தவாறே கரும்புலி ஒருவர் தொலைத்தொடர்பு கோபுரத்தை இலக்கு வைத்து ஆர்.பி.ஜியால் தாக்குதல் நடத்தினார். மற்றொருவர் விமானப்படையின் கட்டுப்பாட்டுக் கோபுரத்தைக் குறிவைத்து தாக்கினார். அதனைத் தொடர்ந்து தொலைத்தொடர்பு தொழில்நுட்ப ஆய்வுப் நிலையம், "இந்திரா" ராடர் கண்காணிப்பு நிலையம் ஆகியவற்றின் மீதும் ஆர்.பி.ஜி, கிரனேட் லோஞ்சர்களால் கரும்புலிகள் தாக்குதலை நடத்தினர். அத்துடன் எம்.பி.எம்.ஜி. துப்பாக்கி முக்கிய இலக்குகளைக் குறிவைத்து அவ்வப்போது தாக்கியதுடன் விசேட படைப்பிரிவு மற்றும் விமானப் படையினரின் எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டிருந்தது.

அப்போது வன்னிப் படைத் தலைமையகம் அதியுச்ச விழிப்பு நிலையில் இருந்ததுடன், சிறப்புப் பயிற்சி பெற்ற விசேட படைப் பிரிவு கொமாண்டோக்களே பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். இந்த சண்டை ஆரம்பித்ததுமே குறைந்த எண்ணிக்கையான கரும்புலிகளை அவர்கள் சுற்றிவளைத்து மடக்க எத்தனித்தனர்.

அதேவேளை கிட்டு பீரங்கிப் படையணி தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருந்த ஆட்டிலறித் தாக்குதல் உச்சமடையத் தொடங்கியது.

படையினரிடமுள்ள ஆட்டிலறிகளின் இருப்பிடத்தைக் கண்டறியும் ராடர்களின் கண்களில் மண்ணைத் தூவும் நோக்கில் புலிகள் தமது ஆட்டிலறிகளை அடிக்கடி இடம்மாற்றிக் கொண்டு தாக்குதலைத் தொடர்ந்தனர்.

இந்தநிலையில் புலிகளின் மூன்றாவது களம் திறக்கப்பட்டது. சரியாக 3.26 மணியளவில் முல்லைத்தீவு வான்பரப்பில் அடையாளம் தெரியாத பொருள் ஒன்றின் பறப்பை வவுனியா ராடர் நிலையத்தின் கண்காணிப்புக் கருவி பதிவு செய்தது. அது புலிகளின் விமானம்தான் என்பதை ராடர் நிலைய அதிகாரிகள் உடனடியாகவே புரிந்து கொண்டனர். ஏற்கனவே அனுராதபுர விமானப்படைத் தளம் மீதான தாக்குதலின் போதும் புலிகள் விமானத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

வவுனியா விமானப் படைத்தளத்தின் நடவடிக்கை பணியகத்தில் அதன் பொறுப்பதிகாரியான ஸ்குவாட் ரன் லீடர் சஞ்சய அதிகாரி கடமையில் இருந்தார். ராடர் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் புலிகளின் விமானம் பறப்பது பற்றிய தகவலை அவருக்குத் தெரியப்படுத்தினர். அவர் உடனடியாக விமானப்படைத் தலைமையகத்தின் நடவடிக்கைத் தலைமையகத்தில் இருந்த பணிப்பாளர் எயர் மார்ஷல் ஹர்ஷா அபேவிக்கிரமவுக்கு அறிவித்தார்.

இந்தநிலையில் கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தை உசார்படுத்திய விமானப்படை நடவடிக்கை பணியகம், நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள கேந்திர நிலைகளை உசார்படுத்தியது. இந்த நிலையில் அதிகாலை 3.31 மணியளவில் மற்றொரு விமானத்தின் பறப்பும் வவுனியாவில் இருந்த ராடரில் பதிவானது.

அடுத்த 5 நிமிடங்களில் புலிகளின் விமானங்கள் வவுனியா வான்பரப்பைத் தொட்டன.

அப்போது வவுனியா மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் இருந்த இராணுவ, விமானப்படைத் தளங்கள், முகாம்






களில் இருந்த அனைத்துப் பீரங்கிகள், துப்பாக்கிகளும் வானை நோக்கி குண்டுகளைக்கக்கின.

படையினரின் குண்டுகள் புலிகளின் விமானங்களைத் தேடி, வானத்தில் கோடு கிழித்துக் கொண்டிருக்க, புலிகளின் விமா னங்கள் தாக்க வேண்டிய படைநிலைகளை இனங்கண்டு அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசி விட்டுச் சென்றன.

வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வன்னிப் படைத் தலைமை யகத்தின், விசேட படைப்பிரிவின் பிரிகேட் தளபதி கேணல் நிர்மல் தர்மரட்ணவின் வசிப்பிடத்தில் விழுந்தது. அப்போது அவர் விடுமுறையில் இருந்தார். அத்துடன் அந்தக் குண்டு ஈர மாகக் கிடந்த நிலத்தில் புதையுண்டு போனதால் வெடிக்க வில்லை.

புலிகள் விமானத்தில் இருந்து வீசிய குண்டுகள் அனைத்தும் வன்னிப்படைத் தலைமையகத்தின் மையப்பகுதிகளிலேயே விழுந்தன.

ஒரு குண்டு "இந்திரா" ராடர் கண்காணிப்பு நிலையத்தை சேதப் படுத்தியது. மற்றொன்று அதிகாரிகள் விடுதியையும் உணவகப் பகுதியையும் சேதப்படுத்தியது. மற்றொன்று வன்னிப்படைத் தலைமையகக் கட்டடத்தில் விழுந்து வெடித்தது புலிகளின் விமானங்கள் 6 நிமிடங்கள் வவுனியா வைக்கலக்கிவிட்டு வேறு வேறு திசைகளில் பிரிந்து சென்றன. ஒன்று இரணை மடுப் பக்கமாகச் சென்றது. மற்றது முல்லைத்தீவுப் பக்கமாகச் சென்றது.

இந்தநிலையில் புலிகளின் வான் தாக்குதலைச் சமாளிக்கும் நோக்கில் 24 மணிநேரமும் தயார் நிலையில் வைக்கப்பட் டிருந்த கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் இருந்து, புலி களின் விமானங்களை இடைமறித்துத் தாக்கும் விமானங் களை அனுப்பிவைக்குமாறு விமானப்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் எயார் மார்ஷல் ஹர்ஷா அபேவிக்கிரம 5 ஆவது ஸ்குவாட்ரனின் கட்டளை அதிகாரிக்குப் பணித்தார்.

விமானப்படையின் 5ஆவது ஸ்குவாட்ரனில் தான் சீனத் தயாரிப்பு (F-7-G) எவ்.7ஜி ரகத்தைச் சேர்ந்த இடைமறிப்பு போர் விமானங்கள் இருந்தன.

புலிகளின் விமானங்கள் ராடரில் தெரிந்த 8ஆவது நிமிடத்தில் அதிகாலை 3.34 மணியளவில (F-7-G) இடைமறிப்பு போர் விமானங்கள் மின்னல் வேகத்தில் புறப்பட்டுச் சென்றன.

வன்னி வான்பரப்பை எட்டிய F-7 ஜெட் போர் விமானங்கள் சுற்றிச் சுழன்று வட்டமடித்து புலிகளின் விமானங்களைத் தேடின.

அதிகாலை 4 மணியளவில் இந்த விமானங்கள் புதுக்குடியிருப் புப் பகுதிகளிலும் இரணைமடுவிலும் தாக்குல்களை நடத்தின. கூடவே தரைத்தாக்குதலுக்கு 12ஆவது ஸ்குவாட்ரனைச் சேர்ந்த மிக் 27 (MiG-27) ஜெட் போர் விமானங்களும் பயன் படுத்தப்பட்டன.

விமானப்படையின் எவ்7 விமானம் ஒன்றின் விமானி முல்லைத்தீவுக்கு மேற்காக முள்ளியவளையை அண்டிய வான்பரப்பில் சென்று கொண்டிருந்த புலிகளின் விமானத்தை அடையாளம் கண்டு, வானில் இருந்து வானுக்கு ஏவும் ஏவு கணையைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாகவும், அதி காலை 3.56 மணியளவில் புலிகளின் விமானம் தீப்பிளம்பாக முள்ளியவளைக் காட்டுப்பகுதியில் விழுந்ததை விமானி பார்த்தாகவும் படைத்தரப்பு கூறுகிறது.

அத்துடன் மணலாறு களமுனையில் உள்ள 59ஆவது டிவிசன் துருப்பினரும் சிவப்பும், மஞ்சளுமான தீப்பிளம்பு ஒன்று வானத் தில் இருந்து விழுவதை அவதானித்ததாக படத்தரப்பு தெரிவித் துள்ளது.

ஆனால் புலிகள் தமது விமானங்கள் தாக்குதல் நடத்தி விட்டுப் பாதுகாப்பாகத் தளம் திரும்பி விட்டதாக அறிவித்துள்ளனர். இதற் கிடையே புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தி முடித்த பின்னரும் வன்னிப்படைத் தலைமையகத்தின் மையப் பகுதி களில் சண்டைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. ஆட் டிலறி ஷெல்கள் தொடர்ச்சியாக வந்து விழுந்து கொண்டிருந் தன. பெரும்பாலான ஷெல்கள் வன்னிப்படைத் தலைமையகப் பிரதேசத்தில் உள்ள கட்டடங்கள், படைநிலைகளில் விழுந்து சேதங்களை ஏற்படுத்தின. விடிகாலை 5.30 மணி வரையிலும் இந்தத் தாக்குதல் நீடித்தது.

புலிகளின் ஆட்டிலறித் தாக்குதலை முறியடிக்க படையினரும் பல்குழல் பீரங்கிகள் மற்றும் 130மி.மீ, 122மி.மீ, 152மி.மீ ஆட்டி லறிகளைப் பயன்படுத்தி ஓமந்தைக்கு வடக்காக உள்ள பிர தேசத்தின் மீது செறிவான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஆறு கரும்புலிகள் படையினருடனான சண்டைகளின் போதும், நால்வர் தமது உடலில் பொருத்தியிருந்த "சார்ஜர்" எனப்படும் குண்டுகளை வெடிக்க வைத்து தாக்குதல் நடத்தியும் உயி ரிழந்த பின்னரே மோதல்கள் முடிவுக்கு வந்தன.

அத்துடன் புலிகளின் ஆட்டிலறித் தாக்குதல்களும் முடிவுக்கு வர, வன்னிப் படைத்தலைமையகப் பிர தேசத்துக்குள் தேடுதல் களை ஆரம்பிக்க வன்னிப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெய சூரிய உத்தரவிட்டார்.

வவுனியா நகரில் எங்கும் பீதி தொற்றிக் கொண்டிருந்தது. பொது மக்களின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டு தாக்குதலுக்குச் சென்ற புலிகள் எவரும் தப்பிச் செல்லாத வகையில் சுற்றி வளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தேடுதல் களின் போது கரும்புலிகள் 10 பேரின் சடலங்கள் கண்டு பிடிக் கப்பட்டன. அவர்களின் ஆயுதங்களும் பெரும்பாலும் ரவைகள், குண்டுகள் தீர்ந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன.

சில புலிகள் தப்பிச் சென்றிருக்கலாம் என்று படைத்தரப்பு சந் தேகிக்கிறது. முன்னர் 11 புலிகளின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட் டதாகப் படைத்தரப்பால் கூறப்பட்டது. ஆனால் பின்னர் 10 சட லங்களே புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. தாக்குதல்களில் கொல்லப்பட்ட பத்து கரும்புலிகளும் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்துடன் அவர்கள் பற்றிய விபரங்களைப் புலிகள் அன்று நண்பகலே வெளியிட் டிருந்தனர்.


லெப். கேணல் மதியழகி தலைமையிலான 5 பெண் கரும் புலிகளும், லெப். கேணல் விநோதன் தலைமையிலான 5 ஆண் கரும்புலிகளும் இந்தத் தாக்குதலில் பங்கேற்றிருந்தனர்.

கரும்புலிகளுக்கு வழிகாட்டிச் சென்ற வேவுப் புலிகள் சிலர் தாக் குதலை அடுத்துத் தப்பியிருக்கும் வாய்ப்புகளை இராணுவத் தரப்பு நிராகரிக்கவில்லை. தாக்குதலின் பின்னர்












மீட்கப்பட்ட பொருட்களில் 9 மி.மீ பிஸ்டல் ரவைகளும் அடங்கியிருந்தன. ஆனால் கரும்புலிகள் எவரிடத்தில் இருந்தும் பிஸ்டல் துப்பாக் கிகளோ அல்லது இந்த ரவைகள் பயன்படுத்தக் கூடிய வேறு எந்தத் துப்பாக்கிகளோ கைப்பற்றப்படவில்லை.

தாக்குதலுக்குப் பயன்படுத்தாத எந்த ஆயுதத்துக்கும் புலிகள் ரவைகளைக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள் என்பதால் சில வேவுப் புலிகள் தப்பியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் விமானப்படையின் ராடர் கண்காணிப்பு நிலையம், தொலைத்தொடர்பு கோபுரம், விமான எதிர்ப்பு ஆயுதம், தொலைத்தொடர்பு தொழில் நுட்ப ஆய்வகம், வெடி பொருள் களஞ்சியங்கள் என்பன அழிக்கப்பட்டதாகவும், 20 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டு, பலர் படுகாய மடைந்திருப்ப தாகவும் புலிகள் அறிவித்தனர்.

அதேவேளை ராடர் நிலையம் சிறிய சேதத்துடன் தப்பிவிட்டதாக ஒரு சந்தர்ப்பத்திலும், எந்த சேதமும் அடையவில்லை என்று இன்னொரு சந்தர்ப்பத்திலும் படைத்தரப்பு தகவல்களை வெளி யிட்டது.

அதேவேளை புலிகளின் ஆட்டிலறித் தாக்குதலில் தலைமை யகக் கட்டடங்கள் பலவும் சேதமுற்றதாகவும் 12 இராணுவத் தினரும், 1 பொலிஸ் கான்ஸ்டபிளும் கொல்லப்பட்டதுடன், 15 படையினரும், 9 பொலிசாரும், 7 விமானப்படையினரும் காய மடைந்தனர் என்றும் படைத்தலைமை அறிவித்துள்ளது.

புலிகள் இந்தத் தாக்குதலின்போது 80இற்கும் அதிகமான 130 மி.மீ ஆட்டிலறி ஷெல்களை ஏவியதாகப் படைத்தரப்பு தெரிவித் துள்ளது. புலிகள் 130மி.மீ ஆட்டிலறி ஷெல்களை பெருந் தொகையில் ஏவியிருப்பது அவர்களிடம் போதியளவு ஷெல்கள் கையிருப்பில் இருப்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

10 கரும்புலிகளை இழந்து, இந்தத் தாக்குதலின் மூலம் படைத் தரப்புக்கு புலிகள் ஏற்படுத்திய பௌதிக சேதங்களின் அளவு குறித்து குறைத்தே மதிப்பிடப்படுகிறது. இருப்பினும் படைத் தரப்புக்கு ஏற்படுத்தியிருக்கின்ற நெருக்கடி மற்றும் அழுத்தங் களின் அளவு அதிகமானது.

புலிகள் வலுவிழந்து பலமிழந்து போய்விட்டனர். அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்று கூறி வந்தவர்களுக்கு மூன்று வழிகளில் புலிகள் நடத்திய தாக்குதல் பல்வேறு நெருக்கடிகளை யும் கொடுத்திருக்கிறது.

"கிளிநொச்சியை நெருங்கிவிட்டதாகக் கூறுகிறீர்கள். ஆனால் புலிகள் பீரங்கி மூலமும், தரைவழியாகவும், வான்வழியாகவும் வந்து வவுனியாவில் தாக்கி ராடரை அழித்துள்ளனர்.

படைத்தளத்தை நாசப்படுத்தியுள்ளனர். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று அன்றைய தினமே ஐ.தே.க.வினர் நாடாளுமன்றத் தில் கேள்வி எழுப்பும் அளவுக்குப் புலிகளின் தாக்குதல் தாக்கம் நிறைந்ததாக இருந்தது புலிகள் வவுனியா வுக்குள் வந்து எப்படித் தாக்குதல் நடத்தினர் என்ற விசாரணை யும் ராடர் நிலையத்தின் இருப்பிடத்தை எப்படி அறிந்து கொண்டு உள்ளே வந்தனர் என்பது குறித்தும் இப்போது வெவ்வேறு மட்டங்களில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

நெடுங்கேணி வெடிவைத்தகல்லு வழியாக மண லாறின் யக்கவெள பிரதேசத்துக்குள் ஊடுருவி வவுனியாவின் ஆசிக் குளம், ஈரப்பெரியகுளம், மூன்றுமுறிப்பு, சமளங்குளம் வழி யாகப் புலிகள் வந்திருக்கலாம் என்று சந்தேகங்கள் எழுந்துள் ளன. என்னதான் படைத்தரப்பு இந்தத் தாக்குதலை முறியடித்து விட்டதாகக் கூறினாலும், புலிகள் படைத்தளத்தினுள் நுழைந்த பின்னரே அது பற்றி அவர்களால் அறிந்து கொள்ள முடிந் திருக்கிறது. இது பாதுகாப்புக் குறைபாடுகளின் உச்சமாகும்.

வன்னியில் இருந்து அனுப்பப்பட்ட கரும்புலிகள் அணி எந்தப் பிரச்சினையும் இன்றி வன்னிப் படைத் தலைமையகத்தினுள் நுழைகின்ற அளவுக்குப் படைத் தரப்பின் பாதுகாப்பு பலவீன மாக இருந்திருக்கிறது எனச் சொல்வதைவிட, புலிகள் மிகவும் துல்லியமான வேவுத்தகவல்களைத் திரட்டி பாதுகாப்பாக ஊடு ருவியிருக்கிறார்கள் என்று சொல்வதே பொருத்தம் வன்னிக் கட்டளை மையத் தாக்குதலில் ராடார் நிலையம், ஆயுதக் களஞ்சியம், தொலைத்தொடர்பு கோபுரம் தாக்கியழிப்பு வானூர் திகள் பாதுகாப்பாக தளம் திரும்பியதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்

வவுனியாவில் அமைந்துள்ள சிறீலங்காப் படையினரின் வன் னிக் கட்டளை மையத்தில் அமைந்துள்ள ராடார் நிலையம் தமி ழீழ விடுதலைப் புலிகளால் முற்றாகத் தாக்கியழிக்கப்பட் டுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.05 மணி யளவில் வவுனியா கட்டளைப் பீடத்தினுள் ஊடுருவிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்பு கரும்புலி அணி ஒன்று ராடர் நிலையத்தை தாக்கிய அழித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கரும்புலி சிறப்பு அணியினர் வவுனியா வில் அமைந்துள்ள வன்னிக் கட்டளை மையம் மீது தாக்கு தலைத் தொடுத்துள்ளனர். கரும்புலி அணியினருக்கு ஆதர



வாக கேணல் கிட்டு பீரங்கிப் படையணியினரால் செறிவான ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன் விடுதலைப் புலிகளின் வான்படையினர் கட்டளை மையம் மீது துல்லியமாக வான்வழித் தாக்குதல்களை நடத்தி யுள்ளன.

வன்னிக் கட்டளை மையத்தில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு கோபுரம், ஆயுதக்களஞ்சியம், தொழில்நுட்ப ஆய் வகம், வானூர்தி எதிர்ப்பு ஆயுதமும் முற்றாக கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

இதன்போது சிறீலங்காப் படையினர் தரப்பில் 20 பேர் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமாக அறிவித் துள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட வானூர்திகள் பாதுகாப்பாக தளம்திரும்பிய தாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். வன்னிக் கட்டளை மையம் மீது வான் தாக்குதலை நடத்திவிட்டுத் திரும்பிய இரு வானூர்திகளும் பத்திரமாக தளம் திரும்பியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அன்றைய சமகால ஆய்விலிருந்து...
எழுத்துருவாக்கம்:சுபத்ரா.




# திருமலைப் படுகொலைகள் யூன், ஒகஸ்ட், செப்டம்பர் – 1985

இம்மாதங்களில் திருமலை மாவட்டத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985 இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்றடே ரீவ்யூ நாளேடு 21.12.1985 இன்று வெளியிட்ட செய்தியில் இத்தொகை முன்னூற்று எண்பத்துமூன்று எனக் கூறியுது. ஜெரமி கிளிங் என்கிற செய்தியாளர் சாம்பல் தீவில் பலர் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென டெல்லி நீயூசில் தகவல் வெளியிட்டிருந்தார்.

1985 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக்கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மகிப் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆகாய வழியாக உலங்கவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சென்ரல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற்படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழாகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொன்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழரார்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளி நாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டனர்.

# பருத்தித்துறை திக்கம் படுகொலை – 16.09.1984

16.09.1984 அன்று நாலு சிறீலங்கா படையினர் ஒரு கண்ணணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் சிறீலங்கா பொலிசார் 16 பொதுமக்களை தாக்கிக்கொன்றனர். அதோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள ஹாட்லிக்கல்லூரி நூல் நிலையமும் அதன் விஞ்ஞான பரிசோதனை அறைகளும் பொலிசாரால் தீமூட்டி எரிக்கப்பட்டது.



# நிலாவெளி படுகொலை – 16.09.1985

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது. திருகோணமலை நகரிலிருந்து பத்த கி. மீ. தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது.

16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவமும் ஊர்காவற்படை யினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து. அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டத்தில் அனைவருமே உயிரிழந்தனர்.

**16.09.1985 நிலாவெளிப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. முருகேசு தங்கராசா (46)
2. கச்சுமுகைதீன் முகம்மது காலித் (33)
3. வேலு சிவசுந்தரம் (24)
4. வேலு சிதம்பரநாதன் (25)
5. செல்லத்தம்பி நிர்மலானந்தன் ( 26)
6. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் (20)
7. அந்தோனிப்பிள்ளை கபிரியேல் (-)
8. இராஜேந்திரன் (29)
9. செய்யதுபுகாரி அப்துரசாக் (32)
10. கந்தையா கந்தசாமி (28)
11. கணபதிப்பிள்ளை சௌந்தரராஜன் (28)
12. செல்லத்தம்பி ரட்ணராஜா (41)
13. நேசதுரை றெறன்ஸ் (19)
14. கதிர்காமத்தம்பி கனகசபை (39)
15. முகமட் காசிம் முகமட் ராசிக் (31)
16. தாமோதரம் பிள்ளை நேமிநாதன் (19)
17. வல்லிபுரம் தருமலிங்கம் (18)
18. தர்மதாஸ் உதயநேசன் (19)
19. சுப்பிரமணியம் காளிராஜா (20)
20. செல்வவினாயகம் ஜெயகோபன் (26)
21. இராசையா துரைநாயகம் (36)
22. தாமோதரம்பிள்ளை சண்முகதாசன் (24)
23. மாமாங்கம் ரஞ்சநேசன் (21)
24. அபுசாலிபு அப்துல்நாயீர் (21)
25. சித்திரவேல் மாரிமுத்து (53)
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் (20)
27. சிவபாலன் கெங்காதரன் (34)
28. பொன்னுத்துரை பார்த்தீபன் (34)
29. யோகராசா (27)
30. இரத்தினசாமி பார்வதி (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மண்டைதீவில் கைது செய்து காணாமற் போனவர்கள் 25.08.1990 – 23.09.1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசெயலகப் பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற்துறையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப்புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர்தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் (ஈ.பி.டி.பி) சேர்ந்து மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரோ குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:

"கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி. செயலகத்திற்குச் சென்று திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். ஜி அப்போது அவர் "அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அநுராதபுரம் போய்வந்து சொல்கிறேன். ஜி என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படி கேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம்.

அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இருந்த திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடு தொடர்பு கொண்டார்களா" என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப் பகுதி பிரதி அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் அவர்களும் திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்ட போது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன் பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப் பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார்.

14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக் குழு விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம்.

12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளை திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

**25.08.1990 – 23.09.1990 வரை மண்டைதீவில் கைது செய்து காணமற்போனவர்கள் விபரம்**

1. சூசைப்பிள்ளை செல்வநாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்தியபாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. றி. இருதயராசா (26)
16. றி. ஆரோக்கியநாதன் (23)
17. றி. அருள்நேசன் (22)
18. றி. யோகராசா (18)
19. றி. ஞானேந்திரன் (25)
20. றி. செல்வரட்ணம் (20)
21. றி. சுந்தரலிங்கம் (24)
22. றி. சாந்தலிங்கம் (20)
23. றி. சிமோன் (20)
24. றி. ராஜ்குமார் (32)
25. றி. ராதாகிருஸ்ணன் (-)
26. றி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கியராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்னதாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

**வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்**

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) - 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) - 25.05.1993
3. தாவீது பெஞ்சமீன் (25) - 1992 ஓகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) - 1986
5. வி. பாலரஞ்சன் (39) - 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# மாத்தளன் படுகொலை 18.09.1993

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற்தொழிலையே நம்பியிருந்தனர். அத்தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரைகளையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்த தேவைகளை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இரந்தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்ட தூரம் சென்றே மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்ததுடன். மீனவர்களைக் கடலில் தாக்கியும் வந்ததர்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்தொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினர். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப் படையின் "உலங்கு வானூர்தி" அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்காவின் விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிகமான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத் தின் மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன் புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன. எங்கும் "ஐயோ" என்ற அவலக் குரலுடன் மக்கள் திக்குத்திசை யறியாது சிதறி யோடினர். மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ் விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானார்கள்.

நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத் திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**18.09.1993 மாத்தளன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இன்ரிகிறேஸ் ஜோசப் (31)
2. இம்மானுவேல் ஆனந்தராஜா (19)
3. பிரான்சிஸ் அருள்தாஸ் (23)
4. பிலிப்புதவராசா சுஜாத்தா (10)
5. பரமானந்தம் (40)
6. தம்பிராசா குணசிங்கம் (18)
7. தியாகராஜா கண்ணன் (16)
8. மரியதாஸ் அன்ரன் ஜெயபாலன் (32)
9. மரியதாஸ் அன்ரன் யேசுதாஸ் (30)
10. முத்தையா துரைசிங்கம் (45)
11. மரியதாஸ் இன்மானுவேல் ஆனந்தராசா (19)
12. டானியல்பிள்ளை பிலிப்புதவராசா (39)
13. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி (18)
14. யோசப் வினிற்றா கிறேஸ் பிரைற்றிக் (31)
15. யேசமார்க் அன்ரனிதாஸ் (29)
16. செல்லையா செல்வம் (கண்ணன்) (16)
17. சியாத்தா திலீப்மேரி (09)
18. சின்னப்பு அல்போன்ஸ் (22)
19. சங்கரசிவம் புலேந்திரன் (15)
20. சங்கரசிவம் சுரேந்திரன் (18

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. கந்தையா குமாரசாமி (45)
2. அன்னலிங்கம் சொர்ணலிங்கம் (37)

குறிப்பு: - இச்சம்பவத்திற் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# சாவகச்சேரி - சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு 28.09.1993

யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துள்ளது. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத் தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிர மடைந்தது. இதன்போது விமானங் கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்கு தலை நடத்தின.

அத்துடன், சிங்கள இராணுவத் தினர் நீண்டதூர எறிகணைத் தாக் குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன்விளை வாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் “உதயன் மரக் காலையில்” அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந் தது. 28.09.1993 அன்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப் பான இரண்டு “புக்காரா” விமானங் கள் இரு தடவைகள் வானில் வட் டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப் பத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக் காலையில் அமைக்கப்பட்ட காப் பகழிக்குள் சென்றனர். இவ் விமா னங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழ்ந்து வெடித்ததால், காப்பகழிக்குள்ளிருந்த குழந் தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந் தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட் டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை “உதயன் மரக்காலையில்” நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

**28.09.1993 அன்று சாவகச் சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சில் கொல்லப்பட் டடோர் விபரம்**

1. இரத்தினகோபால் சுதர்சன் (11)
2. நாகேஸ்வரி குருநாதன் (56)
3. கந்தையா செல்வராசா (40)
4. கணேசன் கௌசிகா (12)
5. பாலசுந்தரம் சந்திர சேகரம் (09)
6. பாலசுந்தரம் சுரேஸ் (12)
7. பாலசுந்தரம் ரதி (03)
8. தஸ்யனி பாலசுந்தரம் (02)
9. தங்கம்மா கணபதிப் பிள்ளை (56)
10. தங்கராசா சுசீலா (21)
11. மகேஸ்வரி செல்லையா (52)
12. அமுதலிங்கம் லச்சம்மா (53)
13. ஜெகதீஸ்வரன் ஜனனி (07)
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் (08)
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி (11)
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி (31)
17. கோபாலபிள்ளை சுதர்சன் (09)
18. கோபாலரத்தினம் சுபாஜினி (15)
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60)
20. தெய்வேந்தீரன் நாகேந் திரன் (19)
21. செல்வராசா யசோதா (18)
22. செல்வராசா சுஜாதா (16)
23. சுரேக்கா கோபால ரட்ணம் (09)
24. சின்னராசா நிறஞ்சினி (13)
25. சின்னராசா பிரபா (10)
26. சின்னராசா பிரபாலினி (10)
27. சின்னராசா பவானி (21)
28. ரட்ணகோபால் துஸ்யேந் திரன் (09)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விப ரங்களையும் பெறமுடிய வில்லை.

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் 29.09.1993

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத் தில் கொக்குவில் கிராமம் அமைந் துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன் னோடியாக இக்கிராமத்தில் நந்தா வில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைமபது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின் றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993 ஆம் ஆண்டு சிறீலங்கா விமா னப்படையாலும் மக்கள் படு கொலை செய்யப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8:00 மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணு வத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர் களைச் சுட்டதில் எஸ். சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச. ஊழியர்), கண்ணன் (ஆலய பூசகர்), குலேந்திரன் (A.G.A கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந் தனர்.

29.09.1993 காலை 10:00 மணி யளவில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” விமானம் ஆலயம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர். ஐந்து பேர் படுகாய மடைந்தனர்.



# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22









# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22





யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956 இல் திரு. வி. நாகநாதன் அவர்களின் முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில் யாழ். நாகர்கோயில் நாகேசுவரர் வித்தியாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ். நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஆறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாநூறு மாணவர்களைக்கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்ணேி, ஆழியாவளை, கட்டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர். 1993 ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (08), மனோகரதாஸ் மரியஜித் (10), ஜோன்பொஸ்கோ கார்மிளா (05) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாய மடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமாரட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையநாள் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் “நவரத்தினசாமி உமாதேவி” எல்லோரையும் கவரக் கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு “புக்காரா” விமானங்களிலிருந்து மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகை மண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த்தனையில் உல்லோராலும் பாராட்டப்பட்ட “நவரத்தினசாமி உமாதேவி” உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்தியசாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோயில் கிராமத்தைச் சேர்நத இருபத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பதைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள். அன்றைதாக் குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர்.

**இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச. சிறிவித்தியா கூறுகையில...**

“அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்து விட்டேன். குண்டு பாடசாலை வளாகத்திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண்டலமாக இருந்தது. எங்கும் ஒரே அழு குரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன அப்போது நான் அத்திமரத்தை பிட்டு எனக்கருகிலிருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிக்கொண்டு ஓடும் நோக்குடன் எழும்பமுயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் துக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுகுணமடைந்தேன்.”

**22.09.1995 அன்று யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராமநாதன் மேதினி (13)
2. இராமச்சந்திரன் சங்கீதா (14)
3. இராசரத்தினம் உமாகாந்தன் (16)
4. இராசரத்தினம் கவிதா (10)
5. இரவீந்திரராசா அமிர்தா (10)
6. உ.தர்சினி (12)
7. நாகமுத்து செல்தில்வேல் (15)
8. நவமணி மிதுரா (14)
9. நவரத்தினசாமி உமாதேவி (12)
10. குகசரவணைமலை தர்சினி (13)
11. கிருஸ்ணகோபால் தவசீலன் (13)
12. பூலோகராசா துஸ்யந்தி (13)
13. பாலச்சந்திரன் றெஜிதா (10)
14. த.சமித்தா (10)
15. தர்மலிங்கம் உசாநந்தினி (14)
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா (12)
17. தம்பிப்பிள்ளை கோபிதரன் (-)
18. மயில்வாகனம் கணநாதன் (13)
19. மகாலிங்கம் சண்முகவடிவேல் (16)
20. மார்க்கண்டு நாகலோசனி (10)
21. அன்ரன் மரிய மனோகரதாஸ் மரியறஜித் (09)
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் (08)
23. அல்போன்ஸ் அமலவிஜி (14)
24. யோன் பொஸ்கோ கார்மிலரா (04)
25. செல்வகுலசிங்கம் செல்வதி (17)
26. செல்வம் (16)
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி (11)
28. ராகவன் (16)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. தங்கவேலாயுதம் றேணுகாயினி (12)
2. அ.றோமியா (10)
3. அக்கினேஸ்திரேசா கலிமண்ட் (12)
4. அக்கினேஸ் திரேசா அகிலதாஸ் (06)
5. அருமைலிங்கம் தாட்சாயணி (13)
6. சி. நரோசினி (09)
7. சி. சாரதா (45)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.



# அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை – 17.09.2006

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன் குளம் உள்ளது. இந்த அணைக்கட்ட அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குப்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களக்கும். தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து தமிழ் முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேச செயலகல் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கு மிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்து வண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப் பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17 ஆம் நாள் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து தமிழ் முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள தமிழ் முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற் கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிகள், சிங்களவர்களுக்கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வரவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொட்ந்தும் தமிழ் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகின்றது.

**இச்சம்பத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்**

1. எம் அனுர்தீன் (15)
2. எம். நபார் (15)
3. எம். சமுதீன் (18)
4. எ.எம். பைசல் (19)
5. எல். அனிஸ் (19)
6. எம். ஜப்பர் (20)
7. எஸ்.எல். றிசாட் (-)
8. ஏ.எம். அஜ்மீர் (18)
9. எம். பைரூப் (19)
10. எம். ஐ. சியம் (-)

**காயமடைந்தவர்**

1. எம். மீரமுகைதீன் (55)

# கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் 27.09.1996

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலா் பிரிவில் உள்ளடங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக்கிராமமாகும், இங்கு பலர் கூலித்தொழிலிகளாவர். இந்தக் கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் இரண்டு “கிபிர்” விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின் சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழந்தனர்.

**இச்சம்வத்தில் தகப்பனையிழந்த விமலேஸ்வரி சம்பவம் பற்றி கூறுகையில்**

“1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றை தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபீர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்தி கிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்தீருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்த போது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது தெரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார், உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பா வின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இரு வரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி அலை வளவில் வைத்து இறுதிக்கிரியைகளைச் செய்தோம். அப்பா இல்லாததுடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்கு கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்கப் போய் உமியைப்பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருத்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல்லுப் பிடுங்கப் போனாற்தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்த விதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா அருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக் குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது.”

**இச்சம்பவத்தின் கணவனை இழந்த வைகுந்தவாசன் பரிமளா என்பவர் கூறிகையில்...**

“எனது கணவர் ஒரு ஓவியர், விளம்பரம் பலகைகள் வரைவது அவரது தொழில், கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபீர் விமானங்கள் சுற்றி குண்டு போட்டவுடனேயே நான் சந்திக்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்திய சாலைக்குச் செனன்றபோது அவர் உயிரிழந்துவிட்டார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்ட வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்க வில்லை. அக்கராயனுக்கு இடம் பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்து தான் இன்றும் சீவியம் நடத்துகின் றேன் என்றார்.”

**27.09.1996 அன்று கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசதுரை திருக்குமார் (20)
2. கந்தையா விஜயகுமாரி (31)
3. முத்துசாமி வைகுந்த வாசன் (39)
4. பெரியசாமி வேலு (61)
5. சிவனாண்டி ஜெனகாந் (15)

**காயமடைந்தவர்கள் விபரம்**

1. பொன்னையா ஜெயநாதன் (16)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free!
ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குப் பின்னர் மீண்டும் புத்தாக்கம் பெற்றிருக்கும் வட்டுக்கோட்டைத் துணவி சிவன் ஆலயம்

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றி வரும் திரு.க.ஜெகதீஸ்வரன் அவர்கள் 2013 காலப்பகுதியில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் வட்டுக்கோட்டைத் துணவி கிராமத்தில் பாழடைந்த ஆலயமும், அதன் பின்பக்கச் சுவரில் புரியாத எழுத்துப் பொறிப்புக்களும் இருப்பதாக எம்மிடம் கூறியிருந்தார். அதன் அடிப்படையில் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான செல்வி. பு.றாகினி. செல்வி வீ.சிவரூபி. திரு .ப கபிலன். திரு.வி.மணிமாறன் மற்றும் பல்கலைக்கழக தொல்லியல் விரிவுரையாளரான செல்வி சசிதா குமாரதேவன் ஆகியோருடன் இணைந்து இவ்விடத்தில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தோம். இந்த ஆய்வுக்கான ஒழுங்குகளைச் சங்கானை பிரதேச செயலாளர் தி.ரு. சோதிநாதன் அவர்களும். சங்கரத்தை கிராம உத்தியோகத்தர் திரு. சிவகுமார் அவர்களும் ஏற்படுத்தி தந்தனர். அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டு வந்த ஆலயமே இன்று பழமை மாறாத நிலையில் புனர்நிர்மானம் செய்யப்பட்டு தொல்லியல் திணைக்களத்தால் இலங்கையின் தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தப் படவுள்ளது. இதன் மூலம் 400 ஆண்டுகளுக்குப் பின்னர் வடஇலங்கையில் தலைநிமிர்ந்து நிற்கப்போகும் யாழ்ப்பாண இராசதானி கால முக்கிய மரபுரிமைச் சின்னம் என்ற பெயரை இவ்வாலயம் பெறுவது தமிழ் மக்களுக்கும். சிவ பக்தர்களுக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.





வடஇலங்கையில் வரலாற்றுத் தொன்மையும், பண்பாட்டுச் சிறப்பும் கொண்ட பிரந்தியங்களில் ஒன்றாக வலிகாமம் காணப்படுகின்றது. இலங்கையின் பூர்வீக மக்கள் குடியிருப்புக்களைக் கொண்டிருந்த முக்கிய இடங்களாக வலிகாமத்தில் உள்ள கந்தரோடையும், ஆனைக்கோட்டையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. கி.பி.13 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு பதிலாக வலிகாமம் என்ற பெயரே வடஇலங்கையின் முக்கிய பிராந்தியமாக பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும், தமிழ், சிங்களக் கல்வெட்டுக்களிலும் கூறப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாண அரசுகால நிர்வாகப் பிரிவில் வலிகாமமே பெரிய நிர்வாகப் பிரிவாகவும் இருந்துள்ளது. வடஇலங்கையில் ஐரோப்பியர் காலப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிய பிராந்தியமாக வலிகாமம் காணப்பட்டாலும் ஐரோப்பிய பண்பாட்டுக்கு எதிரான சுதேச பாரம்பரிய பண்பாட்டின் மீள் உருவாக்கம் தோன்றவும் வலிகாமம் காரணமாக இருந்துள்ளது. ஆயினும் கடந்த 30 ஆண்டுகால அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து வாழ்ந்த எம் மக்கள் மீளவும் தமது இருப்பிடம் திரும்பிய போது தமது இடப்பிடத்திற்கு முன்னர் தமது குலதெய்வத்திற்கான ஆலயத்தை மீளக்கட்டி அழகுபார்த்த பெருமைக்கு உரியவர்கள். அப்படியிருந்தும் வரலாற்றுப் பழமைவாய்ந்த துணவி கிராமத்தில் காணப்படும் சிவன் ஆலயமும், விநாயகர் ஆலயமும் யுத்த அனர்த்தத்திற்கு முன்னரே முழுமையாக அழிவடைந்திருந்தும் அவை ஏன் மீள்புனர்நிர்மாணம் செய்யப்படவில்லை என்பது அனைவருக்கும் ஆச்சரியமளிப்பதாக உள்ளது. இவ்வாலயங்கள் தோன்றிய காலம், தோற்றுவித்தவர்கள், இது சமாதி கோயிலா? அல்லது சிவனுக்குரிய தனி ஆலயமா? முழுமையாக ஆகம மரபில் கட்டப்பட்டதா? ஆகம மரபு சாராததா? ஏன் அழிவடைந்தது தொடர்பாக அங்கு வாழும் ஊர்ப்பெயவர்கள், சமயப்பெரியார்கள், மத குருமார், ஆலயங்கள் தொடர்பான வாய்மொழி வரலாற்றுக் கதைகள், தொல்பொருள் சார்ந்த நம்பகரமான சான்றுகள் என்பவற்றிற்கு இடையே வேறுபட்ட தகவல்களும், கருத்துக்களும் காணப்படுகின்றன. இவை எதிர்காலத்தில் மேலும் விரிவாக ஆராயப்படவேண்டியவை. இருப்பினும் இன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும் துணவி சிவன் ஆலயத்திற்கு தொன்மையான நீண்ட வரலாறு இருப்பதையும், அவ்வாலயம் யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச் சின்னமாக ஏன் பிரகடன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களையும் வெளிப்படுத்துவதை எமது கடமையாகக் கருதுகின்றோம்.


தென்னிந்திய ஆலயங்களின் தோற்ற காலத்தையும், அவற்றின் வரலாற்றையும் விஞ்ஞானபூர்வமாக எடுத்துக் கூறுவதற்கு ஆலயங்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் முக்கிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாண ஆலயங்களில் அதுவும் பழமையான ஆலயங்களில் அரிதாகத் தானும் இதுவரை கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் முதன்முதலாகத் துணவி சிவன் ஆலயத்தின் கிழக்குப்பக்க கர்ப்பக்கிரகச் சுவரில் கிரந்த எழுத்துப் பொறித்த கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான கிரந்தக் கல்வெட்டாகும். இதன் காலம் கி.பி.15 ஆம்-16 ஆம் நூற்றாண்டை அதாவது இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென இலங்கை, தமிழக கல்வெட்டு அறிஞர்கள் கணித்துள்ளனர். அப்படியானால் இவ்வாலயத்தை யாழ்ப்பாண இராசதானி காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

இக்கல்வெட்டில்தான் இவ்வாலயத்தின் பெயர் பிரகேஷ்வரன் எனக் கூறப்பட்டிருப்பது முக்கிய வரலாற்றுத் தகவலாகும். இடைக்கால இலங்கை, தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் ஆலயத்தின் பெயரைக் கல்வெட்டில் கூறும் மரபு இருந்துள்ளது. அவற்றில் சிவனை முக்கிய தெய்வமாகக் கொண்ட ஆலயங்கள் பலவற்றின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பிரகேஷ்வரன், பிரகதீஷ்வரர் என்பன இடைக்காலத்தில் சிவனைக் குறித்த முக்கிய பெயர்களாகும். அப்பெயர் துணவி சிவன் ஆலயக் கல்வெட்டிலும் இடம்பெற்றிருப்பது அதன் பழமைக்கு இன்னொரு சான்றாகும்.

இவ்வாலயம் அமைந்துள்ள இடம் துணவி என அழைக்கப்படுகின்றது. ஆனால் சுண்ணாகம் குமாரசாமி புலவரது 1889 ஆம் ஆண்டுக்குரிய ஊஞ்சல் பாட்டில் இவ்விடம் துணைவை என்றே கூறப்பட்டுள்ளது. இப்பெயர் பரந்த பிரதேசத்தில் உள்ள சிறிய நிர்வாக வட்டாரத்தைக் குறித்திருக்கலாம் என்ற கருத்தும் காணப்படுகின்றது. இப்பெயரே காலப்போக்கில் துணவி என்ற பெயராக மாற்றமடைந்திருக்கலாம். இப்பெயர் துணவியின் தொன்மையையும், தனித்துவத்தையும் அடையாளப் படுத்துவதாக உள்ளது.

இவ்வாலயம் ஏறத்தாழ 50 அடி நீளமும், 42 அடி அகலமும் கொண்டது. ஆலயத்தின் கர்ப்பக்கிரகம் 6அடி நீளமும் 4 அகலமும் கொண்டது. ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தைத் தவிர அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்று மதில்கள், மடங்கள் என்பன பெரும்பாலும் அழிவடைந்த நிலையிலேயே காணப்பட்டன. ஆலயத்தின் பெரும்பகுதி கடலில் இருந்து எடுக்கப்பட்ட கோறல் கற்கள் கொண்டு கட்டப்பட்டிருந்தாலும் கர்ப்பக்கிரகம் மட்டும் பொழிந்த முருகைக் கற்களையும் சுண்ணாம்புக் கற்களையும் கொண்டு கட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. பொதுவாக இவ்வாலயத்தின் கட்டுமானமும் கலைமரபும் ஏனைய தமிழக, இலங்கை ஆலயங்களுடன் ஒப்பிட முடியாத அளவிற்கு சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருந்தன. சில இடங்களில் ஆகம மரபு காணப்படுகின்றன. வேறுசில இடங்களில் கிராமிய ஆலயச் சாயல் காணப்படுகின்றன. ஆலயத்தின் உயரம் குறைந்த பதிவான வடிவமைப்பு, புதுவகையான கூரை அமைப்புக்கள், அகன்ற உயரமான சுற்று, வாசல் பகுதிகள் யன்னல்கள் முதலியன மக்கள் வாழ்விடங்களுடனும், ஆலயக் கட்டுமானங்களுடனனும் தொடர்புபட்டவையாக உள்ளன. சில கட்டிட அம்சங்கள் கேரள ஆலய அமைப்பை பிரதிபலிப்பனவாக உள்ளன. இவை துணவிச் சிவன் ஆலயத்தின் தனித்துவத்தை மட்டுமன்றி அதன் தொன்மை வரலாற்றையும் பிரதிபலிப்பனவாக உள்ளன.

மரபுரிமை என்பது இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெறுமதியுடைய சின்னங்களைக் குறிப்பதாகும்.







துணவிச் சிவன் ஆலயம் காலத்தால் பல தலமுறை தாண்டிய விலை மதிக்க முடியாத ஒரு சொத்து. அது ஒரு இனத்தின், ஒரு மதத்தின் அடையாளம். அதுவே எதிர்காலச் சந்ததியின் நம்பிக்கை நாற்று. ஆகவே அவ்வாலயம் இன்று பழையநிலையை நினைவுபடுத்தி புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும்.



இவ்வாலயம் 2013 ஆண்டிலிருந்து அவ்வப்போது ஆய்வு செய்வதற்கு துணையாக இருந்து ஊக்கப்படுத்தி வந்தவர் என் அருமை நண்பர் பேராசிரியர் ம.சரவணபவ ஐயர் அவர்கள். அவரே இன்று இவ்வாலயத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு காரணகர்த்தாவாக இருக்கும் வைத்திய கலாநிதி சிவயோக நாதன் அவர்களையும், அவர் குடும்பத்தாரையும் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவரது குடும்பத்தினர் தமிழ் மொழி மீதும், சைவத் தின் மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள். விளம்பரமின்றி இவ்வாலயப் புனரமைப்பிற்கு வேண்டிய நிதியை அவ்வப்போது யாழ்ப்பாண மரபுரிமை மையத்திற்கு வழங்கியவர். 2021 ஆண்டு யாழ்ப்பாண நகர முதல்வர் திரு.விஸ்வலிங்கம் மணி வண்ணனுடன் இணைந்து யாழ்ப்பாண மரபுரிமை மையத் தைத் தொடங்கிய போது சங்கிலியன் தோரணவாசலை புனர் நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய முழு நிதியையும் நன் கொடையாகத் தந்தவர் வைத்திய கலாநிதி பேராசிரியர் ரவிராஜ் அவர்கள். இன்று துணவி சிவன் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய முழு நிதியையும் நன்கொடையாக வழங்கியவர் பேராசிரியர் ரவிராஜ் அவர்களின் சகலனான வைத்திய கலாநிதி சிவயோகநாதன் அவர்கள் என்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவருக்கும் தமிழ்ச் சமூகம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்பர்.

வாழ்நாள் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தலைவர்
யாழ்ப்பாண மரபுரிமை மையம்














**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு**
**தொடர்புகளுக்கு 437.345.4203**

# உலகை மிரள வைத்த சீன இராணுவ அணிவகுப்பு: அமெரிக்காவை சீற்றமடைய சீன வழிகோலுகிறதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

05.09.2025

இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானிய சாம்ராஜ்ஜியம் சரணடைந்த வெற்றியை கொண்டாடும் வகையில், உலகமே கண்வைத்துப் பார்க்கும் அளவுக்கு சீனாவில் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பு நடந்தது.

மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பில் இருபத்தாறு உலக நாடுகளின் தலைவர்கள் கண்டுகளித்தனர்.





அமெரிக்காவிற்கு எதிராக சீனா சதி செய்கிறது என்றும், நளினமாக புட்டின், கிம் ஜாங் ஆகியோருக்கு வாழ்த்துகள் என ஆதங்கத்துடன் டிரம்ப் தெரிவித்துள்ளமை, அமெரிக்காவிற்கு எதிரான சக்திகள் உருவெடுப்பதை அடியோடு நிறுத்த முயல்வது வெளிப்படையாக தெரிகிறது.

## ஜப்பானிய சாம்ராஜ்ஜிய சரணடைவு:

இரண்டாம் உலகப் போர் முடிவின் எண்பதாவது நினைவு தினத்தை முன்னிட்டு சீனாவில் மிகப்பெரிய செப்டம்பர மூன்றில் இராணுவ அணிவகுப்பு நடந்தது.

இந்த அணிவகுப்பை 26 உலக நாடுகளின் தலைவர்கள் கண்டுகளித்தனர். இதில் மிக முக்கியமான மலைவர்கள் இருவர். ரஷ்ய அதிபர் புட்டின், வட கொரியா அதிபர் கிம் ஜாங் உன்.

இந்த இருவரும் சீன அதிபர் ஜி ஜின்பிங் உடன் இந்த இரு நாட்டு தலைவர்களும் இராணுவ அணிவகுப்பைக் கண்டுகளித்த புகைப்படம் இப்போது இணையத்தில் பெரிதும் கவனிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜின்பிங், ஜப்பானின் ஆதிக்கத்திற்கு எதிராக சீனா வெல்வதற்கு காரணமாக இருந்த உலக நாடுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

## சீனாவின் அணிவகுப்பும் பலமும்:

சீனா அரசு தனது படை, ஆயுத மற்றும் இராணுவ பலத்தைக் காட்ட புதிய தலைமுறை ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள், போர் விமானங்கள், ஆரம்ப எச்சரிக்கை விமானங்கள் மற்றும் விமான நெரிசல் அமைப்புகள் ஆகிய அதிநவீன ஆயுதங்களை முக்கியமாக காட்சிப் படுத்தியது.

ஆனாலும் ஜின்பிங் தனது பேச்சில் அமெரிக்க நாட்டின் பெயரைக் குறிப்பிடவில்லை. இது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்தப் போரின் முடிவிற்கு அமெரிக்கா முக்கிய பங்காற்றியுள்ளது.

ஜின்பிங் அமெரிக்காவின் பங்களிப்பைக் குறிப்பிடாததை அடுத்து, அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில், "சீனா விடுதலைப் பெற, அமெரிக்கா அதற்கு தந்த மிகப் பெரிய அளவிலான ஆதரவையும், அமெரிக்கா சிந்திய இரத்தத்தையும் சீன அதிபர் ஜி குறிப்பிடுவில்லை என்று பெரிய கேள்வியை எழுப்பியதுடன சீனா பதில் அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஜப்பானியர்களை எதிர்த்து சீனாவின் வெற்றிக்காக பல அமெரிக்கர்கள் இறந்துள்ளனர். அவர்களின் வீரம் மற்றும் தியாகம் சரியாக கௌரவிக்கப்படும், நினைவுகூரப்படும் என்று நான் நம்புகிறேன். சீன அதிபர் ஜி மற்றும் சீனாவின் மக்கள் சிறந்த தினத்தை கொண்டாடட்டும்.



நீங்கள் அமெரிக்காவிற்கு எதிராக சதி செய்யும் போது, விளாடிமிர் புதின் மற்றும் கிம் ஜாங் உனக்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவிக்கவும்" என்று பதிவிட்டுள்ளார்.

இந்தப் பதிவில் கோபமும், மிரட்டலும் இரண்டும் கலந்திருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.

## சீன – ரஷ்ய உறவு:

அலாஸ்காவில் கடந்த ஆகஸ்ட் 15-ம் தேதி, அமெரிக்கா சென்றிருந்த புட்டின் , டிரம்ப் உடனான சந்திப்பு முடிந்த அடுத்த சில மணி நேரங்களில் ரஷ்யாவிற்கு கிளம்பிவிட்டார்.



ஆனால், சீனாவில் இப்போது புட்டின் மூன்று நாள்களாக இருக்கிறார்.

அத்துடன் சீனாவில் இந்திய பிரதமர் மோடி உடன் அதிக நட்புடன் இருந்தார் புதின். இதேவேளை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி உடனான அமைதி பேச்சுவார்த்தைப் பற்றி இன்னமும் வாயைத் திறக்கவில்லை அவர்.

## மோடி – புட்டின் – ஜின்பிங் முத்தரப்பு:

மோடி, புட்டின், ஜின்பிங் தலைவர்களின் இந்தியா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளும் ஒற்றுமையாக இருக்கிறதை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் மூன்று நாட்டு தலைவர்களும் வலுவாக தெரிவித்திருந்தனர்.

இவை அனைத்தும் நிச்சயம் டிரம்பிற்கு கடுங் கோபத்தை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். இருப்பினும் அமெரிக்காவின் பெயரை தனது உரையில் ஜின்பிங் குறிப்பிடவில்லை என்பது மற்றொரு முக்கியமான குற்றச்சாட்டாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## இராணுவ அணிவகுப்பில் மோடி இல்லை!

ஷாங்காய் மாநாட்டின்போது இந்திய பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் புட்டின் இடையே நல்ல நெருக்கம் காணப்பட்டது.

இந்த மாநாட்டின்போது பிரதமர் மோதி, ஷி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புதின் இடையே இருந்த நெருக்கம் அமெரிக்காவிற்கே அச்சத்தை ஏற்படுத்தியது.

ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 01ஆம் வரை நடந்த ஷாங்காய் மாநாட்டில், பத்து உறுப்பு நாடுகளின் உறுப்பினர்கள் தவிர கூட்டணி நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

ஆனாலும் பிரதமர் மோடி இந்த அணிவகுப்பில் பங்கேற்கவில்லை.

இரண்டாவது உலகப் போரில் பாசிசத்துக்கு எதிரான சீனாவின் இந்த அணிவகுப்பு ஜப்பானின் ஆதிக்கத்துக்கு எதிரானது. அதனால் இந்த அணிவகுப்பில் பங்கேற்று ஜப்பானுக்கு எந்த செய்தியும் சொல்ல இந்தியா விரும்பவில்லை. இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குதான் எதிரானதே தவிர ஜப்பானுக்கு அல்ல என்றும் இந்திய தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் இந்த அணிவகுப்பில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், பிரதமர் மோடி பங்கேற்கவில்லை என்பது இருதரப்புடனும் நல்லுறவை பேண முயல்வது தெளிவாகிறது.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

## ஷாங்காய் உச்சி மாநாடு:

இந்த பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பின் முன்னராக, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரச தலைவர்கள் குழவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது. இதன் முடிவில் ரஷ்ய - இந்திய - சீன முத்தரப்பு கூட்டணி உருவானது, அமெரிக்காவிற்கு இது பெருஞ் சவாலாக எழுந்துள்ளது என்றும் விசனிக்கப்பட்டது.



ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உலகின் மிகப்பெரிய பிராந்திய அமைப்பாகும். இதில் தற்போது 26 நாடுகள் அடங்கும். அதன் மொத்த பொருளாதார உற்பத்தி 30 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை நெருங்குகிறது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) அரச தலைவர்கள் குழவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் தியான்ஜின் நகரில் 2025, ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1-ம் தேதி வரை நடைபெற்ற ஷாங்காய் (Shanghai) ஒத்துழைப்பு அமைப்பின் 25-வது உச்சி மாநாடு நடைபெற்றது.

இது சீனாவின் தியான்ஜினில் உள்ள மெய்ஜியாங் மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. இந்த உச்சிமாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் பொருளாதார வளர்ச்சி நோக்கம்:


இவ்உச்சி மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த 24 ஆண்டுகளில் இந்த அமைப்பு பல வெற்றிகளைப் பெற்றுள்ளது என்று கூறினார். மாறிவரும் உலகத்தை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து உறுப்பு நாடுகளும் அமைப்பின் இலக்குகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக் காட்டினார்.

பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மேம்பாட்டு வங்கியை விரைவில் நிறுவ வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.




பரஸ்பர நன்மைகள் மற்றும் பொதுவான சாதனைகள் பொதுவான அடிப்படையில், திறந்த தன்மை மற்றும் பங்கேற்பு, நியாயம் மற்றும் நீதி, நடைமுறைவாதம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.







# கருமையில் படரும் ஒளி




அவனுடைய பூசாரி திடுக்கிட்டான். இரத்தத்தை உறிஞ்சியது அந்தக் குரல். இருளின் மூர்க்கத்துடன் கூராகவும் கடும் வெக் கையாகவும் ஒலித்தது அது. அவனுடைய காதுகள் கருகிக் கொண்டு போகத் தொடங்கின. இருதயம் உருகி ஒழுகியது. அவனை அந்தக் குரல் அழைத்தது. மீண்டும் மீண்டும் அழைத் தது. மிகக் கடுமையான கர்ஜனையாக அந்த அழைப்பிருந்தது. அவனால் அசைய முடியவில்லை. குரல் அவனை நடுக்கிற்று.

மரத்தின் கிளைகள் முறிந்து அவன் மேல் விழுகின்றன. சாபம் பெற்றவன் போல அவன் எல்லாவற்றையும் தாங்கும் படியாக ஆகிவிட்டது. இருளில் விழிகள் அழிந்தன. பாரம் உயிரை நசுக்கியது. கத்தினான். ஊழையொலி அமுங்கிற்று. புயலின் சுழற்சியாகக் காற்று. தலைமுடியை பிய்த்து விடத்துடிக்கிறது சுழலும் வாயு.

பூசாரியின் குரல் திசைகளில் இறுகிப்போயிற்று. பற்கள் அழுகிச் சிந்துகின்றன. வாய் பிய்ந்து தொங்குகின்றது. எலும்புகள் உள் ளுக்குள் கரைந்து போகின்றன. கைகள் தொங்குகின்றன. விரல்களில் பூஞ்சணவன் படர்ந்துள்ளது. கால்கள் இற்றுப்போய் உழுத்த தடியாகி விட்டன.

தனக்கு நேர்ந்த கெடுதிகண்டு பூசாரி துயரமுற்றான்.

அவனுடைய வீடு அழிந்து விட்டது. ஊர் களவு போயிற்று. பிள்ளைகளைத் தெருக்கள் தின்று விட்டன. சொந்தங்கள் காடுகளில் உறைந்து போயின. அவன் மரநிழல்களில் அவிந் தான். வண்டி மாடுகளை களவு போன ஊரில் புழுக்கள் தின்று முடித்தன. எருதுகளின் சலங்கைகள் வளவில் சிதறிப்போய்க் கிடந்தன. அவற்றின் ஒலியோ மரங்களில் படர்ந்தது. அழிந்த வீட்டில் காகங்கள் படர்ந்திருந்தன கருமையாய். தானியங் களை குடித்த காக்கைகள் மரங்களிலும் மிஞ்சிய சுவர்களிலும் எச்சங்களால் படம் வரைந்தன. துக்கத்தால் கறுத்த மனசைப் பொத்தியபடி வெளியேறி ஓடி வந்ததே பெருங்காயம். கண்ணீர் பீறிடப் பீறிட அதைக் காப்பாற்றிவர விரிந்தது சாபம். ஈனத்தில் அவன் முனகிய துக்கக் குரல் காற்றில் அடர்ந்துள்ளது.

கோயில் வாசற்படியில் அவன் விழுந்து கதறியபோது சத்தத்தை உறிஞ்சிக் குடித்த வௌவால்கள் மிரண்டு பறந்தடித்தன. வௌவால்கள் சுவரில் மோதிய ஒலி காற்றில் அதிர்ந்தது. இருளில் பிறந்த சத்தமாக மர்மங்காட்டிற்று அது. தாயைக் கூவி அழைத்தான். துக்கம் முற்றிய அவன் குரல் கேவியது. கோயிலின் முற்றத்தில் நின்ற ஆலமரம் அவன் குரல் கேட்டுச் சிலிர்த்தது. அதற்கும் அவனிற்கும் மாறாத பிணைப்பு காலத்தை ஊடுருவி நீண்டிருந்தது. ஆலின் நிழலில் தன்னை அவன் கிடத்தியிருந்த நாட்களில் அவனைத்தொட்டு ஸ்பரிசிக்க விழு துகள் துடிக்கும். ஒரு பக்கமாக வண்டி மாடுகளை விழுதுகளில் தொடுத்து விட்டிருப்பான். மாடுகளின் சலங்கை ஒலி விழுது களில் முடிச்சுகளிட்டிருந்தது. தாயின் குளிர்த்தி நாட்களில் ஆலமர நிழலில் சத்தங்கள் முளைக்கும்; காலடிகள் ஒளிரும். எருதுகள் மீதம்தள்ளிய வைக்கல் மணம் வேர்களூடாக பூமியின் மையத்திற்கு நகர்ந்தது. அவனின் அழுகுரலில் கோயில் முற்றம் கறுத்தது. கதவைத் திறந்து அழுதபடி உள்ளே ஓடினான். மண்டபத்தில் அழுகை வழிந்தது. சரவிழக்குகளின் ஒளி அழுகையில் கலங்கியது. காலடிச் சத்தங்களில் மோதிய வௌவால்கள் சுவரைத் தகர்க்கத் துடித்தன. பூசாரி தாயின் காலடியில் விழுந்தான். கண்ணீர் பெருகி அவள் கால்களில் சுவறியது. "தாயே" என்று அவன் கதறினான். சுவர்களை ஊடுருவி, வெளிமுற்றத்தில் பரவி, காலத்தில் பதிந்தது அந்தக் குரல். துக்கம் முற்றிய அந்தக் குரலில் வெம்மையிருந்தது.

"தாயே! பேசம்மா! எனக்கொரு வழிசொல்லம்மா தானென்ன செய்வேன்? ஐயோ எனக்கு நீயின்றி வேறுயார்?"

சொற்களின் அடர்த்தியில் விரிந்தது அளவற்ற துக்கம். அவன் இறைஞ்சுதல் தாயின் காலடியில் பரவியது. அழுகையொலி யிலும் கண்ணீரிலும் அம்மனின் பீடம் கரைந்தது. வௌவால்கள் வெளிமுற்றத்தில் அலைந்தன. பிறகு சுழன்று ஆலில் ஒட்டித்தொங்கின. அவற்றின் விழிகளில் முற்றிய கலவரம்.



தாய் பேசவில்லை. அவள் கண்கள் தீயுமிழ்ந்தன. கோபம் கொப்பளிக்கும் முகத்தில் வெம்மை தகித்தது. பூசாரி நிமிர்ந்து பார்த்தான். ஆங்கார சொரூபியாய் அவள் நிமிர்ந் திருந்தாள். காலத்தில் அழியாத சிரிப் புடன்.

ஒரு நகரத்தை எரித்தவள் தேவி. முப் புரங்களை எரித்தவனின் வம்சம் அவள். அக்கிரமங்களை அவள் விட்டதில்லை. காலத் தில் அவள் வலிமை என்றும் தளர்ந்ததில்லை. சாஸ்வதமாய் அது படர் கிறது எங்கும், எப்போதும்.

பூசாரி அவள் வலிமையை வேண் டினான். இருளடரும் இக் காலத்தில் அவள் ஒளிக்கு அவன் உருகினான். உருகி உருகி மனங்களை கரைந்தான். மனங்கரைந்து ஓடிய நீரில் அவன் துக்க முகம் பிரதிபலித்தது. எண்ணங்களை உதிர்த்த மனம் வெறும் தகடாகிக் கிடந்தது.

திடீரென அவன் தன்னை நிறுத்தினான். துயரத்திலிருந்து தன்னை வெளியே பிடுங்கினான். மகிழ்ச்சியின் பிசிறல்களு மின்றி நிஷ்டையாக நின்றான். மனம் கூடி ஒரு நிலைப்பட்டது.

"தாயே நீதான் எல்லாவற்றுக்கு மானவள். நீயே பார்த்துக் கொள்".

அவன் படியிறங்கி முற்றத்தில் மிதந் தான். நிழல் முன்னகர்ந்து பின் தங்கியது.

தாய்மடி நீங்கி, அவள் முற்றம் விட்டு, தெருக்களில் தவறி, திசை ஏதுமின்றி, அடையாளங்குலைத்து, ஞாபகங் களுடன் அலைந் தான். தேங்கிய ஞாபகங்கள் குலைந்து குலைந்து மறுபடி எண்ணங்களை விரித்தன.

ஆலம் நிழல் சருகடைந்து உக்கத்தொடங்கியது. விழுதுகள் சருகுகளைத் துளைத்து மண்ணில் புதைந்தன. வைக்கல் மணத்தை உறுஞ்சிய ஆல் தன் ஞாபகங்களில் அதை மீண்டும் சுரந்தது. சலங்கைகளின் ஒலி அதன் கிளைகளில் ஒலித்தது.

கோயில் முற்றத்தில் காற்றுத் தன் தனிமையை வரிவரியாக எழுதிற்று. பூத்திருந்த காலடிகளை தன் நினைவுகளில் பாட மாக்கி வைத்திருந்தது முற்றம். மண்டபத்துள் வௌவால்கள் பெருகின. இருளில் பிறக்கும் ஒலிகளில் பறந்து அவை சுவர் களில் மோதின. ஈரம் சுவறிய தேவியின் பீடங்களில் பாசி நிறம் பூசியது. தேவியின் கண்களோ தீயில் ஒளிர்ந்தன. அவள் ஆங் கார சொரூபி. முகத்தில் கோபக்கனல். ஒரு நகரை எரித்தவள். அக்கிரமத்தை அழித்தவள் அம்மன். அவள்தாய் காலத்தில் வல்லமை அழியாதவள்.

பூசாரியின் ஞாபகங்கள் மிஞ்சித் துக்கத்தை பெய்கின்றன. அள்ளி வந்த நினைவுகளில் அவன் தேய்ந்தான். தேவியின் சிலம்பு, தண்டை, பிரம்பு எல்லாம் பூட்டிய பெட்டகத்துள். பூட்டிய பெட்டகமோ களவு போன ஊரில். களவு போன ஊரோ அவனது நினைவறையில்.

ஞாபகங்களில் ஒரு புழுவாய் நெளிந்தான் பூசாரி.

சாகசமூட்டிய கனவுகள் அவனைத்தனியே விட்டன. யாருமற்ற வெளிகளில் தெளிவற்ற குரல்கள் அவனை அழைத்துச் சென்றன. தேவியின் கரம் பற்றி நடப்பதான உருக்கத்தில் மெய் சிலிர்த்தது. காலம் அவனைக் குலைத்துக் குலைத்து இழை யாக்கியது. தன் நிழலைக் கொண்டே நடக்கமுடியாதிருந்தான். மகிமை எண்ணங்களோ ஒளியூட்டின. ஒலியின் ஊஞ்சலில் மெய்மறந்தான்.

தூக்கம் தேங்கிய கண்களில் பறவைகள் கனவுகளை வரைந்தன. வரையப்பட்ட கனவுகள் ஒரு பெருஞ் சித்திரமாக வளர்ந்து நிறங் கொண்டன. சித்திரத்தின் சிலைகள் முளைத்து உயிர்பெற்று அசைந்தன. அசையும் சிலைகளும் உறையும் சிலைகளுமாக மாறிய காட்சியில் ஊர் வடிவங்கொண்டது. ஊரின் முகத்தில் கோயில் நிழலாடியது. ஆலமரத்தில் சலங் கைகள் ஒலிக்கின்றன. விழுதுகளின் ஊஞ்சலில் வண்டி மாடுகள் தலையசைக்கின்றன. நிழல் பெருகிய ஆலின் மடியில் ஈரம் மலர்ந்திருந்தது. காலடி பூத்துப்பெருகிய முற்றம். முற்றத் தில் மையமாக படம் விரித்த கோயில். தேவி ஒளிர்ந்தாள். காலமாய் விரியும் அவள் புன்னகை. மண்டபத்தின் தூண்கள் ஒளியில் மினுங்கின. தூண்களில் தேங்கிய இடும்பனும் இடும் பியும், துவாரபாலகர், மற்றும் பரிவாரங்களும் அசைந்தனர். தேவி சிவந்தாள். மண்டபம் சிவந்தது. ஒளி உருகிக் குரதி யாகியது. கண்களில் தீ பறந்தது. சிலம்புகள் குலுங்கின. சிலம்பின் ஒளியில் மண்டபம் அதிர்ந்தது. முற்றம் நிறைந்து வெளியெல்லாம் பரவி காற்றில் ஏறி சுழன்று சுழன்று ஒலித்தது. தாயின் கையில் பிரம்பு, தூக்கிய கால்களில் துடிப்பு, தாவும் முனைப்பு.

துவார பாலகர்கள் பரிவாரங்களுடன் அணிவகுத்தனர். தேவி முற்றத்தில் தாவினாள். இடும்பனும் இடும்பியும் குதித்தனர். காற்றில் படர்ந்து பிரம்பைச் சுழற்றினாள் தாய். காதுகள் கிழி படும் ஓசை. ஆல் சுழன்று தவித்தது. மண்பெயர்ந்து திசைகளில் அடர்ந்தது. பிரம்பு சுழலும் ஒலியில் காற்று பிளந்து துடித்தது.

"ஹா.......செல்லையா, ஹா... ஹா நான் தான்.... நானே வந்திருக்கின்றேன்.. வா.... என்னோடுவா... உனக்கினி அச்சமில்லை.. வா.. ஹா... ஹா..."

பூசாரி அதிர்ந்துறைந்தான். கால்களை பூமி நடுங்க வைத்தது. வரட்சி தின்றது தொண்டையை, கண்களில் நீர் வழிய அவன் தேவியின் காலடியைத் தேடினான். அவள் காற்றில் சஞ்சரித் தாள். பூசாரியைக் காற்று அலைக் கழித்தது.

"தேவி .....தாயே! வந்து விடுகிறேன்" அவன் குரல் காற்றில் பரவி துடித்த தழிந்தது. கைகளை உயர்த்தி காற்று வெளியில் அளைந்தான்.

சிலம்பின் ஒலி பிரம்பின் வீச்சு காற்றின் சுழற்சி உடுக்கின் உறுமல் பாறையின் அதிர்வு தேவியின் தாண்டவத்தில் திசைகள் நடுங்கின.

பெருகிய அணியில், பூசாரி பிணைந்தான். தன்முனைப்பில் கத்தினான். அவன் குரல் ஊறிப் பெருகிற்று. அது திசைகளில் மோதி அவிழ்ந்தது. பற்கள் இறுகின. உதடுகள் துடித்தன. நரம் புகள் முறுகிச் சூடேறின. புஜங்கள் திரண்டவெளியில் விரிந்தன. கைகளில் மதம் பிளிறந்து யானை. கால்களில் விருட்சங்கள் முறுகின. முகத்தில் சூரியன் சிவந்தான்.

பூசாரியின் குரலில்–
குதிரையின் கனைப்பு
யானையின் பிளிறல்
சிம்மத்தின் கர்ஜனை
புலியின் உறுமல்.

- களத்தில் 24.09.1997

# சர்வதேச தமிழரிடையே ஒற்றுமையை வளர்க்க
# பாண்டிச்சேரி பன்னாட்டு மாநாட்டில் தீர்மானம்!

06.09.2025

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி இலக்கியப் பள்ளி, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் (ATC), அமெரிக்கத் தமிழ் செயல் குழு (USTAG), ஆகிய வற்றுடன் இணைந்து தமிழ் மனித உரிமை நீதி என்ற தலைப் பில் பன்னாட்டு மாநாடு 2025 செப்டம்பர் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60வது அமர்வு ஜெனீ வாவில் நடைபெற உள்ளது. இந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60வது அமர்வில் உலகத் தமிழர் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இலங்கையில் தொடரும் இராணுவ மயமாக்கல், தமிழர் சமூகத்தின் துயரமான நிலை ஆகிய வற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்த மாநாடு நடை பெற்றது.

இந்த சூழலில், வரவிருக்கும் இலங்கை தீர்மானத்தில் பன் னாட்டு நீதித்துறை நடவடிக்கை, அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்பின் முடிவு மற்றும் தன்னாட்சிக்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் புகழ்பெற்ற அறி ஞர்கள், கொள்கை அமைப்பாளர்கள், பண்பாட்டு தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பன்னாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்று, தமிழ் மரபு, இன்றைய நீதி சார்ந்த சவால்கள் மற் றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு குறித்து ஆழமான விவா தங்களில் ஈடுபட்டனர்.

இரண்டு நாட்கள் நடைபெற்றற இம்மாநாட்டில் பிரதான உரைகள். ஆய்வுக் கட்டுரைகள், மாணவர் போட்டிகள், பண் பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் உலகத் தமிழர் அமைப்புகளுடன் கலந்துரையாடும் அமர்வுகள் இடம்பெற்றன.

### பேராசிரியர் பஞ்ச். ராமலிங்கம் உரை:

தமிழ் கலாச்சாரம், மனித உரிமைகள் மற்றும் நீதி குறித்த 3வது ATC சர்வதேச மாநாடு குறித்த அறிக்கையை பேராசிரியர் பஞ்ச். ராமலிங்கம் வெளியிட்டுள்ளார். தமிழ் கலாச்சாரம், மனித உரிமைகள் மற்றும் நீதி குறித்த 3வது ATC சர்வதேச மாநாடு செப்டம்பர் 5-6, 2025 அன்று இந்தியாவின் புதுச்சேரியில் உள்ள பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள CCC ஆடிட் டோரியத்தில் நடைபெற்றது. இந்த குறிப்பிடத்தக்க கல்வி மற்றும் கலாச்சார நிகழ்வை சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பள்ளி, அவுஸ்திரேலியாவின் தமிழ் காங்கிரஸ் (ATC) மற்றும் அமெரிக்காவின் அமெரிக்க தமிழ் நடவடிக்கைக் குழு (USTAG) ஆகியவற்றுடன் இணைந்து புதுச்சேரி பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்தது.

இந்த மாநாடு இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து புகழ் பெற்ற அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், கலாச்சாரத் தலைவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் பிரதிநிதிகளை ஒன் றிணைத்து, அறிவுசார் பரிமாற்றம் மற்றும் கலாச்சார ஒற்று மைக்கான துடிப்பான இடத்தை உருவாக்கியது.

### முதல் நாள் அமர்வு:

செப்டம்பர் 5, 2025 அன்று தொடக்க விழா, தமிழ் பாரம்பரியத் தின் கலாச்சார செழுமையைக் குறிக்கும் ஒரு அழகான பரத நாட்டிய நிகழ்ச்சியுடன் தொடங்கியது. இந்த அமர்வை, பாண்டிச் சேரி பல்கலைக்கழக சமூகக் கல்லூரியின் கூட்டு சர்வதேச ஒருங்கிணைப்பாளரும், ஆசிரிய உறுப்பினருமான டாக்டர் அரங்க எம். முருகையன் தலைமை தாங்கினார்.

சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பள்ளியின் தலைவர் பேராசிரியர் எம். கருணாநிதி வரவேற்புரை ஆற்றி, மாநாட்டிற்கான தொனியை அமைத்தார். தொடர்ந்து, பிரமுகர் களால் குத்துவிளக்கு ஏற்றி, மாநாட்டின் முறையான தொடக்க விழாவைக் குறிக்கும் வகையில் அமைந்தது.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஒருங்கிணைப் பாளரும், UGC-MMTTC இன் முன்னாள் இயக்குநருமான பேராசிரியர் பஞ்ச். ராமலிங்கம், மாநாட்டின் நோக்கம் மற்றும் நோக்கங்களை கோடிட்டுக் காட்டினார், மனித உரிமைகள் மற் றும் நீதியின் சமகால அக்கறைகளுடன் தமிழ் கலாச்சார விழு மியங்களை இணைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத் தினார். டாக்டர் வி. முத்து (தலைவர், புதுவை தமிழ் சங்கம்), பேராசிரியர் எஸ். சுடலைமுத்து (சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பள்ளி, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்), திரு. ஆர்.சி. கதிரவன் (இந்திய ஒருங்கிணைப்பாளர், தமிழ் புலம்பெயர்ந்தோர் அமைப்புகள், நாமக்கல்) ஆகியோர் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

தலைமை உரையை புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கலாச் சாரம் மற்றும் கலாச்சார உறவுகள் இயக்குநர் பேராசிரியர் கிள மென்ட் சகாயராஜ்ஜா லூர்து நிகழ்த்தினார். இந்த மாநாடு தொடர்ச்சியான சிறப்புரைகள் மற்றும் சிறப்புரைகளால் வளப் படுத்தப்பட்டது. மொரீஷியஸின் முருகன் அறக்கட்டளையின் வழக்கறிஞர் மற்றும் தலைவரான ஸ்ரீ டி.எம். பொன்னம்பலம் கோயம்புத்தூரைச் சேர்ந்த தொழிலதிபர் ஸ்ரீ மாணிக்கம் அதப்ப கவுண்டர் புதுச்சேரி அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எஸ். ஸ்ரீனிவாசன் சென்னை அகில இந்திய வானொலியின் முன்னாள் இயக்குநர் டாக்டர் சேயோன் தமிழ் நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் மனிதநேயத் துறையின் டீன் பேராசிரியர் எஸ். ரவி மற்றும் இலங்கையின் வவுனியா பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் ரவீந்திர குமாரன் நவரத்தினம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநாட்டு சிறப்பு மலர் புத்தகத்தை புதுச்சேரியின் மாண்புமிகு சபாநாயகர் ஸ்ரீ ஆர். செல்வம் வெளியிட்டது ஒரு முக்கிய சிறப் பம்சமாகும். முதல் பிரதியை சென்னை ஆசிய ஆய்வுகள் நிறு வனத்தின் இயக்குநர் டாக்டர் ஜி. ஜான் சாமுவேல் பெற்றுக் கொண்டு, அவர் பாராட்டுரையும் வழங்கினார்.

டெல்லி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டி. உமாதேவி முன் மொழிந்த நன்றியுரையுடன் அமர்வு நிறைவடைந்தது, அதைத் தொடர்ந்து தேசிய கீதம் மற்றும் தலைமை விருந்தினருடன் குழு புகைப்படம் எடுக்கப்பட்டது.

மதியம், புகழ்பெற்ற பேராசிரியர்கள் மற்றும் கலாச்சாரத் தலைவர்களின் தலைமையில் இணையான தொழில்நுட்ப அமர்வுகள் தொடங்கின. தமிழ் இலக்கியம், நெறிமுறைகள், புலம்பெயர்ந்தோர் ஆய்வுகள், கலாச்சார அடையாளம் மற்றும் சமூக-அரசியல் சூழல்களில் நீதி உள்ளிட்ட பல்வேறு கருப் பொருள்களை அமர்வுகள் உள்ளடக்கியிருந்தன. குறிப்பிடத் தக்க சிறப்பு உரைகளை டாக்டர் எஸ். அருள்சாமி (கிரேட் லேக்ஸ், சென்னை), மற்றும் பேராசிரியர் ஏ. செல்லபெருமாள் (ஓய்வு பெற்ற, மானுடவியல் துறை, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்) ஆகியோர் வழங்கினர், அறிஞர்கள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கட்டுரைகளை சமர்ப்பித்தனர், புதிய நுண்ணறிவுகளுடன் விவாதங்களை வளப்படுத்தினர்.

### இரண்டாவது நாள் அமர்வு:

செப்டம்பர் 6, 2025 அன்று இரண்டாவது நாள், ஒரு பிரார்த் தனையுடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து தொடர்ச்சியான முக்கிய உரை மற்றும் சிறப்பு உரைகள் நடைபெற்றன. டாக்டர் சேயோன், ஸ்ரீ லாவன், USTAG, அமெரிக்கா மற்றும் டாக்டர் ரவீந்திரகுமாரன் நவரத்தினம் ஆகியோர் தமிழ் கலாச்சார சிந் தனையை மனித உரிமைகள் தொடர்பான சமகால பிரச்சினை களுடன் இணைக்கும் ஊக்கமளிக்கும் சொற்பொழிவுகளை மீண்டும் வழங்கினர். ஸ்ரீ பி. மோகன்தாஸ் (மூத்த வழக் கறிஞர், புதுச்சேரி), டாக்டர் ஷஹீத் கான் (பெங்களூரு), டாக்டர். ரவி கோவிந்தராஜ் (ஆம்பாள் தமிழ்ச்சங்கம், காதர்), பேரா சிரியர். எஸ். ரவி (சியூடிஎன், திருவாரூர்) ஆகியோர் சட்ட மற் றும் கலாச்சாரக் கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் முழுவதும், தொழில்நுட்ப அமர்வுகள் பல வழி களில் தொடர்ந்தன. இதில் டாக்டர் கே. பூபதி (நாமக்கல்), டாக்டர் பிரான்சிஸ் லியோ (சாய்ராம் பொறியியல் கல்லூரி, சென்னை), டாக்டர் எஸ். சதாசிவம் (மெட்ராஸ் கிறிஸ்தவ கல்லூரி) மற்றும் பலர் கலந்து கொண்டனர். அவர்களின் விளக்கக்காட்சிகள்




தமிழ் பாரம்பரியம், உரிமைகள் சார்ந்த சொற்பொழிவுகள் மற் றும் கலாச்சார நிலைத்தன்மைக்கான இடைநிலை அணுகு முறைகள், உரிமைகள் சார்ந்த சொற்பொழிவுகள் மற்றும் கலாச் சார நிலைத்தன்மை ஆகியவற்றை பிரதிபலித்தன. புதுச்சேரி, தமிழ்நாடு, இலங்கை மற்றும் தமிழ் புலம்பெயர்ந்தோர் ஆகி யோரைச் சேர்ந்த அறிஞர்கள் தலைமையில் நடைபெற்ற இணையான அமர்வுகள் உண்மையிலேயே சர்வதேச கல்வி தளத்தை உருவாக்கியது.

இரண்டாம் நாளின் குறிப்பிடத்தக்க அம்சம், திரு. கிருஷ்ணப் பிள்ளை இளங்கோ (தலைவர், ATC, அவைஸ்திரேலியா) தலைமையில் நடைபெற்ற ஊடக அமர்வு ஆகும். மேலும் 18 தீர் மானங்களை நிறைவேற்றியது. இந்த அமர்வு பிரதிநிதிக ளிடையே ஒரு துடிப்பான பரிமாற்றத்தை எளிதாக்கியது மற்றும் மாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதில் உச்சத்தை அடைந்தது. இந்தத் தீர்மானங்கள் தமிழ் அடையாளத்தைப் பாதுகாத்தல், கலாச்சார நீதியை மேம்படுத்துதல் மற்றும் உலக ளாவிய தமிழ் ஒற்றுமையை வலுப்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தின.

மதியம் நடைபெற்ற நிறைவு அமர்வு டாக்டர் வி. தனலட்சுமி யின் வரவேற்பு உரையுடன் தொடங்கியது. பள்ளியின் பேரா சிரியர் எஸ். சுடலைமுத்து தலைமை உரையை நிகழ்த்தினார், அதைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களின் கருத்துகளும் வழங் கப்பட்டன. புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் (தனிப் பொறுப்பு) பேராசிரியர் ரஜ்னீஷ் பூதானி சிறப்புரை ஆற்றி போட் டிகளுக்கான விருதுகளை வழங்கினார்.

இரண்டு நாள் நிகழ்வின் அறிவுசார் சாதனைகள் மற்றும் கலாச் சார பங்களிப்புகளை எடுத்துரைக்கும் அதிகாரப்பூர்வ மாநாட்டு அறிக்கையை பேராசிரியர் எம். கருணாநிதி வழங்கினார். நிறைவு உரை மற்றும் சான்றிதழ் விநியோகத்தை புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் EI & RR ஆய்வுகள் இயக்குநர் பேராசிரியர் கே. தரணிக்கரசு மேற்கொண்டார். டாக்டர் அரங்க எம். முருகையன் நன்றியுரையுடன் அமர்வு முடிந்தது, அதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

மாநாட்டின் முடிவில், தமிழ் கலாச்சாரம், மனித உரிமைகள் மற் றும் நீதிக்கான சர்வதேச மாநாடு புலமை, கலாச்சார வெளிப் பாடு மற்றும் மனித உரிமைகள் ஆதரவு ஆகியவற்றின் சங் கமத்தை வெற்றிகரமாக உருவாக்கியது. இந்தியா, இலங்கை, மொரிஷியஸ், மலேசியா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக் காவைச் சேர்ந்த புகழ்பெற்ற ஆளுமைகளின் இருப்பு தமிழ் கலாச்சாரத்தின் உண்மையான உலகளாவிய பொருத்தத்தை பிரதிபலித்தது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது தமிழ் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், கலாச்சார விழுமியங்கள் மூலம் நீதியை வளர்க்கவும், தமிழர்களிடையே சர்வதேச ஒற்று மையை வளர்க்கவும் வேண்டியதன் அவசியத்தை அடிக் கோடிட்டுக் காட்டியது. இந்த மாநாடு தமிழ் அடையாளத்தை கொண்டாடியது மட்டுமல்லாமல், சமத்துவம், நீதி மற்றும் மனித கண்ணியம் பற்றிய அதன் உலகளாவிய செய்தியையும் வலுப் படுத்தியது.ற்றுதலை இடைநிறுத்தி, தடைசெய்தல் - என் றுள்ளது.

— நவீனன் —






www.sangathamil.ca

# Office of the Prime Minister
# Transnational Government of Tamil Eelam
# பிரதமர் பணிமனை
# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

875 Avenue of the Americas, Suite 2309
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

செப்டம்பர் 10, 2025

**மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சரின் உரைக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மறுப்பு அறிக்கை!!!**

உள்நாட்டு பொறுப்புக்கூறல் செயல்முறையை இலங்கை வலியுறுத்துவது ஒரு 'மாற்றத்தக்க மாற்றம்' அல்ல, மாறாகஉறுதியான தண்டனையின்மையின் தொடர்ச்சியாகும்

மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் தனது உரையில், சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் புதிய அரசாங்கம்"மாற்றத்தக்க மாற்றத்திற்கான பயணத்தைத்தொடங்கியுள்ளது" என்று பெருமையாகக் கூறினார். தனதுஅரசாங்கம் "நமது சொந்த உள்நாட்டு செயல்முறை மூலம்அனைத்து இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைமுன்னேற்றும்" என்று கூறி முடித்தார்.

உள்நாட்டு செயல்முறைக்கான இந்த வலியுறுத்தல் ஒரு புதியஅல்லது புரட்சிகரமான யோசனை அல்ல. உண்மையில், 2006 ஆம் ஆண்டில் சிறிலங்காவில் உள்ள நிலைமையை HRC முதன்முதலில் கையில் எடுத்ததில் இருந்து, சிறிலங்கா அரசாங்கம்(GOSL) தொடர்ந்து இதே "உள்நாட்டு செயல்முறை" மந்திரத்தையே மீண்டும் மீண்டும் கூறி வருகிறது.

• 2006 ஆம் ஆண்டில், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக பின்லாந்து, (Finland) மோசமடைந்து வரும் மனித உரிமைகள் நிலைமை குறித்து சர்வதேச கவலையை அடிக்கோடிட்டு, OHCHR களஇருப்பைக் கோரும் வரைவுத் தீர்மானத்தை சமர்ப்பித்தபோது, மஹிந்த ராஜபக்ஷவின் தலைமியாலான அரசு, அவ் வரைபு தீர்மானத்தை முறியடித்து, மனித உரிமைமீறல்களை விசாரிக்க ஒரு உள் குழுவை நிறுவுவதாகக்கூறியது.

• 2012 ஆம் ஆண்டில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் (LLRC) கண்டுபிடிப்புகளைச்செயல்படுத்த தொழில்நுட்ப உதவி வழங்கும் தீர்மானத்தைHRC நிறைவேற்றியபோது, சிறிலங்கா, தீர்மானத்தின்ஆதரவாளர்களை துரோகிகள் என்று முத்திரை குத்தி, அதைஅதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக விமர்சித்தது. அந்த ஆண்டின் பிற்பகுதியில் ஐ.நா.வின் உள்மதிப்பாய்வு அறிக்கை

1

வெளியிடப்பட்டபோது, சிறிலங்கா அதை நிராகரித்து, அதன் சொந்த நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையைத் தொடரப்போவதாகக் கூறியது.

• மார்ச் 2021 இல், HRC 46/1 தீர்மானத்தை நிறைவேற்றியபோது, கோத்தபய ராஜபக்ஷவின் கீழ் இருந்தஅரசு அதை நிராகரித்து, அதன் சொந்த நல்லிணக்க செயல்முறையைத் தொடரப்போவதாகக் கூறியது.

• அக்டோபர் 2022 இல், HRC 51/1 தீர்மானத்தை நிறைவேற்றியபோது, ரணில் விக்ரமசிங்கவின் கீழ் இருந்தஅரசு, தீர்மானத்தை எதிர்த்தது மற்றும் "நல்லிணக்கம் மற்றும். மனித உரிமைகள் குறித்த உள்நாட்டில் ஏற்பட்டமுன்னேற்றத்தை" மேற்கோள் காட்டியது.

• மார்ச் 2025 இல், "புரட்சிகர" ஜனாதிபதி அனுர குமாரதிசாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் பிரதமர், "46/1, 51/1 மற்றும் 57/1 தீர்மானங்களையும், இந்த பிளவுபடுத்தும் மற்றும் ஊடுருவும் தீர்மானங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட இலங்கை தொடர்பான வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையையும் நாங்கள் மீண்டும் நிராகரித்துள்ளோம்" என்று கூறினார்.

ஜனாதிபதி யாராக இருந்தாலும், சிங்கள பௌத்த கலாச்சார மேலாதிக்கத்தின் உருவகமான சிறிலங்கா அரசு மாறாமல் உள்ளது என்பதை இந்த வரலாறு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கிறது.

சிறிலங்காவின் புதிய ஏமாற்று வித்தை முன்மொழியப்பட்ட"சுயாதீன பொது வழக்கறிஞர் அலுவலகம்" ஆகும். அரசாங்கத்தின் சட்ட ஆலோசகராகவும், குடிமக்கள் சார்பாக தலைமை வழக்கறிஞர் ஆகவும் பணியாற்றும் சட்டமா அதிபரின் இரட்டை வகிபாகங்கள் - நலன் மோதலை உருவாக்குகின்றன என்பது உண்மைதான். தற்போது விவாதிக்கப்படும் ஒரு சுயாதீன வழக்கறிஞர் அலுவலகம், அந்த மோதலில் இருந்து அதிக விடுபட்டதாக இருக்கலாம் மற்றும் அரசியல் சார்புகளை நீக்கும் ஆற்றலையும் கொண்டிருக்கலாம்.

இருப்பினும், இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரானகுற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலைப் பொறுத்தவரை, தடையாக இருப்பதுஅரசியல் சார்பு அல்லது நலன் மோதலல்ல. அடிப்படைத் தடையாக இருப்பது என்னவென்றால், இந்த சர்வதேச குற்றங்கள் சிங்கள அரசியல்-

2

இராணுவ கட்டமைப்புக்களால் செய்யப்பட்டவை, மேலும் அனைத்து சிறிலங்கா அரசுநிறுவனங்களும் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிறைந்திருப்பதும் சிறிலங்காவில் தற்போதுள்ள நீதித்துறை கட்டமைப்பில் எந்த மாற்றமும் இந்த அட்டூழியக் குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை நிலைநாட்டாது. இது தொடர்பாக, சர்வதேச நீதிக்கான பல்வேறு பொறிமுறைகளை விவேகமான முறயில் அடையாளம் இட்டுக்காட்டிய, பல தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புக்களின் கூட்டு அழைப்பையும், மற்றும் சர்வதேச நீதியைக் கோரும் தமிழ் குடியியல் சமூகத்தின் கூட்டுக் கடிதத்தையும், நான் பாராட்டுகிறேன். ரோம்சட்டத்தை சிறிலங்கா அங்கீகரிக்க வேண்டும் என்ற உயர்ஸ்தானிகரின் பரிந்துரை, சர்வதேச வழிமுறைகள் மூலம்மட்டுமே தமிழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க முடியும்என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்திருப்பதை விளக்குகிறது.

வரலாற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளமக்கள் ஒரு தேசியக் கட்சியை ஆதரிப்பது இதுவே முதல்முறை என்று வெளியுறவு அமைச்சர் பெருமையுடன் குறிப்பிட்டார். இருப்பினும், ஆறு மாதங்களுக்குப் பிறகு, உள்ளாட்சித் தேர்தலில், அவரது கட்சி அந்த மாகாணங்களிலிருந்து விரட்ியடிக்கப்பட்டது என்பதை அவர் குறிப்பிடத் தவறிவிட்டார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் விருப்பை பிரதிபலிக்கும் தமிழ்பிராந்தியக் கட்சிகளுக்கு தமிழர்கள் வாக்களித்தனர்.

தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை சர்வதேச மனிதஉரிமைகள் தரங்களுடன் சீரமைக்க தனது அரசாங்கம் பலசெயல்முறைகளைத் தொடங்கியுள்ளது என்றும் அவர்கூறினார். ஆயினும்கூட, மனித உரிமைகளுக்கானஉலகளாவிய பிரகடனம் மற்றும் சிவில் மற்றும் அரசியல்உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம் மற்றும்அமைதியான ஒன்றுகூடலை மீறும் ஒரு சுதந்திர அரசுக்கானஅமைதியான வாதத்தை தடை செய்யும் சிறிலங்கா அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் நடைமுறையில் உள்ளது. இது முந்தைய முதலாளித்துவ ஜனாதிபதிகளின் கீழ் பராமரிக்கப்பட்டதைப் போன்று, தற்போதைய "புரட்சிகர" ஜனாதிபதியின் கீழ் தொடர்கிறது. இரண்டு ஜனாதிபதிகளும் சிங்கள பௌத்த இனவாதக் கட்டமைப்புக்களின் விம்பங்கள், மேலும் இரண்டு சந்தர்ப்பங்களிலும், பாராளுமன்றம் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதுபொதுவான அம்சமாகும்.

3

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) தனது அரசாங்கம் ஒழித்துவிடும் என்ற தோற்றத்தை வெளியுறவு அமைச்சர்உருவாக்க முயன்றார். இருப்பினும், உயர் ஆணையரின்அறிக்கை, "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துசெய்வதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும், அதைத்தொடர்ந்து பயன்படுத்துவது மேலும் தன்னிச்சையான கைதுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் அல்லது விசாரணைஇல்லாமல் நீண்டகால தடுப்புக்காவல்களுக்கு வழிவகுத்தது எனவும் மற்றும் முக்கியமாக தமிழ்

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

நன்றி.

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

## மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சரின் உரைக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மறுப்பு அறிக்கை”

4

**எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# வாசலிலே கிருஷாந்தி

10.09.2025




யாழ்ப்பாணத்து வெளிகள் யாவும் போர்க்காலத்துப் படை நடவடிக்கைகளோடு தொடர்புடையவை. போர்க்கால வியூகங்களின் ஒரு பகுதியாகக் காணப்பட்டவை. சிலசமயம் வெளிகளே கவசங்கள். சில சமயம் வெளிகளே பொறிகள். ராங்கிகளையும் விமானங்களையும் வைத்திருந்த அரச தரப்பு வெளிகளை எப்பொழுதும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கும். ஆனாலும் அது இலகுவானதாக இருந்ததில்லை. மறைப்பில்லாத வெளிகளில் சிந்தப்பட்ட குருதியை, படிந்த சாம்பலை, புதைந்த ரவைக் கோதுகளை பருவமழை கழுவிச் சென்றிருக்கலாம். ஆனால் பெரும்பாலான வெளிகள் போர்க்காலத்தின் நினைவுகளால், காயங்களால், மரணங்களால், புதிர்களால், மர்மங்களால், இன்னமும் வெளியில் வராத ரகசியங்களால் நிரப்பப்பட்டவை. தேற்றப்படவியலாத் தாய்மாரின் துக்கத்தால், கண்ணீரால் நிரப்பப்பட்டவை.

அவற்றுள் ஒன்றுதான் செம்மணி வெளியும்.அதன் ஒருபகுதி பருவ காலக் கடலேரி. பயிர் பச்சை வளராத தரவை. இன்னொருபுறம் வயல்வெளி. நடுவே அனாதைபோல செல்லும் கண்டி வீதி. உப்பும் ஊரியும் விளையும் பருவ கால கடலேரியிலிருந்தும் வயல்வெளிகளில் இருந்தும் குடிமனை தொலைவில் உள்ளது. ஒரு குறுகிய இடைவெளிக்குள் இரண்டு சுடுகாடுகளும் ஓர் இடுகாடும் அங்கே உண்டு.

யாழ் நகரத்துக்கும் தென்மராட்சிக்கும் இடையிலான கழுத்துப் பகுதியில் அமைந்திருக்கும் அதன் புவியியல் அமைவிடம்தான் இன்று அது பெற்றிருக்கும் அரசியல் கவனக் குவிப்புக்குக் காரணம். யாழ் நகரப் பகுதியின் ஏறக்குறைய தலைவாசல் பகுதியில் அது அமைந்திருக்கிறது. நகரத்தின் நுழைவாயில் என்பதனால் அதற்கு ஒரு கேந்திர முக்கியத்துவம் உண்டு. எனவே யாழ் நகரப் பகுதியின் கழுத்தை இறுக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் அங்கே சோதனைச் சாவடிகளைப் பேணுவார்கள். அதன் அமைவிடம் காரணமாக செம்மணி வெளிக்கு ஒரு படைத் துறைக் கேந்திர முக்கியத்துவம் உண்டு. பயணக் குறிப்புகள்

அது மட்டுமல்ல, அது பெருமளவுக்கு ஆளரவம் குறைந்த ஒரு வெளி. ஊரடங்குச் சட்டத்தின் மூலம் கண்டி வீதியில் போக்குவரத்தை நிறுத்தினால் அங்கே பார்வையாளர்கள், சாட்சிகள் இருக்க மாட்டார்கள். இதுதான் அது பின்னர் புதை குழியாக மாற ஒரு காரணம்.

கிருஷாந்திக்கு முன்பு வரை செம்மணி ஒரு புவியியல் பதம். கிருஷாந்திக்கு பிறகு அது ஓர் அரசியல் பதம். முள்ளி வாய்க்காலைப் போல. அங்குள்ள வயல்வெளிகளில் விளைந்த ஒரு நெல்லினத்தின் பெயர்தான் செம்மணி என்று ஒரு தகவல் உண்டு. இப்பொழுது பாவனையில் இல்லாத ஒரு நெல் இனம் விளைந்த வெளியில் போர்க்காலத்தில் “சா விளைந்தது”.

செம்மணிக்குள் தமிழர்கள் புதைக்கப்பட்டார்கள் என்ற தகவலை முதலில் வெளியே சொன்னது, அரச படைத் தரப்பைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சோமரத்னதான். கிருஷாந்தி குமாரசாமியின் வழக்கில் தன் மேலதிகாரிகள் தன்னைப் பலியிட்டு விட்டார்கள் என்ற கோபத்தில் அவர் தான் சார்ந்த படைக் கட்டமைப்பைக் காட்டிக் கொடுத்தார். அங்கிருந்துதான் செம்மணிக்குள் நூற்றுக்கணக்கானவர்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ரகசியம் வெளியே வந்தது. அதை இன்னொரு விதமாகச் சொன்னால் அமைதியுறாத கிருஷாந்தியின் ஆன்மா புதைக்கப்பட்ட உண்மையை வெளியே கொண்டு வந்தது என்றும் சொல்லலாம்.பயணக்குறிப்புகள்

அது திருமதி சந்திரிக்காவின் ஆட்சிக் காலம். சமாதான தேவதையாக வேடம் பூண்டு அவர் ஆட்சிக்கு வந்தார். அவருடைய ஆட்சி காலத்தில்தான் குடா நாட்டுக்கான சமரில் படைத்தரப்பு முதல் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வெற்றியைப் பெற்றது. அந்த வெற்றியை சந்திரிகாவின் மாமனார் ரத்வத்த தங்கத்தட்டில் வைத்து சந்திரிகாவுக்கு பரிசளித்தார். அதாவது வேறொரு நாட்டை வெற்றி கொண்டு அந்த வெற்றிச் செய்தியை பரிசளிப்பதைப் போல. மாமனும் மருமகளும் அதனை வெற்றியாகக் கொண்டாடியிருக்கலாம். ஆனால் அந்த வெற்றிப்பிரகடன நிகழ்வானது ஒரு விதத்தில் உபயோகபூர்வமாக இந்த சிறிய தீவில் இரண்டு நாடுகள் இருக்கின்றது என்பதனை ஒப்புக்கொண்டது.




வெற்றி கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்தை சந்திரிக்கா அமைதி நகரம் என்று பெயரிட்டார். ஆனால் அது அமைதி நகரமாக இருக்கவில்லை. அந்த வெற்றி முழுமையற்றது என்பதனை விடுதலைப்புலிகள் இயக்கம் பின்னர் நிரூபித்தது. தொடர்ச்சியாக படைத்தரப்பின் மீது தாக்குதல்கள் அதிகரித்த பொழுது அவற்றை எதிர்கொள்ள முடியாத சந்திரிகாவின் அரசாங்கம் பொதுமக்களை பழிவாங்க தொடங்கியது. கைது மற்றும் காணாமல் போதல்கள் தொடங்கின. இவ்வாறு காணாமல் போனவர்களைப் புதைத்த இடங்களில் ஒன்றாகவே செம்மணி இப்பொழுது பார்க்கப்படுகிறது.

அதை வெளியே கொண்டு வந்தது கிருஷாந்தியின் வழக்கு. கிருஷாந்தி படித்தது யாழ்ப்பாணத்தின் முன்னணி புரொடஸ்தாந்து மகளிர் கல்லூரியில். அவர் படித்த நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய உறவினர்கள் செல்வாக்கு மிக்க பொறுப்புகளில் இருந்தார்கள். எனவே அவருடைய விவகாரம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டதற்கு அவருடைய குடும்பப் பின்னணி ஒரு காரணம். அதைவிட சந்திரிக்கா தன்னை சமாதான தேவதையாக நிரூபிப்பதற்கு, குறிப்பாக உள்நாட்டு நீதியின் நம்பகத் தன்மையை வெளியுலகைத்துக்கு நிரூபிப்பதற்கு கிருஷாந்தியின் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருந்தது.

அவ்வாறு தண்டிக்கப்பட்ட சோமரட்ன, அரசாங்கத்துக்கு எதிராக வழங்கிய வாக்குமூலத்தில் இருந்துதான் செம்மணிக்குள் மனிதப் புதைகுழி இருப்பது தெரியவந்தது.

எனவே செம்மணி முதலில் வெளிவந்ததற்கு காரணம் கிருஷாந்தியின் வழக்கு. அதில் துணிந்து போராடிய அவருடைய உறவினர்கள் அரசியல்வாதிகள். இப்படிப் பார்த்தால் செம்மணிக்குள் புதைகுழி இருப்பதை முதலில் வெளியே கொண்டு வந்தது அவர்களுடைய உழைப்புத்தான். இது முதலாவது சந்தர்ப்பம்.

இரண்டாவது சந்தர்ப்பமும் எதிர்பாராமல் கிடைத்த ஒன்றுதான். சித்துபாத்தி மயானத்தில் மின் தகன மேடை அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்த பொழுது எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. 29 ஆண்டுகளாக புதைக்கப்பட்டிருந்த உண்மை மீண்டும் வெளிவர தொடங்கியுள்ளது. எனவே தொகுத்துப் பார்த்தால் செம்மணி ஒரு புதைகுழி மட்டுமல்ல. தமிழ் அரசியலில் புதிய வாய்ப்புகளைத் திறக்கும் ஓர் அரசியல் வெளியாகவும் காணப்படுகிறது.

தனக்கு மட்டுமல்ல, தன்னோடு சேர்த்து புதைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக் குமான நீதியைத் தேடி கிருஷாந்தியின் ஆன்மா அமைதியுறாது அந்த வெளியெங்கும் அலைந்து திரிகிறது.

96 ஆம் ஆண்டு நான் எழுதிய கவிதையில் அவளை “அமைதி நகரின் மணம்பேரி” என்று அழைத்தேன். மணம்பேரி ஒரு சிங்கள அழகு ராணி. கதிர்காமத்து அழகி. அவருக்கு ஜேவிபியோடு தொடர்பு இருந்தது. ஜேவிபியின் முதலாவது போராட்டத்தின்போது அவர் கைது செய்யப்பட்டு பாலியல் ரீதியாகச் சிதைக்கப்பட்டு குறை உயிரோடு எரிக்கப்பட்டார். அது இலங்கைத் தீவின் முதலாவது பெண் பிரதமராகிய சிறீமாவோ பண்டாரநாயக்காவின் காலம்.

அழகு ராணி மணம்பேரியின் குருரமான சாவை அடுத்த தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிறீமாவோவுக்கு எதிரான பிரச்சாரத்தில் பயன்படுத்தினார். பிரச்சார மேடைகளில் மணம்பேரியின் ஆவி மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டது. அது சிறீமாவுக்கு எதிராகத் திருப்பப்பட்டது. சிறீமாவோ தோற்கடிக்கப்பட்டார். சிறீமாவோவின் மகள் சந்திரிகாவின் காலத்தில் கிருஷாந்தி சிதைக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்டார். மணம்பேரியைப் போலவே கிருஷாந்தியும் இலங்கைத்தீவின் அரசியலில் புதிய சாத்திய வழிகளைத் திறந்து விட்டுள்ளார்.

இத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகள் அவற்றின் அரசியல் உள்ளடக்கம் காரணமாகவே சேகரிக்கப்பட்டவை. இங்கு அரசியல் உள்ளடக்கத்துக்குத்தான் முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவிதைகளின் அழகியல் பெறுமதிக்கு அல்ல. இதில் பல கவிதைகள் கவிதைகளாக முழுமையுறாதவை. அந்த அடிப்படையில் பார்த்தால் இத்தொகுப்பு ஓர் அரசியல் ஆவணமாகவே முக்கியத்துவம் பெறுகிறது. அதன் அழகியல் பெறுமதியைத் தனியாக ஆராயப்பட வேண்டும்.

கிருஷாந்தி கொல்லப்பட்ட பின் முதலாவது செம்மணித் தொகுப்பு 1998 இல் வெளிவந்தது. இப்பொழுது இரண்டாவது தொகுப்பு 27 ஆண்டுகளின் பின் வெளி வருகின்றது. இங்குள்ள தொடர்ச்சி என்னவென்றால், 29 ஆண்டுகளுக்குப் பின்னரும் அமைதியுறாத கிருஷாந்தியின் ஆன்மா மீண்டும் மீண்டும் செம்மணியை ஒரு பாடு பொருளாக வைத்திருக்கிறது. செம்மணி வெளி மீண்டும் மீண்டும் தமிழ் அரசியலில் புதிய வாய்ப்புகளைத் திறந்து கொண்டேயிருக்கிறது. சிதைத்துக் கொல்லப்பட்ட கிருஷாந்தியின் அமைதியுறாத ஆன்மா அவளைக் கொன்றவர்களை விடாது துரத்திக் கொண்டேயிருக்கிறது.

வாசலில் நிற்கிறாள் கிருஷாந்தி. செம்மணி வெளியெலாமாகி கைதடி வெளியெலாமாகி.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக கடந்த 29 ஆண்டுகளில் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்புக்கு எழுதிய முன்னுரை.

ஒகஸ்ட் 05 ,2025
யாழ்பாணம்.
நன்றி: நிலாந்தன்

# ஈகைச்சுடர் திலீபனின் வாசகங்கள்

♦ நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.

♦ தமிழ் மக்கள் மிகவும் வழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

♦ விடுதலை புலிகள் வாழ வேண்டும் என்றோ, ஆள வேண்டும் என்றோ அசைகொள்ளவில்லை. எமது மக்களுக்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக் குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

♦ மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது.

♦ எமது உரிமைகளை நாமே பென்றெடுக்கவேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது.

♦ நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபொரும் புரட்சி வெடிக்கட்டும்.

♦ எம் எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல்தான் நாளை எமது எரிர்கால சந்ததியும் துன்பப்படும், கருதப்படும்.

♦ நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

♦ ஒரு மாபெரும் சதிவலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிக்கவேண்டும்.




♦ என் போராட்ட வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகிறேன்.

♦ எமது போராட்டத்தை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமையவேண்டுமெனத் தீர்மானிக்கவேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

♦ சுதந்திரத்திற்கு விலையாக எங்கள் உணிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்.

♦ மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போராளிகளுடன் தானும் பார்த்து மகிழ்வேன்.

♦ மரணம் ஒரு தடவைதான் வரும். ஆதற்காக மானத்தை விற்றுச் சிவிக்கமுடியுமா? இறப்புக்குப் பயந்து ,னத்தை அழியவிட முடியுமா?

♦ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இனவாதப் பூதம் விழுங்கும் போது, இந்தியா எமது நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டி ஏற்படும்.

♦ எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.

♦ எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.



# வீரவணக்கம் 26.09.2025



லெப்.கேணல் திலீபன்
இராசையா பார்த்திபன்

கேணல் சங்கர் / முகிலன்
வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்








உலக வணிகம் ULAGA VANIKAM

# 2026



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளப்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

# மீண்டும் கொந்தளிக்கும் நேபாளம்: சமூக வலைத்தள தடை நீக்கப் போராட்டம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

09.09.2025

நேபாளத்தில் கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்னர் 2008-ம் ஆண்டு மே மாதம் இந்து மன்னராட்சி முடிவுக்கு வந்தது. கடந்த 239 ஆண்டுகளாக இருந்து வந்த மன்னராட்சியை அகற்ற வலியுறுத்தி பல ஆண்டுகளாக நடந்த போராட்டத்துக்கு அப் போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் போராட்டத்தில் 16,000 பேர் உயிரிழந்தனர்.

இப்போது அங்கு நடக்கும் ஜனநாயக ஆட்சியை பார்த்து முன்பு இருந்த மன்னராட்சியே மேல் என்ற மனநிலைக்கு மக்கள் வந் துள்ளதாக சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது உணர்ச்சிபூர்வமான இளைஞர் புரட்சியால், மீண்டும் கொந்தளிக்கும் நிலைக்கு நேபாளம் சென்றுள்ளது.

சமூக வலைத்தளங்கல் தடை செய்யப்பட்ட நிலையிலும் உணர்ச்சிபூர்வமான இளைஞர் போராட்டம் நேபாளத்தில் தொடர்கிறது.

நேபாளம் தற்போது வரலாறு காணாத போராட்டங்களால் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. இந்த போராட்டங்களை வழிநடத் துபவர்கள் வேறு யாருமல்ல, சமூக ஊடகங்களில் கொடிகட்டிப் பறக்கும் Gen Z என்ற (ஜெனரேஷன் Z) இளைஞர்கள் தான்.

## Gen Z இளைஞர் புரட்சி:

நேபாள அரசு, Facebook, Instagram, YouTube உள்ளிட்ட 26 முக்கிய சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்ததால்தான் இந்த ஆவேசப் போராட்டம் வெடித்தது. இந்த தளங்கள் நேபாள அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்படாததே தடைக்கான காரணம் என அரசு கூறினாலும், இளைஞர்கள் இதை நம்பவில்லை.

ஆயினும் உண்மையான காரணம் இதுதான். சமூக ஊடகத் தடை என்பது ஒரு தீப்பொறிதான். பல ஆண்டுகளாக நேபாள இளைஞர்கள் மனதில் குமுறிக் கொண்டிருந்த கோபம்தான் இந்த போராட்டம்.

வேலையின்மை, வறுமை, மற்றும் அரசின் அப்பட்டமான ஊழல்கள் என பல்வேறு பிரச்சனைகளால் அவர்கள் விரக்தி யின் உச்சத்தில் இருந்தனர். இதற்கிடையில், #NepoKid (#ஊழல்_பிள்ளைகள்) என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்களில் பரவி, அரசியல்வாதிகளின் ஆடம்பர வாழ்க்கை முறையையும், சாதாரண மக்களின் வறுமையையும் ஒப்பிட்டு, அவர்களின் கோபத்தை மேலும் தூண்டியது.

## போர்க்களமான தலைநகர்:

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தலைநகர் காத்மண்டுவில் கூடி, நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டனர்.

காவல்துறை அடக்குமுறை தொடர்ந்தது. போராட்டக்காரர் களை கலைக்க காவல்துறை தடியடி, கண்ணீர் புகை குண் டுகள் மற்றும் ரப்பர் குண்டுகளைப் பயன்படுத்தியது.

சில இடங்களில் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. அத்துடன் அதிர்ச்சியூட்டும் மரணங்களாக போராட்டங்களில் பல இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே உள்துறை அமைச்சர் ராஜினாமா செய்துள்ளார். மக்கள் கோபத்தின் விளைவாக, நேபாளத்தின் உள்துறை அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்த மாற்றம் எங்கள் தலைமுறையில் தொடங்க வேண்டும் என இளைஞர்கள் ஆவேசமாக முழங்குகின்றனர். வெறும் சமூக ஊடகங்களுக்காக மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்திற் காகவே இந்த போராட்டம் என்பதை அவர்கள் தெளிவுபடுத் தியுள்ளனர்.

இந்த போராட்டம் நேபாளத்தின் அரசியல் மற்றும் சமூக அமைப் பில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குமா என்பதை பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.

## யாரிந்த ஜென் Z தலைமுறை ?




**பொதுவாக 1997 முதல் 2012 வரை பிறந்தவர்கள் ஜென் Z தலைமுறையினர் என்று நேபாளத்தில் வரையறுக்கப்படும் இளைஞர்கள்.**

**வேலையின்மை, வறுமை, மற்றும் அரசியன் அப்பட்டமான ஊழல்கள் என பல்வேறு பிரச்சனைகளால் அவர்கள் விரக்தியின் உச்சத்தில் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

பொதுவாக 1997 முதல் 2012 வரை பிறந்தவர்கள் ஜென் Z தலைமுறையினர் என்று நேபாளத்தில் வரையறுக்கப்படுகின் றனர். தொழில்நுட்ப வளர்ச்சி அசுர வேகமெடுத்த காலத்தில் பிறந்த இவர்கள் சமூக வலைதளங்களை உணர்வுபூர்வ மாகவும் அணுகுபவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில், நேபாளத்தில் இந்த ஜென் Z தலைமுறையினர், இன்று மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். ஒரே நேரத்தில், தலைநகர் காத்மாண்டு மற்றும் முக்கியப் பகுதிக ளான பொக்காரா, புட்வால், தாரன், கோரஹி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கில் திரண்ட இளைஞர்கள் பொலிசாரை திக்குமுக்காட வைத்துள்ளனர்.

போராட்டக் களத்தில் உள்ள இளைஞர்கள் நாங்கள் எந்த ஓர் அரசியல் கட்சிக்கு எதிராகவும் அல்லது எந்தவொரு குழுவின் உந்துதலாலும் திரளவில்லை. மாறாக ஊழல் எதிர்ப்பு, சமூக வலைதள பயன்பாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிர்ப்பு, வாரிசு அரசியல், பாரபட்ச அரசியலுக்கு எதிர்ப்பு போன்ற கார ணங்களுக்காக தன்னெழுச்சியாகத் திரண்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.

## இணையத்தில் தொடங்கி வீதிக்கு வந்த போராட்டம்:

நேபாளத்தில், சமூக ஊடகங்களுக்கு அரசு விதித்த தடையை எதிர்த்து, 'ஜென் Z' தலைமுறையினர் மிகப் பெரிய போராட் டத்தை தற்போது நடத்தி வருகின்றனர். இணையத்தில் தொடங் கிய இந்த போராட்டம், இன்று வீதிக்கு வந்து வன்முறையாக மாறியுள்ளது.

தலைநகர் காத்மாண்டுவில் உள்ள நாடாளுமன்றம் அருகே காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில், குறைந்தது 30 போராட்டக்காரர்கள் உயி ரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என சுயாதீன தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றம் நோக்கி ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பேரணியாக சென்றபோது, நிலைமை கட்டுக்கடங்காமல் போனதால், காத்மாண்டுவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேலும், அமைதியை நிலைநாட்ட நேபாள இரா ணுவமும் களமிறக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரி விக்கின்றன.

நேபாள அரசு, கடந்த வாரம் செப்டம்பர் 4-ஆம் திகதி முதல் 26 சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்தது. தகவல் தொடர்பு அமைச்சகத்தில் பதிவு செய்ய தவறியதே இதற்கு முக்கிய காரணம் என அரசு கூறியது. ஆனால், இது கருத்து சுதந் திரத்தை நசுக்கும் முயற்சி என போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தத் திடீர் சமூக ஊடகத் தடை, ஏற்கெனவே ஊழல் மற்றும் பொருளாதார பிரச்சனைகளால் கோபத்தில் இருந்த நேபாள இளைஞர்களை, வீதியில் இறங்கி போராட தூண்டிய ஒரு முக் கியமான காரணமாக கருதப்படுகிறது.

## சமூக வலைதளங்களுக்கு தடை:

நேபாள நாட்டின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்நாட்டில் இயங்கும் அனைத்து சமூக வலைதள நிறுவனங்களும் பதிவு செய்ய வேண்டும் என அந்நாட்டின் பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 28-ம் திகதி அன்று சமூக வலைதள நிறு வனங்கள் பதிவு செய்ய 7 நாட்கள் காலக்கெடு வழங்கியது நேபாள அரசு. அந்த கெடு முடிந்த நிலையில் 4-ம் தேதி அன்று பதிவு செய்யாமல் உள்ள 26 சமூக வலைதளங்கள் அங்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் பதிவு செய்யும் வரையில் தடை நட வடிக்கை தொடரும் என அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. தற்போது எக்ஸ், பேஸ்புக், யூடியூப் என 26 சமூக வலை தளங்கள் நேபாளத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. நேபாள அரசின் சமூக வலைதள தடைக்கு பேச்சுரிமை ஆர்வலர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தடைக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் வெடித்துள்ளது. பேச்சுரிமை ஆர்வலர்கள் அந்நாட்டின் நாடாளுமன்றம் வளாகம் அருகே போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பிரபல நடிகர்கள் மற்றும் கலைஞர்கள் நேபாள பொதுமக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தில் கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்னர் 2008-ம் ஆண்டு மே மாதம் இந்து மன்னராட்சி முடிவுக்கு வந்தது. கடந்த 239 ஆண்டுகளாக இருந்து வந்த மன்னராட்சியை அகற்ற வலியுறுத்தி பல ஆண்டுகளாக நடந்த போராட்டத்துக்கு அப் போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் போராட்டத்தில் 16,000 பேர் உயிரிழந்தனர்.

இப்போது அங்கு நடக்கும் ஆட்சியை பார்த்து முன்பு இருந்த மன்னராட்சியே மேல் என்ற மனநிலைக்கு மக்கள் வந்துள்ள தாக சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன.







# களத்துக்கு பூத்தவனே திலீபா!

திலீபா...
நீ, செத்து விட்டதா
எவன் சொன்னது?

எங்கள் குருதியில்
அணுக்களாய் சேர்ந்து
மூச்சுக்காற்றாய்
இன்றும் நீ, வாழ்கிறாய்...

சாவை அழைத்து
மடியினில் அமர்த்தி
கொஞ்சம் கொஞ்சமாய்
உன் உடலையே
தின்னக் கொடுத்தாய்!

உண்ணா நோன்பென்பதின்
அர்த்தத்தை
காந்தியின் கல்லறைக்குமல்லவா
சொல்லிக்கொடுத்தாய்!

தமிழீழ தாகம் தீர்க்க
பசி வேள்வியிலொரு
யாகம் தொடங்கினாய்!

சுதந்திர சோலை யமைக்க
போர்க்களத்தில்
குருதிப் பூவா யல்லவா
விதையாக மாறினாய்!

ஆயுதப் படைகளை எதிர்த்து
பட்டினிப் போர் தொடங்கி
அகிம்சை அம்புகளை வீசினாய்!

இருட்டு மண்ணில்
வெளிச்சம் பிறக்க
உன் சிதைக்கு
நீயே யல்லவா
நெருப்பை மூட்டினாய்!

தமிழன் கோட்டையில்
புலிக்கொடி பறந்திட
யுத்த களத்தில்
நீயும் சாம்பலாய் உதிர்ந்தாய்!

மெழுகாய் உன்னை உருக்கி
தீப் பிழம்பா யல்லவா
எழுந்து வெடித்தாய்!

பட்டினி கிடந்து
பசியினை சுவைத்து
காற்றுக்கே
உணவாய் உயிரைக்கொடுத்தாய்!

ஈழம் பிறக்க
தாய் மண்ணுக்குள்
உன் உடலையல்லவா
கருவாய் புதைத்தாய்!

புலியாய் பிறந்து
வரலாற்று பக்கங்களில்



நீ, வாழ்ந்ததாய் பொறித்தாய்!

சரித்திர சுவடுகளில்
புலிகளின்
துப்பாக்கிக் குண்டுகளாயல்லவா
இன்றும் நீ, வாழ்கின்றாய்!

சுதந்திரக் காற்றை
சுவாசிக்க எண்ணி
வீரியப் புயலாய்
அன்று நீ, மறைந்தாய்!

ஆயிரமாயிரம்
புலிகளையல்லவா
விரட்சமாய் இன்று நீ, முகிழ்ந்தாய்!

பசியையே
பற்றவைத்து
அதில் தீயாய் நீயே எரிந்தாய்!

திலீபா
அன்று நீ, வாழ்ந்தாய்

எங்கள்
குருதியிலும்
மூச்சிலும்
இன்று நீ, வாழ்கிறாய்!

–வவுனியான், தமிழ்நாடு

# ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களைப் பாதுகாத்துள்ள இலங்கை, பி.பி.சியின் செய்தியாளரின் கொலை பற்றிய விசாரணையில் ஏற்பட்ட தோல்வியினை ஆராயும் அறிக்கை


07.09.2025


**பத்திரிகை அறிக்கை: ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களைப் பாதுகாத்துள்ள இலங்கை, பி.பி.சியின் செய்தியாளரின் கொலை பற்றிய விசாரணையில் ஏற்பட்ட தோல்வியினை ஆராயும் அறிக்கை**

**ஜொகானஸ்பேர்க் –** இலங்கை கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகவியலாளர்களின் கொலைகளைத் திட்டமிட்ட ரீதியில் பாதுகாத்து வருவதாக 2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இடம்பெற்ற பி.பி.சி. யின் யாழ் செய்தியாளரான மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை குறித்த பொலிஸ் விசாரணைகளின் தோல்விகள் பற்றி ஆராயும் ஒரு புதிய அறிக்கை தெரிவிக்கின்றது. குறைந்தது 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் 2000 ஆம் ஆண்டுக்கும் 2010 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் உள்நாட்டுப் போர் குறித்து செய்தி வெளியிட்டு வந்தவேளையில்க் கொல்லப்பட்டார்கள். இன்று வரை, இந்தக் கொலைகள் எவற்றுக்காகவும் ஒரு குற்றவாளியும் உட்படுத்தப் படவில்லை. பொறுப்புக்கூறலுக்கு

“இவ்வாறு தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலைமை, தமது உயிர்களை ஆபத்திற்குள்ளாக்கி சுய தணிக்கை செய்து அல்லது நாடு கடந்து வாழும் இலங்கையச் சேர்ந்த ஏனைய ஊடகவியலாளர்களுக்கு அச்சமூட்டும் செய்தியினை அனுப்புவதாக” சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் (ITJP) நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ITJP மற்றும் REDRESS இனால் இணைந்து எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த 70 பக்க அறிக்கையானது, பிபிசி இன் செய்தியாளரான நிமலராஜன் மயில்வாகனம் அவர்களின் கொலை குறித்த இலங்கைப் பொலிசாரின் விசாரணை பற்றிய ஒரு தடயவியல் ஆய்வினை வழங்குகின்றது. அத்துடன் ஒரு வழக்கு எப்படி இடம்பெறக்கூடாதோ அதற்கு உதாரணமான விசாரணைத் தோல்விகளைக் கொண்ட ஒரு வழக்கு இது எனவும் இந்த அறிக்கை முடிவுசெய்துள்ளது. கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடம் ஒரு போதும் பாதுகாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை படங்கள் எதுவும் எடுக்கப்படவுமில்லை அல்லது தடயவியல் ஆதாரங்கள் எதுவும் சேகரிக்கப்படவுமில்லை. பல இராணுவச் சோதனை நிலையங்களால் சூழப்பட்ட ஒரு உயர் பாதுகாப்பு வலையத்தில் இறுக்கமான ஊடரங்கு உத்தரவு அமுலில் இருந்த வேளையில் இந்தக் குற்றம் இடம்பெற்ற போதிலும் நிமலராஜனின் வீடு ஒரு போதுமே சுற்றிவளைக்கப்படவில்லை. சம்பவம் இடம்பெற்ற இரவு கடமையில் இருந்த சில பாதுகாப்பு படையினரை விசாரிப் பதற்கே பல வருடங்கள் எடுத்தது. ஆனாலும், பலர் ஒரு போதுமே அடையாளங்காணப்படவும் இல்லை, விசாரணைக்கு உட்படுத்தப்படவுமில்லை. தடய அறிவியல் ஆதாரங்கள் சரியான முறையில் கையாளப்படவில்லை. அத்துடன் பகுப்பாய்வுகளும் புரிந்து கொள்ள முடியாத அளவற்கு தாமத மடைந்தன. நிமலராஜனுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் அல்லது அவருக்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை ஆனால், அதற்குப் பதிலாக விநோதமான முறையில் அவரது வங்கிக் கணக்கு விசாரணக்குட்படுத்தப் பட்டது. பாதுகப்பு படையினரின் உதவியுடன் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் சுதந்திரமாக சுற்றித்திரியவும், மேலும் கொலை களைச் செய்யவும் பின்னர் நாட்டைவிட்டு வெளியேறவும் அனு மதிக்கப்பட்டார்கள். சந்தேக நபர்கள் விசாரணை செய்யப்பட்ட போது அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கூறியபோது அதனை மேலும் ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு குற்றஞ்சுமத்தப்படாமல் விடுதலை செய்யப்பட்டார்கள். கவலை தரும் வகையில், இந்த வழக்குடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் அடிக்கப்பட்டு காயங்களுடன் வந்ததுடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சித்திரவதை செய்யப்பட்டதுடன் பொய்யான ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பமிடவும் நிர்பந்திக்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது.




இதற்கிடையில், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் (EPDP) உறுப்பினர்கள் இந்தக் கொலைக்குப் பொறுப்பானவர்கள் என சொல்லப்படுகின்ற போதிலும் அந்தக் கட்சியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா இந்தக் கொலை பற்றி பொலிசாரால் ஒரு போதும் விசாரணை செய்யப்படவில்லை. பதிலாக 2000 ஆண் டிலிருந்து கிட்டத்தட்ட எல்லா அரசாங்கத்தினாலும் திரும்பத் திரும்ப அமைச்சரவை அமைச்சர் ஆக்கப்பட்டிருக்கின்றார். 2024 இல் மட்டும் தனது பதவியை இழந்தாலும் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். மாறாக, தமது மகனைக் கொன்றவர்களுக்கு நீதிகிடைக்க காத்திருந்த வேளையில் நிமலராஜனின் தாய் மற்றும் தந்தையர் கனடா வில் வசித்து வந்த வேளையில் இறந்துபோனார்கள்.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

REDRESS
Ending torture, seeking justice for survivors

இலங்கையில் நம்பத்தகுந்த உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் இல்லாத நிலையில், ஐக்கிய இராய்ச்சியமானது இந்த வரலாற்றுக் குற்றம் பற்றி விசாரணை ஒன்றினை மேற்கொண்டுள்ளது. 25 பெப்ரவரி 2022 இல் மெட்ரோபொலிட்டன் பொலிசாரின் போர்க் குற்ற பிரிவு அணி 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் உள்நாட்டுப் போருடன் தொடர்புபட்ட போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து “முன்னேற்றமான விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து நிமலராஜனின் கொலைக்காக இங்கிலாந்து நோக்கம்டன்சியர் (Northamptonshire) இல் பெயர் குறிப்பிடப்படாத 48 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டது பற்றி அறிவித்தது.” தமது விசாரணையைத் தொடர்வதாகவும் அத்துடன் விசாரணைக்கு உதவக்கூடிய வகையில் இந்தச் சம்பவம் பற்றி நேரடித் தகவல்களை வைத்திருப்பவர்களிடமிருந்து அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் கூறி போர்க்குற்ற அணி ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்தது.

சந்தேக நபரின் அடையாளத்தினைப் பிரிட்டன் பொலிசார் பகிரங்கப்படுத்தவில்லை, ஆனால் இந்த நபர் இலங்கையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது சந்தேகநபராக பெரிதும் நம்பப்படும் ஈபிடிபி உறுப்பினரான “நெப்போலியன்” ஆவார். இவரைக் கைது செய்து நீதி மன்றத்தின் முன் நிறுத்துமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்று உத்தரவிட் டிருந்தது. ஆனால் அவர் கைது செய்யபடுவதில் இருந்து தப்பி நாட்டைவிட்டுச் சென்றுவிட்டார்.

2017 இல், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யும் பிரித்தானிய மெற்றோ பொலிற்ரன் (Metropolitan) பொலிசினுடைய பயங்கரவாத தடுப்பு பிரிவின் கீழ் உள்ள ஒரு விசேட பிரிவுக்கு ஐவுதீ மற்றும் றெட்றெஸ் (REDRESS) ஒரு பரிந்துரையை மேற்கொண்டது. 2023 இல், இந்தப் பரிந்துரையினையடுத்து, 2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒரு அரசியல் பேரணியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களுடன் தொடர்புபட்டதாக இன்னுமொருவர் கைது செய்யப்பட்டார்.

”சம்மந்தப்பட்ட அரசானது நடவடிக்கை எடுக்கத்தவறும் போது பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்துவதில் யுகே போன்ற நாடுகள் எவ்வாறு முக்கிய பங்கினை வகிக்கமுடியும் என்பதனை இந்த வழக்கு காட்டுகின்றது” என றெட்றெஸின் (REDRESS) பணிப்பாளர் றுபேட் ஸ்கில்பேக் (Rupert Skilbeck) தெரிவித்தார்.

உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வடபகுதி யாழ்க்குடாநாட்டில் இருந்து செய்திகளை சுயாதீனமாக வெளியிட்ட குரல்களில் ஒன்றாக இருந்த நிமலராஜன் பிபிசி சிங்கள சேவையின் செய்தியாளரகவும், பல தமிழ் ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி உதவியவராகவும் இருந்தார். இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றும் துணை ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பியினரால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் வன்முறை மற்றும் வாக்கு மோசடி பற்றிய விமர்சன அறிக்கைகளை வெளியிட்டதையடுத்து 19 ஒக்ரோபர் 2000 இல் அவர் படுகொலை செய்யப்பட்டார். நிமலராஜனின் வரலாறு நிலைத்து நிற்ககூடியதாக இவர் பணியாற்றிய பிபிசி, இலண்டனில் ஒரு சந்திப்பு அறைக்கு இவரது பெயரைச் சூட்டியுள்ளது அத்துடன் ஒவ்வொரு வருடமும் யாழ்பபாணத்தில் நிமலராஜன் மயில்வாகனத்தின் வாழ்க்கையை அவரது நண்பர்கள் நினைவுகூருகின்றனர்.

ITJP @ : Nrh/gp sophie@tpr-media.com

REDRESS இன் தொடர்புகளுக்கு : Eva Sanchis, தொடர்பாடல்களுக்கான தலைமை அதிகாரி,

eva@redress.org +44 (0)20 7793 1777



www.sangathamil.ca



# திலீபன் அண்ணா

பத்து மாதம் அன்னையவள்
பத்திரமாய்ச் சுமந்து உன்னை
நிலத்தில் பெற்றெடுத்தாள்
சத்தியமாய் உன்னைப் பெற்று
எடுத்த இடம் தமிழீழம்.

பத்து மாதம் சுமந்தவள்
இன்று
நிலத்தில் இருந்திருந்தால்
உன்
ஒட்டிய வயிறு கண்டு
இரத்தக் கண்ணீர் வடித்திருப்பாள்.
திலீபன் அண்ணா!
உங்களுக்கு
பசியால் பார்வை மங்குவது
எனக்குத் தெரிகிறது.
இங்கிருக்கும் மக்கள் கூட
உங்களிற்கு
மங்கலாகத் தெரிகிறார்கள்
ஆனால்
தமிழீழம் மட்டும் தெளிவாய்த் தெரிகின்றது.
உங்கள்
குழிவிழுந்த கன்னங்கள் கண்டு
இங்கு
குளமாகும் கண்கள்
எத்தனை, எத்தனை!

திலீபன்னண்ணா!
(உண்ணாமலிருக்கும் எங்களால் எப்படிச்
சிரிக்க முடியும்?)
எனக்குத் தெரியும்
நீங்கள் சாகும் போதும்
சிரித்துக்கொண்டே சாவீர்கள்.
ஏனென்றால்
நாங்கள் அழக்கூடாது என்பதற்காக.
எப்படியண்ணா அழாமல் இருக்க முடியும்?
உங்கள் ஒட்டிய வயிறும்,
குழிவிழுந்த கண்களும்,
குற்றுயிராய்க் கிடக்கும் நிலையும் கண்டால்
கல் நெஞ்சமும் கசிந்து கண்ணீர் விடும்.
உங்கள் நண்பர்கள் இங்கே
நடைப்பணமாய்த் திரிகின்றார்கள்.
அவர்கள் ஆசைப்படுவதெல்லாம்
மெயின் மெயின்
திலீபன்
அல்பேர்ட் அல்பேட்
திலீபன்
மில்லர் மில்லர்
திலீபன்
என்று நீங்கள் திரும்பத் திரும்ப
வோக்கியில் பேசுவதைத்தான்
தயவு செய்து
ஒரேயொரு முறை இறுதியாக
அவர்களுக்குப் பேசிக்காட்டுங்கள்.




அன்று செங்நிறச் சேலைகட்டி
செங்குருதியில் பொட்டும் இட்டு
பாதாயாத்திரைக்கு அனுப்பி வைத்தீர்களே
அவர்களுக்கும் இறுதியாக
ஒரேயொரு முறை
பேசிக்காட்டுங்கள்.

**லெப். கேணல் திலீபன் உண்ணாநோன்பு இருந்த போது**
**மாவீரர் கப்டன் கஸ்தூரியினால் மேடையில் வாசிக்கப்பட்ட கவிதை**

# 38ஆம் ஆண்டு வீரவணக்கம்

## 38th Year Veeravanakkam





24ஆம் ஆண்டு
வீரவணக்கம்
**கேணல் சங்கர்**
**வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்**
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
18.09.1949 - 26.09.2001

**ஐந்து அம்ச கோரிக்கைகள்:-**

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

SEPT 26

**"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"**



ஈகைச்சுடர்
Thileepan
**லெப். கேணல் திலீபன்**
**இராசையா பார்த்தீபன்**
ஊரெழு, யாழ்ப்பாணம்
27.11.1963–26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

**Demand as follows:-**

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

## The thirst of Tigers is the Homeland of Tamileelam

சங்கத்தமிழ்

# தையிட்டி; மயிலிட்டி; கச்சதீவு; செம்மணி

06.09.2025

**"நாங்கள் கேட்டது சர்வதேச விசாரணையை. அனுர தருவது சர்வதேச விளையாட்டு மைதானத்தை"**. என்று முகநூலில் ஒரு பதிவு காணப்பட்டது. தமிழ் மக்கள் அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கமோ "இதோ உங்களுக்கு விளையாட்டு மைதானம்; இதோ உங்களுக்கு மயிலிட்டித் துறைமுகம்; இதோ உங்களுக்கு வட்டுவாகல் பாலம்" என்றிவ்வாறாக அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்கின்றது.

அனுர அரசுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இந்த மாதத்தோடு ஓராண்டு முடிகிறது. பதவியேற்ற ஓராண்டு காலப் பகுதிக்குள் வடக்கிற்கு அதிக தடவைகள் வருகை தந்த ஒரே ஜனாதிபதியாக அவர் காணப்படுகிறார். கடந்த கிழமை அவர் வடக்கில் பல அபிவிருத்தி திட்டங்களையும் தொடக்கி வைத்துள்ளார். இடையில் ஒரு சாகசப் பயணமாக கச்சதீவுக்கும் போய் வந்திருக்கிறார்.

கடந்த ஓராண்டு கால பகுதிக்குள் வடபகுதிக்கு மட்டும் 1250 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் முல்லைத்தீவில் வைத்துச் சொன்னார். கடந்த கிழமை வடக்கில் அவர் மண்டைதீவில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல்லை நாட்டினார். மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திக்கான வேலைகளையும் தொடக்கி வைத்தார். யாழ்.நூலகத்தை டிஜிட்டல் தளத்தில் நுகர்வதற்குரிய வேலைகளையும் தொடக்கி வைத்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு கடவுச்சீட்டு அலுவலகத்தையும் திறந்து வைத்தார். வன்னியில் தெங்கு முக்கோணத் திட்டம் ஒன்றை தொடக்கி வைத்தார். வவுனியாவில் 7 ஆண்டுகளுக்கு முன் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் இருந்த மத்திய பொருளாதாரம் மையத்தைத் திறந்து வைத்தார். முல்லைத்தீவில் வட்டுவாகல் பாலத்தைப் புதிதாகக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார். "உங்களுக்கு ஒரு சக்தி வாய்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று முல்லைத்தீவில் வைத்து அனுர கூறினார்.

அபிவிருத்தி வேண்டும். அதில் சந்தேகமில்லை. போரால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்கள் தொடர்ந்து அந்த பாதிப்பில் இருந்து விடுபடாதவர்களாக காணப்படுகிறார்கள். அவர்கள் தங்களைப் பொருளாதார ரீதியாக பலப்படுத்த வேண்டும். எனவே அபிவிருத்தி வேண்டும்.

ஆனால் தமிழ் மக்கள் போராடியது அபிவிருத்திக்காக அல்ல. அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளுக்காகத்தான். திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் தமிழ் மக்களுக்கு உரிய கூட்டு உரிமைகள் வேண்டும். அந்தக் கூட்டு உரிமைகள் அதாவது அரசியல் உரிமைகளைக் கேட்டுத்தான் தமிழ் மக்கள் போராடினார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் வரையிலும் அதாவது தமிழ் மக்களின் கூட்டு உரிமைகள் உறுதி செய்யப்படும் வரையிலும் அபிவிருத்தியைச் செய்யாமல் இருக்க முடியாது என்பதனை கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் தமிழ்மக்கள் தமது கூட்டுரிமைக்கான கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறதா என்ற சந்தேகம் தமிழ் மக்களிடம் எப்பொழுதும் இருக்கும்.

அனுர அவருடைய யாழ்ப்பாண விஜயத்தின்போது தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு தெரியாமல் தனது நண்பர் ஒருவரின் வீட்டில், தட்டாதெருவில் தங்கியிருக்கிறார். இதற்கு முதல் முறை யாழ்ப்பாணம் வந்த பொழுது அவர் குருநகர் மத்தியூஸ் வீதியில் உள்ள க்யூடெக் அலுவலகத்திற்கு சற்று நேரே உள்ள ஒரு நண்பரின் வீட்டில்தான் இளைப்பாறிக், குளித்து உடைமாற்றிக் கொண்டு சாப்பிட்டார். கடந்த கிழமை புதுக்குடியிருப்புக்குச் சென்ற போது அங்கே தன்னுடைய கட்சிக்காக உழைக்கும் ஒருவருடைய வீட்டில் மதிய உணவை எடுத்தபின் அந்த வீட்டுக் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டு ஒரு படம் எடுத்துக் கொண்டார். பொதுவாக வடக்குக்கு வரும் ஜனாதிபதிகள் இங்குள்ள உயர்தர விடுதிகளில்தான் தங்குவார்கள். பாதுகாப்பு ஒரு காரணமாகக் கூறப்படும். ஆனால் அனுர தன் பழைய நண்பர்களைத் தேடிச் சென்று அவர்களுடைய வீடுகளில் தங்குகிறார்; உணவருந்துகிறார்; குளித்து உடுப்பு மாற்றிக் கொள்கிறார். சிங்கள மக்கள் மத்தியில் அவர் ஒரு எளிமையான, எளிதில் கிடைக்கக்கூடிய தலைவர் என்ற அபிப்பிராயம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்கள் மத்தியிலும் அப்படி ஒரு பிம்பத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கிறார்.

அவர் எந்தப் பிம்பத்தை கட்டியெழுப்பினாலும் இறுதியாக நிலைக்கப் போகும் பிம்பம் எது என்பதை இனப்பிரச்சினைக்கான அவருடைய தீர்வு எது என்பதுதான் தீர்மானிக்கப் போகிறது.

தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை அதன் தேர்தல் பிரச்சாரங்களிலும் அதன் தேர்தல் அறிக்கையிலும் காண முடிந்தது. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென்று ஏற்றுக்கொண்டால்தான் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்களைத் தாங்களே அபிவிருத்தி செய்யத் தேவையான கூட்டு உரிமைகளை ஏற்றுக்கொள்ளலாம்.






ஆனால் மயிலிட்டி அமைந்திருக்கும் அதே பிரதேசத்தில் சில கிலோமீட்டர் தொலைவில்தான் தையிட்டி அமைந்திருக்கிறது. அங்கு கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரையானது சிங்கள பௌத்த மயமாக்கலின், நிலப் பறிப்பின் ஆகப்பிந்திய குறியீடாக நிற்கிறது. தையிட்டி விகாராதிபதி மயிலிட்டியில் நடந்த வைபவத்துக்கு வருவாராக இருந்தால் அது ஒரு விவகாரமாக மாறும் என்று கருதியதனால் அந்த வைபவத்துக்கு எந்த மதத் தலைவர்களும் அழைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் மண்டைதீவில் வைத்து அனுர தையிட்டி விகாரதிபதியிடம் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

மயிலிட்டியில் அபிவிருத்திதையட்டியில் நிலப்பறிப்பும் சிங்கள பௌத்தமயமாக்கலும். இது தற்செயலான முரண்பாடு அல்ல. இவை இரண்டுமே ஒரே நோக்கத்தை கொண்ட அரசு இயந்திரத்தின் இரு வேறு செயற்பாடுகள்தான். ஒன்று வெளிப்படையாக ஆக்கிரமிப்பைச் செய்கின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களுடைய நிலத்தின் மீதும் கடலின் மீதும் உரிமை இல்லை என்பதனை அது நிரூபிக்கின்றது. இன்னொன்று தமிழ் மக்களை அபிவிருத்திக்குள் கரைத்து விட முயற்சிக்கின்றது. அதனால்தான் திரும்பத்திரும்பக் கூறவேண்டியிருக்கிறது, தமிழ் மக்கள் கேட்பது அபிவிருத்தியை அல்ல. அபிவிருத்தி




செய்வதற்கான கூட்டு உரிமைகளை என்று.

அபிவிருத்தி என்பது ஒரு சமூகம் அதன் நோக்கு நிலையில் இருந்து செய்ய வேண்டியது. அது அதன் நோக்கு நிலையிலிருந்து அபிவிருத்தியைத் திட்டமிடுவதற்கு அவசியமான கூட்டு உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் தனது கடலின் மீதும், துறைமுகங்களின் மீதும், காட்டின் மீதும், நிலத்தின் மீதும் அதன் வளங்களின் மீதும் அதிகாரத்தைக் கொண்டிராத ஒரு மக்கள் கூட்டமானது தனக்குரிய அபிவிருத்தியைத் தானே திட்டமிட முடியாது.


அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளை உறுதிப்படுத்தாமல் அபிவிருத்தியை முன்னெடுப்பது என்பது இனப்பிரச்சினையை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக வியாக்கியானப்படுத்தும் ஓர் உத்திதான்.

எதை அபிவிருத்தி செய்வது? எப்பொழுது செய்வது? எப்படிச் செய்வது? யாரிடம் உதவி எடுப்பது? போன்ற எல்லாவற்றையும் உதாரணமாக மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட விரிவாக்கம். மயிலிட்டித் துறைமுகம் எனப்படுவது ஒரு காலம் இலங்கைத்தீவின் முன்னணி கடல் வாணிபத் துறைமுகமாக விளங்கியது. தமிழ் மக்கள் நீண்ட கடல் எல்லையைக் கொண்டவர்கள். போருக்கு முன்பு தீவின் மொத்தக் கடலுணவில் கிட்டத்தட்ட 40 விகிதம் வடக்கிலிருந்தே கிடைத்தது. வடக்கில் மயிலிட்டிதான் முன்னணித் துறைமுகமாகக் காணப்பட்டது. போரில் அது உயர் பாதுகாப்பு வலையத்துக்குள் விழுங்கப்பட்டது. விளைவாக மயிலிட்டி அதன் சோபையை, பொலிவை இழந்து விட்டது. அதன் மக்கள் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து மெலிந்து போய்விட்டார்கள். தொடர்ச்சியான இடப்பெயர்களால் ஒரு தலைமுறை அதன் பாரம்பரிய தொழில் தொடர்ச்சியை, தொழில் திறன்களின் தொடர்ச்சியை இழந்து வருகிறது. இப்படிப்பட்டதோர் பின்னணியில் மயிலிட்டி துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தியை ஜனாதிபதி தொடக்கி வைத்திருக்கிறார்.

கடந்த வாரம் அனுர யாழ்ப்பாணத்தில் நின்ற அன்று செம்மணியில் ஏழு எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. செம்மணிப் புதைகுழியை உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கான ஒரு களமாக அரசாங்கம் கையாண்டு வருகிறது. புதுக்குடியிருப்பில் அனுர ஒரு சிறு பிள்ளையைத் தூக்கி வைத்துக்கொண்டு படம் எடுத்திருக்கிறார். அதுபோல ஒரு சிறு பிள்ளையை அணைத்தபடி செம்மணியில் ஒரு தாய் புதைக்கப்பட்டார். அந்தத் தாய்க்கும் குழந்தைக்கும் நீதி கிடைத்தால்தான் புதுக்குடியிருப்பில் அனுர எடுத்த படத்துக்கு ஒரு வரலாற்றுப் பெறுமதியிருக்கும். இல்லையென்றால் அது வரலாற்றின் குப்பை கூடைக்குள் எறியப்பட்டுவிடும். ஏனென்றால் "வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி" என்று மார்க்சிஸ்டுக்கள் கூறுவார்கள்.

நன்றி: நிலாந்தன்

# ஈகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்



**1 ஆம் நாள்**
*கண்ணீருடன் திலகமிடுகிறாள் ஒரு தாய்.*

**2 ஆம் நாள்**
*நிலைமையை தலைவர் கண்டு மனம் நெகிழ்ந்து போனார்.*

**3 ஆம் நாள்**
*ஒரு சொட்டு சிறுநீரும் கழிக்கவில்லையாம்.*

**4 ஆம் நாள்**
*நம் மக்கள் திலீபின் நிலைகண்டு பயந்தனர்.*

**5 ஆம் நாள்**
*இந்தியப்படை கேணல் பரா பார்வையிட்டார்.*

**6 ஆம் நாள்**
*கிட்டண்ணாவை பார்க்க திலீபன் விரும்புகிறார்.*

**7 ஆம் நாள்**
*உடல் தளர்ந்து குடல் சுருங்கியது.*

**8 ஆம் நாள்**
*தமிழீழமெங்கும் எழுச்சித் தீ பரவுகிறது.*

**9 ஆம் நாள்**
*கோட்டையில் மக்கள் கொந்தளிப்பு.*

**10 ஆம் நாள்**
*எங்கள் திலீபனை சாகவிடாதேயென நல்லை வீதியெங்கும் மக்கள் வெள்ளம்.*

**11 ஆம் நாள்**
*எங்கள் மகர யாழ் தந்தி தொய்ந்து கிடந்தது.*

**12 ஆம் நாள்**
*மலை உயரம், முகில் உயரம், வானுயரம்*
*திலீபனின் மனத்திடத்தின் முன்னே எது உயரம்.*

## அந்த உத்தமனின் ஐந்து அம்சக் கோரிக்கைகள்

*01. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்றும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.*

*02. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தயாகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.*

*03. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.*

*04. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.*

*05. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர் காவற்படை என அழைக்கப்பவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக் கூடங்களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.*

# செம்மணியை தாண்டுமா அனுரவின் சிக்ஸர்?

– நவீனன் –

03.09.2025

இத்தனை ஆயிரம் தமிழ் பேசும் மக்களின் உயிர்களின் மேலாக அனுர செம்மணி தாண்டி, யாழ்ப்பாணத்தில் மண்டை தீவில் அமைக்கப்பட உள்ள கிரிக்கெட் மைதானமானது தமிழர்களுக்கு ஒரு அவமானகரமான அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.

### மண்டைதீவு புதைகுழிகள் மேல் மைதானம் :

1990களில் யாழ்ப்பாணத்தில் மண்டைதீவில் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு எந்த ஒரு நீதியும் கிடைக்காத நிலையில், அவர்கள் உயிருடன் புதைக்கப்பட்ட நிலத்தில் கிரிக்கெட் மைதானம் என்பது அனுராவின் சிங்கள இனவாத அகங்காரத்தின் முகத்தை அப்பட்டமாக காட்டிக் கொள்கிறது.





தமிழர் தாயகத்தை உலுக்கிய செம்மணிப் படுகொலைகள், மண்டைதீவு புதைகுழிகள், இன்னும் பல ஆயிரம் புதைகுழிகளுக்கு பொய்யாகிப்போன நீதி விசாரணைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. ஈழத்தில் பல இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக்கொடூர கொலைகளுக்கு காரணமானவர்கள் யாரும் இலங்கை அரசாங்கத்தினால் கண்டுபிடிக்கப்படவில்லை.




முப்பது ஆண்டு கடந்துள்ள நிலையில் தமிழர் தாயகத்தை உலுக்கிய செம்மணிப் படுகொலைகள் பொய்யாகிப்போன நீதி விசாரணைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி ஒருபோதும் கிடைக்கவில்லை.

ஈழத்தில் பல இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த சம்பவம் நடைபெற்று பல ஆண்டு கடந்துள்ள நிலையில் இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் யாரும் இலங்கை அரசாங்கத்தினால் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

இத் தருணத்தில் யாழ்ப்பாணத்தில் சுமூக நிலை இருப்பது




**இன்று அனுரா அடிக்க போகும் கிரிக்கட் சிக்ஸ்ர் எவ்வாறு என்பது எவருக்கும் தெரியும். அதாவது தாயகத்தில் தமிழ் மக்களை திசை திருப்பி, சிங்கள மக்களையும் தன்பக்கம் திருப்பி, தானோ இந்த நாட்டின் மிகவும் சமாதான விரும்பியாக, தேசிய வீரனாக தன்னை காட்டிக் கொள்ள முயல்கின்றார்.**

போல காட்டிக் கொண்டு, தமிழ் மக்களை திசை திருப்பும் வண்ணமே இத்தகைய விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட உள்ளன.

சர்வதேச நீதி பொறிமுறை வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி புலம்பெயர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில் அவர்களை திசை திருப்பும் வண்ணமாகவே இத்தகைய வேலைகளை சிறீலங்கா அரசு திட்டமிட்டு செயல்படுவது அப்பட்டமாக தெரிகிறது.

செம்மணி படுகொலைற்கான நீதிப் பொறிமுறை சர்வதேச அரங்கில் வேண்டும் என்றே பல சர்வதேச நாடுகள் விரும்புகின்றன. அவர்களையும் திசை திருப்ப வேண்டும் என்பதே சிறீலங்கா அரசின் திட்டமிட்ட சதியாகவும் கூட இருக்கலாம் என்றும் நாங்கள் கருதலாம்.

இன்று உலகளாவிய ரீதியில் தமிழர்களின் மனிதப் புதைகுழிகளுக்கு ஒரு நீதி வேண்டும் என்பது வேண்டப்படுகிறது.

முக்கியமாக அனுர அரசின் அரசியல் நடவடிக்கைகள் எல்லாம், தமிழர்களின் உரிமைகளை தட்டி கழித்துவிட்டு யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தியும் அங்கு வாழும் மக்களுக்கு பெரும்



நன்மையை ஏற்படுத்தி வருகிறது போல சிங்கள அரசு முயல்கிறது.

### விளையாட்டும் – வீதி அபிவிருத்தியும்:

விளையாட்டும், வீதி அபிவிருத்தி என்பதை காட்டிக்கொண்டு சறீலங்காவின் தற்போதைய அரசு, தனது முன்னைய அரசு

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com





களின் இன அழிப்பு வேலைகளை மிக காத்திரமாக மறைத்து செயல்படுகின்றது. அதற்கு சில ஒத்து ஊதிபவர்களாக, சில தமிழர்களும் செயற்பட்டு வருவதும் கவலைக்குரிய விடயமாகும் .

இன்று அனுரா அடிக்க போகும் கிரிக்கட் சிக்ஸர் எவ்வாறு என்பது எவருக்கும் தெரியும். அதாவது தாயகத்தில் தமிழ் மக்களை திசை திருப்பி, சிங்கள மக்களையும் திசை திருப்பி தானோ இந்த நாட்டின் மிகவும் சமாதான விரும்பியாக தன்னை காட்டிக் கொள்ள முயல்கின்றார்.

அனுரவும் ஒரு சிங்கள தேசத்தின் ஒரு இனவாத அரசியல் இருந்தே உருவாகியவர் என்பதை நாங்கள் மறக்க முடியாது. அவரது அரசியல் பின்புலங்களை நாங்கள் திரும்பிப் பார்த்தால், அனுர வந்த பாதை என்பது பல்வேறு வகையிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானவர் என்பதை உணர்த்தி நிற்கின்றது. நீண்ட காலம் தமிழர்களுக்கு எதிராக இருந்ததுடன் முன்னைய இனவாத அரசுகளுக்கு பக்க துணையாக அனுரவின் அரசியல் பயணம் இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டது.

இப்போது தன்னை சமாதான விரும்பிய காட்டிக் கொள்வது, இன்றைய காலத்தில் அரசியலுக்காக தன்னை போலியாக மாற் றிக் கொண்ட விடியமாகவே கருதலாம். இவரின் வேறுபட்ட இனவாத அரசியல் செயல்பாடுகளும், தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் நிலைப்பாடுகளும் என்பது நீண்டகாலமாக அனைவருக்கும் அறிந்த ஒன்றுதான்.

முன்னாள் சிறீலங்கா அரசின் அரசியல் தலைவர்கள் தங்களை நேரடியாகவே இனவாதிகளாக, சிங்கள மக்களுக்கு தங்களை சிங்கள தேசிய வீரராக காட்டிக் கொண்டதை வரலாறு காட் டுகிறது.

## பட்டலந்த வதைமுகாமும் ரணிலும் :

1987- 1989 ஜேவிபி கிளர்ச்சியினருக்கு எதிரான பட்டலந்த வதைமுகாம் கொடுமைகள், ஜே.வி.பி யினர் ஆட்சியதிகாரத்துக்கு வந்ததன் பின்னர், சுமார் 37 ஆண்டுகளுக்கு முந்திய உண்மைகளை வெளிக்குக் கொண்டு வந்துள்ளனர்.

ஜே.வி.பி. யினர் ஆட்சிக்கு வந்த பின்னரே ஜே.வி.பி யினருக்கு எதிரான சட்டவிரோதக் கொடிய செயல்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.


ஆனால் வடக்குக் கிழக்கில் பட்டலந்தை போன்ற வதை முகாம்கள் பல இருந்தன. அரச படைகளாலும், இராணுவ துணைக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இதுவரை விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

இவற்றை ஆராய்ந்து நீதி வழுங்கும் நேர்மை கடந்தகால சிங்கள அரசாங்கங்களுக்கு இருக்கவில்லை. தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது ஜேவிபி சகாக்கள் கொல்லப்பட்டதனால் பட்டலந்த வதைகள் கொலைகளை விசாரிக்க முன்வந்தது என்பதும் உண்மையே.

ஆனால் இந்த விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட ரணில் மீது இந்த அரசு நீதி விசாரணை நடத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஆனால் அண்மையில் நடந்த ரணில் கைது நாடகம் இதற்கு மாறாகவே நடந்துள்ளது.

ரணில் மீதான அப்பட்டமான பல குற்ற விசாரணைகள் இருந்தாலும், ஜேவிபி அரசு, மிகப் பலவீனமான அனுதாபத்துடன் கூடிய குற்றச்சாட்டுகளை தெரிவித்ததுடன், பின்னர் ரணில் விக்ரமசிங்க விடுதலையானார். ஆகையினால் இது போன்றே ராஜபக்ச அரசின் மீதும் பலவீனமான குற்றச்சாட்டுகளை முன் வைக்க அனுர அரசு முயலும். ராஜபக்ச தலைமையிலான அரசின் முன்னைய போர்க் குற்றங்களை சர்வதேச விசாரணைகளில் இருந்து விடுவிக்க இந்த அரசு உதவும் என்பது புலப்படுகிறது.

இவை அனைத்தும் சிங்கள இனவாதத்தை வளர்க்கும் இன்னொரு வகையிலான நடவடிக்கையாகவே நாம் இதனை கருத




வேண்டும். ஏனெனில் அவருடைய செயல்பாடு என்பது சிங்கள மக்களுக்கு தன்னை ஒரு தேசிய வீரனாய் அடையாளப்படுத்திக் கொண்டது தெரிய வருகிறது.

போர் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட புதைகுழிகள் மர்மங்களையோ, விசாரணைகளையோ எந்த ஒரு சிங்கள அரசும் முன்னெடுக்கவில்லை. ஈழத்தமிழ் மக்கள் பலரது உடலங்களை தாங்கிய மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்து

செல்கின்ற நிலையில் தீர்வுகள் எதுவும் இதுவரை கிடையாத நிலையே உள்ளது. இந்த விடையத்தை சர்வதேச பார்வைக்கு கொண்டு செல்வதுடன் அதனூடாக தமிழ் உறவுகளுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும்.

## சிறீலங்கா அரச பயங்கரவாதம்:

நீண்டகாலமாக சிறீலங்கா அரச பயங்கரவாத நடவடிக்கைகளால் தமிழர்களுக்கு ஏற்பட்ட வதைகள், கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டதை விசாரணை நடாத்தி நீதி வழங்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

தேர்தல் வெற்றிக்காகவே பேச்சளவில் இன நல்லிணக்கம், சமதருமம், தேசிய ஒற்றுமை என பறைசாற்றும் தற்போதைய அனுர அரசு தமிழர் மீதான படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என்று கேட்பதே நகைப்புக்கிடமாகும்.

தற்போது மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அனுர அரசாங்கமும் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கும் என்று நம்பிக்கை கொள்ள முடியாது.

ஜெனிவாவில் மனித உரிமை மீறல்களை உள்ளக விசாரணை மூலமே தீர்க்க முடியும் என்று உறுதியாக அனுர அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச விசாரணை கோரிக்கை:


இனியும் செம்மணி புதைகுழிகள் விவகாரத்தில் தலையிட்டு நீதி வழுங்கும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.


இன நல்லிணக்கம், உண்மையை கண்டறிதல் என்ற அடிப்படையில் தேர்தல் பரப்புரையில் தெரிவித்து ஆட்சியை பிடித்துள்ள இந்த அரசும் எவ்வகையிலும் தமிழ் மக்களின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது தெரிகிறது.

ஆனால் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட்பட்டலந்த வதை முகாம் பற்றிய விவகாரம் அனுரவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் வெளிச்சத்துக்கு வந்துள்ளதுடன் நீதி விசாரணையும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

ஆனாலும் தற்போது மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அனுர அரசாங்கமும் இந்த விவகாரத்தில் தலையிட்டு நீதி வழுங்கும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் இருந்த எந்த அரசாங்கங்களும் விசாரணைகளை நடாத்தி குற்றவாளிகளை தண்டிக்கவில்லை எனவே இனிமேலாவது சிங்கள ஆட்சியாளர்கள் தங்களுக்கான நீதி பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர்.








# கேணல் சங்கர்

அனாமதேயமாய் எம்
ஆத்மாக்களில்... இரும்புக்
கோட்டையின் இதயக்கூடழிந்து
தோழனே...!
அஞ்சிப்பகையரசு
ஆடிப்போனது – உன்
அக்கினிப் பிளம்பதிலே

வெடியாகி – நீ அடையாளமின்றி
வித்தாகிப் போனாய் – நாம்
விழியேந்தி உன் வரவை
விரும்பி நின்றோம்
'நீ வரவில்லை'

நாளையைத்தேடி நாங்கள் நாடுநாடாய்
ஓடகையில்
நீயோ இன்றைத்தேடி
அவலத்தை எம்
ஆயுளாக்கிய பேயழித்து
அமைதியாய்...

என்ன அதிசயம்... எப்படி...
இதுவெல்லாம்....
உயிர் விறைக்க
உன் வீரம்...?
எப்படி இதுவெல்லாம்...

தினம்  உன்னுள் குமறிய எரிமலையை
உன்தோழர்கள் சொன்னபோது
நீ தீயோடு உருகித் தற்கொடையின்
இமயத்தில் தலைநிமிர்ந்து...
தோழனே...! தாயகக்காற்றோடு – நீ
தணலாகிப்போனாய்...
கல்லறை – நீ
கேட்கவில்லை
கண்ணீரஞ்சலியும்
கேட்கவில்லை
வரலாற்றில் ஓர் இடம்
இல்லை...
உனக்காகவென்று – நீ எதையுமே
கேட்கவில்லை...

உன் இதயத்துடிப் பெங்கும்
விடியலின் ராகமே
தந்திமீட்டிக் கொண்டிருந்தது
அதுதான் – நீ
எம் ஆத்மாக்களில்
அமைதியாய்
உச்சரிக்கப்படுகின்றாய்...

வெளிவரும் ஒரு நாள்விழுதே உன்
நாமம்
அதுவரை நாம்
அமைதியாயிருப்போம்
அன்புத்தோழனே...!
அதுவரை நாம்
அமைதியாய் இருப்போம்.

– சாந்தி ரமேஷ் வவுனியன்

# ஐ.நா. மனித உரிமை பேரவை தீர்மானங்களை ஏற்க மறுக்கும் சிறீலங்கா: தொடரும் ஜேவிபியின் இனவாத நிலைப்பாடு!

– நவீனன் –

08.09.2025

கடந்த வருடமும் ஜெனீவா தீர்மானத்திற்கு அனுர அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், சர்வதேச போர் குற்ற பொறிமுறை இல்லை என்றும் சிங்கள தேசத்தின் ஜேவிபி அரசும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பான எந்தவொரு ஜெனீவா தீர்மானத்திற்கும் அனுர அரசாங்கம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சர்வதேச போர் குற்ற ஆதாரங்களை சேகரிக்கும் பொறி முறையையும் ஏற்றுக் கொள்ளாது எனவும் தெரிவித்துள்ளது.

தற்போதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை ஏற்க முடியாது என்றும், ஐநா ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும், சமநிலையுடனும் அமைய வேண்டும் என ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை அண்மையில் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வு செப்டம்பர் எட்டாம் நாள் ஆரம்பமாகின்றது. இதில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பிலேயே ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை மேற்கண்டவாறு கூறியுள்ளது.




### 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்காது:

கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கையை ஏற்க மறுக்கும் சிறீலங்கா அரசின் நிலைப்பாடு என்பது இனவாத நிலைப்பாட்டையே வெளிபபடுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பொறுப்புக் கூறல் திட்டத்தை சிறீலங்கா அரசு தொடர்ந்து எதிர்க்கின்றது. இதுபோன்ற வெளிப்புறத் திட்டங்கள் உள்நாட்டு நல்லிணக்க முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடனும் அதன் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இலங்கை நெருக்கமான ஒத்துழைப்பை பேணி வருகின்றது. இதனால், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும், சமநிலையுடனும் அமைய வேண்டும் என்றும் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், சிறீலங்காவில் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் அந்த அறிக்கை விவரித்துள்ளது.

முன்னதாக, இராணுவம் மற்றும் படையினரின் மோசமான மனித உரிமைகள் மீறலை இலங்கை அரசு ஒப்புக்கொள்ளத் தவறிவிட்டது. இலங்கை ரோம் சட்டத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### நிலையான அமைதிக்கான அடித்தளம்:

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்கப்பதற்காக சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு சுவிட்சர்லாந்து நோக்கி பயணமாகியுள்ளது.

பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றவுள்ளார். அத்துடன், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் ஐச் அமைச்சர் விஜித ஹேரத் சந்திக்கவுள்ளார். இதேவேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர்





இலங்கை தொடர்பான அறிக்கையை முன்வைக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான குறித்த முற்கூட்டிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிலையான அமைதிக்கான அடித்தளத்தை அமைத்து மாற்றத்தக்க சீர்திருத்தங்களைச் செயற்படுத்தவும் உண்மை மற்றும் நீதியை வழங்கவும் இலங்கை முழுவதுமுள்ள சமூகங்களிடமிருந்து புதிய அரசாங்கத்திற்கு வரலாற்று வாய்ப்பும் தெளிவான மக்கள் ஆணையும் கிடைத்துள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் தேசிய ஒற்றுமை என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கும் இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாத ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதும் மோதலின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதும் இன்றியமையாதவையாகும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

தீவிரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட இலங்கையினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட அதன் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவது மிகவும் முக்கியம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதித்துறை சுதந்திரம், நாட்டின் சட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பதற்றங்கள், தன்னிச்சையான கைதுகள், ஒழுங்கற்ற தேடுதல்கள் மற்றும் தடுப்புக்காவலின் போது மோசமான முறையில் நடத்தப்படல் போன்ற நிலைமைகள் குறித்து அதீத கரிசனைக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கையை ஏற்க மறுக்கும் சிறீலங்கா அரசின் நிலைப்பாடு என்பது இனவாத நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகிறது.**




சிறீலங்கா நாட்டின் சர்வதேச மனித உரிமை கடமைகளுக்கு இணங்க அடிப்படை அரசியலமைப்பை மேற்கொள்வதும் சட்ட மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்வதும் மாறத்தக்க சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு அவசியமென வும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான பாதையில் இலங்கைக்கு உதவ ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான குழுவுடன் இணைந்து மனித உரிமைகள் பேரவை தொடர்ந்து தயாராக உள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு தடை விதிக்கவும் அதனை இரத்து செய்வதை விரைவுபடுத்தவும் அதற்கான எந்த வொரு மாற்றுச் சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்களால் இதற்கு முன்னர் வகுக்கப்பட்ட அளவுகோல்களுடன் இணங்குவதை உறுதி செய்வதும் அவசியம் என அந்த அறிக்கையின் முக்கிய மான பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### சிறீலங்கா உறுதிமொழியை நிறைவேற்றுமா?

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கைத் தொடர்பான இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை முன்வைக்கப்பட உள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என விசேடமாக வலியுறுத்தப்பட்டது. மேலும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் அனைத்து சமூகங்கள் மீதான அதன் தாக்கத்தையும் நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

### அனுரவின் அரசியல் நிலைப்பாடு:

சிங்கள பௌத்த மேலாதிக்க மனோநிலையோடு அதிகாரத்திற்கு வந்துள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுர அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள், குறிப்பாக அவரின் கடந்த கால அணுகுமுறைகள் தமிழ் மக்களுக்கு தெரிந்த வரலாறாகும்.

தமிழ் இனம் சிங்கள தேசத்தால் மாபெரும் இனப்படுகொலையை சந்தித்து அதற்காக சர்வதேச ரீதியாக போராடி வருகிறது. அதுபற்றி எந்தவித கரிசனையுமற்று சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி சிங்களவர்கள் மட்டும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்ந்தால் பொதுமென்று தமிழரை வைத்தே தம்மை பலப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறது தற்போதய அநுர அரசு.

உண்மையில் புலம்பெயர் தமிழ் மக்களை நோக்கியும் தற்போதய அநுர அரசின் செயற்பாடுகள் திசை திரும்பியுள்ளது.

# சாத்தானின் படைகள்!

## [சாத்தானின் படைகள் நூலிற்கு எழுதிய முன்னுரை – வெளியீடு: 1990]



தமிழீழத்தில் இந்தியப் படையின் தலையீடு இந்தியா விட்ட ஒரு மாபெரும் தவறு என்பதை உலகம் இன்று ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியா நடாத்திய போரால் பெருமளவில் உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன. பெரும் செலவுடன், மிக நீண்டகாலம் இந்தியாவால் நடாத்தப்பட்ட இப் போரில், இந்தியப் படைக்கு ஏற்பட்ட தோல்வி இந்தியாவுக்கும், இந்தியப் படைக்கும் பெரிய அவமானத்தைக் கொடுத்துள்ளது.

இந்திய ஆக்கிரமிப்பு எவருக்கும் எதுவித பயனையோ, நன்மையையோ தரவில்லை மாறாக எதிர்விளைவுகளையே கொடுத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைப்பீடத்தால் மேற்கொள்ளப்பட்ட சாதுர்யமான அரசியல் இராஜதந்திரச் சாணக்கியத்தாலும், விடுதலைப் புலிகளின் உக்கிரமான போர்த் தாக்குதல்களாலும் இந்தியப் படையினரின் திட்டங்கள் யாவும் தவிடு பொடியாகின.

இந்திய – புலிகள் போரில், அதன் முரண்பட்ட தன்மையை, அப் போரின் இறுதி விளைவிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

1. அமைதிப் படை என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள், மிகவும் கொடூரமான, மனிதத் தன்மையற்ற ஒரு போரை நடாத்தினார்கள்.

2. ஆயுதக்களைவு என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள், பயங்கரமான ஆயுதங்களைக் கொடுத்துத் ‘தமிழ்த் தேசிய இராணுவம்’ என்ற கைக்கூலிகள் பட்டாளத்தை உருவாக்கினார்கள்.

3. தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு என்று நுழைந்தவர்கள், தமிழ், முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்தார்கள்.

4. விடுதலைப் புலிகளை அழித்து, ஒழிக்க இந்தியா தீட்டிய திட்டங்கள், அவர்கள் இன்று அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் மிகவும் சக்தி வாய்ந்த இயக்கமாக வளரே வழி வகுத்தது.

### இந்திய அரசின் தவறான கணிப்பீடும், விளைவுகளும்

72 மணி நேரத்தில் வெற்றியடையும் இராணுவ நடவடிக்கை என்று கூறி இந்தியாவால் புலிகள் மீது 10-10-87 அன்று தொடங்கப்பட்ட போரானது 720 நாட்களுக்கு மேலாக நீடித்தது மட்டுமல்லாமல், இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மிக நீண்டகாலப் போராகவும் மாறியது. இந்தப் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்களேயாவர். தமிழ் -முஸ்லிம் மக்கள் இப்போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இந்தியப் படை மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே வெற்றியடைய விரும்பியது. ஆனால் போர் நீண்டது. தமக்கேற்பட்ட பலத்த சேதத்தினால் ஆத்திரமடைந்து, மன விரக்தியடைந்து, ஒழுங்கீனமாக நடந்த இந்தியப் படையினர், போர் முறையின் தர்மங்கள், நடைமுறைகள் சகலவற்றையும் மீறி இரக்கமில்லாது நடந்தார்கள்.

### பொதுமக்கள் மீது தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கடுமையான, உக்கிரமான எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாத இந்தியப் படையினர், பாதுகாப்பற்ற அப்பாவிப் பொதுமக்களின் இருப்பிடங்களை நோக்கித் தொலை தூர ஏவுகுண்டு (ஆட்லறி, மோட்டார் செல்)களால் தாக்கினார்கள். இந்த இரக்கமற்ற தாக்குதல் குடிமக்களுக்குப் பெரிதும் சேதத்தை உண்டாக்கியது.

ஆரம்பத்தில் இரண்டு வாரங்களுக்கு மேலாக நடந்த யாழ்ப்பாணப் போரினால், இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 5000க்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்தார்கள் ஐந்து இலட்சத்துக்கு (500,000) மேற்பட்ட மக்கள் அகதிகளானார்கள். போரில் முன்னேறிச் சென்ற இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் படுகொலைகளும், பயங்கரத் தாக்குதல்களும், ஆதரவற்ற அகதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் மனிதத்தன்மையற்ற காட்டுமிராண்டித்தனமான செயலாகவே இருந்தன. விடுதலைப் புலிகள் மீது தொடுக்கப்பட்ட இப் போரானது, இறுதியில் பொது மக்கள் மீது நிகழ்த்தப்படும் ஒரு தாக்குதலாகவே மாறியது.

இந்தியப் படைகள் கொல்லப்படும் போது பதிலுக்குச் சாதாரண பொதுமக்கள் கொல்லப்படுவது சாதாரண சம்பவமாகவே மாறியிருந்தது. இதில் மிகப் பயங்கரமானது யாழ் அரசினர் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இந்தியப் படையினர் ஈவிரக்கமில்லாமல், மனிதாபிமானமற்று வைத்தியர்கள், தாதிகள், வெளிநோயாளர்கள், தங்கியிருந்த நோயாளிகள் உட்பட 60க்கும் அதிகமானோரைக் கொன்றனர். யாழ்ப்பாணம் பிரம்படி ஒழுங்கை மீதான தாக்குதல், சாவகச்சேரி நவீன சந்தை மீதான போர் உலங்குவானூர்திகளின் ஏவுகணைத் தாக்குதல், இறுதியாக வல்வையில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் என்பன சர்வதேச ரீதியில் இந்தியாவுக்குக் கண்டனத்தைக் கொடுத்தன.

விடுதலைப் புலிகளின் அதிகரித்த உக்கிர தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இந்தியப் படையினர், பொதுமக்களைப் பழிவாங்கினார்கள். அப்பாவிப் பொதுமக்கள் மீது இவர்கள் பிரயோகித்த ஈவிரக்கமற்ற அடக்குமுறைகளால் இந்த இரண்டு வருட காலத்தில் 6000க்கு மேற்பட்ட பொதுமக்கள் அழிக்கப்பட்டார்கள்.

இந்தியப் படையைக் கண்ட மக்கள் பயந்தார்கள்; அதை வெறுத்தார்கள். அதனைத் தமது தாயகத்தை ஆக்கிரமித்துள்ள ஒரு படையாகவே கருதினார்கள். இப்படை இங்கு இருப்பதால் தமிழ் – முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும் என்ற எண்ணம் அறவே இல்லாமற் போயிற்று. அதனால் தமிழ் – முஸ்லிம் மக்கள் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான புலிகளின் தாக்குதல்களைப் பெருமளவில் ஆதரித்தார்கள்.

இந்தியப் படை பொதுமக்கள் மீது மேற்கொண்ட ஒழுக்கமற்ற நடவடிக்கைகளும், வெறுக்கத்தக்க செயற்பாடுகளும், ஈவிரக்கமற்ற கொடூரமான தண்டனை முறைகளும், மனித உயிருக்கும், மனித வாழ்க்கைக்கும் அளிக்கப்பட்ட அவமரியாதையும் மக்கள் இந்தியப் படையை அடியோடு வெறுக்கக் காரணமாய் அமைந்தன. இந்தியப் படையின் தலையீடு தோல்விடையக் காரணமாக அமைந்தன.


### ‘றோ’வின் தவறான கணிப்பு


விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை பற்றியும், அவர்களின் போராட்ட வல்லமை, இலட்சியத்தில் அவர்களுக்கு இருந்த திட சங்கற்பம் பற்றியும் தவறாகக் கருதி, தவறாகக் கணித்து எடை போட்டதும் அவர்களின் தோல்விக்கு இன்னொரு காரணமாகும். விடுதலைப் புலிகளின் பலத்தையும், நோக்கத்தையும் தவறாகக் கணித்து எடைபோட்ட ‘றோ’ அமைப்பு, “விடுதலைப் புலிகளை ஒரு சில தினங்களில் அழித்துவிடலாம்” என்று கொடுத்த அறிக்கையை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நம்பினார்கள். போர் நீண்டு கொண்டிருந்த போது, இந்தியப் படை இழப்புக்களைச் சந்தித்த போது, இந்தியா தனது தவறை உணர்ந்து கொண்டது.


இந்தியர்கள் எண்ணியது போல, சாரமணிந்த விளையாட்டுப் பையன்களைக் கொண்ட அமைப்பல்ல விடுதலைப் புலிகள். இந்தியப் படை முன்னெப்போதும் கண்டிராத, உலகிலேயே தலைசிறந்த ஒரு கெரில்லா போராட்ட இயக்கத்தை, திடமான இலட்சியப் பற்றும், மிகவும் கட்டுப்பாடும், ஒழுக்கமும், நல்ல அமைப்புமுடைய ஓர் இயக்கத்தை எதிர்நோக்க வேண்டி இருந்தது. யுத்த முறையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது. இந்தியப் படையின் கௌரவம் கேலிக்கிடமானது.

இருந்தும், விடுதலைப் புலிகளின் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தக் கோரிக்கையை ராஜீவ் காந்தி நிராகரித்ததுடன், கூடிய விரைவில் போரில் வெற்றியடைய விரும்பினார். தமிழர் தாயகத்தில் தமது பலத்தைக் காட்டியதுடன், புலிகளுக்குகெதிரான தாக்குதல்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான படையினர் பல வகைப்பட்ட சங்கேதப் பெயர்களில் (Code Name) தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். காடுகளில் சிறந்த பயிற்சி பெற்ற அதிரடிப் படையினர், காட்டுப் பகுதிகளில் புலிகளுக்கெதிரான தாக்குதல்களில் ஈடுபடுத்தப்பட்டனர். புலிகளால் தொடுக்கப்பட்ட பலத்த எதிர்த்தாக்குதல்கள் இந்தியப் படைக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் இந்தியப் படைகளின் மனோநிலை பாதிக்கப்பட்டது. பல வகையான தீவிர தாக்குதல்களை மேற்கொண்டு, கடுமையான பிரயத்தனத்தின் முடிவில், இந்தியா புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்தது. விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகையும், உயிர்ச் சேதமும் கற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கூடியது.

இந்நிலையிலேயே 1989ஆம் ஆண்டு வைகாசி மாதம் 1ஆம் திகதி ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் அழைப்பை ஏற்று, இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கொழும்பு சென்றது. முரண்பட்டுக்




கொண்டிருந்த இரு பகுதியினராலும் மேற்கொள்ளப்பட்ட கொழும்புப் பேச்சுவார்த்தை, இந்திய அரசாங்கத்தை (அப்போது



ஆட்சியில் இருந்த) பெரிதும் பாதித்தது. வரலாற்று எதிரிகளான விடுதலைப் புலிகளும், சிறீலங்கா அரசும் சுமுகமான நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. இலங்கை அரசு சார்பாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இந்தியப் படையால் மேற்கொள்ளப்பட்ட போரை அர்த்தமற்றதாகவும், நகைப்புக்கிடமானதாகவும் ஆக்கியது. விடுதலைப் புலிகளின் சாதுர்யமான இராஜதந்திர நடவடிக்கையால் ஒதுக்கப்பட்டு, அவமானப்பட்டு, திக்குமுக்காடிப்போன ராஜீவ் அரசின் நிர்வாகம், இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியதுடன், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது தாக்குதல்களையும் உக்கிரப்படுத்தியது. இந்த நடவடிக்கையானது இந்தியப் படையின் தலையீட்டை உலக நாடுகளின் பார்வையில் கேலிக்குள்ளாக்கியது.

கொழும்புப் பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளின் குழுவினர் இந்தியப் படையின் அட்டூழியங்களைக் கண்டித்ததுடன், இந்தியப் படையை ஆக்கிரமிப்புப் படை எனவும் நிரூபித்தனர். ஐ.நா. சாசனங்களில் அமைதிப் படைகள் தொடர்பாக உள்ள மாதிரிகளைக் காட்டி, இந்தியப் படையை அமைதிப் படையாகக் கருத முடியாது, அது ஓர் ஆக்கிரமிப்புப் படை என வாதிட்டனர்.

### அமைதிப் படையும், அதன் கடமைகளும்

அமைதி காக்கும் படைகளின் மாதிரிகள் குறித்து ஐ.நா. சபை உருவாக்கியிருந்த மரபுகளை உதாரணம் காட்டி விடுதலைப் புலிகளின் குழு பின்வருமாறு வாதிட்டது.

முரண்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், சமாதானத்தை ஊக்குவிப்பதற்கும், சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவு கோல்கள் உள்ளன.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்க்கிடையே பக்கஞ் சாராது ஓர் அமைதிப் படை நிற்க வேண்டும். மோதல்கள் ஏற்படும் பகுதிகளில் அமைதியை மீண்டும் நிலைநாட்டுதல், அல்லது அதனைப் பேணுவதற்கு உதவுவதே அமைதிப் படையின் பிரதான பணியாகும்.

அமைதி காக்கும் பணி என்பது மோதலைக் கட்டுப்படுத்துதலாகும். ஐ.நா. சபை மரபில் ஓர் அமைதிப் படைக்கு வழங்கப்படும் ஆணை என்னவென்றால், மோதல் நிறைந்த நிலைமையை மோசமடையாது தடுத்தல் என்பதும், சமாதானமும், சகஜநிலையும் ஏற்படுவதற்காக வேண்டிய சூழ்நிலையை உருவாக்குதலுமே.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இவை அடிப்படையான முதற் தேவைகளாகும். அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் இராணுவத்திற்கு நிர்ப்பந்திக்கும் அதிகாரம் கிடையாது. பலாத்காரத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. அவர்கள் எளிமையான தற்காப்பு ஆயுதங்களையே எப்பொழுதும் தம்முடன் கொண்டு செல்வார்கள். மோதல்களைப் பொறுத்தவரை முக்கிய கொள்கையான நடுநிலைமை வகித்தல், சம்பந்தப்படாதிருத்தல் என்பனவற்றை ஒவ்வொரு அமைதிப் படையும் கடைப்பிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

போரில் ஈடுபட்டிருக்கும் சக்திகளின் சமநிலையில் எவ்வித மாற்றத்தினையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைதிப் படை நடந்துவிடக் கூடாது.

அத்துடன் உள்நாட்டு விவகாரங்களிலும் அது தலையிடக் கூடாது. நிலைமைகளை மேலும் மோசமடையாது தடுப்பதே அமைதிகாக்கும் பணியின் நோக்கமாகும். மோதலில் ஈடுபட்டிருப்போருக்கிடையே உள்ள உறவுகளை நிலைபெறச் செய்வதே இப்பணியின் இலக்காகும்.

### இந்தியப் படை அமைதிப் படை அல்ல

அமைதி காக்கும் மரபுகளின் விதிப்படியும், விளக்கப்படியும் இந்தியப் படையை எந்த விதத்திலும் அமைதிப் படையாகக் கருத முடியாது. இந்தியப் படை ஒருபோதும் சமாதானத்தைப் பேணவில்லை அத்துடன் முரண்பாட்டைக் கட்டுப்படுத்தவில்லை. பதிலாக இந்தியப் படை கொடூரமான போரை நடாத்தி, சமாதானத்தைக் குழப்பி, முரண்பாட்டை மேலும் கூட்டியது. அத்துடன் தமிழர் தாயகத்தில் பலவந்தமாக நிலைநின்றதுடன், அதிகாரத்தைப் பிரயோகித்து இராணுவ ஆட்சியை உருவாக்கியிருந்தது.

இந்தியப் படை ஒருபோதும் நடுநிலைமையையோ, தலையிடாமையையோ கடைப்பிடிக்கவில்லை. பதிலாக, புலிகளுக்கெதிராகச் செயற்பட்டதுடன், இந்திய சார்புக் குழுக்களுக்கு ஆதரவும், ஆயுதமும் வழங்கி, பயிற்சியும் அளித்தது. அமைதி காப்பதற்குப் பதிலாக இந்தியப் படையானது விடுதலைப் புலிகளுடன் மோதியது. இந்தியப் படையானது அமைதிப் படைக்குரியதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்முறைகளையும், விதிகளையும் முற்று முழுதாக மீறிச் செயல்பட்டது. விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவெனில், தமிழர் தாயகத்தில் நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளுக்கு, அமைதிப் படைக்குரிய தகுதிகள் எதுவும் இல்லை எனவும், அது ஓர் ஆக்கிரமிப்புப் படையே எனவும் கருதுவதாகும்.

### போர்நிறுத்தம்

போர்முனையில் புலிகளது உறுதிமிக்க, உக்கிரமான தாக்குதல்களும், கொழும்புப் பேச்சுவார்த்தையின் போது கையாண்ட இராஜதந்திர நடவடிக்கைகளும், இறுதியாக இந்தியப் படைக்கும், தமிழ்ப் புலிகளுக்கும் இடையே ஒரு போர்நிறுத்தத்தைத் தோற்றுவித்ததுடன், எமது தாயகத்திலிருந்து இந்தியப் படை வெளியேறுவதற்கும் வழி செய்வதாயிற்று.

இந்தியப் படையால் அமைதியின் போர்வையில் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க் கொடுமைகள் உலகத்தின் கண்முன் தெரியப்படுத்த வேண்டியது எமது கடமையும், பொறுப்புமாகும். இக்கடமைப்பாட்டில் 'சாத்தானின் படைகள்' என்ற இந்த நூல் மிக முக்கிய பங்களிக்கின்றது.

### சாத்தான் ஒரு தீயசக்தி

இந்திய ஆக்கிரமிப்புப் படை இங்கு புரிந்த மிகக்கொடிய செயல்களை விவிலிய நூல் குறிப்பிடும் சாத்தானுடன் தொடர்புபடுத்துவது வெகு பொருத்தமே. மனிதர்களை அழிக்கும் ஒரு தீய சக்தியையே சாத்தான் என்னும் கருத்துருவம் குறித்து நிற்கிறது. இந்தியப் படை சாத்தானின் படை போன்று நடந்து கொண்டது. மனித உயிர்களை அறவே பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிரைப் பிசாசுகளைப் போலப் பறித்து அழிவை ஏற்படுத்தியது. ஒரு சிறிய தேசிய இனம் அனுபவித்த மாபெரும் துயரத்தை ஆதாரங்களோடு இந்தத் தொகுப்பு ஆவண வடிவத்தில் தருவது ஒரு துணிகர முயற்சி எனலாம். இத்தனைக்கும் இச்சிறிய தேசிய இனம் இழைத்த ஒரேயொரு குற்றம் சிங்கள ஆயுதப் படைகள் மேற்கொண்ட இன அழிப்பு முயற்சிகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அமைதியைத் தேடி இந்தியாவின் உதவியை நாடியதுமேயாகும்.

அமைதி காக்கும் பணி என்ற 'சாக்குப் போக்கில்' எமது தாயகம் மீது படையெடுத்த இந்தியத் துருப்புக்கள் விட்டுச் சென்ற மரணமும், அழிவும் நிறைந்த துயர்தோய்ந்த கதை, சிங்களப் படையினர் புரிந்த அட்டூழியங்களையும்விட மிக மிருகத்தனமானது. இந்தியப் படையினருடன் டில்லி அரசாங்கமும் உடந்தையாக இருந்து ஒத்துழைத்ததன் பயனாகத் தாம் புரிந்த அட்டூழியங்கள் பற்றிய தகவல்கள் உலகிற்கு எட்டுவதைத் தடுப்பதில் மோசடி மிக்க முறைகளைக் கையாண்டனர். சர்வதேச மனித உரிமைகள் சங்கங்கள் தமிழீழத்திற்கு விஜயம் செய்து நேரடி விசாரணைகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்க இந்திய அரசாங்கம் அறவே மறுத்தது.

### தொடர்பு சாதனங்கள் தடை

இந்திய ஆக்கிரமிப்புப் படை உள் ஊர் தொடர்பு சாதனங்களுக்குத் தடை விதித்து, தமிழ்ப் பத்திரிகையாளர்களைச் சிறையிலிட்டு, ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நிலப்பரப்பிற்குள் உலகத் தொடர்பு சாதனங்களைச் சேர்ந்தவர்கள் வருவதையும் தடுத்தது.

அத்துடன் இந்தியப் படையும், தமிழ் எட்டப்பர் கூட்டமும், குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வும், ஈ.என்.டி.எல்.எவ்வும், பல தமிழ்ப் பிரமுகர்களையும், மனித உரிமைகளுக்காக உழைத்தவர்களையும், இந்தியப் படையின் காட்டுமிராண்டித்தனங்களுக்கு எதிராகக் குரல்கொடுத்த பிரஜைகள் குழுத் தலைவர்களையும் திட்டமிட்டுக் கொன்றனர்.

டில்லி அரசாங்கமும், கொழும்பிலுள்ள அதன் தூதரகமும், பலாலியிலிருந்த இந்தியப் படை அதிகாரிகளும் ஆக்கிரமிப்புப் படை புரிந்த குற்றங்களை மூடி மறைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், குற்றவாளிகளை இனங்காணுவதற்கு நாம் எடுத்த அயராத முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணைக்குழுவும், சர்வதேச தொடர்பு சாதனங்களும் இந்திய அமைதிப் பணியைக் கிண்டலுக்கும், கேலிக்கும் உள்ளாக்கி, ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் நிலப்பரப்பில் இந்தியா இழைத்த பாரிய மனித உரிமை மீறல்களைக் கண்டித்துள்ளன.

எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஏற்பட்ட இருள் மிக்க ஒரு காலப்பகுதியினை இந்தப் பெரிய ஆவணத்தின் வாயிலாகப் பதிவு செய்வதற்கு உழைத்த தோழர்களின் அயராத, நுட்பமான பணியினை நாம் பாராட்டுகின்றோம்.





# எதிர்காலத் தலைமுறையும் புலம்பெயர் மண்ணில் தமிழின் பெருமையை அறிய வேண்டும்!

## நியூசிலாந்து நூல் வெளியீட்டில் வரை

01.09.2025

புலம்பெயர் மண்ணில் தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என்றும், எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப்பணி இதற்கு உறுதுணையாக உள்ளதாக இலக்கிய ஆர்வலர், ஆசிரியர் திரு. சண் வேலுப்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்.







நியூசிலாந்து, ஒக்லாண்ட் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. சிறப்புற நடைபெற்ற இந்நூல்கள் வெளியீட்டு விழாவில் பெருந்திரளான நியூசிலாந்து வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

ஒக்லாண்ட் மாநகரில் உள்ள மவுண்ட் ரோஸ்கில் போர் நினைவு மண்டபத்தில் கடந்த ஆகஸ்ட் 31ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை ஆறு நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவின் தலைமை உரையில் அவர் பேசுகையில் கூறியதாவது, புத்தகம் வாசிப்பு என்பது மிக முக்கியம் ஆகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்து செல்லும். படிக்க, படிக்க சிந்தனைகள் விரிவாக்கும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்து செல்லப்படுவார்கள் என நம்பலாம்.




எழுத்தாளர்களின் எழுத்துக்கள் சமூக சிந்தனையை மேம்படுத்துகிறது. அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமையும் உள்ளது என்றும் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் சர்வதேச விவகாரங்களை ஆவணப்படுத்துகின்றன என்றும் திரு. சண் வேலுப்பிள்ளை அவர்கள் தெரிவித்தார்.

புலம்பெயர் மண்ணில் தமிழை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நமது மொழி, கலாசாரம் அழிந்து போய் விடக்கூடாது. அதற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்.





நமது ஈழத்து இலக்கியம், கருத்தாளமிக்க படைப்புக்கள் தமிழின் பெருமையை வெளிக்காட்டுகின்றன. அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என இந்நிகழ்வில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா தனது ஏற்புரையில் பேசினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வு திரு. சண் வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டு விழாவில் அறிமுக உரையை திரு. ரமேஷ் செல்வகுமார் அவர்கள் உரையாற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை ஒக்லாண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புற பாடினர்.


அத்துடன் ஆறு நூல்களின் ஆய்வுரைகளை திரு. சிவ சரவணபன் சர்வேஸ்வரன், திரு. பூபாலசிங்கம் பிரதீபன், திரு. கௌரிசங்கர் சுதந்திரபாலன், திரு. பிரேம்குமார் கந்தசாமி, திருமதி. வித்தியா நந்தகுமார் மற்றும் திருமதி. தமிழினி வாமதேவன் ஆகியோர் வழங்கினர்.

அத்துடன் இந்நிகழ்வில் சிறப்புரையை திரு. மேவின் கொன்ஸ்ரன்ரைன் அவர்களும் உரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்தினார்.





# திலீபனின் தாகம்



தமிழீழத் தாகத்தால் தண்ணீரும் குடியாமல்
ஊன் இன்றி உடலும் சோர்ந்து
பட்டினி கிடந்து பத்தியம் காத்து
எம்மை பைத்தியம் ஆக்கி விட்டு
பறந்து விட்டாயே அண்ணா
பரமனடி சேர்ந்து விட்டாய்.

அண்ணலே நீ சென்று பல்லாண்டு சென்றாலும்
அன்று நீ சொன்ன அரசியல் விளக்கங்கள்
எம் காதுகளில் கேட்குதையா
"மக்கள் போராட்டம் தொடரட்டும்
புரட்சி வெடிக்கட்டும் புதுயுகம் மலரட்டும்
மக்களே வழித்தெழுங்கள் தமிழீழம் காண்போம்" என்றாய்.

உன்னினத்தின் இடர் கண்டு இளவயதில் போர்சென்றாய்
ஓலமிடும் உன்னித்தின் ஓயாத துயரத்தில்
சொல்லில் அடங்காதாம் நீ பட்ட துயரங்கள்
புத்தனையும் காந்தியையும் சிந்திக்க வைத்தவனே
வித்தகனே உன்வீரம் வீணாகிப் போகாது விடி விளக்காய்
விண்ணில் நீயிருந்து உன் தோழருடன் காண்பாய் தமிழீழம்.

முப்பத்தெட்டு வருடங்கள் சென்றதண்ணா நீ சென்று
சத்தியமாய் சொல்கின்றோம் உன்னெண்ணம்
நிச்சயமாய் நிறைவேறும் சத்தியத்தின் புத்திரனே
உன்னை சாகடித்தவர்கள் சாக்கடைகள் பித்தர்கள்
நீயோ – காந்தியையும் வென்று விட்ட தமிழ்த்தாயின்
தவப்புதல்வன் தாகம் தீருமண்ணா உன் தமிழ்த் தாகம்.

ராஜீவ்காந்தி நீயொரு மைனஸ் காந்தி
பாரதத் தாயின் துகிலை உரிந்தாய் – எம்
பார்த்தீபனின் உயிரைக் குடித்தாய்
அண்ணல் காந்தியை அடித்து உதைத்தாய்
சாத்வீகத்தை சாகடித்தாய் பச்சைக் கருத்தைப்
பறித்து விட்டாயே உனக்குத்தானா நோபல் பரிசு.

நஞ்சு தின்று செத்தாலும் நாவரண்டு மாண்டாலும்
ஈழத்து வேங்கைகளோ மண்டியிட மாட்டாது
சாத்வீக போராட்டம் தெரியுமென்று எங்களுக்கு
காட்டி விட்டுப் போனாரே திலீபணண்ணா
காவியமும் படைத்து விட்டார் கதையெழுத வைத்து விட்டார்
மருத்துவராய் படிப்பவர்க்கு தன்னுடலை அளிக்கச் சொன்னார்.

கற்பூரம் கண்களைப் பொத்திக் கொண்டது
மெழுகுவர்த்தியோ மௌனமானது
சந்தணக்கட்டை சரிந்து வீழ்ந்தது
சாம்பிராணியும் உன் சரித்திரம் சொல்லுது
இமயம் உன்னை நிமிர்ந்து பார்க்குது
பாரதம் உன்னிடம் பாடம் படிக்குது.

நல்லை மண் உன்னை மண்டியிட்டு வணங்குதையா
வல்லை வெளி உனை நினைத்து வாய் விட்டு கதறுதையா
உன் ஊராம் ஊரெழுவும் உயிர் விடப் பார்க்குதையா
கண்கள் எல்லாம் நீர் நிறைந்து குளமாகி நிற்குதையா
கட்டாயம் உன் தமிழ்த்  தாகம் தீருமையா


38ஆம் ஆண்டு
வீரவணக்கம்
38th Year
Veeravanakkam
SEPT
26
2025
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்திபன் 27.11.1963-26.09.1987)
Lt. Col. Thileepan
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ்
மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம்
நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு
(15.09.1987-26.09.1987) இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987)
demanding five demands from the Government of India to fulfill
the promises made to the Tamil people.
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
இந்திய – சிறீலங்கா சமாதான ஒப்பந்த காலப்பகுதியில்
கடலில் பயணம் செய்த தளபதிகளை சிறீலங்கா கடற்படை கைது
செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை
05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட
லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும்
எமது 38ஆம் ஆண்டு வீரவணக்கம்
2ஆம் லெப்.
கஸ்தூரி
வீரவேங்கை
ரஞ்சினி
வீரவேங்கை
தயா
2ஆம் லெப்.
மாலதி
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில்
இந்தியப் படையுடன் நடந்த மோதலில்
முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதி
உட்பட 2ஆம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா
ஆகிய மாவீரர்களுக்கும் எமது 38ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்
10 அக்டோபர்
26.09.2001
அன்று
முல்லைத்தீவு
ஒட்டுசுட்டான் வீதியில்
சிறீலங்கா ஆழ
ஊடுருவும் படையினரால்
நடாத்தப்பட்ட
கிளைமோர் தாக்குதலில்
வீரச்சாவடைந்தார்.
இம் மாவீரருக்கு எமது
24 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
கேணல்
சங்கர்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of Tigers is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்